MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-600 090.

IX. 4.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

இரங்கோன்

சமரசஞான சன்மார்க்க சபையின்

பதிப்பு.

---

# பன்னிரு திருமுறைத் திரட்டு.

---

அதாவது.

அகத்தியர் தேவாரத் திரட்டு.

திருவாசகம் (கூல-விஷய சூசனங்களுடன்)

திருக்கோவையார் செய்யுட்டிரட்டு

திருவிசைப்பா.

திருப்பல்லாண்டு.

திருமந்திரத் திரட்டு.

பிரபந்தமாலைத் திரட்டு.

பெரியபுராணச் செய்யுட்டிரட்டு.

---

இதன் விலை ரூபா-கஅ (1-12-0).

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பன்னிரு திருமுறைகளாவன.

| | |
|---|---|
| திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் | முதற்றிருமுறை. |
| " " | இரண்டாந்திருமுறை. |
| " " | மூன்றாந்திருமுறை. |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் | நான்காந்திருமுறை. |
| " " | ஐந்தாந்திருமுறை. |
| " " | ஆறாந்திருமுறை. |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் | ஏழாந்திருமுறை. |
| திருவாசகமும், திருக்கோவையாரும் | எட்டாந்திருமுறை. |
| திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் | ஒன்பதாந்திருமுறை. |
| திருமூலநாயனார் திருமந்திரம் | பத்தாந்திருமுறை. |
| திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் திருவாய்மலர்ந்தருளிய நாற்பது பிரபந்தங்கள். | பதினோராந்திருமுறை. |
| பெரியபுராணம் | பன்னிரண்டாந்திருமுறை. |

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பன்னிரு திருமுறைத்திரட்டின் முகவுரை.

## சுத்தாத்வைத சித்தாந்த வைதிக சைவர்காள்!

பன்னிரு திருமுறைத்திரட்டு என்னும் இவ்வரிய திரட்டு இதுகாறும் யாராலும் அச்சிற்பதிப்பித்து வெளியிடப்படவில்லை. சைவத்திருவாளரனைவருக்கும் பெரும்பான்மையும் நன்மைவிளைத்துச் சுகத்தைத் தருமாறும், சிவபூசைக்கும், சிவாலயதரிசனத்துக்கும், நித்திய நைமித்திகங்களுக்கும், அடியவர் பூசைக்கும் மிக்க உபயோகமாமாறும், இதை வெளிப்படுத்தவேண்டுமென்று இரங்கோன் சமரசஞான சன்மார்க்க சபையார் கேட்டுக்கொண்டபடி திருவருளை முன்னிட்டு அச்சியற்றி வெளியிட்டனம். இந்தத்திரட்டில் பரமாசாரிய சுவாமிகள் நால்வர் புராணசாரம், அவர்கள் வயசு, திருநட்சத்திரம், சிறப்பு, தோத்திரம், தேவாரமகிமை, திருவாசகப்பெருமை, திருவாசகவுண்மை ஆகிய விஷயங்களடங்கியுள்ளன. அன்றியும் தமிழ்வேதமாகிய திருவாசகத்துக்கு அறுபது விஷய சூசனங்கள் எம்மாலெழுதிச்சேர்க்கப்பட்டுள்ளன. அந்த விஷய சூசனங்களில் சிவபாரம்யங்களும், சிவாதிக்யங்களும், சிவபரத்துவங்களும் (உ௫0) வேதப்பிரமாணங்களைக்கொண்டு நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வேதப்பிரமாண வசனத்துக்கும் தெளிபொருள் விளக்கியிருப்பதால் நடுநிலைகுன்றாது உண்மையறிய விருப்பமுடையாரனைவருக்கும், முக்கியமாகச் சைவர்களுக்கும், இத்திரட்டு இன்றியமையாது வேண்டப்படும்.

திருவாசகத்துள் புதைந்துள்ள பொருட்டிறம் நெடுநாள் பழகி முதிர்ந்த அநுபவமுடையார்க்கேபுலப்படுவதன்றிஎனையோர்க்குஎட்டுணையும் புலப்படுமாறில்லை யென்பதனை நன்குணர்ந்தேமாயினும் புறச்சமயிகள் தூற்றும் புன்மொழிகளைக்கேட்டுமனம்பொறாது அவர்களும்உண்மையறிந்து திருந்துமாறுஏகதேசத்துள்ளும்ஏகதேசமாகச் சூசனமெழுதிவெளிப்படுத்தினம். சூதசம்ஹிதையில்“யாவனொருவன் பிரமவித்தையை உலகில்நிலைநாட்டச்சக்திபெற்றிருந்தும் உதாசீனத்தால் அங்ஙனஞ்செய்யாதிருப்பனாயின் அவன்பாவியாவன்”எனவும்,

"அறிவிற்குறைந்தவனாயினும் ஆஸ்திக புத்தியின் மேலீட்டால் பிரம வித்தையை ஸ்தாபிக்க முயல்வானாயின் அவன் பாவங்களை யெல்லாம் போக்கி சிவசாயுஜ்யமடைவன்" எனவும் போதித்திருத்தலால் அந்தவாய்மையையே யாமுங்கடைப்பிடித்து அருட்களிப்பின் மிகுதியால் சிவபாரம்யங்களையும், சிவபரத்துவங்களையும் வேண்டியவே தங்களோதி யெங்கும் பரவச்செய்யத் துணிந்தனம். அங்ஙனந் துணிந்து இப்பன்னிருதிருமுறைத் திரட்டையும், திருவாசக விஷய சூசனங்களையும் பதிப்பித்து வருகையில் "நலமதொன்றடைதற் குறுமிடையூறு நாதனே பலவுளவன்றே" என்று ஆன்றோர்பணித்தருளியபடி உத்தியோக நிர்ப்பந்தமும், எதிர்பாராத சில வசந்தர்ப்பங்களும் இடையில் நேர்ந்தமையால், இந்தத்திரட்டில் (சுயி) விஷய சூசனங்களை மாத்திரஞ் சேர்த்து வெளியிட்டனம். இனியொருபோழ்து இறைவனருள்கூட்டிவைப்பின் திருவாசகமுழுதுந்தனியாக (கரு0) சூசனங்களோடு வெளிப்படுத்தக் கருதியுள்ளோம்.

தமிழ்வேதமாகிய திருவாசகவிஷய சூசனங்களில் மேற்கோளாகக்காட்டியுள்ள வேத வசனங்கள்யாவும் கிரந்தவெழுத்துக்கள் இல்லாக்குறைவால் தமிழ் எழுத்துக்களிலேயே பதிப்பிக்கநேர்ந்தன. ஆதலின் உண்மையறிய அவாக்கொண்டுள்ள மேதாவியரனைவரும் வடமொழியின்கண் ணமைந்துள்ள ககர, சகர, டகர, தகர, பகரமுதலான வன்னங்களும், ஸ்வரங்களும், எடுத்துக் காட்டியுள்ள வேதப் பிரமாணங்களிற் பேதப்பட்டிருத்தலைக்கண்டு எம்மை யலர்தூற்றாதிருப்பார்களாக.

இந்தப் பன்னிருதிருமுறைத்திரட்டில் அடங்கியுள்ள பாசுரங்களனைத்தையும் யாவருமெளிதிலோதும் பொருட்டு தலைகள் பிரிப்பதற்கும், புரூப் பார்ப்பதற்கும், எமக்குப் பேருதவியா யிருந்த **ஸ்ரீமாந் - குன்றத்தூர் - மதுரகவி - மாணிக்கமுதலியா** ரவர்களுக்கும், இந்தத்திரட்டு விரைவில் வெளியாகவேண்டுமென்று யாம் விரும்பியபடி விடாமுயற்சிகொண்டு தமது **வித்யா பாஸ்கர அச்சுக்கூடத்திற்** பதிப்பித்த **ஸ்ரீமாந்-பல்லவபுரம்-அப்பாவு செட்டியா** ரவர்களுக்கும் நன்றிபாராட்டக் கடப்பாடுடையேம்.

சோ - சிவஅருணகிரி முதலியார்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR - MADRAS - 600 090.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

# தேவாரத்திரட்டு.

இஃது,

இரங்கோன் - சமரசஞான சன்மார்க்க சபைத்தலைவரும்,
சிகந்திராபாக்கம்-சித்தாந்த ஞானபோதசங்க ஸ்தாபகரும்,
சித்தாந்தஞானநிஷ்டருமாகிய
சோளங்கிபுரம்

## ஸ்ரீமத்-சிவ அருணகிரிமுதலியார்

அவர்களால்
பாசுரங்களின் தலைகள் பிரித்துப்
பரிசோதிக்கப்பட்டு,

ஷெயார் தமையனாரும்
பென்ஷன் சுபேதாரும் பெஞ்சுமாஜிஸ்ட்ரேட்டுமாகிய
சோளங்கிபுரம்

## ஸ்ரீ - சிவசிதம்பரமுதலியாரவர்கள்

நல்லாதரவால்

ம-ா-ா-ஸ்ரீ
ப. அ. சோமசுந்தர செட்டியாரவர்களது
சென்னை,
வித்யா பாஸ்கர அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.
விசுவாவசு ௵ பங்குனிமீ
1906.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அகத்தியர் தேவாரத்திரட்டின்

# வரலாறு.

அநாதிமலமுத்த சுத்தசாட்குண்ணிய பரிபூரணராயும், ஆதிமத்யாந்த சமானுதிக நாமரூபகுணரகிதராயும் விளங்காநின்ற முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்களனைவருந் துணிந்து வழிபட்டுய்யும் பொருட்டுப் பற்பல திவ்விய அற்புதங்களினாலே சகல சமயாதீத சுத்தாத்வைத சைவசித்தாந்த சமயத்தைத் தாபித்தருளிய பரமாசாரிய மூர்த்திகள் நால்வரெனப்படுவர். அவருள் திருஞானசம்பந்தசுவாமிகள் சிவகுருவாகிய முருகக்கடவுள் அவதாரமும், திருநாவுக்கரசுசுவாமிகள் வாகீசத்திருமுனிகள் அவதாரமும், சுந்தரமூர்த்திசுவாமிகள் சிவபெருமானுடைய திருவழகே வெளிப்பட்டு வந்த ஆலாலசுந்தரர் அவதாரமும், மாணிக்கவாசகசுவாமிகள் திருநந்திகணத்தலைவர் அவதாரமுமாயுள்ளார்கள். இவர்களது சரித்திரப்பிரபாவம் உபமந்யுபக்தவிலாசம், அகஸ்தியபக்தவிலாசம், சிவரகசியம், ஹாலாஸ்ய மஹாத்மியம், காஞ்சிமஹாத்மியம் முதலியநூல்களிலே கூறப்பட்டுள்ளது. இவர்கள் சகல வேதவேதாந்த ரகசியங்களை யெல்லாம் உலகுய்ய தேவார திருவாசகம் என்னும் மந்திரமொழிகளாக அனுக்கிரகித்தவர்கள். ஆயினும் முக்கியமாக திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ருக்வேதசாரமாயும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் யஜுர்வேதசாரமாயும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் சாமவேதசாரமாயும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் அதர்வணவேதசாரமாயும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இந்தத்திருப்பதிகங்களைத் தனித்தனியே கூறுமிடத்து முறையே "திருக்கடைக்காப்பு" எனவும், "தேவாரம்" எனவும், "திருப்பாட்டு" எனவும் "திருவாசகம்" எனவும் ஆன்றோர் வழங்குவர். இவைகளே கேட்போர்மனத்துக்கு ஆனந்தத்தை யுண்டுபண்ணி அயராவன்பு விளைவிப்பதும், கேட்போர்க்கினிய சற்சரித்திரங்கள் நிறைந்ததும், சொல்வன்மையிற் சிறிதுங் குறைவில்லாததும், அகிலவேதாந்த ரகசியம் நிறைந்ததும், சிவம் பழுத்தவுள்ளத்துப் பத்திவடிவினருக்குச் சர்வ சிரவணாதிகாரம் பெற்றதும், "திருமுறைகள்" என மங்கலப்பட்டம் பெற்றதுமா யுள்ளன. அன்றியும் பதிவாக்கென்றுந் தெள்ளிதிற்றுணியப்பட்டு மிருக்கின்றன. இவைகளுக்கே திருமறை

த்தமிழ், திராவிடவேதம், திருநெறித்தமிழ், குற்றமில்தமிழ், ஞானத் தமிழ், சொன்மாலை, உரைமாலை, அருணூல், ஞானப்பாடல் என்பன வாதிபல சிறப்புப்பெயர்களுமுண்டு.

பரமாசாரிய மூர்த்திகள் நால்வரும் வேதாகமங்களிலே கூறியுள்ள தெய்வவழிபாடாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு சன்மார்க்கங்களையும், குருலிங்க சங்கமபத்திகளையும், அப்பத்திசெய்தார்க்குச் சிவபெருமான் செய்யும் அருட்டிறத்தினையும் சர்வான்மாக்களும் உணர்ந்துய்யும் வண்ணம் கருணையால் திருமேனிதாங்கி தாமே நடாத்திக் காட்டியருளிய குருமூர்த்தங்களாதலானும், சாதாரணமாகத் தத்தம்பிறவி நோய் நீக்கவந்து தவம் புரிந்தவர்களல்ல ராதலானும் இவர்கள் முறையே "ஆளுடையபிள்ளையார்" எனவும், "ஆளுடையவரசுகள்" எனவும், "ஆளுடையநம்பிகள்" எனவும், "ஆளுடைய வடிகள்" எனவுந் துதிக்கப்படுகின்றனர். இவர்களுள் ஆளுடையபிள்ளையார் சிவபெருமானை முதலிலும் ஆளுடையவடிகள் இறுதியிலும், மற்றிருமூர்த்திகள் ஆங்காங்கு இடையிலுஞ் சுட்டிக்காட்டினார்கள். இவர்கள் பதிப்பொருளான பரசிவப்பரம்பொருளுக்கு அமிசங்களாதலால் சைவத்திருவாளரெல்லாரும் இவர்களைத் தெய்வமாக வழிபட்டு வருகின்றார்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகள் "தோடுடையசெவியன்" என்பதுமுதற் "கல்லூர்" என்பதீறாகபதினாறாயிரந் திருப்பதிகங்களையும், திருநாவுக்கரசு சுவாமிகள் "கூற்றாயினவாறு" என்பதுமுதல் "ஒருமானைத்தரிக்குமொருவரை" என்பதீறாக நாற்பத்தொன்பதினாயிரந் திருப்பதிகங்களையும், சுந்தரமூர்த்திசுவாமிகள் "பித்தாபிறைசூடீ" என்பதுமுதல் "ஊழிதோறும்" என்பதீறாக முப்பத்தெண்ணாயிரந் திருப்பதிகங்களையும் ஆக ஒருலக்ஷத்து மூவாயிரந் திருப்பதிகங்களைத் திருவாய்மலர்ந்தருளினார்கள். இவைகளே தமிழ்வேதமாகிய தேவாரமாம். இவைகளுள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்கள் நிற்க மற்றவை மறைந்து போயின. எஞ்சிநின்ற அவ்வெழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபயகுலசேகர சோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி என்பவர் ஏழுதிருமுறைகளாக வகுத்தருளினார். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன்முறை எனப்படும்.

கல்வியறி வொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலய முனிவர் அவ்வடங்கன்முறையினதுமகிமையையும், அதனை நாடோ

றும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முத்தி சித்திக்குமென்பதனையும் அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ் செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து கனகசபையின்கண்ணே ஆனந்த தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரைவணங்கி, தமது கருத்துமுற்றும் பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளினாலே, "சிவாலயமுனிவனே நீ பொதியமலையிலிருக்கின்ற அகத்தியமுனிவனிடத்தே போவாயாயின் உன் கருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அது கேட்ட சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு சென்று, பொதியமலையை அடைந்து, அகத்திய மகா முனிவரைச் சிந்தித்து, மூன்றுவருடகாலம் அருந்தவஞ் செய்தனர். ஸ்ரீ அகத்திய மகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை முழுதையும் அவருக்குபதேசித்து, அதினின்றும் குருவடிவம், விபூதி, பஞ்சாக்கரம், கோயிற்றிறம், சிவரூபம், திருவடி, அருச்சனை, அடிமை என்பவைகளின் உண்மைகளைத் தெரிக்காநிற்கும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத்திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ் செய்பவர்கள் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ் செய்பவர்களாவர்கள்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். சிவாலயமுனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றார்.

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனை
மேராரு மிறைவனையு மெழிலாரு நம்பியையு
மாராத வன்பினுட னடிபணிந்தங் கருள்விரவச்
சோராத காதன்மிகுந் திருத்தொண்டர் பதந்துதிப்பாம்.

திருச்சிற்றம்பலம்.

---

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

உ

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் புராணசாரம்.

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோ னழுதுமையாள் கருதியூட்டு
மேழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
யிலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருக நீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே. (க)

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
யாற்றிவிடு மேடெதிர்போ யணைய வேற்றி
யோரமணை ரொழியாமே கழுவி லேற்றி
யோதுதிருப் பதிகத்தா லோட மேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
யீரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி
யிலங்குபெரு மணத்தரனை யெய்தி னாரே. (உ)

## திருநாவுக்கரசு சுவாமிகள் புராணசாரம்.

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில்கொறுக் கையரதிபர் புகழ னார்பான்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரரு டரவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார். (க)

வந்துதமக் கையரரு ளானீறு சாத்தி
வண்டமிழா னோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்

வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
  வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
யந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
  யருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
  பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னரே. (உ)

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணசாரம்.

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
  சைவனார் சடையனார் தனயனாராய்
மண்புகழ வருட்டுறையா னோலை காட்டி
  மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர் மேவி
  நலங்கிளரும் பரவைதோ ணயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
  திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னரே. (க)

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்
  திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னாச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
  தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாத
னொப்பிறனித் தூதுவந்தா னூடு தீர்ந்தி
  யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
  வேந்தருடன் வடகயிலை மேவி னரே. (உ)

---

## திருஞானசம்பந்த சுவாமிகள் தோத்திரம்.

கடியவிழ் கடுக்கைவேணித் தாதைபோற் கனற்கண்மீனக்
கொடியனை வேவநோக்கிக் குறையிரந் தனையான்கற்பிற்
பிடியனை நடையாள்வேண்டப் பின்னுயி ரளித்துக்காத்த
முடியணி மாடக்காழி முனிவனை வணக்கஞ் செய்வாம். (க)

பரசமய கோளரியைப் பாலறா வாயனைப்பூம் பழனஞ்சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேயமெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம்விரித்தருளுங்கவுணியர்தங்குலதீபத்தை
விரவியெமையாளுடையவென்றிமழவிளங்களிற்றைவிரும்பிவாழ்வா
[ம்

---

## திருநாவுக்கரசு சுவாமிகள் தோத்திரம்.

அறப்பெருஞ் செல்விபாகத் தண்ணலஞ் செழுத்தாலஞ்சா
மறப்பெருஞ் செய்கைமாறா வஞ்சக ரிட்டநீல
நிறப்பெருங் கடலும்யார்க்கு நீந்துதற் கரியவேழு
பிறப்பெனுங் கடலுநீத்த பிரானடி வணக்கஞ்செய்வாம். (௧)

இடையறாப் பேரன்பு மழைவாரு மிணைவிழியுமுழவாரத்திண், படை
யறாத்திருக்கரமுஞ்சிவபெருமான் றிருவடிக்கேபதித்தநெஞ்சு, நடை
யறாப்பெருந்துறவும்வாகீசப்பெருந்தகைதன் ஞானப்பாடற்,றொடை
யறாச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோத்திரம்.

அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பாளு
ளிரவினிற் றூதுகொண்டோ னிணையடி முடிமேல் வைப்பாம்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட
வுவனைக் கொண்டே
யிருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாள
னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகை விரித்த
பேரருளின் பெருமாளென்றுந்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமா ளெமதுகுல
தெய்வ மாமால். (௨)

---

## தேவார மகிமை.

அருமறையைச் சிச்சிலிப்பண் டருந்தத்தேடு
மதுபோலன் றிதுவென்று முளதாமுண்மைப்
பரபதமுந் தற்பரமும் பரனேயன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல்பாரி
னெரியினிடை வேவாதாற் றெதிரேயோடு
மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ்சாற்றுங்
கரியைவளை விக்குங்கன் மிதக்கப்பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங்காணே.

---

### பரமாசாரியசுவாமிகள்நால்வர்
### வயசும் அவர்கள் திருநக்ஷத்திரமும்

அப்பருக் கெண்பத்தொன் றருள்வாத வூரருக்குச
செப்பிய நாலெட்டிற் றெய்வீக - மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசிமூல
மத்தரைப் பணிசம் பந்த ரானிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் லாடி தன்னிற்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

### நால்வர் சிறப்பு.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு -முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூ றானெங்கே
யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே.

### நால்வர் தோத்திரம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
யூழிமலி திருவாத வூரர்திருத் தாளபோற்றி.

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சூசிபத்திரம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்.


| திருப்பதிகம். | பக்கம். | திருப்பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருப்பிரமபுரம். | ௩ | திருவெழுகூற்றிருக்கை. | உ[illegible] |
| திருநீற்றுப்பதிகம். | ௯ | திருக்கடவூர்மயானம். | உஅ |
| பஞ்சாக்கரத்திருப்பதிகம். | யக | திருவாழ்கொளிபுத்தூர். | ௩௬ |
| நமச்சிவாயத்திருப்பதிகம். | ய௩ | திருப்பூந்தராய். | ௪௪ |
| திருக்ஷேத்திரக்கோவை. | யஉ | கோளறுபதிகம். | ௫ய |


## திருநாவுக்கரசு சுவாமிகள்.


| திருப்பதிகம். | பக்கம். | திருப்பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருவதிகைவீரட்டானம் கூற்றாயின. | ௫ | திருப்பூவணம். | ௩க |
| நமச்சிவாயத்திருப்பதிகம். | ய௫ | திருவதிகைவீரட்டானம் அரவணையான். | ௩அ |
| திருக்ஷேத்திரக்கோவை. | உக | ஸ்ரீகயிலாயம். | ௪௫ |
| கோயிற்றிருவிருத்தம். | ௩ய | திருவாரூர்த்திருவிருத்தம். | ௫௩ |


## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.


| திருப்பதிகம். | பக்கம். | திருப்பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருவெண்ணெய்நல்லூர். | அ | திருப்புன்கூர். | ௪க |
| திருப்பாண்டிக்கொடுமுடி. | யஎ | திருக்கழுக்குன்றம். | ௪அ |
| ஊர்த்தொகை. | உ௪ | திருத்தொண்டத்தொகை. | ௫௫ |
| திருக்கடவூர்மயானம். | ௩௪ | | |


திருச்சிற்றம்பலம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

# தேவாரத்திரட்டு.

## தேவாரநுதலியபொருள்.

நேரிசைவெண்பா.

குருவுரும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயி
லரனுருவ மென்றலைமே லாக்குந்—திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

## திருப்பதிகக்கருத்துரை.

நிலைமண்டிலவாசிரியப்பா.

கோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகு
நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலை
மாற்றுப் பறையின் வரலா றுகுந்
துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகு
மாரூர் தில்லை காட்டூர் மூன்றுஞ்
சீரார் கோயிற் றிறமைய தாகு
மோருரு வரிய பாளை வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்துந்
திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவணை யந்த ணாள

# அகத்தியர்தேவாரத்திரட்டு.

ணடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்று கொன்றிவை மூன்று
ஈந்தலி லருச்சனை நாட்டிய தாகும்
வேய்குலந் தில்லை யெனுமிவை மூன்று
ராயனு மடிமையு நாட்டிய தாகு
ரிப்பரி சகத்திய முனிய னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வார
முழுதையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
யெண்ணரு யடங்க லியாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்து மென்றவன்
றனக்கருள் செய்தனன் றகவுற வதனாற்
றீதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதின ரடங்கலு மோதின ராவரே.

திருச்சிற்றம்பலம்.

---

## பண்.

நட்டபாடை, இந்தளம், காந்தாரம், காந்தாரபஞ்சமம், கௌசிகம், பழம்பஞ்சுரம், தக்கேசி, பியந்தைக்காந்தாரம், சாதாரி, புறநீர்மை, நட்டராகம், பஞ்சமம், ஆகியபன்னிரண்டு பண்கள் பகலினும்,

கொல்லி, தக்கராகம், கொல்லிக்கௌவாணம், பழந்தக்கராகம், குறிஞ்சிசீகாமரம், வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி ஆகியஒன்பது பண்கள் இரவினும்,

திருத்தாண்டகம், செவ்வழி, செந்துருதி ஆகியமூன்று பண்கள் எக்காலத்தும் ஓதற்குரியவைகளாம்.

## இராகம்.

---

தேவராகம் முப்பத்திரண்டாவன:—பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, லலிதை, தோடி, தேசி, வசந்தம், இராமக்கிரியை, குண்டக்கிரியை, கூர்ச்சரி, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, பஞ்சாளம், தந்நியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம் என்பனவாம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

# திருப்பிரமபுரம்.

முதற்றிருமுறை-பண்-நட்டபாடை.

---

தருவருள்.

---

திருச்சிற்றம்பலம்.

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வ
னேடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

முற்ற லாமையிள நாகமோ டேன முளைக்கொம் பவைபூண்டு
வற்ற லோடுகல னாப்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலுடை யார்பெரி யார்கழல் கையாற் றொழுதேத்த
பெற்ற மூர்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

நீர்ப ரந்தநிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
யேர்ப ரந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள்வ
னூர்ப ரந்தவுல கின்முத லாகிய வோரூ ரிதுவென்னப்
பேர்ப ரந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

விண்ம கிழ்ந்தமதி லெய்தது மன்றிவி ளங்கு தலையோட்டி
லுண்ம கிழ்ந்துபலி தேரிய வந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்ம கிழ்ந்தவர வம்மலர்க் கொன்றை மலிந்த வரைமார்பிற்
பெண்ம கிழ்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

ஒருமை பெண்மையுடை யன்சடை யன்விடை யூரும் மிவனென்
வருமை யாகவுரை செய்ய வமர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கருமை பெற்றகடல் கொள்ளமி தந்ததோர் காலம் மிதுவென்ன
பெருமை பெற்றபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

மறைக லந்தவொலி பாடலோ டாடல ராகி மழுவேந்தி
யிறைக லந்தன வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள் வன்
கறைக லந்தகடி யார்பொழி னீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைக லந்த பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (சு)

சடைமு யங்குபுன லன்னன லன்னெரி வீசிச் சதிர்வெய்த
வுடைமு யங்குமர வோடுழி தந்தெனை துள்ளங் கவர்கள்வன்
கடன்மு யங்குகழி சூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமு யங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (எ)

வியரி லங்குவரை யுந்திய தோள்களை வீரம் விளைவித்த
வுயரி லங்கையரை யன்வலி செற்றெனை துள்ளங் கவர்கள்வன்
றுயரி லங்குமுல கிற்பல வூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரி லங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (அ)

தாணு தல்செய்திறை காணிய மாலொடு தண்டா மரையானு
நீணு தல்செய்தொழி யந்நிமிர்ந் தானெனை துள்ளங் கவர்கள்வன்
வாணு தல்செய்மக ளீர்முத லாகிய வையத் தவரேத்தப்
பேணு தல்செய்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (கூ)

புத்த ரோடுபொறி யில்சம ணும்புறங் கூற நெறிநில்லா
வொத்த சொல்லவுல கம்பலி தேர்ந்தெனை துள்ளங் கவர்கள்வன்
மத்த யானைமறு கவ்வுரி போர்த்ததோர் மாயம் மிதுவென்னப்
பித்தர் போலும்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (க0)

அருநெ றியமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெ றியபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
யொருநெ றியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் - சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரமபுரீசர், தேவியார்-திருநிலைநாயகியம்மை.

திருத்தோணியில்வீற்றிருப்பவர்—தோணியப்பர்.

இந்தத்திருப்பதிகம், பூவாரும் சீகாழிப் பொய்கைக்கரையிலே பிரமவித்தியா தேவியாராய உமாபிராட்டியாரது சிவஞானப்பாலை யுண்டருளிய திருஞானசம்பந்த சுவாமிகளைத் தந்தையாரான சிவ பாதவிருதயர் "எச்சில்பொருந்தஇப்பாலூட்டினரைக்காட்டுக"என்

றுகோபித்து மாறுகொண்டோச்சியபோது, பிள்ளையார் தமதுவலத் திருக்கரவிரலாற் ஸ்ரேணியப்பரைச் சுட்டிக்காட்டி ஓதியருளியது.

---

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

## திருவதிகைவீரட்டானம்.

நான்காந்திருமுறை-பண்-கொல்லி.

### கு ரு வ ரு ள்.

---

திருச்சிற்றம்பலம்.

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
  கொடுமை பலசெய் தனநா னறியே
னேற்றா யடிக்கே யிரவும் பகலும்
  பிரியா துவணங் குவனெப் பொழுதுந்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
  குடரோ டுதுடக் கிமுடக் கியிட
வாற்றே னடியே னதிகைக் கெடில
  வீரட் டானத் துறையம் மானே. (க)

நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தே
  னினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
  வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
  நணுகா மற்றுரந் துகரந் துமிடீ
ரஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
  வீரட் டானத் துறையம் மானே. (உ)

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
  படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
  சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்

பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற் றுகந்தீர் சுற்றும்வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட் டானத் துறையம்மானே. (௩)

முன்னம் மடியே னறியா மையினான்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனா வதுதா
னன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (௪)

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
வார்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (௫)

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டன்மறந் தறியே
னலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியே
னுலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளா
யலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (௬)

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண் பொருளு
மொருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநா

னயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (எ)

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றமிலா மையினாற்
சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
வலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (அ)

பொன்போ லமிளிர் வதோர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடு
ரென்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகி
லன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (கூ)

போர்த்தா யங்கொரா னையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லா
யார்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீ
ழடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடா
யார்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் வீரட்டானேசுவரர், தேவியார் திருவதிகை நாயகியம்மை,

இந்தத்திருப்பதிகம் சூலைநோய்தீர ஓதிஅருளியது.

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

# திருவெண்ணெய்நல்லூர்.

ஏழாந்திருமுறை-பண்-இந்தளம்.

## திருவருள்

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (க)

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளாயாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (உ)

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே. (௩)

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. (௪)

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியா
யாதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளாதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. (௫)

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனி
யெண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (௬)

ஊனாயுயி ராயுட லாயுல காய்
வானாய்நில னாய்கட லாய்மலை யாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளானாயுனக் காளாயினி யல்லேனென லாமே. (எ)

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீ
ரேற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளாற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே. (அ)

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவா ரவர்துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (கூ)

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையாற்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளாரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வெண்ணெயப்பர், தேவியார்-நீலமலர்க்கண்ணம்மை.

**இந்தத்திருப்பதிகம் திருமணக்காலத்திற் றடுத்தாட் கொண்ட போது ஓதியருளியது.**

---

திருஞானசம்பந்தசுவாமிகள்.

## திருவாலவாய்த்திருநீற்றுப்பதிகம்.

இரண்டாந்திருமுறை - பண் - காந்தாரம்

**பரையின் வரலாறு.**

---

திருச்சிற்றம்பலம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு

தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே. (க)

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
வோதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே. (உ)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. (ஙு)

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. (ச)

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லா
மாசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே. (ரு)

அருத்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே. (சு)

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
வயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான்றிரு நீறே. (எ)

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
வராவணங் குந்திரு மேனி யாலவா யான்றிரு நீறே. (அ)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு

வேல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலமு துண்டமி டற்றெம் மாலவா யான்றிரு நீறே. (௯)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மாலவா யான்றிரு நீறே. (௧0)

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலிநி லாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்திருப்பதிகம்,நின்றசீர்நெடுமாறநாயனார் என்னுங்கூன் பாண்டியர்க்குற்ற வெப்புநோயை "ஆலவா யண்ணலீரே,மன்னுமந் திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பீரென்று" ஓதித் தீர்த்தருளியது.

---

திருஞானசம்பந்தசுவாமிகள்.

## பஞ்சாக்கரத்திருப்பதிகம்.

மூன்றாந்திருமுறை - பண் - காந்தாரம்.

### அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே. (௧)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. (௨)

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (௩)

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (௪)

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழிற்
றங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
யங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. (௫)

தும்ம லிரும லெழுந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினு
மிம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினு
மம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. (௬)

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறு
மாடு கொடுப்பன மன்னு மாநட
மாடி யுகப்பன வஞ்செ ழுத்துமே. (௭)

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செழுத்துமே. (௮)

கார்வண னான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. (௯)

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. (௧0)

நற்றமிழ் ஞானசம் பந்த னின்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
வற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம், உபநயனச் சடங்கியற்றிய காலத்தே, சீடபரம்பரையாய் ஓதியுணரவரும் வேதங்களை நமக்குத் தந்தோமென்று சுஸ்திவாசமந்திரங்களை யுரைத்த அந்தணர்க்கு ஆளுடைய பிள்ளையார் வேதமந்திரோபயோகங்களையெல்லாம் உபதேசித்து அவையங்களை நீக்கியதோடு, இம்மந்திரங்களெல்லாம் உதித்தற்குக் காரணமாயுள்ளது ஸ்ரீ பஞ்சாக்கரமே என அதன் பெருமையினையுந் தெரித்தருளியது.

---

திருஞானசம்பந்த சுவாமிகள்

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

மூன்றாந்திருமுறை - பண் - நட்டபாடை.

---

அஞ்செழுத்துண்மை.

---

திருச்சிற்றம்பலம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. (௧)

நம்பு வார்நமர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலா
நம்ப னாம நமச்சி வாயவே. (௨)

நெக்கு ளார்வ மிகப்பெரு கிநினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்

தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே. (௩)

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலா
னயம்வந் தோதவல் லார்தமை நண்ணினு
னியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. (௪)

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைக
ளில்லா ரேனு மியம்புவ ராயிடி
னெல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரா
நல்லார் நாம நமச்சி வாயவே. (௫)

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேற்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமா
னந்தி நாம நமச்சி வாயவே. (௬)

நரக மேழ்புக நாடின ராயினு
முரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. (௭)

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேற்
றலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலு
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளாம நமச்சி வாயவே. (௮)

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பரா
யாதுங் காண்பரி தாகிய லந்தவ
ரோது நாம நமச்சி வாயவே. (௯)

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்ட னமச்சி வாயவே. (௧௦)

நந்தி நாம நமச்சிவா யவெனுஞ்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொற்

சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாசம றுக்கவல் லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்திருப்பதிகம். திருஞானசம்பந்தசுவாமிகள் தமது திருமணக்காலத்திலே சோதிலிங்கந் தோன்றியபோது, உலகருய்ய முத்திசாதன நெறியைக் கூறி முத்திசேர்ப்பித்தருளியது.

---

திருநாவுக்கரசு சுவாமிகள்

## நமச்சிவாயத்திருப்பதிகம்.

நான்காந்திருமுறை - பண் - காந்தாரபஞ்சமம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. (௧)

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
யாவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. (௨)

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. (௩)

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற்பி ரானென்று வினவு வோமல்லோ
யடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. (௪)

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலா
மந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கந்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே. (ரு)

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லா
னலமில னொடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. (சு)

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்
கூடினா ரந்நெறி கூடச் சென்றது
மோடினே னோடிச்சென் றுருவங் காண்டலு
நாடினே னாடிற்று நமச்சி வாயவே. (எ)

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. (அ)

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறி யேசர ணாதல் திண்ணமே
யந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலா
நன்னெறி யாவது நமச்சி வாயவே. (கூ)

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்திருப்பதிகம், சமணர்கள் கற்றூணிற்கட்டிக் கடலிற் றள்ளியபோது ஓதி கல்லே தெப்பமாகக் கரைசேர்ந்தது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# திருப்பாண்டிக்கொடுமுடி.

ஏழாந்திருமுறை - பண் - பழம்பஞ்சுரம்.

---

## அஞ்செழுத்துண்மை.

---

திருச்சிற்றம்பலம்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனி னிப்பிற வாததன் மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (௧)

இட்ட னும்மடி யேத்து வாரிகழ்ந் திட்ட நாண்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை யென்ற லாற்கரு தேன்கிளர் புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (௨)

ஓவு நாளுணர் வழியு நாளுயிர் போகு நாளுயர் பாடைமேற்
காவு நாளிவை யென்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (௩)

எல்லை யில்புக ழெம்பி ரானெந்தை தம்பி ரானென்பொன் மாமணி
கல்லை யுந்திய வளம்பொ ழிந்திழி காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (௪)

அஞ்சி னார்க்கர ணாதி யென்றடி யேனு நான்மிக வஞ்சினே
னஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருணல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (௫)

ஏடு வானிளந் திங்கள் சூடினை யென்பின் கொல்புலித் தோலின்மே
லாடு பாம்பது ரைக்க சைத்த வழகனே யந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (௬)

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டன
னெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டிடை
குரும்பை மென்முலைக் கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
விரும் பனேயுனை நான்ம றக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (எ)

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம மர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயி லாடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே. (அ)

சார ணன்றந்தை யெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
யென்று பேணுபிர கோடி தேவர்பி தற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்றொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே. (கூ)

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை [பவே.
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் கொங்கநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கொடுமுடிநாதர், தேவியார்

பண்மொழியம்மை.

---

திருஞானசம்பந்த சுவாமிகள்.

# திருக்ஷேத்திரக்கோவை.

இரண்டாந்திருமுறை-பண்-இந்தளம்.

---

கோயிற்றிறம்.

---

திருச்சிற்றம்பலம்.

ஆரூர் தில்லையம்பலம்வல்லநல்லம்
வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல

கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்
குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்
பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே. (௧)

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா
றகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்
பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்
பரங்குன்றம்பருப்பதம்பேணிநின்றே
யெண்ணாயிரவும்பகலுமிடும்பைக்
கடனீந்தலாங்காரணமே. (௨)

அட்டானமென்றோதியநாலிரண்டு
மழகன்னுறைகாவனைத்துந்துறைக
ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்
குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கு
மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன்
மதிக்கும்மிடமாகியபாழிமூன்றுஞ்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பா
யரும்பாவங்களாயினதேய்ந்தறவே. (௩)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்பொடிப்பூசி
நீறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி
திருநனிபள்ளிசீர்மகேந்திரத்துப்
பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்
விரும்பும்மிடைப்பள்ளிவண்சக்கரமா
லுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி
யுணராய்மடநெஞ்சமேயுன்னிநின்றே. (௪)

ஆறைவடமாகறலம்பரையா
றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலாதிவை
காதலித்தானவன்சேர்பதியே. (௫)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு
மதிகூர்திருக்கூடலிலாலவாயு
மினவஞ்சொலிலாவிடைமாமருது
மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்
கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
றவமாமலமாயினதானறுமே. (௬)

மாட்டேர்மடப்பாச்சிலாச்சிராம
முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி
காட்டேர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்
கடலொற்றியூர்மற்றுறையூரவையுங்
கோட்டேர்திருவாமாத்தூர்கோழம்பமுங்
கொடுங்கோவலூர்திருக்குணவாயில். (௭)

குலாவுதிங்கட்சடையான்குளிரும்பருதிநியமம்
போற்றூரடியார்வழிபாடொழியாத்
தென்புறம்பயம்பூவணம்பூழியூருங்
காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோணெரித்தா
னுறைகோயிலென்றென்றுநீகருதே. (௮)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருக
னெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரநாகேச்சர
நளிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த
கடல்வண்ணனுமாமலரோனுங்காணாச்
சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங்
குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே. (௯)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்
குருந்தங்குடிதேவன்குடிமருவு
மத்தங்குடிதண்டிருவண்குடியு
மலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தன்னிமலனுமையோடுங்கூட
நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்

புத்தர்புறங்கூறியபுன்சமணர்
நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்ம்மினே. (கo)

அம்மானையருந்தவமாகிநின்ற
வமரர்பெருமான்பதியானனவுனிக்
கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்
கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன
விம்மாலைமீரைந்துமிருநிலத்தி
லிரவும்பகலுநினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்புமடியார்
விதியார்பிரியார் சிவன்சே வடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசு சுவாமிகள்

## திருக்ஷேத்திரக்கோவை.

ஆறாந்திருமுறை - திருத்தாண்டகம்.

---

### கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ்செம்பொன்பள்ளி
தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங்கோடிகாவு
முல்லைப்புறவமுருகன்பூண்டி
முழையூர்பழையாறைசத்திமுற்றங்
கல்லிற்றிகழ்சீரார்காளத்தியுங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ஆரூர்மூலட்டானமானைக்காவு
மாக்கூரிற்றுன்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணுங்

கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமுங்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௨)

இடைமருதீங்கோயிராமேச்சர
மின்னம்பரேரிடவையேமப்பேறூர்
சடைமுடிசாலைக்குடிதக்களூர்
தலையாலங்காடுதலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாலங்கொள்ளம்பூதூர்
கோத்திட்டைகோட்டாறுகோட்டுக்காடு
கடைமுடிகானூர்கடம்பந்துறை
கயிலாயநாதனையேகாணலாமே. (௩)

எச்சிலிளமரேமநல்லூ
ரிலம்பையங்கோட்டூரிறையான்சேரி
யச்சிறுபாக்கமளப்பூரம்ப
ராவடுதண்டுறையழுந்தூராறை
கச்சினங்கற்குடிகச்சூராலக்
கோயில்கரவீரங்காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியு மேகம்பத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௪)

கொடுங்கோளூரஞ்சைக்களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவு
நெடுங்களநன்னிலநெல்லிக்காவு
நின்றியூர்நீடூர்நியமநல்லூ
ரிடும்பாவனமெழுமூரேழூர்தோழூ
ரெறும்பியூரேராருமேமகூடங்
கடம்பையிளங்கோயிறன்னினுள்ளுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௫)

மன்னிப்படிக்கரைவாழ்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம்வாரணசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
பிரம்பில்பெரும்புலியூர்பெருவேளூருங்

கண்ணைகளர்க்காறைகழிப்பாலையுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௬)

வீழிமிழலைவெண்காடுவேங்கூர்
வேதிகுடிவிசயமங்கைவியலூ
ராழியகத்தியான்பள்ளியண்ணா
மலையாலங்காடுமரதைப்பெரும்
பாழிபழனம்பனந்தாள்பாதாளம்
பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்தண்
காழிகடனாகைக்காரோணத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௭)

உஞ்சேனைமாகாளமூறலோத்தூ
ருருத்திரகோடிமறைக்காட்டுள்ளு
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடன்மீயச்சூர்வைகா
வேதீச்சுரம்விவீசுரம்வெற்றியூருங்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௮)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர்செம்பொன்பள்ளி
தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்
குருகாவூர்வெள்ளடைகுமரிகொங்கு
அண்டர்தொழுமதிகைவீரட்டான
மையாறசோகந்தியாமாத்தூருங்
கண்டியூர்வீரட்டங்கருகாவூருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௯)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறு
நாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கை
தோணிபுரந்துருத்திசோமீச்சர
முறையூர்கடலொற்றியூரூற்றத்தூ
ரோமாம்புலியூரோரேடகத்துங்
கறையூர்கருப்பறியல்கன்றாப்பூருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௧௧)

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர்
வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்து
நிலவுபெருங்கோயில்பலகண்டாற்றொண்டீர்
கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற
கயிலாயநாதனையேகாணலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

ஊர்த்தொகை.

ஏழாந்திருமுறை - பண் - பழம்பஞ்சுரம்

கோயிற்றிறம்.

---

திருச்சிற்றம்பலம்.

காட்டேர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேருராய்
கோட்டேர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டேர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டோனே
மாட்டேரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. (க)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடியடியார்கவலைகளையாயே. (உ)

நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே
மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே
மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே
யிறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மான்றம்மானே. (ங)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிற்கருகாவூரானே

பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாசூரம்மானே. (௪)

மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே
யருகற்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகானூர்க்கட்டியே
பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே. (௫)

தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பரனே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே. (௬)

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
யானைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
யூனைக்காவல்கைவிட்டென்னையுகப்பாருணர்வாரே. (௭)

திருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலா
பருத்திநியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றாய்
திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா
வருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே. (௮)

புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதூரா
பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே
வலிசேரரக்கன்றடக்கையைஞ்ஞான்கடர்த்தமதிசூடீ
கலிசேர்புறவிற்கடவூராளீகாணவருளாயே. (௯)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாண்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

# திருவெழுகூற்றிருக்கை.

## முதற்றிருமுறை - சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதல
மொன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
யிருவரோ டொருவ னாகி நின்றனை
யோரா னீழ லொண்கழ லிரண்டு
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
யிருநதி யரவமோ டொருமதி சூடினை
யொருதா ளீரயின் மூவிலைச் சூல
நாற்கான் மான்மறி யைந்தலை யரவ
மேந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
யொருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
யைம்புல னாலா மந்தக் கரண
முக்குண மிருவளி யொருங்கிய வானோ
ரேத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்துமுப் பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
யமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
யறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
யிகலி யமைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த

தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
யொருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னுன்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
யையுறு மமணரு மறுவகைத் தேரரு
மூழியு முணராக் காழி யமர்ந்தனை
யெச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
யாறு பதமு மைந்தமர் கல்வியு
மறைமுத லுன்கு
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
யிருமையி னொருமையு மொருமையின் பெருமையு
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியு
மனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

இஃது, சிவபாதவிருதயர் நித்தியகர்மங்களை நிறைவேற்றிய வுடனே தமது குமாரராகிய திருஞானசம்பந்த சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட திருப்பதிகங்களை ஓதிவிட்டே போசனஞ் செய்யும் வழக்கத்தைக்கொண்டனர். இவ்வாறு சிலகாலம் நிகழப் பிள்ளையார் தாம்பாடுவன பெருகுதலைத் திருவுளத்தடைத்து, தந்தையார் கொள்கைக்குத் தடைவராவண்ணம் அதுவரையும் இயற்றியுள்ள திருப்பதிகங்களின் பொருள்கள் யாவுமமைத்து இத்திருவெழுகூற்றிருக்கையைத் திருவாய்மலர்ந்தருளினர். ஆகலின் இதனை நாடோறும் அன்புடன் ஓதுவோர் சிவப்பிரசாதமெய்துவர் என்பது சத்தியம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

# திருக்கடவூர்மயானம்.

இரண்டாந்திருமுறை - பண் - காந்தாரம்

---

## சிவஞாநவம்.

---

திருச்சிற்றம்பலம்.

வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
யெரிய மதில்க ளெய்தா ரெறியு முசல முடையார்
கரிய மிடறு முடையார் கடவூர் மயான மமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா ரவரெம் பெருமா னடிகளே. (க)

மங்கை மணந்த மார்பர் மழுவாள் வலனொன் றேந்திக்
கங்கை சடையிற் கரந்தார் கடவூர் மயான மமர்ந்தார்
செங்கண் வெள்ளே றேறிச் செல்வஞ் செய்யா வருவா
ரங்கை யேறிய மறியா ரவரெம் பெருமா னடிகளே. (உ)

ஈட லிடப மிசைய வேறி மழுவொன் றேந்திக்
காட திடமா வுடையார் கடவூர் மயான மமர்ந்தார்
பாட லிசைகொள் கருவி படுதம் பலவும் பயில்வா
ராட லரவ முடையா ரவரெம் பெருமா னடிகளே. (ங)

இறைநின் றிலங்கு வளையா ளிளையா ளொருபா லுடையார்
மறைநின் றிலங்கு மொழியார் மலையார் மனத்தின் மிசையார்
கறைநின் றிலங்கு பொழில்சூழ் கடவூர் மயான மமர்ந்தார்
பிறைநின் றிலங்கு சடையா ரவரெம் பெருமான டிகளே. (ச)

வெள்ளை யெருத்தின் மிசையார் விரிதோ டொருகா திலங்கத்
துள்ளு மிளமான் மறியார் சுடர்பொற் சடைக டுலங்கக்
கள்ள நகுவெண் டலையார் கடவூர் மயான மமர்ந்தார்
பிள்ளை மதிய முடையா ரவரெம் பெருமா னடிகளே. (ரு)

பொன்றா துதிரு மணங்கொள் புனைபூங் கொன்றை புனைந்தா
ரொன்றா வெள்ளே றுயர்த்த துடையா ரதுவே யூர்வார்
கன்றா வினஞ்சூழ் புறவிற் கடவூர் மயான மமர்ந்தார்
பின்றாழ் சடையா ரொருவ ரவரெம் பெருமா னடிகளே. (சா)

பாச மான களைவார் பரிவார்க் கமுத மனையா
ராசை தீரக் கொடுப்பா ரலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போன் மிடற்றார் கடவூர் மயான மமர்ந்தார்
பேச வருவா ரொருவ ரவரெம் பெருமா னடிகளே. (எ)

செற்ற வரக்க னலறத் திகழ்சே வடிமெல் விரலாற்
கற்குன் றடர்த்த பெருமான் கடவூர் மயான மமர்ந்தார்
மற்றொன் றிணையில் வலிய மாசில் வெள்ளி மலைபோற்
பெற்றொன் றேறி வருவா ரவரெம் பெருமா னடிகளே. (அ)

வருமா கரியி னுரியார் வளர்புன் சடையார் விடையார்
கருமா னுரிதோ லுடையார் கடவூர் மயான மமர்ந்தார்
திருமா லொடுநான் முகனுந் தேர்ந்துங் காண முன்னொண்ணாப்
பெருமா னெனவும் வருவா ரவரெம் பெருமா னடிகளே. (கூ)

தூய விடைமேல் வருவார் துன்னா ருடைய மதில்கள்
காய வேவச் செற்றார் கடவூர் மயான மமர்ந்தார்
தீய கருமஞ் சொல்லுஞ் சிறுபுன் றேர ரமணர்
பேய்பே யென்ன வருவா ரவரெம் பெருமா னடிகளே. (க0)

மரவம் பொழில்சூழ் கடவூர் மன்னு மயான மமர்ந்த
வரவ மசைத்த பெருமா னகல மறிய லாகப்
பரவு முறையே பயிலும் பந்தன் செஞ்சொன் மாலை
யிரவும் பகலும் பரவி நினைவார் வினைக ளிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்திருப்பதிகம், திருஞானசம்பந்த சுவாமிகள் தலங்க டோறுஞ்சென்று தரிசித்து இத்தலத்துக்கு வந்து, அங்கிருந்த கலந்த நட்புப்பெருமை செறிந்த குங்கிலியக்கலயநாயனாரது திருமடத் திற்கெழுந்தருளி, அவர் அன்போடும் அமைத்தருளிய விருந்தை இனிதாகவிரும்பி அங்குள்ள கோவிலிற் சென்று தரிசித்தபோது பாடியருளியது

திருநாவுக்கரசு சுவாமிகள்

# கோயிற் றிருப்பதிகம்.

நான்காந்திருமுறை - பண் - கொல்லி.

## சிவானுபவம்.

திருச்சிற்றம்பலம்.

பாளை யுடைக்கமு கோங்கிப்பன் மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னு
ளாள வுடைக்கழற் சிற்றம் பலத்தர னாடல்கண்டாற் [னே
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதள
னுருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாந்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
றிருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே.

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுது
மடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய தில்லைச்சிற் றம்பலவ
னுடுத்த துகில்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே.

வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
வச்ச மொழிந்தே னணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்த
கச்சி னழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே.

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான் [ன்னே.
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதெ

ஊனத்தை நீக்கி யுலகரி யவென்னை யாட்கொண்டவன்
றேனொத் தெனக்கினி யான்றில்லைச் சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண் டத்திலங்கு
மேனத் தெயிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே

தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ்செந் தீயின்மூழ்க
வெரித்த விறைவ னிமையவர் கோமா னிணையடிக
டரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (எ)

சுற்று மமரர் சுரபதி நின்றிருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையு ணஞ்சையுண்டான்
செற்றங் கரங்களைத் தீவிழித் தான்றில்லை யம்பலவ
னெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே

சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (௯)

தருக்கு மிகுத்துத்தன் றோள்வலி யுன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்து
வரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை யம்பலவ
னெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு காண்பதென்னே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டில் உள்ளது.

சுவாமிபெயர் - சபாநாதர், தேவியார் - சிவகாமியம்மை.

---

திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருப்பூவணம்.

ஆறாந்திருமுறை - திருத்தாண்டகம்.

---

சிவனுருவம்.

---

திருச்சிற்றம்பலம்.

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்

கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்று
மிடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்று
மெழிறிகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (௧)

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்று
மடியவர்கட் காரமுத மாகித் தோன்று
மூணாகி யூர்திரிவா னாகித் தோன்று
மொற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேற்
சேணாக வரைவில்லா லெரித்த றோன்றுஞ்
செத்தவர்த மெலும்பினாற் செறியச் செய்த
பூணாணு மரைநாணும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. (௨)

கல்லாலி னீழற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்
சூழரவு மான்மறியுந் தோன்றுந் தோன்று
மல்லாத காலனைமுன் னடர்த்த றோன்று
மைவகையா னினைவார்பா லமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (௩)

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்று
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்று
நான்மறையி னொலிதோன்று நயனந் தோன்று
முடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்று
மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (௪)

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்று
மாசிலாப் புன்சடைமேன் மதியந் தோன்று
மியல்பாக விடுபிச்சை யேற்ற றோன்று
மிருங்கடனஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றுங்

கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
யாயிரமா முகத்திெனுடு வானிற் றேன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னூர்க்கே. (௫)

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரு நறும்புகையும் பரந்து தோன்றுஞ்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிக டோன்று
மோராழித் தேருடைய விலங்கை வேந்த
னுடறுணித்த விடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னூர்க்கே. (௬)

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்று
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றேன்றுந்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்த றேன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனூர்க்கே. (௭)

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்று
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்று
நெற்றிமேற் கண்டோன்றும் பெற்றந் தோன்று
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்று
மலைமகளுஞ் சலமகளு மலிந்து தோன்றும்
பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னூர்க்கே. (௮)

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்று
மணிகிளரு முருமென்ன வடர்க்குங் கேழன்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்று
மணமலிந்த நடந்தோன்று மணியார் வைகைத்
திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றுஞ்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்

பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (௯)

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமே லலர்மாலை யளித்த றோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றுங்
கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்முங்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புந் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (௧௦)

ஆருருவ வுள்குவா ருள்ளத் துள்ளே
யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவு தோன்று
நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை
நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பூவணநாதர்,

தேவியார்-மின்னும்பிகையம்மை.

---

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## திருக்கடவூர்மயானம்.

ஏழாந்திருமுறை - பண் - பழம்பஞ்சுரம்.

---

சிவஞநவம்.

---

திருச்சிற்றம்பலம்.

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோலே
வருவார் விடைமேன் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்

திருமால் பிரம னிந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௧)

விண்ணோர் தலைவர் வெண்புரிநூன் மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூர
ரெண்ணா புரமூன் றெரிசெய்த விறைவ ரிமையோ ரொருபாகம்
பெண்ணா ணவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௨)

காயும் புலியி னதளுடையர் கண்ட ரெண்டோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழு மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௩)

நறைசேர் மலரைங் கணையானை நயனத் தீயாற் பொடிசெய்த
விறையா ராவ ரெல்லார்க்கு மில்லை யென்னா தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௪)

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோணா கங்கள் பூணாக
மத்த யானை யுரிபோர்த்து மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி யாடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௫)

துணிவார் கீளுங் கோவணமுந் துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமே லிட்ட பாசுபதர் பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணிவார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௬)

காரார் கடலி னஞ்சுண்ட கண்டர் கடவூ ருறைவாணர்
தேரா ரரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலா லூன்றினா
ரூர்தா னாவ துலகேழு முடையார்க் கொற்றி யூராரூர்
பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௭)

வாடா முலையா டன்னோடு மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் றவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து வாவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௮)

வேழ முரிப்பர் மழுவாளர் வேள்வி யழிப்பர் சிரமறுப்ப
ராழி யளிப்ப ரரிதனக்கு வானஞ் சுகப்ப ரருமுரைப்ப

ரேழை தலைவர் கடவூரி லிறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௯)

மாட மல்கு கடவூரின் மறையோ ரேத்து மயானத்துப்
பீடை தீர வடியாருக் கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூர னம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்பார்மேற் பாவ மான பறையுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஞானசம்பந்த சுவாமிகள்.

# திருவாழ் கொளிபுத்தூர்.

## முதற்றிருமுறை-பண்-தக்கராகம்.

---

### திருவடிகள்.

---

திருச்சிற்றம்பலம்.

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப் பூதகணம் புடை சூழக்
கொடியுடை யூர்திரிந் தையங் கொண்டு பலபல கூறி [தூர்க்
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக மாயவன் வாழ்கொளி புத்
கடிகமழ் மாமல ரிட்டுக் கறைமிடற் றானடி காண்போம். (௧)

அரைகெழு கோவண வாடையின் மேலோராடரவம்மசைத் தையம்
புரைகெழு வெண்டலை யேந்திப் போர்விடை யேறிப் புகழ
வரைகெழு மங்கைய தாகமோர் பாக மாயவன் வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ் மாமலர் தூவி விரிசடை யானடி சேர்வோம். (௨)

பூணெடு நாகம சைத்தன லாடிப் புன்றலை யங்கையி லேந்தி
யூணிடு பிச்சையூ ரைய முண்டியென் றுபல கூறி [தூர்த்
வாணெடுங் கண்ணுமை மங்கையோர் பாக மாயவன்வாழ்கொளிபுத்
தாணெடு மாமல ரிட்டுத் தலைவன தாணிழல் சார்வோம். (௩)

தாரிடு கொன்றையோர் வெண்மதி கங்கை தாழ்சடைமேலவைசூடி
யூரிடு பிச்சைகொள் செல்வ முண்டியென் றுபல கூறி

வாரிடு மென்முலை மாதொரு பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
காரிடு மாமலர் தூவிக் கறைமிடற் றானடி காண்போம். (௪)

கனமலர்க் கொன்றைய லங்க லிலங்கக் காதிலோர் வெண்குழை
புனமலர் மாலை புனைந்தூர் புகுதியென் றேபல கூறி [யோடு
வனமுலை மாமலை மங்கையோர் பாக மாயவன் வாழ்கொளி புத்தூ
ரினமல ரேய்ந்தன தூவி யெம்பெரு மானடி சேர்வோம். (௫)

அளைவளர் நாகம சைத்தன லாடி யலர்மிசை யந்தண னுச்சிக்
களைதலை யிற்பலி கொள்ளுங் கருத்தனே கள்வனே யென்று [தூர்த
வளையொலி முன்கை மடந்தையோர் பாக மாயவன் வாழ்கொளிபுத்
தளையவிழ் மாமலர் தூவித் தலைவன தாளிணை சார்வோம். (௬)

அடர்செவி வேழத்தி னீருரி போர்த்து வழிதலை யங்கையி லேந்தி
யுடலிடு பிச்சையோ டைய முண்டியென் றுபல கூறி [தூர்த
மடனெடு மாமலர்க் கண்ணியோர் பாக மாயவன் வாழ்கொளி புத்
தடமல ராயின தூவித் தலைவன தாணிழல் சார்வோம். (௭)

உயர்வரை யொல்கவெ டுத்தவ ரக்க னொளிர்கட கக்கை யடர்த்து
வயலிடு பிச்சையோ டைய மார்தலை யென்றடி போற்றி
வயல்விரி நீல நெடுங்கணி பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரி மாமலர் தூவித் தாழ்சடை யானடி சார்வோம். (௮)

கரியவ னான்முகன் கைதொழு தேத்தக் காணலுஞ் சாரலு மாகா
வெரியுரு வாகியூ ரைய மிடுபலி யுண்ணியென் றேத்தி
வரியர வல்குன் மடந்தையோர் பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயின தூவி விகிர்தன சேவடி சேர்வோம். (௯)

குண்டம ணர்துவர்க் கூறைகண்மெய்யிற் கொள்கையினார்புறங்கூற
வெண்டலை யிற்பலி கொண்டல் விரும்பினை யென்றுவி ளம்பி
வண்டமர் பூங்குழன் மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கண் மாமலர் தூவத் தோன்றநின் றானடி சேர்வோம்.

கல்லுயர் மாக்கட னின்று முழங்குங் கரைபொரு காழிய மூதூர்
நல்லுயர் நான்மறை நாவி னற்றமிழ் ஞானசம் பந்தன்
வல்லுயர் சூலமும் வெண்மழு வாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சொல்லிய பாடல்கள் வல்லார் துயர்கெடு தல்லெளி தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டில் உள்ளது.

சுவாமி - மாணிக்கவண்ணர், தேவியார் - வண்டமர் பூங்குழனாயகி.

இந்தத்திருப்பதிகம், ஆளுடையபிள்ளையார் இவ்வாலயசேவை செய்த காலத்து ஓதியருளியது.

---

திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருவதிகைவீரட்டானம்.

ஆறாந்திருமுறை - திருவடித்திருத் தாண்டகம்.

---

திருவடிகள்.

---

திருச்சிற்றம்பலம்.

அரவணையான் சிந்தித் தரற்றும்மடி
  யருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
  சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
  பதினெண் கணங்களும் பாடும்மடி
விரவுநீர்த் தென்கெடில நாடனடி
  திருவீரட் டானத்தெஞ் செல்வனடி. (௧)

கொடுவினையா ரென்றுங் குறுகாவடி
  குறைந்தடைந்தா ராழாமைக் காக்கும்மடி
படுமுழவம் பாணி பயிற்றும்மடி
  பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சேவடி
  கடல்வையங் காப்பான் கருதும்மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தானடி
  நிறைகெடில வீரட்ட நீங்காவடி. (௨)

வைதெழுவார் காமம்பொய் போகாவடி
  வஞ்சவலைப் பாடொன் றில்லாவடி
கைதொழுது நாமேத்திக் காணும்மடி
  கணக்கு வழக்கைக் கடந்தவடி

நெய்தொழுது நாமேத்தி யாட்டும்மடி
நீள்விசும்பை யூடறுத்து நின்றவடி
தெய்வப் புனற்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௩)

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
யழகெழுத லாகா வருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையுங் காலனையுங் காய்ந்தவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௪)

ஒருகாலத் தொன்றாகி நின்றவடி
யூழிதோ றூழி யுயர்ந்தவடி
பொருகழலும் பல்சிலம்பும் மார்க்கும்மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
யிருநிலத்தா ரின்புற்றங் கேத்தும்மடி
யின்புற்றா ரிட்டபூ வேறும்மடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௫)

திருமகட்குச் செந்தா மரையாமடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும்மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
யுருவிரண்டு மொன்றோடொன் றொவ்வாவடி
யுருவென் றுணரப் படாதவடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௬)

உரைமாலை யெல்லா முடையவடி
யுரையா லுணரப் படாதவடி
வரைமாதை வாடாமை வைக்கும்மடி
வானவர் கடாம்வணங்கி வாழ்த்தும்மடி
யரைமாத் திரையி லடங்குமடி

யகல மளக்கிற்பா ரில்லாவடி
கறைமாங் கலிக்கெடில நாடன்னடி
கமழ்வீரட் டானக்கா பாலியடி. (எ)

நறுமலராய் நாறு மலர்ச்சேவடி
நடுவா யுலகநா டாயவடி
செறிகதிருந் திங்களுமாய் நின்றவடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்தவடி
மறுமதியை மாசு கழுவும்மடி
மந்திரமுந் தந்திரமு மாயவடி
யெறிகெடில நாடர் பெருமானடி
திருவீரட் டானத்தெஞ் செல்வனடி. (அ)

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
யடியார்கட் காரமுத மாயவடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி
பற்றற்றார் பற்றும் பவளவடி
மணியடி பொன்னடி மாண்பாமடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
தணிபாடு தண்கெடில நாடன்னடி
தகைசார் வீரட்டத் தலைவன்னடி. (கூ)

அந்தா மரைப்போ தலர்ந்தவடி
யரக்கனையு மாற்ற லழித்தவடி
முந்தாகி முன்னே முளைத்தவடி
முழங்கழலாய் நீண்டவெம் மூர்த்தியடி
பந்தாடு மெல்விரலாள் பாகன்னடி
பவளத் தடவரையே போல்வானடி
வெந்தார் சுடலைநீ றாடும்மடி
வீரட்டங் காதல் விமலன்னடி. (கூ0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# திருப்புன்கூர்.

ஏழாந்திருமுறை - பண் - தக்கேசி.

## திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
வவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வெளவினாய்க் குன்றன் வன்மைகண் டடியே
னெந்தை நீயெனை நமன்றமர் நலியி
லிவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (௧)

வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலந் தருகோ
முய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளுஞ்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (௨)

ஏத நன்னில மீரறு வேலி
யேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன்
சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (௩)

நற்றமிழ்வல்ல ஞானசம் பந்த
னுவினுக் கரைய னுளைப்போ வானுங்
கற்றசூதனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கண் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே. (ச)

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளா ரவுசுற் றிக்கடைந் தெழுந்த
வால நஞ்சுகண் டவர்மிக விரிய
வமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (ரு)

இயக்கர் கின்னரர் யமனொடு வருண
ரியங்கு தீவளி ஞாயிறு திங்கண்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லா
மயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
யர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (சு)

போர்த்த நீள்செவி யாளரந் தணர்க்குப்
பொழில்கொ ளானிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னுய்பண்டு பகீரதன் வேண்ட
வார்த்து வந்திழி யுய்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (எ)

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி
லிருவர் நின்திருக்கோயிலின் வாய்தற்

காவ லாளரென் றேவிய பின்னை
யொருவ னீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (அ)

அறிவி னன்மிக்க வறுவகைச் சமய
மவ்வ வர்க்கங்கே யாரருள் புரிந்து
வெறிய மாகட லிலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன்கூரு ளானே. (௯)

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானை
யும்ப ராளியை யுமையவள் கோனை
யூரன் வன்றொண்ட னுள்ளத் தாலுகந்
தன்பி னாற்சொன்ன வருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவ ரருவினை யிலரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சிவலோகநாயகர்.

தேவியார் - சொக்கநாயகியம்மை.

இந்தத் திருப்பதிகம், சுந்தரமூர்த்திசுவாமிகள் கலிக்காமநாயனாரோடு இத்தலத்திற் சேர்ந்து சுவாமிதரிசனஞ் செய்த காலத்துப் பாடியருளியது.

திருஞானசம்பந்த சுவாமிகள்

# திருப்பூந்தராய்.

மூன்றாந்திருமுறை - பண் - காந்தாரபஞ்சமம்.

## அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விர லாள்பவளத்துவர் வாயினாள்பனி மாமதி போன்முகத்
தந்தமில்புக ழாண்மலைமாதொடு மாதிப்பிரான் [லர்
வந்துசேர்விடம் வானவரெத்திசை யுந்நிறைந்துவ லஞ்செய்து மாம
புந்திசெய்திறைஞ் சிப்பொழிபூந்தராய் போற்றுதுமே. (க)

காவியங்கருங் கண்ணினாள்கனித்தொண்டை வாய்க்கதிர் முத்தநல்
வெண்ணகைத், தூவியம்பெடை யன்னநடைச் சுரிமென்குழலா
டேவியுந்திரு மேனியோர்பாகமா யொன்றிரண்டொரு மூன்றொடு
சேர்பதி, பூவிலந்தண னொப்பவர் பூந்தராய் போற்றுதுமே. (உ)

பையராவரு மல்குன்மெல்லியல் பஞ்சின்னேரடி வஞ்சிகொ ணுண்
ணிடை, தையலாளொரு பாலுடையெம்மிறை சாருமிடஞ்
செய்யெலாங்கழு நீர்கமலம்மலர்த் தேறலூறலிற் சேறுல ராதநற்
பொய்யிலாமறை யோர்பயில்பூந்தராய் போற்றுதுமே. (ங)

முள்ளிநாண்முகை மொட்டியல்கோங்கின ரும்புதேன்கொள் குரும்
பை மூவாமருந், துள்ளியன்றபைம் பொற்கலசத்திய லொத்தமுலை,
வெள்ளிமால்வரை யன்னதோர்மேனியின் மேவினார்பதி வீமருதண்
பொழிற், புள்ளினந்துயின் மல்கியபூந்தராய் போற்றுதுமே. (ச)

பண்ணியன்றெழு மென்மொழியாள்பகர் கோதையேர்திகழ் பைந்த
ளிர் மேனியோர், பெண்ணியன்றமொய்ம் பிற்பெருமாற்கிடம் பெய்
வளையார், கண்ணியன்றெழு காவிச் செழுங்கரு நீலமல்கிய காமரு
வாவிநற், புண்ணியருறை யும்பதிபூந்தராய் போற்றுதுமே. (ரு)

வாணிலாமதி போனுதலாண்மட மாழையொண்கணாள் வண்டர
ளந்நகை, பாணிலாவிய வின்னிசையார்மொழிப் பாவையொடுஞ்
சேணிலாத்திகழ் செஞ்சடையெம்மண்ணல் சேர்வதுசிக ரப்பெருங்
கோயில்சூழ், போணிலாதுழை யும்பொழிற்பூந்தராய் போற்றுதுமே.

காருலாவிய வார்குழலாள்கயற் கண்ணிநுள்புயற் காலொளி மின்
வாருலாவிய மென்முலையாண்மலை மாதுடனாய் [னிடை
நீருலாவிய சென்னியன்மன்னி நிகருநாமமுந் நான்கு நிகழ்பதி
போருலாவெயில் சூழ்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. (எ)

காசைசேர்குழ லாள்கயலேர்தடங் கண்ணி காம்பன தோட்கதி
மென்முலைத், தேசுசேர்மலை மாதமருந்திரு மார்பகலத்
தீசன்மேவுமி ருங்கயிலையெடுத் தானையன்றடர்த் தானிணைச்சேவடி
பூசைசெய்பவர் சேர்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. (அ)

கொங்குசேர்குழ லாணிழல்வெண்ணகைக் கொவ்வைவாய்க் கொடி
யேரிடை யாளுமை, பங்குசேர்திரு மார்புடையார்படர் தீயுருவாய்
மங்குல்வண்ணனுமா மலரோனுமயங்கநீண்டவர்வான்மிசைவந்தெழு
பொங்குநீரின் மிதந்த நற்பூந்தராய் போற்றுதுமே. (கூ)

கலவமாமயி லாரியலாள்கரும் பன்னமென்மொழி யாள்கதிர் வாணு
குலவுபூங்குழ லாளுமைகூறனை வேறுரையா [தற்
லலவைசொல்லுவார் தேரமணாதர்க ளாக்கினொன்றனை நண்ணலு நல்
குநற், புலவர்தாம்புகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமே. (க0)

தேம்பனுண்ணிடை யாள்செழுஞ்சேலன கண்ணியோடண்ணல்
சேர்விடந் தேனமர், பூம்பொழிநிகழ் பொற்பதிபூந்தராய்போற்றுது
மென், றேம்புதன்மையன் முத்தமிழ்நான்மறை ஞானசம்பந்தனொ
ண்டமிழ் மாலைகொண், டாம்படியிவை யேத்தவல்லார்க்கடை யாவி
னையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசு சுவாமிகள்

## ஸ்ரீ கயிலாயம்.

---

ஆறாந்திருமுறை - திருத்தாண்டகம்.

---

அருச்சனை.

---

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி

பூற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாத சத்தத் தொலியே போற்றி
யாற்றாகி யங்கே யமர்ந்தாய் போற்றி
யாறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (க)

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட னன்று முகந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (உ)

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
யுருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
யுள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (ங)

வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
யூனத்தை நீக்கு முடலே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (ச)

ஊராகி நின்ற வுலகே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பேராதென் சிந்தை புகுந்தாய் போற்றி

நீராவி யான நிழலே போற்றி
  நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
  கயிலை மலையானே போற்றி போற்றி. (ரு)

வில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
  தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
  போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
  பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
  கயிலை மலையானே போற்றி போற்றி. (சு)

பண்ணி னிசையாகி நின்றாய் போற்றி
  பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
யெண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
  யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
விண்ணு நிலனுந் தீயானாய் போற்றி
  மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
  கயிலை மலையானே போற்றி போற்றி. (எ)

இமையா துயிரா திருந்தாய் போற்றி
  யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
யுமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
  யூழியே ழான வொருவா போற்றி
யமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
  யாதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
  கயிலை மலையானே போற்றி போற்றி (அ)

மூவாய் பிறவா யிறவாய் போற்றி
  முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே போற்றி
  சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
யாவா வடியேனுக் கெல்லாம் போற்றி
  யல்ல லலிய வலந்தேன் போற்றி

காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (க)

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள வகல முடையாய் போற்றி
யடியு முடியு மிகலிப் போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா வென்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (கo)

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
யோதாதே வேத முணர்ந்தாய் போற்றி
யெண்ணா விலங்கைக்கோன் றன்னைப் போற்றி
யிறைவிரலால் வைத்துகந்த வீசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் வடநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கயிலாயநாதர், தேவியார்-பார்வதியம்மை

---

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## திருக்கழுக்குன்றம்

ஏழாந்திருமுறை - பண்-நட்டபாடை.

---

அருச்சனை.

---

திருச்சிற்றம்பலம்.

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகடாம்பல நீங்கவே

சென்று சென்று தொழுமின் றேவர்பி ரானிடங்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (க)

இறங்கிச் சென்று தொழுமி னின்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடைய னெங்கள் பிரானிட
நிறங்கள் செய்த மணிக ணித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித் தண்கழுக் குன்றமே. (உ)

நீள நின்று தொழுமி னித்தலு நீதியா
லாளு நம்ம வினைக ளல்கி யழிந்திடத்
தோளு மெட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்ட னுறையுந் தண்கழுக் குன்றமே. (ங)

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்குமழு வாளன் முந்தியு றைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மத மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (ச)

புலைக டீரத் தொழுமின் புன்சடைப் புண்ணிய
னிலைகொள் சூலப் படைய னெந்தை பிரானிட
முலைக ளுண்டு தழுவிக் குட்டியொ டுமுசுக்
கலைகள் பாயும் புறவிற் றண்கழுக் குன்றமே (ரு)

மடமு டைய வடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய வரவன்றான் பயிலு மிடங்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே. (சு)

ஊன மில்லா வடியார் தம்மனத் தேயுற
ஞான மூர்த்தி நட்ட மாடிந விலுமிடந்
தேனும் வண்டு மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை யுறையுந் தண்கழுக் குன்றமே. (எ)

அந்த மில்லா வடியார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்க ணிந்தலுஞ் சேர்வே
சந்த நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. (அ)

பிழைக டீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யுமிட

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவா
ரொப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்துநலியா
வப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (எ)

வேள்பட விழிசெய்தன்று விடைமேலி ருந்து
மடவாட னோடுமுடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமேபு குந்தவதனால்
வேழ்கடல் சூழிலங்கை யரையன் றனோடு
மிடரான வந்து நலியா
வாழ்கட லல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (அ)

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள்பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனான்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மானபலவு
மலைகடன் மேருநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (கூ)

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனாற்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மைதிடமே
யத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்குமிகவே. (கo)

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம்பொ னெங்குநிகழ

நான்முக னாதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞானமுனிவன்
றானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ணமுரைசெய்
யானசொன் மாலையோது மடியார்கள் வானி
லரசாள்வ ராணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம், திருஞானசம்பந்தசுவாமிகள் சமணரை வாதில்வெல்லத் திருவுளங்கொண்டு எழுந்தருளியபோது திருத்தாண்டகவேந்தர், சமணரோ மிகவுங்கொடியர் இப்போது கோணிலையுந் தீதாயிருக்கின்றது என்று தடுத்தவிடத்து, புவனேசுரராகிய சிவபெருமானை அம்மையோடு எம்முளத்திற் குடிகொள்ளப் பெற்றனமாகையால் யாதோர் தீங்கும் வாராதென்று உறுதிமொழிந்து ஓதியருளியது.

---

திருநாவுக்கரசு சுவாமிகள்.

# திருவாரூர் திருவிருத்தம்.

நான்காந்திருமுறை - பண் - கொல்லி.

---

## அடிமை.

---

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம் பாவரு குண்டர்முன் னேநமக் குண்டுகொலோ
வலம்பலம் பாவரு தண்புன லாரு ரவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி யான்றிரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே.(க)

மற்றிட மின்றி மனைதுறந் தல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட் டேனுக்கு முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனொ டன்றொரு வேடுவனாய்ப், புற்றிடங்
கொண்டான்றன் றொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (உ)

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர் முன்னமக் குண்டுகொலோ
செருவடி வெஞ்சிலை யாற்புர மட்டவன் சென்றடையாத்

திருவுடை யான்றிரு வாரூர்த் திருமூலட் டானன்செங்கட்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

மாசினை யேறிய மேனியர் வன்கண்ணர் மொண்ணரைவிட்
டீசனை யேநினைந் தேசறு வேனுக்கு முண்டுகொலோ
தேசனை யாரூர்த் திருமூலட் டானனைச் சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (௪)

அருந்தும் பொழுதுரை யாடா வமணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயென்று வாழ்த்துவேற் குண்டுகொலோ
திருந்திய மாமதி லாரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொருந்துந் தவமுடைத்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

வீங்கிய தோள்களுந் தாள்களு மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணு மூடர்முன் னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த் திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (௬)

பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக் குண்டரைவிட்
டெண்ணில் புகழீசன் றன்னருள் பெற்றேற்கு முண்டுகொலோ
திண்ணிய மாமதி லாரூர்த் திருமூலட் டானனெங்கள்
புண்ணியன் றன்னடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

கரப்பர்கண் மெய்யைத் தலைபறிக் கச்சுக மென்னுங்குண்ட
ருரைப்பன கேளாதிங் குய்யப்போந் தேனுக்கு முண்டுகொலோ
திருப்பொலி யாரூர்த் திருமூலட் டானன் றிருக்கயிலைப் [மே.
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணிய

கையி லிடுசோறு நின்றுண்ணுங் காத லமணரைவிட்
டுய்யு நெறிகண்டிங் குய்யப்போந் தேனுக்கு முண்டுகொலோ
வைய மணிவய லாரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாவடித் தொண்டர்க்குத் தொண்டராம்புண்ணியமே.

குற்ற முடைய வமணர் திறமது கையகன்றிட்
டுற்ற கருமஞ்செய் துய்யப்போந் தேனுக்கு முண்டுகொலோ
மற்பொலி தோளா னிராவணன் றன்வலி வாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வன்மீகநாதர், தேவிபெயர்-அல்லியங்கோதையம்மை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# திருத்தொண்டத்தொகை

ஏழாந்திருமுறை-பண்-கொல்லிக்கௌவாணம்.

## அடிமை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியே
னில்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (க)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியே
னலைமலிந்த புனன்மங்கை யானாயற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (உ)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (ஙு)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்

பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியே
னொருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியே
னருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௪)

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியே
னெம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
னம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௫)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியே
னார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௬)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே
னையடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௭)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியே
னிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்

றுறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியே
னறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (அ)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியே
னடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (கூ)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியே
னப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (க0)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

அகத்திய மாமுனிவர் திரட்டியருளிய
தேவாரத்திரட்டு முற்றுப்பெற்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## அகத்தியர் தேவாரத்திரட்டுத்

# திருப்பாசுரமுதற்குறிப்பு அகராதி.


| திருப்பாசுரம். | பக்கம். |
|---|---|
| அஞ்சினார்க் | ௰௭ |
| அடர்செவி | ௩௭ |
| அட்டாலை | ௰௯ |
| அணியனவு | ௪௰ |
| அண்ணாமலை | ௰௯ |
| அந்தணாள | ௪௧ |
| அந்தமில் | ௪௯ |
| அந்தாமரை | ௪௰ |
| அம்மானை | ௨௧ |
| அரவணை | ௩௮ |
| அருத்த | ௰ |
| அருநெறி | ௪ |
| அருந்தும் | ௫௪ |
| அருப்போட் | ௩௩ |
| அரும்பித்த | ௩௯ |
| அரைகெழு | ௩௬ |
| அலைவளர் | ௩௭ |
| அறப்பள்ளி | ௰௯ |
| அறிவினான் | ௪௩ |
| ஆங்கணைந் | ௩௪ |
| ஆனாகிப் | ௩௨ |
| ஆருருவ | ௩௪ |
| ஆரூரத்தா | ௨௪ |
| ஆரூர்தில் | ௰௮ |
| ஆரூர்மூலட் | ௨௧ |
| ஆறைவட | ௰௯ |
| ஆற்றலடல் | ௰௧ |
| இடுக்கண்பட் | ௰௫ |
| இடைமருதீ | ௨௨ |
| இட்டனும் | ௰௭ |
| இமையாது | ௪௭ |
| இயக்கர் | ௪௨ |
| இயமன்றா | ௰௪ |
| இராவணன் | ௰ |
| இலங்கைமன் | ௰௪ |
| இலைமலிந்த | ௫௫ |
| இல்லகவிளக் | ௰௬ |
| இறங்கிச்சென் | ௪௯ |
| இறைநின்றிலங் | ௨௮ |
| ஈடலிடப | ௨௮ |
| உஞ்சேனை | ௨௩ |
| உண்ணாதுறங் | ௪௮ |
| உயர்ந்தேன் | ௭ |
| உயர்வரை | ௩௭ |
| உருவளர் | ௫௧ |
| உரைமாலை | ௩௯ |
| ஊராகிநின் | ௪௬ |
| ஊனத்தை | ௩௰ |
| ஊனமில் | ௪௯ |
| ஊனாயுயிரா | ௯ |
| ஊனிலுயிர்ப் | ௧௨ |
| எச்சிலிள | ௨௨ |
| எயிலது | ௰ |
| எல்லையில் | ௧௭ |
| என்பொடு | ௫௰ |
| ஏடுவானிளந் | ௧௭ |
| ஏதநன்னில | ௪௧ |
| ஏற்றூர்புர | ௯ |
| ஒருகாலத் | ௩௯ |
| ஒருமைபெண் | ௩ |
| ஒருவடிவி | ௫௩ |
| ஓருருவாயி | ௨௬ |
| ஓவுநாளு | ௧௭ |
| கஞ்சிமண் | ௧௪ |
| கடல்சூழ் | ௫௭ |
| கம்பமால் | ௪௩ |
| கரப்பர் | ௫௪ |
| கரியவ | ௩௭ |
| கலவமா | ௪௫ |
| கல்லாவி | ௩௨ |
| கல்லுயர் | ௩௭ |
| கறைக்கண் | ௫௬ |
| கனமலர்க் | ௩௭ |
| காசைசேர் | ௪௫ |
| காட்டேர்க் | ௨௪ |
| காணவினி | ௰ |
| காதலாகி | ௧௩ |
| காத்தாள்ப | ௬ |
| காயும்புலி | ௩௫ |
| காரார் | ௩௫ |
| காருலாவி | ௪௫ |
| காரூர்புன | ௯ |
| கார்வணனை | ௧௨ |
| காவியங் | ௪௪ |

| திருப்பாசுரம். | பக்கம். |
|---|---|
| குண்டமணர் | ௩௭ |
| குண்டிகை | ௧௧ |
| குத்தங்குடி | ௨௰ |
| குலம்பலம்பா | ௫௩ |
| குலாவுதிங் | ௨௰ |
| குற்றமுடை | ௫௪ |
| கூற்றுயின | ௫ |
| கைம்மாவுரிவை | ௨௫ |
| கையிலிடு | ௫௪ |
| கொங்கலர் | ௧௨ |
| கொங்கிற்கு | ௨௪ |
| கொங்குசேர் | ௪௫ |
| கொடுங்கோ | ௨௨ |
| கொடுவினை | ௩௮ |
| கொத்தலர் | ௫௨ |
| கொத்தார் | ௩௫ |
| கொல்வா | ௧௪ |
| கொன்று | ௪௮ |
| கோணியபிறை | ௧௮ |
| கோலமால் | ௪௨ |
| சடைமுயங் | ௪ |
| சலமிலன் | ௧௬ |
| சலம்பூவொ | ௫ |
| சாரணன் | ௧௮ |
| சித்தத்தெழு | ௩௧ |
| சில்லுருவா | ௪௭ |
| சுற்றமமரர் | ௩௧ |
| செப்பிளமு | ௫௨ |
| செம்பொனேர் | ௧௮ |
| செய்ஞ்ஞின்ற | ௩௰ |
| செறிகழலு | ௩௩ |
| செற்றவரக்கன | ௨௯ |
| சொற்றுணை | ௧௫ |
| தண்ணார்மதி | ௮ |
| தருக்குமிகு | ௩௧ |
| தன்னடியார்க் | ௩௩ |
| தாங்கூர்பிணி | ௨௫ |
| தாணுதல்செ | ௪ |
| தாரிடுகொ | ௩௬ |
| திண்டீசசர | ௨௩ |
| திருநின்ற | ௫௫ |
| திருமகட்கு | ௩௯ |
| தில்லைச்சிற்றம் | ௨௧ |
| தில்லைவா | ௫௫ |
| துஞ்சலுந் | ௧௧ |
| துணிவார் | ௩௫ |
| தும்மலிரும | ௧௨ |
| துருத்திசசு | ௨௫ |
| தூயவிடை | ௨௯ |
| தெரித்தகணை | ௩௧ |
| தேம்பனுண் | ௪௫ |
| தேனமர் | ௫௨ |
| தேனைக்கா | ௨௫ |
| தொடுத்தம | ௩௰ |
| தோடுடைய | ௩ |
| நஞ்சணிக | ௫௧ |
| நந்திநாம | ௧௪ |
| நம்புவார்நமர் | ௧௩ |
| நரகமேழ்புக | ௧௪ |
| நல்லவர்தீய | ௧௨ |
| நறுமலராய் | ௪௰ |
| நறைசேர் | ௩௫ |
| நறையூரிற் | ௨௩ |
| நற்றமிழ்ஞா | ௧௩ |
| நற்றமிழ்வல் | ௪௨ |
| நாயேன்பல | ௮ |
| நிறைக்காட் | ௨௪ |
| நீர்பரந்த | ௩ |
| நீளநின்று | ௪௯ |
| நெக்குளார்வ | ௧௩ |
| நெஞ்சம்மு | ௫ |
| நெடியவிசும் | ௪௮ |
| நெற்குன்ற | ௨௰ |
| படைமலி | ௩௨ |
| பணிந்தாரன | ௬ |
| பண்ணியசா | ௫௪ |
| பண்ணியன் | ௪௪ |
| பண்ணிளிசை | ௪௭ |
| பத்தராய்ப் | ௫௭ |
| பந்துசேர்வி | ௪௪ |
| பலபலவே | ௫௨ |
| பல்லில்வெ | ௫௰ |
| பாசமான | ௨௯ |
| பாதம்பணி | ௮ |
| பாராழிவட்டத் | ௩௩ |
| பாலையுடை | ௩௰ |
| பிச்சாடல் | ௪௬ |
| பித்தாபிறை | ௮ |
| பிழைகடர | ௪௯ |
| புத்தரோடு | ௪ |
| புத்தர்சமண் | ௧௨ |
| புலியூர்ச்சிற் | ௨௫ |
| புலிவலம் | ௨௪ |
| புலைகடீரத் | ௪௯ |
| பூசவினியது | ௰ |
| பூணெடுநாக | ௩௬ |

| திருப்பாசுரம். | பக்கம். | திருப்பாசுரம். | பக்கம். | திருப்பாசுரம். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| பூவினுக்கரு | ௰௫ | மற்றுப்பற் | ௰௭ | வாணிலாம | ௪௪ |
| | | மனவஞ்சர் | ௨௰ | வார்கொண் | ௫௬ |
| பையராவரு | ௪௪ | மன்னியசீர் | ௫௭ | வாள்வரிய | ௫௧ |
| | | மன்னேமற | ௮ | வானத்தார் | ௪௬ |
| பொடியுடை | ௩௬ | | | | |
| பொய்யடிமை | ௫௬ | மாசினேயே | ௫௪ | விண்ணுற | ௰௫ |
| பொருவிடை | ௩௰ | மாடமல்கு | ௩௬ | விண்மகிழ் | ௩ |
| பொன்போ | ௭ | மாட்டேர்மட | ௨௰ | விண்ணோர் | ௩௫ |
| பொன்றுருதி | ௨௮ | மாப்பிணைத | ௧௬ | வியரிலங் | ௪ |
| | | மாலொடய | ௰ | விரும்பிநின் | ௰௮ |
| போதன்போ | ௰௪ | முடியேனினி | ௮ | | |
| போர்த்தநீள் | ௪௨ | முத்திதருவ | ௰ | வீங்கிய | ௫௪ |
| போர்த்தாயங் | ௭ | மும்மையாலு | ௫௫ | வீடிஞருல | ௰௬ |
| | | முள்ளிநாண் | ௪௪ | வீடுபிறப் | ௰௨ |
| மங்கைமண | ௨௮ | முற்றலாமை | ௩ | வீழிமிழலை | ௨௩ |
| மடமுடைய | ௪௯ | முன்னம்மடி | ௬ | | |
| மண்ணிப்படி | ௨௨ | முன்னெறியா | ௰௬ | வெந்தநீறருங் | ௰௬ |
| மதிநுதன்ம | ௫௧ | | | வெளிறுதீர | ௪௯ |
| மந்தரம்மன | ௰௪ | மூவாய்பிற | ௪௭ | வெள்ளையெருத் | ௨௮ |
| மந்திரநான் | ௰௧ | மூவெயில்செ | ௪௨ | | |
| மந்திரமாவ | ௯ | | | வேதத்திலு | ௰ |
| மயலாகுந் | ௩௨ | வடிவேறுதி | ௩௧ | வேயுறுதோ | ௫௰ |
| மரவம்பொழில் | ௨௯ | வண்டம | ௰௨ | வேழமுரிப்பர் | ௩௫ |
| மருகலுறை | ௨௫ | வம்பறுவ | ௫௬ | வேள்பட | ௫௨ |
| மருவார்கொ | ௩௪ | வரியமறை | ௨௮ | வேற்றுகி | ௪௫ |
| மருவார்புர | ௪௬ | வருமாகரியி | ௨௯ | | |
| மழுவாள்வல | ௯ | வலித்தேன் | ௭ | வைச்சபொரு | ௩௰ |
| மறைகலந் | ௪ | | | வைதெழுவார் | ௩௮ |
| மற்றிடமி | ௫௩ | வாடாமுலை | ௩௫ | வையகமு | ௪௧ |


திருப்பாசுர முதற்குறிப்பு அகராதி - முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஜகதாசாரிய மூர்த்திகளாகிய

மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருவாசகம்.

திருக்கோவையார் செய்யுட்டிரட்டு.

இவற்றுடன்.

இரங்கோன் - சமரசஞான சன்மார்க்க சபைத்தலைவரும்,

சிகந்திராபாக்கம் - சித்தாந்த ஞானபோதசங்க ஸ்தாபகரும்,

சித்தாந்தஞானநிஷ்டருமாகிய

சோளங்கிபுரம்

ஸ்ரீமத்-சிவஅருணகிரிமுதலியார்

அவர்களாலியற்றிய

அறுபது விஷய சூசனங்களுஞ்

சேர்த்துப்பாசுரங்களின் தலைகள் பிரித்துப்

பரிசோதிக்கப்பட்டு,

ஷெயார் தலையனும்

பென்ஷன் சுபேதாரும் பெஞ்சுமாஜிஸ்ட்ரேட்டுமாகிய

சோளங்கிபுரம்

ஸ்ரீ-சிவசிதம்பர முதலியாரவர்கள்

நல்லாதரவால்

ம-ா-ா-ஸ்ரீ,

ப. அ. சோமசுந்தர செட்டியாரவர்களது

சென்னை,

வித்யா பாஸ்கர அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டன.

விசுவாவசு ௵ பங்குனி௴

1906.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசகசுவாமிகள்

# சரித்திரச்சுருக்கம்.

அநாதிமலமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் யாவருந் துணிந்து வழிபட்டு உய்யும் பொருட்டுப் பற்பல அற்புதங்களினாலே, சகல சமயாதீதமாகிய சித்தாந்த சைவத்தைத் தாபித்தருளிய பரமசமயாசாரிய சுவாமிகள்நால்வருள் ஸ்ரீமந் - மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகமும் தமிழ்வேதமென்று உயர்ந்தோர் அனைவராலுங்கொள்ளப்பெற்றுப் பாராயணஞ் செய்வோர்க்குப் பத்தி ஞானங்களை உண்டாக்குகின்றது. மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவக்ஷேத்திரங்கள் எல்லாவற்றினும் மார்கழி மாசத்திலே திருவிழா நடத்தப்படுகின்றது. அவற்றுள் அப்பெருமானார் உபதேசம்பெற்ற திருப்பெருந்துறையிலே மார்கழி ஆனிமாசங்களில் நடத்தப் படுகின்ற மகோற்சவங்களிலே அவருக்கு இடபவாகனமுதலிய எல்லா வாகனங்களுமுண்டு.

இத்துணை அரியபெருமைவகித்த மாணிக்கவாசக சுவாமிகள் செந்தமிழ்ப் பாண்டிவளநாட்டிலே, அரிமர்த்தன பாண்டிய ராஜன் காலத்திலே, திருவாதவூரிலே, அமாத்தியரென்னும் அந்தணர் குலத்திலே திருவவதாரஞ்செய்து வாதவூரர் என்கிற பிள்ளைத்திருநாமம்பெற்றுப் பதினாறு பிராயத்துள்ளே வேதசிவாகமமுதலியகலைகள் முற்றுங் கற்று வல்லவராயினார்.

அவ்வாதவூரருடைய நற்குண நற்செய்கைகள் அனைத்தும் மதுரையில் அரசாட்சிசெய்த அரிமர்த்தனபாண்டியன் செவிக்குப் புலப்பட்டன. புலப்பட்டவுடனே அவ்வரசன் வாதவூரரை வருவித்து ஆராய்ந்து, கேள்வியுற்றதினும் மேம்பட்டு விளங்குங் குணாதிசயங்களை வியந்து கொண்டாடிப் பல சிறப்புகள் செய்து, தென்னவன் பிரமராயன் என்னும் பட்டப்பெயருங் கொடுத்துத் தனக்கு முதன் மந்திரியாராக நியமித்துக்கொண்டான்.

அம்மந்திரியார் அரசனுக்கு இனியராய்ப் பெருஞ்செல்வராய் வாழ்ந்திருக்கும்போழ்து, மனந்தூய்மையுடையராய் நித்தியாநித்திய வுணர்வு தோன்ற, இம்மை மறுமைப்பயனை வெறுத்துப் பிறவிக்.

கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய், அதற்குக் காரணமாகிய
தத்துவஞானத்தை உபதேசிக்கத்தக்க ஞானாசாரியரைக் காணுதற்
குப் பேரவா வுற்றிருந்தனர்.

அங்ஙனமிருக்கும்போது, அரசன் கீழ்க்கடற்றுறையிலே சென்
றுகுதிரைகள்வாங்கி வரும்படி அம்மந்திரியாரை ஏவினான். ஏவப்பட்
டமந்திரியார் அரசனது அளவிறந்த திரவியத்தைக் கைக்கொண்டு,
நால்வகைப் படைகளுஞ் சூழச்சென்று, மார்க்கத்தின் மத்தியிலே
யுள்ள திருப்பெருந்துறை என்னுஞ் சிவக்ஷேத்திரத்தைச் சமீபித்த
னர். சமீபிக்குங்கால், பரமபதியாகிய சிவபிரான்மந்திரியார்க்கு இரு
வினையொப்பு மலபரிபாக முற்றமைநோக்கி, அவருக்கு அநுக்கிரகிக்
கும் பொருட்டு, திருப்பெருந்துறைச் சிவாலயத்திலே, அருள்வடிவா
கிய குருந்தமர நீழலிலே, தம்முடைய கணநாயகர்கள் மாணாக்கரா
ய்ச்சூழ அக்குழாத்தின் நாப்பணே தாம் ஒரு ஆசாரியராகத் திருவு
ருக்கொண்டு வீற்றிருந்தருளினார். பின்பு மந்திரியார் ஆலயஞ் சேர்
ந்து குருமூர்த்தியைத் தரிசித்த அளவில் அழலிடைப்பட்ட மெழு
கென மனமுருகி அழுத கண்ணுந்தொழுதகையுமுடையராய்த் திரு
வடிக்கமலங்களிலே வீழ்ந்து, தேவரீர் அடியேனுக்கு அநுக்கிரகிக்க
வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர். மந்திரியாரது அதிதீவிர
தர சத்திநிபாதத்தைக் கண்டதேசிகோத்தமர் திருவருள் சுரந்து
விஞ்ஞானதீக்ஷைசெய்து, பாசத்தை ஒருவி, ஞானத்தாற் பசுபதி
யாகிய தம்மை யநந்நியமாகக் கண்டு தம்முள் விழுங்கக் கொடுத்து
நிற்கும் வண்ணம் ஸ்ரீ முத்திபஞ்சாக்கரத்தை உபதேசித்துத் திரு
வடி சூட்டி யருளினார். அவ்வுபதேசப்பொருளைக் கேட்டுச் சிந்தித்
துத் தெளிந்து நிட்டையில் அமர்ந்து சிவாநுபவஞ் சுவாநுபூதிகமா
கக்கொண்ட மெய்யன்பர் சிவாநந்த மேலீட்டினாலே குருமூர்த்தங்
கொண் டருளிய பரமசிவனது பாதார விந்தங்களிற் பாமாலை சூட்
டத் தொடங்கினார். அப்பாடல்களைக் கேட்டருளிய சிவபிரான் திரு
வுளங் களிகூர்ந்து, உயர்ந்த மாணிக்கங்கள்போல அப்பாடல்
களிலே வாசகங்கள் அமைந்திருந்தமை நோக்கி, அவ்வாதவூரடி
களுக்கு "மாணிக்க வாசகர்" என்று திருப்பெயர் கொடுத்து
அங்கே அமர்ந் திருக்கும்படி கட்டளையிட்டு மறைந்தருளினார்.
பின்பு மாணிக்கவாசகப் பிரான் குதிரை கொள்ளக்கொடு வந்த
தனங்களை யெல்லாம் அப்பதிக்கண்ணதாகிய சிவாலயத்திருப்பணி
க்கும், நித்திய பூஜைக்கும், நைமித்திகமாகிய விசேட பூஜைக்கும்,
அடியார்களுக்கும் உபயோகப் படுத்திப் பித்துப் பிடித்தார்போல்
அமர்ந்தருளுங்கால், "இதுகாறுங் குதிரைகள் வாங்கிவாராமைக்குக்

காரணம் என்னை" என்று அரசன்றிருபம் அனுப்பினமைகண்டு, ஆலயத்துக்குச்சென்று சிவ சந்நிதானத்திலே விண்ணப்பஞ் செய்தபொழுது, அசரீரியாக்கு எழுந்தது. அதனைக் கேட்டவுடனே அடியார்க் கெளியராய் அவர் வேண்டிய வேண்டி யாங்கு செய்தருளும் எம்பரமநாதன் குருவடிவாயெழுந்தருளி அன்பனே! "நாம் பரிகொண்டு வருகின்றோம் நீ செல்லுதி" என்று திருவாய் மலர்ந்தருள. உடனே மாணிக்கவாசக மூர்த்திகள் எழுந்து மதுரையம்பதி சேர்ந்து, அரசனுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி "இத்தனை நாளிலேபரிகள் வரும்" என்று வரையறை கூறினர். அங்ஙனம் வரைசெய்த நாள்காறும் பரிகள் வாராமைகண்டு அரசன் கோபங்கொண்டு மாணிக்கவாசகசுவாமிகளை வருத்தப்படுத்தி முன் கொண்டுசென்றபொன்னை வாங்கும்படி சேவகரை ஏவினன். சுவாமிக ளவ்வருத்தம் பொறுது சிவபிரானை நோக்கி முறையிடும்பொழுது, சிவபிரான் வனத்திலே திரிகின்ற நரிகளை பரிகளாக்கிக் கொடுவந்து காட்டி, அரசனை மகிழ்வித்துத் தந்தொண்டரை விடுவித்தனர். பின்பு அன்றிரவிற்றானே அப்பரிகள் அனைத்தும் நரிகளாய் முன்னுள்ள பரிகளுக்கும் ஊறு செய்து நகரமெங்கும் கலங்கும்படிச் செய்து தம்மிடங்களை அடைந்தன. விடிந்த வுடனே நிகழ்ந்தசெய்திகளைக்கேட்டு அரசன் பெருங்கோபங்கொண்டு மந்திரியாரை வருவித்து "ஏ மந்திரியே? நீமாயவித்தையினால் நம்மை மயக்கிவிட்டாய்" என்று கூறிச் சேவகரை நோக்கி இம்மந்திரியைக் கொடுந் தண்டஞ்செய்து குதிரை கொள்ளக்கொடுசென்ற பொன்னை வாங்கும்படி ஆஞ்ஞாபித்தான். உடனேசேவகர் அடிகளைக் கொடுந் தண்டஞ்செய்த போது, சுவாமிகள் சிவபிரானை நோக்கித் துதித்தனர். அதனையுணர்ந்த சிவபிரான் வைகைநதியை மதுரைநகர்மீது பெருகி வரும்படிசெய்துமாணிக்கவாசகசுவாமிளது மகிமையை அரசனுக்கு அறிவித்தனர். பின்புசுவாமிகள்அரசனையுந்துறந்து பலசிவஸ்தலங்களையும் பணிந்து பாடி, ஸ்ரீ சிதம்பரக்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தொழுது பாடி, அத்தில்லை யெல்லைக்கு மேலைத்திசையிலேயுள்ள தபோவனத்திலே நிட்டையில் அமர்ந்தருளினர். அதன்பின் ஸ்ரீஞானநடராஜர் ஆஞ்ஞைப்படி புத்தரை வாதிலே வென்று, ஊமைப் பெண்ணைப் பேசுவித்து அங்கே அமரும்போது, சிவபிரான் அந்தணராய் வந்தருளி அதுவரையும் பாடியவைகளைத் தொகுத்துக் கூறும்படி கேட்டு அதிகாரவரைசெய்து திருவாசகத் திருமுறையாகவும், திருக்கோவையார் பாடும்படி கேட்டு அதனை யதன் பின்னாகவும், தமது அருமைத் திருக்கரத்தால் வரைந்தருளி "இங்ஙனம் மாணிக்கவாசகன் சொல்லியபடி அழகிய திருச்சிற்றம்பல முடையார் எழுதியது" என்று திருக்கைச்சாத்துமிட்டு அந்தர்த்தானமாயினர். பின்பு அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய ஸ்ரீநடராஜர் திருவடி நிழலிலே மாணிக்கவாசக சுவாமிகள் இரண்டறக்கலந்தனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## மாணிக்கவாசக சுவாமிகள் புராணசாரம்.

செய்யதிரு வாதவூர் வந்தருளி யமைச்சரெனச் சிறந்து நீடு
வையமிசை வழுதிநிதி கொண்டரனைக் குருந்தடியில் வணங்கி ஞால
முய்யவருட் பணியாற்றி நரிபரியாச் செய்துநதி யுடைப்பி லெங்க
ளையன்முடி மிசையுவந்து மண்சுமக்க வன்பினுரு வாயி னாரே. (௧)

எங்குமா கியவழகன் மேனிபிரம் படிதாங்க வேங்கிப் புத்தர்
மங்கவா ரருள்செய்து மூகைபே சிடவழங்கி மணிமன் றூடு
மெங்கணா யகன்கரத்தாலேடுமெழுத்தாணியுங்கொண்டெழுதப்பாடி
யங்கண்மே வியசோதி தன்னிலிரண்டறக்கூடியமர்ந்திட்டாரே (௨)

### மாணிக்கவாசக சுவாமிகள் தோத்திரம்

எழுதரு மறைக டேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
யழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம் (௧)

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும் பெருங்கருணைப்
பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை
கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத்
தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ ரடிகளடி
யிணைகள் போற்றி. (௨)

## திருவாசகப் பெருமை.

### நேரிசை வெண்பா.

வள்ளுவர்நூ லன்பர்திரு வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—யொள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகைச்சித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம். (௧)

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர். (௨)

## நேரிசை யாசிரியப்பா.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. (௩)

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வைத் தோளிடத் தவனே. (௪)

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. (௫)

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வெண்பணி வாலனே. (௬)

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்டநிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத்தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்குமதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே (௭)

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
யாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே (௮)

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாசறு மணிபோற் பன்னாள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பன்னாட் புண்ணிய மன்று ளாடு
மீசன தடிக்கீ ழெய்தி யீறிலா வறிவா னந்தத்
தேசொடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார். (௧)

# திருவாசக உண்மை.

## சிவபுராணம்.

தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்திற்
பேசுதிருச் சிவபுரா ணத்தகவற் பெருமைசொலி
லீசர்தமக் கியல்பான திருநாம முதலெவையு
மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற வருட்குறிப்பாம். (க)

## கீர்த்தித்திருவகவல் - திருவண்டப்பகுதி.

புகழ்பெருகுஞ் செய்கையெலாம் புகலகவ லொன்றுருந்
திகழ்திருவண் டப்பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவா
யகலமுறத் தேர்ந்திடவே யருளியநற் பொருளாகும் (உ)

## போற்றித்திருவகவல் - திருச்சதகம் - நீத்தல்விண்ணப்பம்.

முத்திபெறு நெறியறியு மொழிபோற்றித் திருவகவல்
சத்தியஞா னந்தருதே சிகர்மோகஞ் சதகமதா
மித்தையுல கினையகற்றி விடாமலெனை யாண்டருளென்
றத்தரறிந் திடநீத்தல் விண்ணப்ப மறைந்ததுவாம். (ங)

## திருவெம்பாவை - திருவம்மானை.

மலவிருளற் றுறங்காமன் மன்னுபரி பூகரருட்
செலமுழுக வருகவெனச் செப்பதிரு வெம்பாவை
நலமுறுமந் தணர்வடிவாய் நாரணன்காண் பரியபத
நிலமதில்வந் தாள்கருணை நினைந்தாட லம்மானை. (ச)

## திருப்பொற்சுண்ணம் - திருக்கோத்தும்பி.

சத்திகளாற் றனுகரண புவனபோ கங்கடமை
யத்தனுக்குச் சுண்ணமவை யாமிடிக்கக் கூவுதலே
யொத்ததிருச் சுண்ணமுயர் போதமொரு வண்டாகச்
சித்தவிகா ரத்தூது செப்பிவிடல் கோத்தும்பி. (ரு)

## திருத்தெள்ளேணம் - திருச்சாழல்.

பொன்னூர்மெய் யண்ணலரும் போதவின்ப மேமிகுந்து
தென்றெதென் றெனவேதெள் ளேணங் கொட்டியதா
முன்னூர் கலையுமுண ராமூகை யாமேடி
தன்றாற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல். (சா)

### திருப்பூவல்லி - திருவுந்தியார்.

தேவரறி யாதசிவன் றேடியே யாண்டநல
மாவலொடுஞ் சொல்லி யடியாரோ டெங்கூடிப்
பூவியந்து கொய்தறிருப் பூவல்லி யாமரன்சீர்
பாவமுறு தீமையறப் பாடறிரு வுந்தியதே. (எ)

### திருத்தோணோக்கம் - திருப்பொன்னூசல்.

சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமா
யத்தன் செயுங்கருணைக் காராமை யுண்மிகுந்து
பொத்தியகை கொட்டிப் புகழ்தறோ ணோக்கமருட்
சத்தியிருந் தாடத்தா லாட்டிடுதல் பொன்னூசல். (அ)

### திருவன்னைப்பத்து - குயிற்பத்து.

நேயம்மி குந்த நிலைகுலையக் கூடுதலை
யாயவருட் டாய்க்கங் கறைதலன்னைப் பத்தாகுந்
தூயவருட் குயிலைநற் சோதியெனைக் கூடுதற்குன்
வாயினுற் கூவெனமுன் வாழ்த்தல்குயிற் பத்தாமே. (க)

### திருத்தசாங்கம் - திருப்பள்ளியெழுச்சி.

பேர்நாடு ராறுமலை பெயரூர்தி படைமுரசு
தார்கொடியெ லாமரற்குச் சாற்றறசாங் கமதா
மோர்மருவு திருப்பள்ளி யெழுச்சிபணி விடைகேட்
டார்வமுட னுண்டவரற் கன்புசெய் மியல்பே. (கO)

### கோயின்மூத்ததிருப்பதிகம் - கோயிற்றிருப்பதிகம்.

### செத்திலாப்பத்து - அடைக்கலப்பத்து

கோயின் மூத்த திருப்பதிகஞ்சிதம்பரத்திலருளடையுங்குறிப்பதாகு
மேயுங்கோயிற்றிருப்பதிகம்பெருந்துறைத்தேசிகர்மோகமியம்பலாகு
மாய பசுபோ தம்முற்றுங் கெடவேண்ட லேசெத்தி லாப்பத் தாகு
மோதுவல்வா தனைகள்வந்தணுகாமலடைக்கலப்பத்துரைத்ததாமே.

### ஆசைப்பத்து - அதிசயப்பத்து.

கருவியுறு மூனுடற்கண் வாராமற் றிருவருளிற் கலப்ப தற்கே
யரனடியைப் புகழ்ந்துபெரு காரவமொடுபொடுதலேயாசைப்பத்தாம்
வெருவிமலத் தினைச்சிலத்தொன்றுரு மடியர்குழாத்துடனே கூட்டும்
பரமருட் பெருமைமிகு தியைப்புகழ்ந்து பாடலதி சயப்பத் தாமே

### புணர்ச்சிப்பத்து - வாழாப்பத்து.

ஆண்டகுரு வைப்பிரியா தணைந்துபணி புரிந்துமிகு மன்போ
டின்பம், பூண்டுகிடக் கப்பெறுவ தென்றுகொலோ வெனும்விருப்பம்
புணர்ச்சிப் பத்தாம், நீண்டவுல கத்தினிற்பற் றொன்றிலே னிவ்வுட
ற்க ணின்று வாழேன், மாண்டகுநின் பதநிழற்கீழ் வருகவருள் புரி
யெனுஞ்சொல் வாழாப் பத்தே. (௧௩)

### அருட்பத்து - திருக்கழுக்குன்றப்பதிகம்.

சோதியருட் சுடர்விளக்கே துயர்ப்பிறவி கூடல்விடுத் தன்று
ன் சேர்தற், காதரித்திங் குனையழைத்தா லதெந்துவெனக் கேளெ
னுஞ்சொ லருட்பத் தாகு, நீதிமறை பரவுதிருப் பெருந்துறையிற்
குருவடிவாய் நிகழ்ந்த கோலங், காதலொடிங் காட்டினையே யெனுங்
களிப்புப் பகர்திருக் கழுக்குன்றமே. (௧௪)

### கண்டபத்து - பிரார்த்தனைப்பத்து.

இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத் தானுக்கு மெழிலா னந்
தங், கந்தமலி தில்லையினுட் கண்டேனென் றுவந்துரைத்தல் கண்ட
பத்தா, மந்தமிலா வானந்தத் தகலாம லெனையழுத்தி யாள்வா யெ
ன்று, சிந்தைகலந் துரைத்ததுவே பிரார்த்தனைப்பத் தாய்ப்புகலுஞ்
செய்கை யாமே. (௧௫)

### குழைந்தபத்து - உயிருண்ணிப்பத்து.

இழைத்தேனிவ் வாக்கைபொறுத் தினிச்கணமும் பொறுக்க
லே னேழையேனைக், குழைப்பதேன் பிழைபொறுத்தா ளெனவிரங்
கிக் கூறுதலே குழைத்த பத்தாந், தழைத்துவளர் பேரின்பந் தானா
கி யுயிர்தோன்றாத் தன்மை யாய்த்துன், பொழித்துநிறை வைப்பெ
றுத லுயிருண்ணிப் பத்தாவிங் குரைத்த தாமே. (௧௬)

### அச்சப்பத்து - திருப்பாண்டிப்பதிகம்.

தரையில்வளர் வினைமுழுதும் வரினுமஞ்சேன் சிவசமயத் தவ
ஞ்சாராதா, ரருகின்வரக் காண்கின்மன மஞ்சுமென விகழ்ந்துரைத்
த லச்சப் பத்தாம், புரவியின்மேற் பாண்டியன்முன் வரும்பதத்தை
யாம்பெறுமற் புதம்போல் யாரும், விரவுமின்க ளென்றடியார்க் குறு
தி சொல திருப்பாண்டி விருத்த மாமே. (௧௭)

### பிடித்தபத்து - திருவேசறவு.

மிக்கபிற வித்துயரெ லாமொழித்து விபுத்துவமிங் களித்த லாலே
பிக்கறச்சிக்கெனப்பிடித்தேனின்னையென்று துணிவுசெப்பல்பிடித்த

பத்தாந், தக்கபரி யாய்நரியை யாக்குதல்போ லெனைப்பெரிதாய்த் தாக்கித் தாட்கீ, ழுக்கணம்வைத் தனையேயென் றிரங்கறிரு வேசற வென் றியம்பலாமே. (கஅ)

## திருப்புலம்பல் - குலாப்பத்து.

கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே கற்குவின் மனம் போ லென்றுந், திருந்தும்வகை யெனக்கருள்க வெனக்கேட்ட றி ருப்புலம்பலாகு முள்ளம், விரும்புசிவா னந்தவெள்ளம் விளைந்துதி ல்லை நாயகனை மிகக்கொண்டாடி, நிரம்புமனக் களிமிகுத்த விறுமா ப்பே குலாப்பத்தாய் நிகழ்த்த லாமே. (கக)

## அற்புதப்பத்து - சென்னிப்பத்து.

மாயவுருக் கொண்டுளத்தை மயக்குமின்னார் கண்வலையுண் மய ங்கு வேற்கிங், காயுமறி வளித்தாள லதிசயமென் றுரைத்தலற்பு தப் பத் தாகுந், தூயவருட் குருபதத்தைச் சூட்டுதற்குப் பெற்றவுயிர் சுக த்தை நோக்கிச், சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும் வியந்துரை த்தல் சென்னிப் பத்தே. (உ0)

## திருவார்த்தை - எண்ணப்பதிகம்.

அறம்பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட செயன்முதலா வரன்சீ ராட்டின், றிறமறிவா ரெம்பிரா னவரென வுரைத்தறிரு வா ர்த்தை யாகு, நிறம்வளரு மலர்ப்பொழில்சூழ் தோங்குதிருத் தில் லைமன்று ணிமலனுமத்,திறம்பெருகு மின்பமரு ளென்றலெண்ணப் பத்தெனவு நிகழ்த்த லாமே. (உக)

## யாத்திரைப்பத்து - திருப்படையெழுச்சி·

பொல்லாத பவத்தைவிட்டுச் சிவன்கழற்கீழ்ப் புகுங்காலம்பு ணர்ந்த தெற்கிங், கெல்லாரும் வாருமெனக் கருணையினு லழைத் திடல்யாத் திரைப்பத் தாகு, மல்லாத தூர்க்குணமா யப்படைகள் விளையாம லருள்வா ளேந்தி, நல்லோர்க ளியாருமெம்மோ டெய்து மெனப் படையெழுசசி நவிற லாகும். (உஉ)

## திருவெண்பா - பண்டாயநான்மறை.

தொந்தமா மலமொறுத்துச் சுகம்பெருக்கிப் பெருந்துறைவாழ் சோதி யென்றன், சிந்தனையே யூராகக் கொண்டிருந்தா ரென்றுரை த்த திருவெண் பாவா, மெந்தைதிருப் பெருந்துறையை யேத்துநம ரேவாழ்வுற் றிடர்சேர்பாச, பந்தமறுத் திடுவரெனப் பண்டாய நான் மறையும் பகர்ந்த தாமே. (உங)

திருப்படையாட்சி - ஆனந்தமாலை - அச்சோப்பதிகம்

வாகுதிருப்பெருந்துறையாரெழுந்தருளப்பெறிலெல்லாவளங்கண்மு
ற்று, மாகுமெமக் கல்லாத தாகாதென் றியம்பல்படை யாட்சி யாகு
மோகமிகு மடியரொடெங் கூடவிரும் பியதானந் தமொழியு மீசர்
போகசுக மெனக்களித்தா ரார்பெறுவா ரெனுமருமைபுகறலச்சோ.

---

## திருப்பதிகங்களின் பெயருந் தொகையும்.

சிவபுரா ணங்கீர்த்தி திருவண்டப் பகுதி
திருப்போற்றி யுடனகவ றிருச்சதக நூறு
நவநீத்தல் விண்ணப்ப மைம்பதாம் பாவை
நலந்திகழு மம்மானை நல்லபொற் சுண்ணம்
புவனமகிழ் கோத்தும்பி திருவார்தெள் ளேணம்
பொருவரிய திருச்சாழல் பூவல்லி யுந்தி
யிவையிருப தாமிரே ழாகுதோ ணோக்க
மெழிற்பொன்னூ சலுமேயோன் பானென்ப விவையே. (க)

திருவன்னை குயிற்பத்துத் திருத்தசாங்கந்
திருப்பள்ளி யெழுகோயின் மூத்ததிருப் பதிக
மருட்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலடைக் கலமே
யாசையதி சயம்புணர்ச்சி வாழாப்பத் தருட்பத்
தொருபதென வுரைசெய்வர் கழுக்குன்ற மேழா
முயர்பிரார்த் தனைகள்பதி னொன்றுகுங் காண்பத்
திருமைபெறுங் குழைத்தபத் துயிருண்ணி யச்ச
மெழிற்பாண்டி பிடித்தபத்தொ டேசறவு பத்தே. (உ)

திருப்புலம்பன் மூன்றுகுலா வற்புதமே சென்னி
திருவார்த்தை பத்தெண்ணப் பதிகமொரு வாறும்
பரற்குரிய யாத்திரைப்பத் தொருபதா மற்றைப்
படையெழுச்சி யிரண்டாகும் பதினொன்றும் வெண்பா
வருட்டவழும் பண்டாய நான்மறையே ழாகும்
வலியபடை யாட்சியெட் டானந்த மேழா
மருட்பெறுமச் சோவொன்ப தைம்பதொன்றும் பதிக
மகவலொடு செய்யுளாறு நூற்றைம்ப தெட்டே. (ங)

---

திருச்சிற்றம்பலம்.

# சூசிபத்திரம்.


| திருப்பதிகம். | பக்கம். |
|---|---|
| ௧௦ அச்சப்பத்து | ௱௧௬ |
| ௯ அச்சோப்பதிகம். | ௱௪௩. |
| ௧௦ அடைக்கலப்பத்து | ௯௫ |
| ௧௦ அதிசயப்பத்து | ௯௯ |
| ௧௦ அருட்பத்து | ௱௫ |
| ௧௦ அற்புதப்பத்து | ௱௨௭ |
| ௧௦ அன்னைப்பத்து | ௮௰ |
| ௧௦ ஆசைப்பத்து | ௯௭ |
| ௭ ஆனந்தமாலை | ௱௪௨ |
| ௧௦ உயிருண்ணிப்பத்து | ௱௧௫ |
| ௬ எண்ணப்பதிகம் | ௱௩௩ |
| ௧௦ கண்டபத்து | ௱௰ |
| ௧ கீர்த்தித்திருவகவல் | ௬ |
| ௧௦ குயிற்பத்து | ௨௮ |
| ௧௦ குலாப்பத்து | ௱௨௫ |
| ௧௦ குழைத்தபத்து | ௱௧௩ |
| ௧௦ கோயின்மூத்த திருப்பதிக | ௮௮ |
| ௧௦ கோயிற்றிருப்பதிகம் | ௯௰ |
| ௧ சிவபுராணம் | ௩ |
| ௧௦ செத்திலாப்பத்து | ௯௩ |
| ௧௦ சென்னிப்பத்து | ௱௨௮ |
| ௭ திருக்கழுக்குன்றப்பதிகம் | ௱௮ |
| ௨௦ திருக்கோத்தும்பி | ௬௨ |
| திருச்சதகம். | |
| ௧௦ மெய்யுணர்தல் | ௨௩ |
| ௧௦ அறிவுறுத்தல் | ௨௫ |
| ௧௦ சுட்டறுத்தல் | ௨௭ |
| ௧௦ ஆத்துமசுத்தி | ௨௯ |
| ௧௦ கைம்மாறுகொடுத்தல் | ௩௰ |
| ௧௦ அநுபோகசுத்தி | ௩௨ |
| ௧௦ காருணியத்திரங்கல் | ௩௩ |
| ௧௦ ஆனந்தத்தழுந்தல் | ௩௫ |
| ௧௦ ஆனந்தபரவசம் | ௩௬ |
| ௧௦ ஆனந்தாதீதம் | ௩௮ |
| ௨௦ திருச்சாழல் | ௬௮ |
| ௧௦ திருத்தசாங்கம் | ௮௪ |
| ௨௦ திருத்தெள்ளேணம் | ௬௫ |
| ௧௪ திருத்தோணோக்கம் | ௭௬ |
| ௨ திருப்படையெழுச்சி | ௱௩௬ |
| ௮ திருப்படையாட்சி | ௰௩௯ |
| ௧௦ திருப்பள்ளியெழுச்சி | ௮௫ |
| ௧௦ திருப்பாண்டிப்பதிகம் | ௱௧௮ |
| ௩ திருப்புலம்பல் | ௱௨௪ |
| ௨௦ திருப்பூவல்லி | ௭௧ |
| ௨௦ திருப்பொற்சுண்ணம் | ௫௭ |
| ௯ திருப்பொன்னூசல் | ௭௮ |
| ௧ திருவண்டப்பகுதி | ௧௦ |
| ௨௦ திருவம்மானை | ௫௩ |
| ௧௦ திருவார்த்தை | ௱௩௰ |
| ௨௦ திருவுந்தியார் | ௭௪ |
| ௧௧ திருவெண்பா | ௱௩௬ |
| ௨௦ திருவெம்பாவை | ௪௮ |
| ௧௦ திருவேசறவு | ௱௨௩ |
| ௫௦ நீத்தல்விண்ணப்பம் | ௪௧ |
| ௭ பண்டாயநான்மறை | ௱௩௮ |
| ௧௦ பிடித்தபத்து | ௱௨௰ |
| ௧௦ பிரார்த்தனைப்பத்து | ௱௧௧ |
| ௧௦ புணர்ச்சிப்பத்து | ௱ |
| ௧ போற்றித்திருவகவல் | ௧௬ |
| ௧௦ யாத்திரைப்பத்து | ௱௩௪ |
| ௧௦ வாழாப்பத்து | ௱௨ |


ஆ௨ திருப்பதிகங்கள் - ௫௧.

அகவலொடு செய்யுள் - ௬௫௮.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ

சிவமயம்.

# தமிழ்வேதம்,

ஆகிய

# திருவாசகம்.

## நூற்சிறப்பு.

நேரிசைவெண்பா.

---

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே - யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென்னுந் தேன்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# சிவபுராணம்.

## சிவனதநாதிமுறைமையான பழமை

எ - து. சிவனது அருவ நிலைமை கூறல்.

திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது.

### கலிவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்

கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்

கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க்கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

# கீர்த்தித்திருவகவல்.

## சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
யெண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியு மழித்து
மென்னுடை யிருளை யேறத் துரந்து
மடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பு
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடு
மெஞ்சா தீண்டு மின்னருள் விளைத்துங்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்துங்

கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய வாகமம் வாங்கியு
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியு
நந்தம் பாடியி னான்மறை யோனா
யந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
நூறுநூ றாயிர மியல்பின தாகி
யேறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவு
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையு
மரியொடு பிரமற் களவறி யொண்ணா
னரியைக் குதிரை யாக்கிய நன்மையு
மாண்டுகொண் டருள் வழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையு
மந்தண னாகி யாண்டுகொண் டருளி
யிந்திர ஞாலங் காட்டிய வியல்பு
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையு
மாங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசு
முத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய வியல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்

பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய வதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமு
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையு
மோரி யூரி லுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட விருந்துந்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையுந்
தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையு
மிடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசு
மேகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசுந்
திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமுஞ்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசுங்
கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்து
மீங்கோய் மலையி லெழிலது காட்டியு
மையா றதனிற் சைவ னாகியுந்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
திருப்பனை யூரில் விருப்ப னாகியுங்
கழுமல மதனிற் காட்சி கொடுத்துங்

கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல வருளியு
குற்றா லத்துக் குறியா யிருந்து
மந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
யெவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
யந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியு
மந்திர மாமலை மகேந்திர வெற்ப
னந்தமில் பெருமை யருளுடை யண்ண
லெந்தமை யாண்ட பரிசது பகரி
னாற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியு
மூனந் தன்னை யொருங்குட னறுக்கு
மானந் தம்மே யாறா வருளியு
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணைய
னாதப் பெரும்பறை நவின்று கறங்கவு
மழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியு
மூல மாகிய மும்மல மறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
யேலுடைத் தாக வெழில்பெற வணிந்து
மரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமு
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெ யடியரைப் பரம்பரத் துய்ப்பவ
னுத்தர கோச மங்கையூ ராகவு
மாதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் றிருப்பெய ராகவு
மிருள்கடிந் தருளிய வின்ப வூர்தி
யருளிய பெருமை யருண்மலை யாகவு

மெய்பெருந் தன்மையு மெவ்வெவர் திறமு
மப்பரி சதனு லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
வேல வென்னை யீங்கொழித் தருளி
யன்றுடன் சென்ற வருள்பெறு மடியவ
ரொன்ற வொன்ற வுடன்கலந் தருளியு
மெய்தவந் திலாதா ரெரியிற் பாயவு
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவு
மெழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
யிறைவ னீண்டிய வடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளின்
னொலிதரு கைலை யுயர்கிழ வோனே

திருச்சிற்றம்பலம்.

# திருவண்டப்பகுதி.

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

இணைக்குறளாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்க
மளப்பருந் தன்மை வளப்பெருங்காட்சி

யொன்றனுக் கொன்று நின்றெழில் பகரி
னூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
வின்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவு டிருத்தகு
மறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடொறு
மருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்
றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட்
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவு
மனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறு நினைதொறு
மாற்றேன் காண்க வந்தோ கெடுவே
னின்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
வன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க

அற்புதன் காண்க வநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
வொருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
வணுத்தருந் தன்மை யிலையோன் காண்க
விணைப்பரும் பெருமையி லீசன் காண்க
வரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன்காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன்காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன்காண்க
வந்தமு மாதியு மகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன்காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
வருணனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
வவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
வவளுந் தானு முடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
வைம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
வெந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்

பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
வெஞ்சா வின்னரு ணுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
யிருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு
மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
வாயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்க
ளிருவினை மாமரம் வேர்பறித் தெழுந்
துருவ வருணீ ரோட்டா வருவரைச்
சந்தின் வான் சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
யருச்சனை வயலு ளன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
வருந்தவர்க் கருளு மாதி வாழ்க
யச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
வெய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
வேதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்

சொற்பதங் கடந்த தொல்லோ
னுள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கு
மொழிவற நிறைந்து மேவிய பெருமை
யின்றெனக் கெளிவந் தருளி
யழிதரு மாக்கை யொழியச் செய்த வொண்பொரு
ளின்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
யளிதரு மாக்கை செய்தோன் போற்றி
யூற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
யாற்றா வின்ப மலர்ந்தலை செய்யப்
போற்றா வாக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்க
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்து
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்து
மொற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்து
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்து
மித்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்து
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
யாணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயி
னைம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
யருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்து
மொன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொறு மின்றே பயிறொறு
மொளிக்குஞ் சோரனைக் கண்டன
மார்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற்
றாடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்று[illegible]ன் றவர் பற்றுமுற் றொளித்துந்
தன்[illegible]லோன் றானே யான தன்மை

யென்னே யனையோர் கேட்கவந் தியம்பி
யறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலு
முளையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தி
னாற்றே னாக வவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தன
னேற்றார் மூதூ ரெழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடி
லொருத்தரும் வழாமை யொடுக்கினன்
றடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியு மொல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரை வித்
துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
வற்புத மான வமுத தாரைக
ளெற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
யென்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க

வருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே

திருச்சிற்றம்பலம்.

---

# போற்றித்திருவகவல்.

## சகத்தினுற்பத்தி.

### எ-து. பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கு முறைமை.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

---

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வீரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுர ணேன மாகி முன்கலந்
தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா வெறும்பீ றாய
வூனமி லியோனியி னுள்வினை பிழைத்து
மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து

மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
மாறு திங்களி னூறலர் பிழைத்து
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்து
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்து
மாண்டுக டோறு மடைந்தவக் காலை
யீண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயி
லொருங்கிய சாய னெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா விளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுண்
மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னு மல்லலிற் பிழைத்து
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலு
மாறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைக டொடங்கின
வாத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிக டத்த மதங்களி

லமைவதாக வரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
யதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழு துடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா வன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
யகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதிரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியு
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
யென்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
யன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா வன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்

கைதர வல்ல கடவுள் போற்றி
யாடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
யின்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
யாவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
யிடரைக் களையு மெந்தாய் போற்றி
யீச போற்றி யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
யரைசே போற்றி யமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
யாதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
யுடையாய் போற்றி யுணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
யையா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
யேனோர்க் கெளிய விறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
யாழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
யத்தா போற்றி யரனே போற்றி
யுரையுணர் விறந்த வொருவ போற்றி

விரிகட லுலகின் விளைவே போற்றி
யருமையி லெளிய வழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
யென்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
யழிவிலா வானந்த வாரி போற்றி
யழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
யளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி
யிடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
யாரூ ரமர்ந்த வரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
யண்ணா மலையெம் மண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
யேகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
யீங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

யடைந்தவர்க் கருளு மப்பா போற்றி
யித்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
யெந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி
யேனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
யருளிட வேண்டு மம்மான் போற்றி
யிருள்கெட வருளு மிறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் றமியேன் போற்றி
களங்கொளக் கருத வருளாய் போற்றி
யஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
யத்தா போற்றி யையா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
யரியாய் போற்றி யமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
யுறவே போற்றி யுயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
யலந்தே னாயே னடியேன் போற்றி
யிலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
யருவமு முருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி

தோளா முத்தச் சுடரே போற்றி
யாளா னவர்கட் கன்பா போற்றி
யாரா வமுதே யருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி யறுகின் றாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
யெந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
யலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
யிரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
யடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
யொழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே பொற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மைய றுணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல வெரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

திருச்சிற்றம்பலம்.

# திருச்சதகம்.

)*(

திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது.

## பத்தி வைராக்கிய விசித்திரம்.

## அ - து. ஞானாசிரியர் பத்துவகையாக இரட்சித்த முறைமையை யுரைத்தல்.

அவையாவன

### க-வது. மெய்யுணர்தல்.

அதாவது:—தேகாதி பிரபஞ்சங்களைக்கண்டு நீங்கல்.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே. (க)

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல் லானர கம்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே. (உ)

உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவி
லொத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவருந்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே. (ந)

சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
யாவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே. (ச)

தவமே புரிந்திலன் றண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சே
னவமே பிறந்த வருவினை யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேனின் றிருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம் பரம்பரனே. (௫)

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
யிரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. (௬)

முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி சாய்த்துமுன்னாட்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப் பாலனிப் பாலெம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியா
யுழுவையின் றோலுடுத் துன்மத்த மேல்கொண் டுழிதருமே (௭)

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணு
மிழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பி
னுழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே. (அ)

பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண் டானென் சிறுமைகண்டு
மவனெம் பிரானென்ன நானடி யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி சாவ தியம்புகவே (௯)

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே. (௧௰)

## அறிவுறுத்தல்.

அதாவது:—பொறியோடேகூட்டுதல், அருள்தரிசனம், குருதரிசனம்.

---

தரவுகொச்சகக்கலிப்பா.

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னாடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. (கக)

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே. (கஉ)

வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பா னாயடியே
னிருந்துநல மலர்புனையே னேத்தேனைத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநா னாமாறே. (கங)

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. (கச)

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. (கரு)

வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவா னியானுமுன்னைப் பரவுவனே. (கசா)

பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
னரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே. (கஎ

அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறே னயந்துருகேன்
றரியேனா னாமாறென் சாவேனான் சாவேனே. (கஅ

வேனில்வேண் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
யூனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. (கசு

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. (உ0)

---

## சுட்டறுத்தல்.

அதாவது:—தன்செயலறுத்தல்

---

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா னின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. (உக)

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
வினையனா னென்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
யனையநான் பாடேனின் றாடே னந்தோ
வலறிடே னுலறிடே னாவி சோரேன்
முனைவனே முறையோநா னான வாறு
முடிவறியேன் முதலந்த மாயினானே. (உஉ)

ஆயநான் மறையவனு நீயே யாத
லறிந்தியா னியாவரினுங் கடைய னாய
நாயினே னாதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பே
னாயினே னாதலா லாண்டு கொண்டா
யடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசுகேனே. (உ௩)

பேசிற்றா மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றான் றிருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
யாண்டானே யவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
வென்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே. (உ௪)

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டா
யெம்பெருமா னென்சொல்லிச் சிந்திக் கேனே. (உ௫)

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி

வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே. (உசு)

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே. (உஎ)

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டா
னாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. (உஅ)

விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடியனாக்கி
யச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
வச்சனாண் பெண்ணலியா காச மாகி
யாரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே. (உகூ)

தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி

மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. (௫0)

---

## ஆத்துமசுத்தி

அதாவது —அனுபவத்தழுந்தல்.

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே. ()

அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமே
னெறியெ லாம்புல மாக்கிய வெந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே.

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச் சிவனவன் றிரடோண்மே
னீறு நின்றது கண்டனை யாயினு நெக்கிலை யிக்காயங்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே. (௫௩)

கிற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக வாள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ யுண்டன வெல்லாமுன்
னற்ற வாறுநின் னறிவுநின் பெருமையு மளவறுக் கில்லேனே. (௫௪)

அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க் கடியவர்க் கெளியானெங்
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயு
முளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன் செய்ததுமிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே. (௫௫)

புகுவ தாவதும் போத ரவில்லதும் பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவது மெந்தையெம்பிரானென்னை யாண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவது நித்தலு மமுதொடு தேனொடு பால்கட்டி
மிகுவ தாவது மின்றெனின் மற்றிதற்கென்செய்கேன் வினையேனே.

வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் றலைகீறே
னினையன்பாவனை யிரும்புகன்மனஞ்செவியின்ன தென்றறியேனே.

எனை யாவரு மெய்திட லுற்றுமற் றின்னதென் றறியாத
தேனை யானெயைக் கரும்பினின் றேறலைச் சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக் குறுகிலே னெடுங்கால
மூனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயி ரோயாதே (௩௮)

ஓய்வி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படு மென்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய வின்னருள் புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
றீயில் வீழ்கிலேன் றிண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடு மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்தவென் சிவனகர் புகப்போகே
னூனி லாவியை யோம்புதற் பொருட்டினு முண்டுடுத்திருந்தேனே.

## கைம்மாறுகொடுத்தல்.

அதாவது :—தன்னைச் சிவனிடத்திலே கொடுத்தல்.

---

### கலிவிருத்தம்.

இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண் டிலேன்கண்ட தெய்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே. (௪௧)

உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே. (௪௨)

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே. (௪௩)

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. (௪௪)

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்து நின்
றேற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலே
னேற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே (௪௫)

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறுமலர்க் கொன்றையா
னுள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளு
மெள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே. (௪௬)

எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே. (௪௭)

செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொரு
ளெல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகைமனத் தேன்பட்ட கட்டமே. (௪௮)

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
யெட்டி னோடிரண் டும்மறி யேனையே (௪௯)

அறிவ னேயமு தேயடி நாயினே
னறிவ னாகக்கொண் டோவெனை யாண்டது
வறிவி லாமையன் றேகண்ட தாண்டநா
ளறிவ னோவல்ல னோவரு ளீசனே. (ரு0)

## அநுபோகசுத்தி.

அதாவது:—சுகமேவீடு.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈச னேயென் னெம்மானே யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்று மறியேனே. (ருக)

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனா னுண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே. (ருஉ)

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள வருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ கொடியே னுயிர்தா னுலவாதே. (ருங)

உலவாக் காலந் தவமெய்தி யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியே யுனைக்காண்பா
னலவா நிற்கு மன்பிலே னென்கொண்டெழுகே னெம்மானே (ருச)

மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின் றெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
ஊனா ருடுக்கை யிதுகாத்திங் கிருப்ப தானே னுடையானே. (ருரு)

உடையா னேநின் றனையுள்கி யுள்ள முருகும் பெருங்காத
லுடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேனெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே. (௫௬)

முடித்த வாறு மென்றனக்கே தக்கதேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோரனேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

தேனைப் பாலைக் கன்னலின் றெளியை யொளியைத் தெளிந்தார்த
மூனை யுருக்கு முடையானை யும்ப ரானை வம்பனே
னானின் னடியே னீயென்னை யாண்டா யென்றா லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் றன்மையே (௫௮)

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
வென்னை நோக்கு வார்யாரே யென்னான் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப் புகுவேனே. (௫௯)

புகுவே னெனதே நின்பாதம் போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணோக்கி நாண மில்லா நாயினே
னெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள வடியேனுந்
தகுவ னேயென் றன்மையே யெந்தா யந்தோ தரியேனே. (௬0)

---

## காருணியத்திரங்கல்.

அதாவது :—சிவனுடைய வெற்றிப்பாட்டிரங்கல்.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க ணின்மலா போற்றி போற்றி. (௬௧)

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி. (௬௨)

போற்றியென் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனநீர்தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவு ளானே. (௬௩)

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட வேண்டும் போற்றி
யுடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி. (௬௪)

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
யிங்கிவாழ் வாற்றகில்லே னெம்பிரா னிழித்திட் டேனே. (௬௫)

இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
யொழித்திடிவ் வாழ்வு போற்றி யும்பர்நாட் டெம்பிரானே. (௬௬)

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
யும்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி. (௬௭)

ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் றனிமை தீர்த்தே (௬௮)

தீர்ந்தவன் பாய வன்பர்க் கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்மையாட்கொண் டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
யார்ந்த நின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி. (௬௯)

போற்றியிப் புவன நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்க ளின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

## ஆனந்தத்தழுந்தல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக வன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள புங்க மான போகமே. (எக)

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்பமு
மேக நின்க ழலிணைய லாதி லேனெ னெம்பிரா
னாகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக வென்கை கண்க டாரை யாற தாக வையனே. (எஉ)

ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்மை யேனெ னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த வன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே. (எ௩)

வேண்டு நின்க ழற்க ணன்பு பொய்மை தீர்த்து மெய்மையே
யாண்டு கொண்டு நாயினேனை யாவ வென்ற ருளுநீ
பூண்டுகொண் டடிய னேனும் போற்றி போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே. (எ௪)

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும் வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க வென்கொ லோநி னைப்பதே. எ௫

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினாற்
றினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே

யனைத் துலகு மாய நின்னை யைம்பு லன்கள் காண்கிலா
வெனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே. (எசு)

எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும் வண்ண மில்லை யீசனே. (எஎ)

ஈச னேநீ யல்ல தில்லை யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை பேதை யேனை யெம்பிரா
னீச னேனை யாண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலாற்
றேச னேயொர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே. (எஅ)

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீறி லைம்பு லன்களான்
முந்தை யான கால நின்னை யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனெ னுள்ளம் வெள்கி விண்டிலே
னெந்தை யாய நின்னை யின்ன மெய்த லுற்றி ருப்பனே. (எகூ)

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை யாண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவு
நெருப்பு முண்டி யானு முண்டி ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க ணென்ப தென்ன விச்சையே(அ0).

---

## ஆனந்தபரவசம்.

---

கலிநிலைத்துறை.

விச்சுக் கேடு பொய்க் காகா தென்றிங் கெனைவைத்தா
யிச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் றாள் சேர்ந்தா
ரச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாரூரெம்
பிச்சைத் தேவா வென்னான் செய்கேன் பேசாயே. (அக)

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற தமையாதா
லாசைப் பட்டே னாட்பட் டேனுன் னடியேனே. (அஉ)

அடியே னல்லேன் கொல்லோ தானெனை யாட்கொண் டிலைகொல்
வடியா ரானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார் [லோ
செடிசே ருடல மிதுநீக்க மாட்டே னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே. (௮௩)

காணு மாறு காணே னுன்னை யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி
யாணே பெண்ணே யாரமுதே யத்தா செத்தே போயினே
னேணா ணில்லா நாயினே னென்கொண் டெழுகேனெம்மானே

மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீ றறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக் கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்
சோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே. (௮௫)

புறமே போந்தோம் பொய்யும் யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா வண்ணம் பெற்றேன்யா
னறவே நின்னைச் சேர்ந்த வடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தாரே. (௮௬)

தாரா யுடையா யடியேற் குன்றா ளிணையன்பு
பேரா வுலகம் புக்கா ரடியார் புறமே போந்தேன்யா
னூரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங் குன்றா ளிணையன்புக்
காரர் யடியே னயலே மயல்கொண் டழுகேனே. (௮௭)

அழுகே னின்பா லன்பா மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே. (௮௮)

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
னணியார் பாதங் கொடுத்தி யதுவு மரிதென்றாற்
றிணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார்பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர்மெய்யானே. (௮௯)

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே

தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே. (௯௰)

# ஆனந்தாதீதம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினு
ரீறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடைய னாயினேன் பட்ட கீழ்மையே. (௯௧)

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. (௯௨)

பொருத்த மின்மையேன் பொய்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
யரத்த மேனியா யருள்செ யன்பரு
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
யிருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. (௯௩)

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
யேல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினா
யெல்லை யில்லைநின் கருணை யெம்பிரா
னேது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. (௯௪)

வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
யேனை நாடருந் தெரியொ ணாதநீ
யென்னை யின்னிதா யாண்டு கொண்டவா
வூனை நாடக மாடு வித்தவா
வுருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. (௯௫)

விச்ச தன்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய வன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே. (௯௬)

உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
யுடைய னோபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
னடிய னாக்கினாய் போற்றி யாதியு
மந்த மாயினாய் போற்றி யப்பனே. (௯௭

அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதே
னொப்ப னேயுனக் குரிய வன்பரி
லுரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கண் மன்னனே. (௯௮)

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினு
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. (௯௯)

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (க00)

திருச்சிற்றம்பலம்.

# நீத்தல்விண்ணப்பம்.

## பிரபஞ்சவைராக்கியம்.

எ-து. பிரபஞ்சத்தை அசத்தெனக் காட்டி-
யருளிய முறைமை.

உத்தரகோசமங்கையிலருளிச்செய்யப்பட்டது.

கட்டளைக் கலித்துறை.

---

திருச்சிற்றம்பலம்.

கடையவனேனைக்கருணையினாற் கலந்தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே. (௧)

கொள்ளேர்பிளவகலாத்தடங்கொங்கையர்கொவ்வைச்செவ்வாய்
விள்ளேனெனினும்விடுதிகண்டாய்நின்விழுத்தொழும்பி
னுள்ளேன்புறமல்லேனுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளேனொழியவுங்கண்டுகொண்டாண்டதெக்காரணமே. (௨)

காருறுகண்ணியரைம்புலனாற்றங்கரைமரமாய்
வேருறுவேனைவிடுதிகண்டாய்விளங்குந்திருவா
ரூருறைவாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
வாருறுபூண்முலையாள்பங்கவென்னைவளர்ப்பவனே. (௩)

வளர்கின்றநின்கருணைக்கையில்வாங்கவுநீங்கியிப்பான்
மிளிர்கின்றவென்னைவிடுதிகண்டாய்வெண்மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்றநீண்முடியுத்தரகோசமங்கைக்கரசே
தெளிகின்றபொன்னுமின்னுமன்னதோற்றச்செழுஞ்சுடரே. (௪)

செழிகின்றதீப்புகுவிட்டிலிற்சின்மொழியாரிற்பன்னாள்
விழுகின்றவென்னைவிடுதிகண்டாய்வெறிவாயறுகா
லுழுகின்றபூமுடியுத்தரகோசமங்கைக்கரசே
வழிநின்றுநின்னருளாரமுதூட்டமறுத்தனனே. (௫)

மறுத்தனன்யானுன்னருளறியாமையிலென்மணியே
வெறுத்தெனைநீவிட்டிடுதிகண்டாய்வினையின்றொகுதி
யொறுத்தெனையாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
பொறுப்பரன்றேபெரியோர்சிறுநாய்கடம்பொய்யினையே. (௬)

பொய்யவனேனைப்பொருளெனவாண்டொன்றுபொத்திக்கொண்ட
மெய்யவனேவிட்டிடுதிகண்டாய்விடமுண்மிடற்று
மையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
செய்யவனேசிவனேசிறியேன்பவந்தீர்ப்பவனே. (௭)

தீர்க்கின்றவாறென்பிழையைநின்சீரருளென்கொலென்று
வேர்க்கின்றவென்னைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
வார்க்கின்றதார்விடையுத்தரகோசமங்கைக்கரசே
யீர்க்கின்றவஞ்சொடச்சம்வினையேனையிருதலையே. (௮)

இருதலைக்கொள்ளியினுள்ளெறும்பொத்துநினைப்பிரிந்த
விரிதலையேனைவிடுதிகண்டாய்வியன்மூவுலகுக்
கொருதலைவாமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
பொருதலைமூவிலைவேல்வலனேந்திப்பொலிபவனே. (௯)

பொலிகின்றநின்றாள்புகுதப்பெற்றாக்கையைப்போக்கப்பெற்று
மெலிகின்றவென்னைவிடுதிகண்டாயளிதேர்விளரி
யொலிநின்றபூம்பொழிலுத்தரகோசமங்கைக்கரசே
வலிநின்றதிண்சிலையாலெரித்தாய்புரமாறுபட்டே. (௧௦)

மாறுபட்டஞ்சென்னைவஞ்சிப்பயானுன்மணிமலர்த்தாள்.
வேறுபட்டேனைவிடுதிகண்டாய்வினையேன்மனத்தே
யூறுமட்டேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
நீறுபட்டேயொளிகாட்டும்பொன்மேனிநெடுந்தகையே. (௧௧)

நெடுந்தகைநீயென்னையாட்கொள்ளயானைம்புலன்கள்கொண்டு
விடுந்தகையேனைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
வடுந்தகைவேல்வல்லவுத்தரகோசமங்கைக்கரசே
கடுந்தகையேனுண்ணுந்தெண்ணீரமுதப்பெருங்கடலே. (௧௨)

கடலினுணாய்நக்கியாங்குன் கருணைக்கடலினுள்ளம்
விடலரியேனைவிடுதிகண்டாய்விடலில்லடியா
ருடலிலமேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மடலின்மட்டேமணியேயமுதேயென்மதுவெள்ளமே. (கங)

வெள்ளத்துணாவற்றியாங்குன்னருள்பெற்றுத்துன்பத்தின்றும்
விள்ளக்கிலேனைவிடுதிகண்டாய்விரும்பும்மடியா
ருள்ளத்துள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளத்துளேற்கருளாய்களியாதகளியெனக்கே. (கச)

களிவந்தசிந்தையொடுன்கழல்கண்டுங்கலந்தருள
வெளிவந்திலேனைவிடுதிகண்டாய்மெய்ச்சுடருக்கெல்லா
மொளிவந்தபூங்கழலுத்தரகோசமங்கைக்கரசே
யெளிவந்தவெந்தைபிரானென்னையாளுடையென்னப்பனே. (கரு)

என்னையப்பாவஞ்சலென்பவரின்றிநின்றெய்த்தலைந்தேன்
மின்னையொப்பாய்விட்டிடுதிகண்டாயுவமிக்கின்மெய்யே
யுன்னையொப்பாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
யன்னையொப்பாயெனக்கத்தனொப்பாயென்னரும்பொருளே. (கசு)

பொருளேதமியேன்புகலிடமேநின்புகழிகழ்வார்
வெருளேயெனைவிட்டிடுதிகண்டாய்மெய்ம்மையார்விழுங்கு
மருளேயணிபொழிலுத்தரகோசமங்கைக்கரசே
யிருளேவெளியேயிகபரமாகியிருந்தவனே. (கஎ)

இருந்தென்னையாண்டுகொள்விற்றுக்கொளொற்றிவையென்னினல்
விருந்தினனேனைவிடுதிகண்டாய்மிக்கநஞ்சமுதா [லால்
வருந்தினனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மருந்தினனேபிறவிப்பிணிப்பட்டுமடங்கினர்க்கே. (கஅ)

மடங்கவென்வல்வினைக்காட்டைநின்மன்னருட்டீக்கொளுவும்
விடங்கவென்றன்னைவிடுதிகண்டாயென்பிறவியைவே
ரொடுங்களைந்தாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
கொடுங்கரிக்குன்றுரித்தஞ்சுவித்தாய்வஞ்சிக்கொம்பினையே. (க௯)

கொம்பரில்லாக்கொடிபோலலமந்தனன்கோமளமே
வெம்புகின்றேனைவிடுதிகண்டாய்விண்ணர்நண்ணுகில்லா
வும்பருள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
யம்பரமேநிலனேயனல்காலொடப்பானவனே. (உ0)

ஆனைவெம்போரிற்குறுந்தூறெனப்புலனாலலைப்புண்
டேனையெந்தாய்விட்டிடுதிகண்டாய்வினையேன்மனத்துத்
தேனையும்பாலையுங்கன்னலையும்மமுதத்தையுமொத்
தூனையுமென்பினையும்முருக்காநின்றவொண்மையனே. (௨௧)

ஒண்மையனேதிருநீற்றையுத்தூளித்தொளிமிளிரும்
வெண்மையனேவிட்டிடுதிகண்டாய்மெய்யடியவர்கட்
கண்மையனேயென்றுஞ்சேயாய்பிறர்க்கறிதற்கரிதாம்
பெண்மையனேதொன்மையாண்மையனேயலிப்பெற்றியனே. (௨௨)

பெற்றதுகொண்டுபிழையேபெருக்கிச்சுருக்குமன்பின்
வெற்றடியேனைவிடுதிகண்டாய்விடிலோகெடுவேன்
மற்றடியேன்றன்னைத்தாங்குநரில்லையென்வாழ்முதலே
யுற்றடியேன்மிகத்தேறிநின்றேனெனக்குள்ளவனே. (௨௩)

உள்ளனவேநிற்கவில்லனசெய்யுமையற்றுழனி
வெள்ளனலேனைவிடுதிகண்டாய்வியன்மாத்தடக்கைப்
பொள்ளனல்வேழத்துரியாய்புலனின்கட்போதலொட்டா
மெள்ளனவேமொய்க்குநெய்க்குடந்தன்னையெறும்பெனவே. (௨௪)

எறும்பிடைநாங்கூழெனப்புலனாலரிப்புண்டலந்த
வெறுந்தமியேனைவிடுதிகண்டாய்வெய்யகூற்றொடுங்க
வுறுங்கடிப்போதவையேயுணர்வுற்றவரும்பரும்பர்
பெறும்பதமேயடியார்பெயராதபெருமையனே. (௨௫)

பெருநீரறச்சிறுமீன்றுவண்டாங்குநினைப்பிரிந்த
வெருநீர்மையேனைவிடுதிகண்டாய்வியன்கங்கைபொங்கி
வருநீர்மடுவுண்மலைச்சிறுதோணிவடிவின்வெள்ளைக்
குருநீர்மதிபொதியுஞ்சடைவானக்கொழுமணியே (௨௬)

கொழுமணியேர்நகையார்கொங்கைக்குன்றிடைச்சென்றுகுன்றி
விழுமடியேனைவிடுதிகண்டாய்மெய்ம்முழுதுங்கம்பித்
தழுமடியாரிடையார்த்துவைத்தாட்கொண்டருளியென்னைக்
கழுமணியேயின்னுங்காட்டுகண்டாய்நின்புலன்கழலே. (௨௭)

புலன்கடிகைப்பிக்கயானுந்திகைத்திங்கொர்பொய்ந்நெறிக்கே
விலங்குகின்றேனைவிடுதிகண்டாய்விண்ணுமண்ணுமெல்லாங்
கலங்கமுந்நீர்நஞ்சமுதுசெய்தாய்கருணாகரனே
துலங்குகின்றேனடியேனுடையாயென்றொழுகுலமே. (௨௮)

குலங்களைந்தாய்களைந்தாயென்னைக்குற்றங்கொற்றச்சிலையாம்
விலங்கலெந்தாய்விட்டிடுதிகண்டாய்பொன்னின்மின்னுகொன்றை
யலங்கலந்தாமரைமேனியப்பாவொப்பிலாதவனே
மலங்களைந்தாற்சுழல்வன்றயிரிற்பொருமத்துறவே. (உ௯)

மத்துறுதண்டயிரிற்புலன்றீக்கதுவக்கலங்கி
வித்துறுவேனைவிடுதிகண்டாய்வெண்டலைமிலைச்சிக்
கொத்துறுபோதுமிலைந்துகுடர்நெடுமாலைசுற்றித்
தத்துறுநீறுடனாரச்செஞ் சாந்தணிசச்சையனே. (௩0)

சச்சையனேமிக்கதண்புனல்விண்காலினெருப்பாம்
விச்சையனேவிட்டிடுதிகண்டாய்வெளியாய்கரியாய்
பச்சையனேசெய்யமேனியனேயொண்படவரவக்
கச்சையனேகடந்தாய்தடந்தாளவடற்கரியே (௩௧)

அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்தவென்னை
விடற்கரியாய்விட்டிடுதிகண்டாய்விழுத்தொண்டர்க்கல்லாற்
றொடற்கரியாய்சுடர்மாமணியேசுடுதீச்சுழலக்
கடற்கரிதாயெழுநஞ்சமுதாக்குங்கறைக்கண்டனே. (௩௨)

கண்டதுசெய்துகருணைமட்டுப்பருகிக்களித்து
மிண்டுகின்றேனைவிடுதிகண்டாய்நின்விரைமலர்த்தாள்
பண்டுதந்தாற்போற்பணித்துப்பணிசெயக்கூவித்தென்னைக்
கொண்டெனெந்தாய்களையாய்களையாயகுதுகுதுப்பே. (௩௩)

குதுகுதுப்பின்றிநின்றென்குறிப்பேசெய்துநின்குறிப்பில்
விதுவிதுப்பேனைவிடுதிகண்டாய்விரையார்ந்தினிய
மதுமதுப்போன்றென்னைவாழைப்பழத்தின்மனங்கனிவித்
தெதிர்வதெப்போதுபயில்விக்கயிலைப்பரம்பரனே. (௩௪)

பரம்பரனேநின்பழவடியாரொடுமென்படிறு
விரும்பரனேவிட்டிடுதிகண்டாய்மென்முயற்கறையி
னரும்பரநேர்வைத்தணிந்தாய்பிறவியைவாயரவம்
பொரும்பெருமான்வினையேன்மனமஞ்சிப்பொதும்புறவே. (௩௫)

பொதும்புறுதீப்போற்புகைந்தெரியப்புலன்றீக்கதுவ
வெதும்புறுவேனைவிடுதிகண்டாய்விரையார்நறவந்
ததும்புமந்தாரத்திற்றாரம்பயின்றுமந்தம்முரல்வண்
டதும்புங்கொழுந்தேனவிர்சடைவானத்தடலரைசே. (௩௬)

அரைசேயறியாச்சிறியேன்பிழைக்கஞ்சலென்னினல்லால்
விரைசேர்முடியாய்விடுதிகண்டாய்வெண்ணகைக்கருங்கட்
டிரைசேர்மடந்தைமணந்ததிருப்பொற்பதப்புயங்கா
வரைசேர்ந்தடர்ந்தென்னவல்வினைதான்வந்தடர்வனவே. (௩௭)

அடர்புலனானிற்பிரிந்தஞ்சியஞ்சொனல்லாரவர்தம்
விடர்விடவேலைவிடுதிகண்டாய்விரிந்தேயெரியுஞ்
சுடரனையாய்சுடுகாட்டரசேதொழும்பர்க்கமுதே
தொடர்வரியாய்தமியேன்றனிநீக்குந்தனித்துணையே. (௩௮)

தனித்துணைநீநிற்கயான்றருக்கித்தலையானடந்த
வினைத்துணையேனைவிடுதிகண்டாய்வினையேனுடைய
மனத்துணையேயென்றன்வாழ்முதலேயெனக்கெய்ப்பில்வைப்பே
தினைத்துணையேனும்பொறேன்றுயராக்கையின்றிண்வலையே. (௩௯)

வலைத்தலைமானன்னநோக்கியர்நோக்கின்வலையிற்பட்டு
மிலைத்தலைந்தேனைவிடுதிகண்டாய்வெண்மதியினொற்றைக்
கலைத்தலையாய்கருணாகரனேகயிலாயமென்னு
மலைத்தலைவாமலையாண்மணவாளவென்வாழ்முதலே. (௪0)

முதலைச்செய்வாய்ச்சியர்வேட்கைவெந்நீரிற்கடிப்பமூழ்கி
விதலைச்செய்வேனைவிடுதிகண்டாய்விடக்கூன்மிடைந்த
சிதலைச்செய்காயம்பொறேன்சிவனேமுறையோமுறையோ
திதலைச்செய்பூண்முலைமங்கைபங்காவென்சிவகதியே. (௪௧)

கதியடியேற்குன்கழறந்தருளவுமூன்கழியா
விதியடியேனைவிடுதிகண்டாய்வெண்டலைமுழையிற்
பதியுடைவாளரப்பார்த் திறைபைத்துச்சுருங்கவஞ்சி
மதிநெடுநீரிற்குளித்தொளிக்குஞ்சடைமன்னவனே. (௪௨)

மன்னவனேயொன்றுமாறறியாச்சிறியேன்மகிழ்ச்சி
மின்னவனேவிட்டிடுதிகண்டாய்மிக்கவேதமெய்ந்நூல்
சொன்னவனேசொற்கழிந்தவனேகழியாத்தொழும்பர்
முன்னவனேபின்னுமானவனேயிம்முழுதையுமே. (௪௩)

முழுதயில்வேற்கண்ணியரென்னுமூரித்தழன்முழுகும்
விழுதனையேனைவிடுதிகண்டாய்நின்வெறிமலர்த்தா
டொழுதுசெல்வானத்தொழும்பரிற்கூட்டிடுசோற்றெம்பிரான்
பழுதுசெய்வேனைவிடேலுடையாயுன்னைப்பாடுவனே. (௪௪)

பாடிற்றிலேன்பணியேன்மணிநீயொளித்தாய்க்குப்பச்சூன்
வீடிற்றிலேனைவிடுதிகண்டாய்வியந்தாங்கலறித்
தேடிற்றிலேன்சிவனெவ்விடத்தானெவர்கண்டனரென்
றோடிற்றிலேன்கிடந்துள்ளுருகேனின்றுழைத்தனனே (சஙு)

உழைதருநோக்கியர்கொங்கைப்பலாப்பழத்தீயினொப்பாய்
விழைதருவேனைவிடுதிகண்டாய்விடின்வேலைநஞ்சுண்
மழைதருகண்டன்குணமிலிமானிடன்றேய்மதியன்
பழைதருமாபரனென்றென்றறைவன்பழிப்பினையே. (சசூ)

பழிப்பினின்பாதப்பழந்தொழும்பெய்திவிழப்பழித்து
விழித்திருந்தேனைவிடுதிகண்டாய்வெண்மணிப்பணிலங்
கொழித்துமந்தாரமந்தாகினிநுந்தும்பந்தப்பெருமை
தழிச்சிறைநீரிற்பிறைக்கலஞ்சேர்தருதாரவனே. (சஎ)

தாரகைபோலுந்தலைத்தலைமாலைத்தழலரப்பூண்
வீரவென்றன்னைவிடுதிகண்டாய்விடிலென்னைமிக்கா
ராரடியானென்னினுத்தரகோசமங்கைக்கரசின்
சீரடியாரடியானென்றுநின்னைச்சிரிப்பிப்பனே. (சஅ)

சிரிப்பிப்பன்சீறும்பிழைப்பைத்தொழும்பையுமீசற்கென்று
விரிப்பிப்பனென்னைவிடுதிகண்டாய்விடின்வெங்கரியி
னுரிப்பிச்சன்றோலுடைப்பிச்சனஞ்சூண்பிச்சனூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னையுமாளுடைப்பிச்சனென்றேசுவனே. (சகூ)

ஏசினும்யானுன்னையேத்தினுமென்பிழைக்கேகுழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பிற்
றேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே. (ரு0)

திருச்சிற்றம்பலம்.

# திருவெம்பாவை.

## சத்தியை வியந்தது.

### திருவண்ணாமலையிலருளிச் செய்யப்பட்டது.

——*——

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக்கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். (௧)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகளும்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். (௨)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். ௩

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ ளுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். (௪)

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (௫)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந் தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். (௬)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (௭)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்குங்

கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (அ)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். (௯)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (௰)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (௧௧)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (௧௨)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகி னத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௩)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (௧௪)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௫)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா

டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (கசு)

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கஎ)

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். (கக)

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்

போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (உ0)

திருச்சிற்றம்பலம்.

---

# திருவம்மானை.

## ஆனந்தக்களிப்பு.

எ து. சுகமேலீடு.

திருவண்ணாமலையி லருளிச்செயப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்தவாறடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காணரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையா
னங்கணனந்தணனா யறைகூவி வீடருளு
மங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (க)

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தா
ராராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
வாரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய். (உ)

இந்திரனு மாலயனு மேனோரும் வானோரு
மந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி

யெந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த
வந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (௩)

வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன்வந் துரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௪)

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௫)

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
றீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
வாட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய். (௬)

ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழு
மாயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௭)

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய். (௮)

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா வூர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்று
னண்டமுத லாயினு னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளு
மண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய். (க)

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
வண்ணு மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (க0)

செப்பார் முலைபங்கன் றென்னன் பெருந்துறையான்
றப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினு
னப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
வப்பார் சடையப்ப னானந்த வார்கழலே
யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கு
மப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய். (கக)

மைப்பொலியுங் கண்ணிகேண் மாலயனோ டிந்திரனு
மெப்பிறவி யுந்தேட வென்னையுந்தன் னின்னருளா
லிப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேறு
யெப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகு
மப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானாய். (கஉ)

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
யையா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய். (கங)

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
யேனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
யூனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து

தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௧௪)

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினி
லிந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய். (௧௫)

ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசே
ரானா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய். (௧௬)

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
யாடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய். (௧௭)

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையி
லெளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின்னருளா
லொளிவந்தெ னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௮)

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
யென்னானை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
யன்னானை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௯)

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். ௨௰

திருச்சிற்றம்பலம்.

# திருப்பொற்சுண்ணம்.

## ஆனந்தமனோலயம்.

௭. து. தானன்றி நிற்றல்.

தில்லையி லருளிச்செய்யப்பட்டது.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற் றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளு
நாமக ளோடு பல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மி
னத்தனை யாறனம் மானைப் பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௧)

பூவியல் வார்சடை யெம்பி ரார்க்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டு

மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் றொண்டர் புறநி லாமே
குனிமின் றொழுமினெங் கோனெங் கூத்தன்
றேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே. (௨)

சுந்தர நீற ணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
யிந்திரன் கற்பக நாட்டி யெங்கு
மெழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமி
னந்தரர் கோன யன்றன் பெருமா
னாழியா னாதனல் வேலன் றாதை
யெந்தர மாளுமை யாள் கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்து நாமே. (௩)

காசணி மின்க ளுலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறை யுரலை
நேச முடைய வடிய வர்க
ணின்று நிலாவுக வென்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௪)

அறுகெ டுப்பா ரயனும் மரியு
மன்றி மற்றிந் திரனோ டமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லா
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௫)

உலக்கை பலவோச் சுவார் பெரிய
ருலகமெ லாமுரல் போதா தென்றே

கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதா தென்றே
நலக்க வடியோமை யாண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்து நாமே. (௬)

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மை யார்ப்ப வார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கின னெங்கள் பரா பர னுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௭)

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச
சோற்றெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௮)

வையக மெல்லா முரல தாக
மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறைய வட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கை பற்றி
யையனணி தில்லை வாண னுக்கே
யாடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௯)

முத்தணி கொங்கைக ளாட வாட
மொய்குழல் வண்டின மாட வாடச்
சித்தஞ் சிவனொடு மாட வாடச்
செய்கயற் கண்பனி யாட வாடப்

பித்தெம் பிரானொடு மாட வாடப்
பிறவி பிறரொடு மாட வாட
வத்தன் கருணையொ டாட வாட
வாடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (க0)

மாடுநகை வாணி லாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமி னெம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
யாடுமி னம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (கக)

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
யையனை யையர் பிரானை நம்மை
யகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோட்
பையர வல்குன் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. (க௨)

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொ ழியீ
ரென்னுடை யாரமு தெங்க ளப்ப
னெம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
றமையனெம் மையன் றாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. (க௩)

சங்க மரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை யிரைப்ப வராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே

பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. (௧௪)

ஞானக் கரும்பின் றெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயி னானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௧௫)

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேற்
றேவர் கனாவி லுங்கண் டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவக மேந்திய வெல்கொ டியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவக னாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே. (௧௬)

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கையேந்து
மூனக மாமழுச் சூலம் பாடி
யும்பரு மிம்பரு முய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. (௧௭)

அயன்றலை கொண்டுசெண் டாடல் பாடி
யருக்க னெயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
யியைந்தன முப்புர மெய்தல் பாடி
யேழையடி யோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே. (௧௮)

வட்டமலர்க் கொன்றை மாலை பாட
மத்தமும் பாடி மதியும் பாடிச
சிட்டர்கள் வாழுந் தென்றில்லை பாடிச
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மே
லிட்டுநின் றாடு மரவம் பாடி
யீசற்குச் சுண்ண மிடித்து நாமே. (கக)

வேதமும் வேள்வியு மாயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயி னார்க்குச
சோதியு மாயிரு ளாயி னார்க்குத்
துன்பமுமா யின்ப மாயினார்க்குப்
பாதியுமாய் முற்று மாயி னார்க்குப்
பந்தமுமாய் வீடு மாயி னருக
காதியு மந்தமு மாயி னருக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

---

# திருக்கோத்தும்பி.

## சிவனோடைக்கியம்.

ஏ - து. சிவனுடன் இடையறாது நிற்றல்

தில்லையி லருளிச்செயப்பட்டது.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையு
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (க)

நானோரன் னுள்ளமார் ஞானங்களா ரென்னையாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேன் மதிமயங்கி

யூனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
றேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ. (௨)

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டோறும் பேசுந்தோறு மெப்போது
மனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௩)

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபி
னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௪)

அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௫)

வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௬)

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
யொட்டாத பாவித் தொழும்பரைநா முருவறியோஞ்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௭)

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை யேற்றுவித்த
வென்றாதை தாதைக்கு மெம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௮)

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௯)

நோயுற்று மூத்துநா னுந்துகன்றா யிங்கிருந்து
நாயுற்ற செல்வ நயந்தறியா வண்ணமெல்லாந்

தாயுற்று வந்தென்னை யாண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௦)

வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
வன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௧)

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான வீசற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௨)

நான்றனக் கன்பின்மை நானுந்தா னும்மறிவோந்
தானென்னை யாட்கொண்ட தெல்லாருந் தாமறிவா
ரான கருணையு மங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. (௧௩)

கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
யருவாய் மறைபயி லந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௪)

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௫)

உள்ளப் படாத திருவுருவை யுள்ளுதலுங்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரானெம் பிரானென்னை வேறேயாட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௬)

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறு
மெய்யாக் கருதிக் கிடந்தேனை யாட்கொண்ட
வையாவென் னாருயிரே யம்பலவா வென்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௭)

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்

சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. (கஅ)

கள்வன் கடியன் கலதியிவ னென்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தா னென்மனத்தே
யுள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாந்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (கக)

பூமே லயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க வடியே னிறுமாக்க
நாய்மேற் றவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

---

# திருத்தெள்ளேணம்.

## சிவனோடடைவு.

எ - து. சிவனுடனே சென்று கூடுதல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
யுருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டா
னொருநாம மோருருவ மொன்றுமில் லாற்காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ (க)

திருவார்பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே ரறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
யருவா யுருவமு மாயபிரா னவன்மருவுந்
திருவாரூர் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (உ)

அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை

யுருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௩)

அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௪)

அருமந்த தேவ ரயன்றிருமாற் கரியசிவ
முருவந்து பூதலத்தோ ருகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் னுளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௫)

அரையாடு நாக மசைத்தபிரா னவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிற
முரையாட வுள்ளொளியாட வொண்மாமலர்க் கண்களினீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௬)

ஆவா வரியயனிந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாவென் றென்னையும்பூ தலத்தேவலித் தாண்டுகொண்டான்.
பூவா ரடிச்சுவ டென்றலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௭)

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னு
மறம்பாவமென் றிரண்டச்சந் தவிர்த்தென்னை யாண்டுகொண்டான்
மறந்தேயுந் தன்கழனான் மறவாவண்ண நல்கியவத்
திறம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (௮)

கன்னா ருரித்தென்ன வென்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னா தென்னா வென்று தெள்ளேணங் கொட்டாமோ. (௯)

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சஞ்
சினவேற்க ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௦)

கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக்கலந் தாண்டலுமே
யயன்மாண் டருவினைச்சுற் றமுமாண் டவனியின்மேன்

மயன்மாண்டு மற்றுமுள்ள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௧)

முத்திக் குழன்று முனிவர்குழா நனிவாட
வத்திக் கருளி யடியேனை யாண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௨)

பார்பாடும் பாதாளர் பாடும்விண்ணோர் தம்பாடு
மார்பாடுஞ் சாரா வகையருளி யாண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௩)

மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியா னுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௪)

உருகிப் பெருகி யுளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோந்
திருவைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௫)

புத்தன் புரந்தரா தியயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
வத்த னணிதில்லை யம்பலவ னருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ. (௧௬)

உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைக டந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௭)

வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௮)

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோங்

கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ (கக)

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையா
ளலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாடோறு
மலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

---

# திருச்சாழல்.

## சிவனுடையகாருணியம்.

எ - து. சிவனுடைய அருட்சத்தி விளையாட்டு.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ. (க)

என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
றுன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. (உ)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. (ஙு)

அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ

நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. (௪)

தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. (௫)

அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தஞ்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ. (௬)

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. (௭)

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
வாலால முண்டா னவன் சதுர்தா னென்னேடீ
யாலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. (௮)

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. (௯)

தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
யானந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. (௧௦)

நங்காயி தென்னதவ நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. (௧௧)

கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
யானா லவனுக்கிங் காட்படுவா ராரேடீ

யானாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. (கஉ)

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
யுலகறியத் தீவேட்டா னென்னுமது வென்னேடீ
யுலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. (கங)

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
றான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லா
மூன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. (கச)

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ. (கரு)

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. (கசு)

அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியு
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வெ னேடீ
நம்பனையு மாமாகே ணான்மறைக டாமறியா
வெம்பெருமா னீசாவென் றேத்தினகாண் சாழலோ. (கஎ)

சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ
ழலராக விடவாழி யருளினன்காண் சாழலோ (கஅ

அம்பரமாம் புள்ளித்தோ லாலால மாரமுத
மெம்பெருமா னுண்டசது றெனக்கறிய வியம்பேடீ
யெம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினுந்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. (க௯)

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கனையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ

யருந்தவருக் கறமுதனுன் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

# திருப்பூவல்லி.

## மாயாவிசய நீக்குதல்.

ஏ. து - மாயையின் பலத்தை மறுத்தல்.

தில்லையி லருளிச்செயப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தே
னணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (க)

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லா மென்னுடைய
பந்த மறுத்தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரா
னந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ (உ)

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. (ங)

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
யெண்பட்ட தக்க னருக்கனெச்ச னிந்துவனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (ச)

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமா
னூனாடி நாடிவந் துள்புகுந்தா னுலகர்முன்னே

நானாடி யாடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. (ரு)

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் திருப்புருவ நெரித்தருளி
யுருமூன்று மாகி யுணர்வரிதா மொருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ. (சா)

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமா
னணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (எ)

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (அ)

பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமல
ரென்னாகந் துன்னவைத்த பெரியோ னெழிற்சுடராய்க்
கன்னா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (கூ)

பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்
காரார் கடனஞ்சை யுண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (க0)

பாலு மமுதமுந் தேனுடனாம் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கண்
ஞாலம் பரவுவார் நன்னெறியா மந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (கக)

வீரனவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்குங்
கோனவ னாய்நின்று கூடலிலாக் குணக்குறியோ
னான நெடுங்கட லாலால மமுதுசெய்யப்
போனக மானவா பூவல்லி கொய்யாமோ. (கஉ)

அன்றால நீழற்கீ ழருமறைக டானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறு

நின்றார வேத்து நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (௧௩)

படமாக வென்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்ப மேயபிரான்
றடமார் மதிற்றில்லை யம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (௧௪)

அங்கி யருக்க னிராவணனந் தகன்கூற்றன்
செங்க ணரியய னிந்திரனுஞ் சந்திரனும்
பங்கமி றக்கனு மெச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (௧௫)

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (௧௬)

மூன்றாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்றார் திருவடி தாமறியார் போற்றுவதே
யென்னாக முள்புகுந் தாண்டுகொண்டா னிலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (௧௭)

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
யாராத வாசையதா யடியே னகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் றிருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (௧௮)

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமா
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ. (௧௯)

* மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்

* இத் திருப்பாசுரஞ்சில பிரதிகளிற் காணப்பட்டிருத்தலாலும் திருப்பதிகத் தொகையைக் குறிக்குஞ் செய்யுளினும் திருப்பூவல்லி இருபது திருப்பாசுரங்களை யுடைத்து எனக்கூறியிருப்பதனாலுஞ் சேர்க்கப்பட்டது.

கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

---

# திருவுந்தியார்.

———*———

## ஞானவெற்றி.

எ-து-அருட்சத்தியினுடைய சாமர்த்தியம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலித்தாழிசை.

திருச்சிற்றம்பலம்.

வளைந்தது வில்லு விளைந்தது பூச
லுளைந்தன முப்புர முந்தீபற
வொருங்குடன் வெந்தவா றுந்தீபற. (க)

ஈரம்பு கண்டில மேகம்பர் தங்கையி
லோரம்பே முப்புர முந்தீபற
வொன்றும் பெருமிகை யுந்தீபற. (உ)

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலு
மச்சு முறிந்ததென் றுந்தீபற
வழிந்தன முப்புர முந்தீபற. (௩)

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே யுந்தீபற
விளமுலை பங்கனென் றுந்தீபற. (௪)

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்க
ளோடிய வாபாடி யுந்தீபற
வுருத்திர நாதனுக் குந்தீபற. (௫)

ஆவா திருமா லவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் றாதையென் றுந்தீபற. (௬)

வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற. (௭)

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற. (௮)

புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினா ருந்தீபற
வானவர் கோனென்றே யுந்தீபற. (௯)

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி யுந்தீபற
தொடர்ந்த பிறப்பற வுந்தீபற. (௧௦)

ஆட்டின் றலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. (௧௧)

உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலா முந்தீபற. (௧௨)

நாமக ளாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற
தொல்லை வினைகெட வுந்தீபற. (௧௩)

நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியி லுந்தீபற. (௧௪)

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற. (௧௫)

தக்கனா ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற. (௧௬)

பாலக ஞர்க்கன்று பாற்கட லீந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்றன் றாதைக்கே யுந்தீபற. (கஎ)

நல்ல மலரின்மே ஞன்முக ஞர்தலை
யொல்லை யரிந்ததென் றுந்தீபற
வுகிரா லரிந்ததென் றுந்தீபற. (கஅ)

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிர
மீரைந்து மிற்றவா றுந்தீபற
விருபது மிற்றதென் றுந்தீபற. (ககூ)

* ஏகாச மிட்ட விருடிகள் போகாம
லாகாசங் காவலென் றுந்தீபற
வதற்கப்பா லுங்காவலென் றுந்தீபற. (உ0)

திருச்சிற்றம்பலம்.

---

# திருத்தோணோக்கம்.

## பிரபஞ்சசுத்தி.

எ-து. ஆன்மாக்களைச் சுத்திகரித்தல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா வுன்சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம். (க)

என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டு கொண்டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காணரிய

---

* இத் திருப்பாசுரமும் சில பிரதிகளிற் காணப்பட்டிருத்தலானும் திருப்பதிகதொகையின்படி இருபதாகலானுஞ் சேர்க்கப்பட்டது.

குன்றாத சீர்த்தில்லை யம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ. (உ)

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ. (௩)

கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினா
னிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ. (௪)

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றா
னுலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ. (௫)

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயந்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு
மத்தன் கருணையினாற் றோணோக்க மாடாமோ. (௬)

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். (௭)

மான மழிந்தோ மதிமறந்தோ மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோ
மானந்தக் கூத்த னருள்பெறினா மவ்வணமே
யானந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம். (அ)

எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமு னின்றதற்பி
னெண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம். (கூ)

பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்க ணிடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே

சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்க மாடாமோ. (கo)

காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோ
னுமைக னுசி சிரம்பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையு மெச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ. (கக)

பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க
வரனு ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ. (கஉ)

ஏழைத் தொழும்பனே னெத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
யூழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ. (கங)

உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலுங்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
யிரைமாண்ட விந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ. (கச)

திருச்சிற்றம்பலம்.

---

# திருப்பொன்னூசல்.

## அருட்சுத்தி.

எ - து. அருளொடுகலத்தல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

சீரார் பவளங்கான் முத்தங் கயிறாக
வேராரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து

நாரா யணனறியா நாண்மலர்த்தா ளடியேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
யாரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ. (௧)

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிக
டேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்றெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கு முத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ. (௨)

முன்னீறு மாதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்க டாமிருப்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (௩)

நஞ்சமர் கண்டத்த னண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி யுத்தர கோசமங்கை
யஞ்சொலா டன்னோடுங் கூடி யடியவர்க
ணெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் றூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ. (௪)

ஆணோ வலியோ வரிவையோ வென்றிருவர்
காணாக் கடவுள் கருணையினாற் றேவர்குழா
நாணாமே யுய்யவாட் கொண்டருளி நஞ்சுதனை
யூணாக வுண்டருளு முத்தர கோசமங்கைக்
கோனார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ. (௫)

மாதாடு பாகத்த னுத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையா னடியாருட்
கோதாட்டி நாயேனை யாட்கொண்டென் றொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்

காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பாற்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (சு)

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் றன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பா
னன்னத்தின் மேலேறி யாடு மணிமயில்போ
லென்னத்த னென்னையுமாட் கொண்டா னெழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (எ)

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால வமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ. (அ)

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (கூ)

திருச்சிற்றம்பலம்.

---

# அன்னைப் பத்து.

ஆத்துமபூரணம்.

எ - து. ஆன்மா சிவனுடனே நிறைதல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

## கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்

நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனு ரன்னே யென்னும். (௧)

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலின
ருண்ணின் றுருக்குவ ரன்னே யென்னு
முண்ணின் றுருக்கி யுலப்பிலா வானந்தக்
கண்ணீர் தருவரா லன்னே யென்னும். (௨)

நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரா லன்னே யென்னுஞ்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
யத்தரா னந்தரா லன்னே யென்னும். (௩)

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேட மிருந்தவா றன்னே யென்னும்
வேட மிருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடுமிது வென்னே யன்னே யென்னும், (௪)

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரா லன்னே யென்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
யாண்டன்பு செய்வரா லன்னே யென்னும். (௫)

உன்னற் கரியசீ ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சி லன்னே யென்னு
மன்னுவ தென்னெஞ்சின் மாலயன் காண்கிலா
ரென்ன வதிசய மன்னே யென்னும். (௬)

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்த ரன்னே யென்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல்கொண்டென்
னுள்ளங் கவர்வரா லன்னே யென்னும். (௭)

தாளி யறுகினர் சந்தனச் சாந்தின
ராளெம்மை யாள்வரா லன்னே யென்னு
மாளெம்மை யாளு மடிகளார் தங்கையிற்
றாள மிருந்தவா றன்னே யென்னும். (௮)

தையலோர் பங்கினர் தாபத வேடத்த
ரையம் புகுவரா லன்னே யென்னு

மையம் புகுந்தவர் போதலு மென்னுள்ளி
நையுமிது வென்னே யன்னே யென்னும். (௯)

கொன்றை மதியமுங் கூவிள மத்தமுந்
துன்றிய சென்னிய ரன்னே யென்னுந்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
யின்றெனக் கானவா றன்னே யென்னும். (௧0)

திருச்சிற்றம்பலம்.

# குயிற்பத்து.

## ஆத்துமவிரக்கம்.

எ - து. சிவனைக்கண்டிரங்குதல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
யாதிகுண மொன்று மில்லா னந்தமி லான்வரக் கூவாய். (௧)

ஏர்தரு மேழுல கேத்த வெவ்வுரு வுந்தன் னுருவா
யார்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய். (௨)

நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவுங்
கோல வழகிற் றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயிற்
சீலம் பெரிது மினிய திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க விருந்த நாயக னைவரக் கூவாய். (௩)

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயிலே யிதுகேணீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ள

ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய வொருத்தன்
மான்பழித் தாண்ட மென்னோக்கி மணாளனை நீவரக் கூவாய். (௪)

சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
வந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை யறுப்பான்
முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய். (௫)

இன்பந் தருவன் குயிலே யேழுலகும் முழு தாளி
யன்ப னமுதளித் தூறு மானந்தன் வான்வந்த தேவ
னன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய். (௬)

உன்னை யுகப்பன் குயிலே யுன்றுணைத் தோழியு மாவன்
பொன்னை யழித்த நன்மேனிப் புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய். (௭)

வாவிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் றேடி
யோவியவ ருன்னி நிற்ப வொண்டழல் விண்பிளந் தோங்கி
மேவியன் றண்டங் கடந்து விரிசுடராய் நின்ற மெய்யன்
றாவிவரும் பரிப்பாகன் றாழ்சடை யோன்வரக் கூவாய். (௮)

காருடைப் பொன்றிகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற் றிகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட
வாருடை யம்பொனின் மேனி யமுதினை நீவரக் கூவாய். (௯)

கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேணீ
யந்தண னாகிவந் திங்கே யழகிய சேவடி காட்டி
யெந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளுஞ்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருத்தசாங்கம்.

## அடிமைகொண்ட முறைமை.

எ - து. பத்து அடையாளத்தாலாண்டமை.

அவையாவன:—

தலைவனது நாமம், நாடு, பதி, ஆறு,

மலை, வாகனம், ஆயுதம், முரசு,

தார், கொடி என்பனவாம்.

---

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

ஏரா ரிளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய் - யாரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோ
லெம்பெருமான் றேவர்பிரா னென்று. (க)

ஏதமிலா வின்சொன் மரகதமே யேழ்பொழிற்கு
நாதனமை யாளுடையா னாடுரையாய் - காதலவர்க்
கன்பாண்டு மீளா வருள்புரிவா னாடென்றுந்
தென்பாண்டி நாடே தெளி. (உ)

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளு
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென் - கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடு
முத்தர கோசமங்கை யூர். (ந)

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசே
ரையன் பெருந்துறையா னாறுரையாய் - தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியு
மானந்தங் காணுடையா னாறு. (ச)

கிஞ்சுகவா யஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவு மலைபகராய் - நெஞ்சத்
திருளகல வாள்வீசி யின்பமரு முத்தி
யருளுமலை யென்பதுகா ணாய்ந்து. (ரு)

இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
யொப்பாடாச் சீருடையா னூர்வதென்னே - யெப்போதுந்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரு மகிழ்ந்து. (சு)

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகரா - யேற்றா
ரழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. (எ)

இன்பான் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பான் முழங்கு முரசியம்பா - யன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை. (அ)

ஆய மொழிக்கிள்ளா யள்ளூறு மன்பர்பான்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென் - றீயவினை
நாளுமணு காவண்ண நாயேனை யாளுடையான்
றாளியறு காமுவந்த தார். (கூ)

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் - சாலவு
மேதிலார் துண்ணென்ன மேல்விளங்கி யேர்காட்டுங்
கோதிலா வேறுங் கொடி. (கo)

திருச்சிற்றம்பலம்.

# திருப்பள்ளியெழுச்சி.

## திரோதானசுத்தி.

எ - து. ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலத்தை நீக்கல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்

டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரு
மெழினகை கொண்டுநின் திருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யேற்றுயர் கொடியுடை யாயெனை யுடையா
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (௧)

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போ
யகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யருணிதி தரவரு மானந்த மலையே
யலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே (௨)

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்க
மோவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரியா யெமக் கெளியா
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (௩)

இன்னிசை வீணைய ரியாழின ரொருபா
லிருக்கொடு தோத்திர மியம்பின ரொருபாற்
றுன்னிய பிணைமலர்க் கையின ரொருபாற்
றொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபாற்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாற்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யென்னையு மாண்டுகொண் டின்னருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (௪)

பூதங்க டோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்

சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் குமரி யாயெங்கண் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (ரு)

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரு
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யிப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியு
மெம்பெருமான்பள்ளி யெழுந்தரு ளாயே. (சு)

அதுபழச் சுவையென வமுதென வறிதற்
கரிதென வெளிதென வமரரு மறியா
ரிதுவவன் றிருவுரு விவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளு
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
வெதுவெமைப் பணிகொளு மாறது கேட்போ
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (எ)

முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடி லொறுதொறு மெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
யந்தண னாவதுங் காட்டிவந் தாண்டா
யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (அ)

விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கண்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்டிருப் பெருந்துறை யாய்வழி யடியோங்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியா

றெண்ணகத் தாயுல குக்குயி ராளு
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (கூ)

புவனியிற் போய்ப்பிற வாமையி ணுளும்
போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலா
மவன்விருப் பெய்தவு மலரவ ளுசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லா
யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

# கோயின்மூத்ததிருப்பதிகம்.

## அநாதியாகியசற்காரியம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தாளு லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே. (க)

முன்னின் றாண்டா யெனைமுன்ன மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
யென்னின் றருளி வரநின்று போந்தி டென்ளு விடிலடியா
ருன்னின் றிவளு ரென்ளுரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே.

உகந்தா னேயன் புடையடிமைக் குருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற் றக்க வாறன் றென்ளுரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடியேற்குன் [லே
முகந்தான் றாரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுத

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான்குழுமிக்
கெழுமுத லேயரு டந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமது வேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம் பலத்தரைசே.

அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி
யிரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. (௫)

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும் பேணா நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
வீசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. (௬)

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை
யருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடு
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே. (௭)

அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லென்பா ராரிங்குப்
பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்து வேனை வாவென்றுன்
றெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. (௮)

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் றிருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. (௯)

நல்கா தொழியா னமக்கென் றுன் னாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தா னினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
யொல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

# கோயிற்றிருப்பதிகம்.

## அநுபோகவிலக்கணம்.

எ - து. சிவானுபூதிக்கடையாளம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
யீறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
வின்பமே யென்னுடை யன்பே. (க)

அன்பினா லடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க்கசிந் துருக
வென்பர மல்லா வின்னரு டந்தா
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. (உ)

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
வப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னு மமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
யுரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே. (ங)

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தா
ருணர்வுக்குந் தெரிவரும் பொருளே
யிணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடா மில்லா வின்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. (ச)

குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
யிறைவனே நீயென் னுடலிடங் கொண்டா
யினியுன்னை யென்னிரக் கேனே. (ரு)

இரந்திரந் துருக வென்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காய நீர்நிலந் தீகா
லாயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. (சா)

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே. (எ)

பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே

நீருறு தீயே நினைவதே லரிய
  நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
  திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளா
  ரானந்த மாக்குமென் சோதீ. (அ)

சோதியாய்த் தோன்று முருவமே யருவா
  மொருவனே சொல்லுதற் கரிய
வாதியே நடுவே யந்தமே பந்த
  மறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
  திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
  வந்துநின் னிணையடி தந்தே. (கூ)

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
  சங்கரா வார்கொலோ சதுர
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
  னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
  றிருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
  யானிதற் கிலனொர்கைம் மாறே. (க0)

திருச்சிற்றம்பலம்.

# செத்திலாப்பத்து.

## சிவானந்தமளவறுக்கொணாமை.

எ-து. சிவானந்தமனுகிச் செயிக்கப்படாமை.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தே
னையனே யரசே யருட்பெருங் கடலே
யத்த னேயயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (க)

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
யுண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றிுய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுட றன்னைச்
செற்றி லேனின்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (உ)

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
னருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னானடந் தேன்விடைப் பாகா
சங்கரா வெண்ணில் வானவர்க் கெல்லா
நிலைய னேயலை நீர்விட முண்ட
நித்த னேயடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (ந)

அன்ப ராகிமற் றருந்தவ முயல்வா
ரயனு மாலுமற் றழலுறு மெழுகா
மென்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க விங்கெனை யெற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்க ணென்செவி யிரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௪)

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பா
லைய னேயென்றுன் னருள்வழி யிருப்பே
னாட்டுத் தேவரு நாடரும் பொருளே
நாத னேயுனைப் பிரிவுறா வருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௫)

அறுக்கி லேனுட றுணிபடத் தீப்புக்
கார்கி லேன்றிரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
விறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
வென்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௬)

மாய னேமறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் மமுதே
நாயி னேனுனை நினையவு மாட்டே
னமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௭)

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிக ணிற்கமற் றென்னைக்

கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் றொண்டரிற் கூட்டா
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
யடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (அ)

ஞால மிந்திர னான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
கால னாருயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாயங்கி தங்கிய கையாய்
மாலு மோலமிட் டலறுமம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலு நீலமு நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (கூ)

அளித்து வந்தெனக் காவவென் றருளி
யச்சந் தீர்த்தநின் னருட்பெருங் கடலிற்
றிளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே. (க0)

திருச்சிற்றம்பலம்.

# அடைக்கலப்பத்து.

## பக்குவநிண்ணயம்.

எ-து. வித்துமங்குரமும்போலவென்றல்.
திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

கலவைப்பாட்டு.

திருச்சிற்றம்பலம்.

செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்

புழுக்க ணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
வழுக்குமனத் தடியே னுடையாயுன் னடைக்கலமே. (௧)

வெறுப்பன வேசெய்யு மென்சிறு மையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேயராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளாலென் பிறவியைவே
ரறுப்பவ னேயுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (௨)

பெரும்பெருமா னென்பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப் பெருமானென் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோ னெடுமாலறி யாமனின்ற
வரும்பெருமா னுடையா யடியேனுன் னடைக்கலமே. (௩)

பொழிகின் றதுன்பப்பு யல்வெள்ளத்தினின் கழற்புணைகொண்
டிழிகின்ற வன்பர்களேறி னர்வான்யா னிடர்க் கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த்திரை பொரக்காமச் சுறவெறிய
வழிகின் றனனுடையா யடியேனுன் னடைக்கலமே. (௪)

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் றிறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமா
னருள்புரி யாயுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (௫)

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் றடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையே
னாழியப் பாவுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (௬)

மின்கணினார் நுடங்குமிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
யென்கணிலே யமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கு
மங்கணனே யுடையா யடியேனுன் னடைக்கலமே. (௭)

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல் போற்கரந்து பரந்ததுள்ள
மாகெடுவே னுடையா யடியேனுன் னடைக்கலமே. (௮)

பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றாருன்னை வந்திப்பதோர்

நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறிவு
மறிவறி யேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (௯)

வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேனென் விதியின்மையாற்
றழங்கருந் தேனன்ன தண்ணீர்பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்குகின்றே னுடையா யடியேனுன் னடைக்கலமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

# ஆ சை ப் ப த் து.

## ஆத்துமவிலக்கணம்.

எ-து. ஆன்ம ரூபத்தை யறிதல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கருடக் கொடியோன் காணமாட்டாக் கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ
விருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவு
மருளைப் பெறுவா னாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௧)

மொய்ப்பா னரம்பு கயிறாக மூளை யென்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ
வெப்பா லவர்க்கு மப்பா லாமென் னாரமு தேயோ
வப்பா காண வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௨)

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி
யாவா வென்ன வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௩)

மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக் கூறல் வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனைநலியத்துயருறுகின்றேன்சோத்தமெம்பெருமானே

யுடைந்து நைந்துருகியுன் ஞெளிநோக்கி யுன்றிரு மலர்ப்பாத
மடைந்து நின்றிடுவா னாசைப் பட்டேன் கண்டாயம்மானே. (ச)

அளிபுண் ணகத்துப் புறந்தோல்மூடி யடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தே னிருந்தும் விடையாய் பொடியாடீ
யெளிவந் தென்னை யாண்டு கொண்ட வென்னா ரமுதேயோ
வளியே னென்ன வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (ரு)

எய்த்தே னாயே னினியிங் கிருக்க கில்லே னிவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோ ரறியா மலர்ச்சே வடியானே
முத்தா வுன்றன் முகவொளி நோக்கி முறுவல் னகைகாண
வத்தா சால வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (சு)

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமா னெனவேத்த
வாரா வமுதே யாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (எ)

கையாற் றொழுதுன் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம்பெருமான் பெருமானென்
றையா வென்றன் வாயா லரற்றி யழல்சேர் மெழுகொப்ப
வையாற் றரசே யாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (அ)

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டேன் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேயுன் பழவடி யார்கூட்ட
மடியேன் காண வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (கூ)

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையி லகப்பட்டு
நைஞ்சே னாயேன் ஞானச் சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயா
லஞ்சே லென்ன வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

# அதிசயப்பத்து.

## முத்தியிலக்கணம்.

எ-து. மோட்சத்தினடையாளம்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்றுமனத் திடையுருகாதே
செப்பு நேர்முலைமடவர லியர் தங்கடி றத்திடை நைவேனை
யொப்பி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் திருப்பாதத்
தப்ப னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (க)

நீதி யாவன யாவையு நினைக்கிலே னினைப்பவ ரொடுங்கூடே
னேத மேபிறந் திறந்துழல் வேன்றனை யென்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பர னிரந்தர மாய்நின்ற
வாதி யாண்டுதன் னடியரிற் கூட்டியவதிசயங் கண்டாமே. (உ)

முன்னை யென்னுடைவல்வினை போயிட முக்கண துடையெந்தை
தன்னை யாவரு மறிவதற் கரியவ னெளியவ னடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடைமுடிதனி லிளமதி யதுவைத்த
வன்னையாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (ங)

பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீ
ரொத்துச் சென்றுதன் திருவருட் கூடிடு முபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை
யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (ச)

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர் பறித்தேற்றேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று குடிகெடு கின்றேனை
யிரவு நின்றெரி யாடிய வெம்மிறை யெரிசடை மிளிர்கின்ற
வரவ னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (ரு)

எண்ணி லேன்றிரு நாமவஞ் செழுத்துமென் னேழைமை யதனாலே,
நண்ணி லேன்கலை ஞானிகடம்மொடு நல்வினை நயவாதே

மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற் கொருப்படு கின்றேனை
யண்ண லாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௬)

பொத்தையூன்சுவர்புழுப்பொதிந்துளுத்தசும்பொழுகியபொய்க்கூரை
யித்தைமெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணிமாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி
யத்தனாண்டுதன் னடியரிற்கூட்டிய வதிசயங் கண்டாமே. (௭)

நீக்கி முன்னெனைத்தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து
நோக்கிநுண்ணியநெடியனசொற்செய்துநுகமின்றிவிளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்துகளறுத் தெழுதருசுடர்ச்சோதி
யாக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௮)

உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு ளப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொற் றெளியாமே
யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௯)

இருடி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச் சிறுகுடி லிதுவித்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை விழப்புகு கின்றேனைத்
தெருளு மும்மதி னொடிவரை யிடிதரச் சினப்பதத் தொடு செந்தீ
யருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய வதிசயங் கண்டாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

# புணர்ச்சிப்பத்து.

---

## அத்துவிதவிலக்கணம்.

எ-து. பதியும் பசுவும் ஒன்றிரண்டல்லவென்றல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

---

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை வாளா தொழும்புகந்து
கடைபட்டேனை யாண்டுகொண்ட கருணை யலனைக் கருமால்பிரமன்

றடைப்பட்டின்னுஞ் சாரமாட்டாத்தன்னைத் தந்தவென்னாரமுதைப்
புடை பட்டிருப்ப தென்று கொல்லோ வென்பொல் லாமணியைப்
புணர்ந்தே. (க)

ஆற்றகில்லே னடியேனரசே யவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தைசெய்து சிவனெம் பெருமா னென்றேத்தி
யூற்று மணற்போ னெக்குநெக் குள்ளே யுருகி யோலமிட்டுப்
போற்றிநிற்ப தென்றுகொல்லோ வென்பொல்லா மணியைப்
புணர்ந்தே. (உ)

நீண்டமாலுமயனும் வெருவ நீண்டநெருப்பை விருப்பி லேனை
யாண்டு கொண்ட வென்னா ரமுதை யள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி விரையார் மலர் தூவிப் [தே.
பூண்டு கிடப்ப தென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்

அல்லிக்கமலத் தயனுமாலு மல்லாதவரு மமரர் கோனுஞ்
சொல்லிப்பரவு நாமத்தானைச் சொல்லும் பொருளு மிறந்தசுடரை
நெல்லிக்கனியைத் தேனைப் பாலை நிறையின் னமுதை யமுதின்
சுவையைப், புல்லிப் புணர்வதென்று கொல்லோ வென் பொல்லா
மணியைப் புணர்ந்தே. (ச)

திகழத்திகழு மடியுமுடியுங் காண்பான் கீழ்மே லயனும் மாலு
மகழப்பறந்துங் காணமாட்டா வம்மா னிம்மா நில முழுது
நிகழப்பணிகொண் டென்னையாட்கொண் டாவா வென்ற நீர்மை
யெல்லாம், புகழப்பெறுவ தென்றுகொல்லோ வென்பொல்லா
மணியைப் புணர்ந்தே. (ரு)

பரிந்துவந்து பரமானந்தம் பண்டே யடியேற் கருள் செய்யப்
பிரிந்துபோந்து பெருமா நிலத்தி லருமா லுற்றே னென்றென்று
சொரிந்தகண்ணீர் சொரியவுண்ணீ ருரோமஞ் சிலிர்ப்ப வுகந்
தன்பாய்ப், புரிந்துநிற்ப தென்று கொல்லோ வென்பொல்லா
மணியைப் புணர்ந்தே. (சு)

நினையப்பிறருக் கரியநெருப்பை நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப்பாரை யில்லாத்தனியை நோக்கித் தழைத்துத் தழுத்த
கண்டங், கனையக்கண்ணீ ரருவிபாயக் கையுங்கூப்பிக் கடி மலராற்
புனையப்பெறுவ தென்று கொல்லோ வென்பொல்லா மணியைப்
புணர்ந்தே. (எ)

நெக்குநெக்குள் ளுருகியுருகி நின்று மிருந்துங் கிடந்து மெழுந்து
நக்குமழுதுந் தொழுதும் வாழ்த்தி நானா விதத்தாற் கூத்துநவிற்றிச்

செக்கர்போலுந் திருமேனி திகழ நோக்கிச் சிலிர் சிலிர்த்துப்
புக்குநிற்பதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப் புணர்ந்தே.

தாதாய் மூவே ழுலகுக்குந் தாயே நாயேன் றனையாண்ட
பேதாய்பிறவிப்பிணிக்கோர்மருந்தே பெருந்தேன்பில்கவெப்போது
மேதாமணியே யென்றென்றேத்தி யிரவும் பகலு மெழிலார் பாதப்
போதாய்ந்தணைவ தென்று கொல்லோ வென் பொல்லாமணியைப்
புணர்ந்தே. (௯)

காப்பாய் படைப்பாய் கரப்பாய்முழுதுங் கண்ணார் விசும்பின் விண்
ணோர்க்கெல்லா, மூப்பாய்மூவா முதலாய் நின்ற முதல்வா முன்னே
யெனையாண்ட, பார்ப்பானேயெம் பரமாவென்று பாடிப் பாடிப்
பணிந்து பாதப், பூப்போதணைவ தென்று கொல்லோ வென்பொல்
லாமணியைப் புணர்ந்தே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

# வா ழ ா ப் ப த் து.

## முத்தியுபாயம்.

எ-து. பிரபஞ்சமயனீங்கி பரபோகத்தைக் கூடுதற்குபாயம்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

---

ஆ சி ரி ய வி ரு த் த ம்.

திருச்சிற்றம்பலம்.

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத்துரைக்கே
னாண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரியாயே. (௧)

வம்பனேன் றன்னை யாண்டமாமணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டா

யும்பரு மறியா வொருவனேயிருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெம்பெரு மானே யென்னையாள்வானே
யென்னைநீ கூவிக்கொண் டருளே. (௨)

பாடிமால் புகழும் பாதமேயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யூடுவ துன்னோ டுவப்பதுமுன்னை
யுணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௩)

வல்லைவா ளரக்கர் புரமெரித்தானே
மற்றுநான் பற்றிலேன்கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெல்லைமூ வுலகு முருவியன்றிருவர்
காணுநா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௪)

பண்ணினேர் மொழியாள் பங்கநீயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெண்ணமே யுடல்வாய் மூக்கொடுசெவிகண்
ணென்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மே லடியேன் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௫)

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

யஞ்சினே னாயே னாண்டுநீயளித்த
வருளினை மருளினான் மறந்த
வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௬)

பருதிவா ழொளியாய் பாதமேயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளமுருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனே னுலகில் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௭)

பந்தணை விரலாள் பங்கநீயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யந்தமி லமுதே யரும்பெரும்பொருளே
யாரமு தேயடி யேனை
வந்துய வாண்டாய் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௮)

பாவநா சாவுன் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ விருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௯)

பழுதிறொல் புகழாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ வெனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்

மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருளபுரி யாயே. (௧௦)
திருச்சிற்றம்பலம்.

---

# அருட்பத்து.

## மகாமாயாசுத்தி.

எ-து. மாயையினின்றும் விலகுதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையி
னிறைமலர்க் குருந்தமே வியசீ
ராதியே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே. (௧)

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
யொருத்தனே யுன்னை யோலமிட் டலறி
யுலகெலாந் தேடியுங் காணேன்
றிருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரருத்தனே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. (௨)

எங்கணா யகனே யென்னுயிர்த் தலைவா
வேலவார் குழலிமாரிருவர்
தங்கணா யகனே தக்கநற் காமன்
றனதுட றழலெழ விழித்த
செங்கணா யகனே திருப்பெருந் துறையிற்

## அருட்பத்து.

செழுமலர்க்குருந்த மேவியசீ
ரங்கணு வடியே ஞதரித் தழைத்தா
லதெந் துவே யென்றரு ளாயே. (௩)

கமலநான் முகனுங் கார்முகி னிறத்துக்
கண்ணனு நண்ணுதற் கரிய
விமலனே யெமக்கு வெளிப்படா யென்ன
வியன்றழல் வெளிப்பட்ட வெந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரமலனே யடியே ஞதரித் தழைத்தா
லதெந் துவே யென்றரு ளாயே. (௪)

துடிகொணே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கடோய் சுவடு
பொடிகொள்வான் றழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரடிகளே யடியே ஞதரித் தழைத்தா
லதெந் துவே யென்றரு ளாயே. (௫)

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே யுன்னை யுள்குவார் மனத்தி
னுறுசுவை யளிக்குமா ரமுதே
செப்பாமா மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரப்பனே யடியே ஞதரித் தழைத்தா
லதெந் துவே யென்றரு ளாயே. (௬)

மெய்யனே விகிர்தா மேருவேவில்லா
மேவலர் புரங்கண்மூன்றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ

ரையனே யடியே னதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. (௭)

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரத்தனே யடியே னதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. (௮)

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரருளனே யடியே னதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. (௯)

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரிருந்தவா றெண்ணி யேசறா நினைந்திட்
டென்னுடை யெம்பிரா னென்றென்
றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தா
லலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதரா யென்றரு ளாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருக்கழுக்குன்றப்பதிகம்.

## குருதரிசனம்.

எ-து. பசுத்துவங் கெட்டவிடம்.

திருக்கழுக்குன்றத்திலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாத பெருந்துறைப் பெரு
  மானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோ ரின்பமே வருந்
  துன்பமே துடைத் தெம்பிரா
னுணக்கிலாததோர் வித்துமேல்விளை
  யாம லென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோலநீ வந்து
  காட்டினாய் கழுக் குன்றிலே. (க)

பிட்டுநேர்பட மண் சுமந்த
  பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்டநேர்பட வந்திலாத
  சழக்கனே னுனைச சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
  நாயினுங் கடை யாயவெங்
கட்டனேனையு மாட்கொள்வான் வந்து
  காட்டினாய் கழுக் குன்றிலே. (உ)

மலங்கினேன் கண்ணி னீரைமாற்றி
  மலங் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனே னினி
  மேல் விளைவதறிந்திலே
னிலங்குகின்ற நின் சேவடிக
  ளிரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கினேன் கலங் காமலே வந்து
  காட்டினாய் கழுக் குன்றிலே. (௩)

பூணொணாததொ ரன்பு பூண்டு
   பொருந்தி நாடொறும் போற்றவு
நாணொணாததொர் நாண மெய்தி
   நடுக்கடலு ளழுந்தி நான்
பேணொணாத பெருந்துறைப் பெருந்
   தோணி பற்றி யுகைத்தலுங்
காணொணாத் திருக்கோலநீ வந்து
   காட்டினாய் கழுக் குன்றிலே. (௪)

கோலமேனி வராகமே குண
   மாம் பெருந்துறைக் கொண்டலே
சீலமேது மறிந்திலாத வென்
   சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரியாக நானுனை
   நச்சி நச்சிட வந்திடுங்
காலமேயுனை யோத நீவந்து
   காட்டினாய் கழுக் குன்றிலே. (௫)

பேதமில்லதொர் கற்பளித்த
   பெருந்துறைப் பெருவெள்ளமே
யேதமேபல பேசநீ யெனை
   யேதிலார் முன மென்செய்தாய்
சாதல்சாதல் பொல்லாமை யற்ற
   தனிச்சரண் சரணா மெனக்
காதலா லுனை யோதநீ வந்து
   காட்டினாய் கழுக் குன்றிலே. (௬)

இயக்கிமா ரறுபத்து நால்வரை
   யெண்குணஞ் செய்த வீசனே
மயக்கமாயதொர்மும் மலப்பழ
   வல் வினைக்கு ளழுந்தவுந்
துயக்கறுத் தெனையாண்டு கொண்டுநின்
   றூய்மலர்க் கழ றந்தெனைக்
கய்க்கவைத் தடியார்முனே வந்து
   காட்டினாய் கழுக் குன்றிலே. (௭)

திருச்சிற்றம்பலம்.

# கண்டபத்து.

## நிருத்ததரிசனம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமா
யந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே. (௧)

வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
யெனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்த விணையிலியை
யனைத்துலகுந் தொழுந்தில்லை யம்பலத்தே கண்டேனே. (௨)

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினா னாயடியே னணிகொடில்லை கண்டேனே. (௩)

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தானை
யெல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே. (௪)

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு
மாதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. (௫)

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டு
முறவினொடு மொழியச்சென் றுலகுடைய வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. (௬)

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றாற் றிருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. (௭)

அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்று மறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனைக்
களவிலா வானந்த மளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே. (௮)

பாங்கினொடு பரிசொன்று மறியாத நாயேனை
யோங்கியுளத் தொளிவளர வுலப்பிலா வன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயிறில்லை யம்பலத்தே கண்டேனே. (௯)

பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்க டொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

# பிரார்த்தனைப்பத்து.

## சதாமுத்தி.

எ-து. ஆன்மாக்களுக்கு முத்திநிச்சயம் பண்ணுதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னா
ளுலர்ந்து போனே னுடையானே யுலவா வின்பச் சுடர்காண்பா
னலந்து போனே னருள்செய்யா யார்வங் கூர வடியேற்கே. (௧)

அடியார் சிலருன் னருள்பெற்றா ரார்வங் கூர யானவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவாலடியேன்மூக்கின்றேன்
கடியேனுடைய கருவினையைக் களைந்துன்கருணைக்கடல்பொங்க
வுடையா யடியே னுள்ளத்தே யோவா தருக வருளாயே. (உ)

அருளா ரமுதப் பெருங்கடல்வா யடியா ரெல்லாம் புக்கழுந்த
விருளாராக்கை யிதுபொறுத்தே யெய்த்தேன்கண்டா யெம்மானே
மருளார்மனத் தோருன்மத்தன் வருமாலென்றிங் கெனைக்கண்டார்
வெருளாவண்ண மெய்யன்பை யுடையாய்பெற நான்வேண்டுமே.

வேண்டும் வேண்டு மெய்யடியா ருள்ளே விரும்பியெனையருளா
லாண்டா யடியே னிடர்களைந்த வமுதே யருமா மணிமுத்தே
தூண்டாவிளக்கின்சுடரனையாய் தொண்டனேற்குமுண்டாங்கொல்
வேண்டாதொன்றும் வேண்டாது மிக்கவன்பே மேவுதலே. (ச)

மேவு முன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா வுன்றன் கருணையினாற்
பாவி யேற்கு முண்டாமோ பரமானந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென் றியாதுமின்றி யறுதலே. (ரு)

அறவே பெற்றார் நின்னன்ப ரந்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றே னுடையானே
பெறவே வேண்டு மெய்யன்பு பேரா வொழியாப் பிரிவில்லா
மறவா நினையா வளவிலா மாளா வின்ப மாகடலே. (சா)

கடலே யனைய வானந்தங்கண்டா ரெல்லாங்கவர்ந்துண்ண, விடரே
பெருக்கி யேசற்றிங் கிருத்த லழகோ வடிநாயே, னுடையாய்
நீயே யருளுதியென் றுணர்த்தா தொழிந்தே கழிந் தொழிந்தேன்
சுடரா ரருளா லிருணீங்கச் சோதி யினித்தான் றுணியாயே. (எ)

துணியா வுருகா வருள்பெருகத்தோன்றுந்தொண்டரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே நின்று தேய்கின்றே
னணியா ரடியா ருனக்குள்ள வன்புந் தாரா யருளளியத்
தணியா தொல்லை வந்தருளித் தளிர்ப்பொற் பாதந் தாராயோ. (அ)

தாரா வருளொன் றின்றியே தந்தா யென்றுன் றமரெல்லா
மாரா நின்றா ரடியேனு மயலார் போல வயர்வேனோ
சீரா ரருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே. (கூ)

மானோர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனநெகா
நானோர்தோளாச் சுரையொத்தா னம்பி யித்தால் வாழ்ந்தாயே
யூனே புகுந்த வுனையுணர்ந்தே யுருகிப் பெருகு முள்ளத்தைக்
கோனே யருளுங் காலந்தான் கொடியேற் கென்றோ கூடுவதே.(௧0)

கூடிக் கூடி யுன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன் வற்றன் மரம்போ னிற்பேனோ
வூடி யூடி யுடையாயொடு கலந் துள்ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி யானந்த மதுவே யாக வருள்கலந்தே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

# குழைத்தபத்து.

## ஆத்துமநிவேதனம்.

எ-து.நேயத்தோடொன்றல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாயுடையாய் கொடு
வினையே, னுழைத்தா லுறுதி யுண்டோதா னுமையாள் கணவா
வெனையாள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர்
சடையாய் முறையோவென், றழைத்தா லருளா தொழிவதே யம்
மானே யுன்னடியேற்கே. (௧)

அடியே னல்ல லெல்லாமுன் னகல வாண்டா யென்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறாவெங் கோவே யாவா வென்றருளிச்
செடிசே ருடலைச் சிதையாத தெத்துக் கெங்கள் சிவலோகா, வுடை
யாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும் போதுமே. (௨)

ஒன்றும் போதா நாயேனை யுய்யக் கொண்ட நின்கருணை
யின்றே யின்றிப் போய்த்தோதா னேழை பங்கா வெங்கோவே
குன்றே யனைய குற்றங்கள் குணமா மென்றே நீகொண்டா
லென்றான் கெட்ட திரங்கிடா யெண்டோண் முக்க ணெம்மானே

## குழைத்தபத்து.

மானேர் நோக்கி மணவாளா மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகவென் றனைநூக்கி யுழலப் பண்ணு வித்திட்டா
யானா லடியே னறியாமை யறிந்துநீயே யருள் செய்து
கோனே கூவிக் கொள்ளுநா ளென்றென் றுன்னைக் கூறுவதே. (௪)

கூறு நாவே முதலாகக் கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதுநீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை யுன்னை விரித்துரைக்கிற்
றேறும் வகையென் சிவலோகா திகைத்தாற் றேற்ற வேண்டாவோ

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண்
டாய், வேண்டி நீயாதருள் செய்தா யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே

அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோ வெண்டோண்முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே. (௭)

நாயிற் கடையா நாயேனை நயந்துநீயே யாட் கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி
யாயக் கடவே னானோதா னென்ன தோவிங் கதிகாரங்
காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. (௮)

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
வெண்ணா திரவும் பகலுநா னவையே யெண்ணு மதுவல்லான்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறு
மண்ணா வெண்ணக் கடவேனோ வடிமை சால வழகுடைத்தே. (௯)

அழகே புரிந்திட் டடிநாயே னரற்று கின்றே னுடையானே
திகழா நின்ற திருமேனி காட்டி யென்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப் புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே கோனே யென்னைக் குழைத்தாயே.

திருச்சிற்றம்பலம்.

# உயிருண்ணிப்பத்து.

## சிவானந்தமேலிடுதல்,

எ-து. நேயமேலிடுதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

### கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பைந்நாப்பட வரவேரல்கு லுமைபாகம தாயென்
மெய்ந்நா டொறும் பிரியாவினைக் கேடாவிடைப்பாகா
செந்நாவலர் பரசும் புகழ்த் திருப்பெருந்துறை யுறைவா
யெந்நாட்களித் தெந்நாளிறு மாக்கேனினி யானே. (௧)

நானாரடி யணைவானொரு நாய்க்குத்தவி சிட்டிங்
கூனாருடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான்
றேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களு மறியாததோர் வளமீந்தன னெனக்கே. (௨)

எனைநானென்ப தறியேன்பக லிரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தானெனை மத்தோன் மத்தனாக்கிச்
சினமால்விடை யுடையான்மன்னு திருப்பெருந்துறை யுறையும்
பனவனெனைச் செய்தபடி றறியேன்பரஞ் சுடரே. (௩)

வினைக்கேடரு முளரோபிறர் சொல்லீர்விய னுலகி
லெனைத்தான்புகுந் தாண்டானென தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையிலுறை பெம்மான்
மனத்தான்கண்ணி னகத்தான்மறு மாற்றத்திடை யானே. (௪)

பற்றாங்கவை யற்றீர்பற்றும் பற்றாங் கதுபற்றி
நற்றாங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
றெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யிறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே. (௫)

கடலின்றிரை யதுபோல்வரு கலக்கமல மறுத்தென்
னுடலும்மென துயிரும்புகுந் தொழியாவண்ண நிறைந்தான்

சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை யுறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்றான்செய்த படிறே. (சு)

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்மண்ணும்விண்
ணும், வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார் தமைநாளுந்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறையிறை
தாள், பூண்டேன்புறம் போகேனினிப்புறம்போகலொட்டேனே. (எ)

கோற்றேனெனக் கென்கோகுரை கடல்வாயமு தென்கோ
வாற்றேனெங்க ளரனேயரு மருந்தேயென தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை யுறையு
நீற்றார்தரு திருமேனிநின் மலனேயுனை யானே. (அ)

எச்சம்மறி வேனானெனக் கிருக்கின்றதை யறியே
னச்சோவெங்க ளரனேயரு மருந்தேயென தமுதே
செச்சைமலர் புரைமேனியன் றிருப்பெருந்துறை யுறைவா
னிச்சம்மென நெஞ்சின்மன்னி யானாகிநின் றானே. (கூ)

வான்பாவிய வுலகத்தவர் தவமேசெய வவமே
யூன்பாவிய வுடலைச்சுமந் தடவிமர மானேன்
றேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை யுறைவாய்
நான்பாவிய னானாலுனை நல்காயென லாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

# அச்சப்பத்து.

## ஆனந்தமுறுதல்.

எ-து. நேயத்திலேயொன்றுபட்டுச்சிக்கெனஅழுந்தினமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வா ளரவுமஞ்சேன் பொய்யர்தம் மெய்யுமஞ்சேன்
கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல் பாதநண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே. (க)

வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல் கொளினுமஞ்சே
னிருவரான் மாறுகாணா வெம்பிரான் றம்பிரானாந்
திருவுரு வன்றிமற்றோர் தேவரெத் தேவரென்ன
வருவரா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௨)

வன்புலால் வேலுமஞ்சேன் வளைக்கையார் கடைக்கணஞ்சே
னென்பெலா முருகநோக்கி யம்பலத் தாடுகின்ற
வென்பொலா மணியையேத்தி யினிதருள் பருகமாட்டா
வன்பிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௩)

கிளியனார் கிளவியஞ்சே னவர்கிறி முறுவலஞ்சேன்
வெளியநீ றாடுமேனி வேதியன் பாதநண்ணித்
துளியுலாங் கண்ணராகித் தொழுதழு துள்ளநெக்கிங்
களியிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௪)

பிணியெலாம் வரினுமஞ்சேன் பிறப்பினோ டிறப்புமஞ்சேன்
றுணிநிலா வணியினான்றன் றொழும்பரோ டழுந்தியம்மா
திணிநிலம் பிளந்துங்காணாச் சேவடி பரவிவெண்ணீ
றணிகிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௫)

வாளுலா மெரியுமஞ்சேன் வரைபுரண் டிடினுமஞ்சேன்
றோளுலா நீற்றனேற்றன் சொற்பதங் கடந்தவப்பன்
றாளதா மரைகளேத்தித் தடமலர் புனைந்துநையு
மாளலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௬)

தகைவிலாப் பழியுமஞ்சேன் சாதலைமுன்ன மஞ்சேன்
புகைமுகந் தெரிகைவீசிப் பொலிந்த வம்பலத்துளாடு
முகைநகைக் கொன்றை மாலைமுன்னவன் பாதமேத்தி
யகநெகா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௭)

தறிசெறி களிறுமஞ்சேன் றழல்விழி யுழுவையஞ்சேன்
வெறிகமழ் சடையனப்பன் விண்ணவர் நண்ணமாட்டாச்
செறிதரு கழல்களேத்திச் சிறந்தினி திருக்கமாட்டா
வறிவிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௮)

மஞ்சுலா முருமுமஞ்சேன் மன்னரோ டுறவுமஞ்சே
னஞ்சமே யமுதமாக்கு நம்பிரா னெம்பிரானாய்ச்
செஞ்சவே யாண்டுகொண்டான் றிருமுண்டந் தீட்டமாட்டா
தஞ்சுவா ரவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே (௯)

கோணிலா வாளியஞ்சேன் கூற்றுவன் சீற்றமஞ்சே
னீணிலா வணியினானை நினைந்துநைந் துருகிநெக்கு
வாணிலாங் கண்கள்சோர வாழ்த்திநின் றேத்தமாட்டா
வாணலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

# திருப்பாண்டிப்பதிகம்.

## சிவானந்தவிளைவு.

எ - து. சுகமேலீடு.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

---

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதா
மொருவரை யொன்றுமி லாதவரைக்கழற் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனா
ரொருவரை யன்றி யுருவறியாதென்ற னுள்ளமதே. (௧)

சதுரைமறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர் சாற்றிச்சொன்னோங்
கதிரை மறைத்தன்ன சோதிகழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடுமேற் குடிகேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப்போட மறித்திடுமே. (௨)

நீரின்பவெள்ளத்து நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்கொண்டீர்
பாரின்பவெள்ளங் கொளப்பரிமேற்கொண்ட பாண்டியனா
ரோரின்பவெள்ளத்துருக்கொண்டுதொண்டரையுள்ளங்கொண்டார்
பேரின்பவெள்ளத்துட் பெய்கழலே சென்று பேணுமினே. (௩)

செறியும் பிறவிக்கு நல்லவர்செல்லன்மின் றென்னனன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக்காலமெக் காலத்துள்ளு
மறிவொண் கதிர்வா ளுறைகழித்தானந்த மாக்கடவி
யெறியும் பிறப்பை யெதிர்ந்தார் புரளவிருநிலத்தே. (௪)

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்வானவர் நண்ணரிய
வாலமுண் டானெங்கள் பாண்டிப்பிரான்றன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு கின்றான்வந்து முந்துமினே. (௫)

ஈண்டியமாயா விருள்கெட வெப்பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டியபோதே விலக்கிலைவாய்தல் விரும்புமின்றாள்
பாண்டியனாரருள் செய்கின்றமுத்திப் பரிசிதுவே. (௬)

மாயவனப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொளளும்
போயறுமிப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்
காயவரும்பெருஞ் சீருடைத் தன்னருளே யருளுஞ்
சேயநெடுங் கொடைத் தென்னவன்சேவடி சேர்மின்களே. (௭)

அழிவின்றி நின்றதொ ரானந்தவெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக்கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன்பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடையே சென்று முந்துமினே. (௮)

விரவிய தீவினை மேலைப்பிறப்பு முந்நீர்கடக்கப்
பரவிய வன்பரை யென்புருக்கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந்தாமறி யார்மறந்தே. (௯)

கூற்றைவென் றாங்கைவர் கோக்களையும் வென்றிருந்தழகால்
வீற்றிருந்தான் பெருந்தேவியுந் தானுமோர் மீனவன்பா
லேற்றுவந்தா ருயிருண்டதிற லொற்றைச் சேவகனே
தேற்றமிலாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# பிடித்தபத்து.

## முத்திக்கலப்புரைத்தல்.

எ - து மற்றுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது.

திருத்தோணிபுரத்தி லருளிச்செயப்பட்டது.

---

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே யூற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
யெம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. (க)

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடைய மெய்ப்பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை யாண்ட
கடவுளே கருணைமா கடலே
யிடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. (உ)

அம்மையே யப்பா வொப்பிலா மணியே
யன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
யிம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. (ஙு)

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
  பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
  போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
  செல்வமே சிவபெரு மானே
யிருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே
  னெங்கெழுந் தருளுவ தினியே. (௪)

ஒப்புனக் கில்லா வொருவனே யடியே
  னுள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
  விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
  செல்வமே சிவபெரு மானே
யெய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே
  னெங்கெழுந் தருளுவ தினியே. (௫)

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
  டளவிலா வானந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
  பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே யடியேன்
  செல்வமே சிவபெரு மானே
யிறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
  னெங்கெழுந் தருளுவ தினியே. (௬)

பாசவே ரறுக்கும் பழம்பொரு டன்னைப்
  பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
  பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
  செல்வமே சிவபெரு மானே
யீசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
  னெங்கெழுந் தருளுவ தினியே. (௭)

அத்தனே யண்ட ரண்டமாய் நின்ற
  வாதியே யாதுமீ றில்லாச்

# பிடித்தபத்து.

சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கு
மொத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. (அ)

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. (௯)

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
னென்பெலா முருக்கி யெளியையா யாண்ட
வீசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்த நற்சோதீ
யின்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருவேசறவு.

## சுட்டறிவொழித்தல்.

எ - து. தன்செயலறநிற்றல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

### கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இரும்புதரு மனத்தேனை யீர்த்தீர்த்தெ னென்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைக
ளொருங்குதிரை யுலவுசடை யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே. (க)

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் னாளாணர்க்
குண்ணார்ந்த வாரமுதே யுடையானே யடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணார வுய்ந்தவா றன்றேயுன் கழல்கண்டே. (உ)

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னு மருநரகி
லார்தமரு மின்றியே யழுந்துவேற் காவாவென்
றோதமலி நஞ்சுண்ட வுடையானே யடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேயெம் பரம்பரனே. (௩)

பச்சைத்தா ளரவாட்டீ படர்சடையாய் பாதமல
ருச்சத்தார் பெருமானே யடியேனை யுய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வ மேத்தாதே யச்சோவென்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேயுன் றிறநினைந்தே. (௪)

கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகே னாயிடினு
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே. (௫)

பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவே னின்னருளா

ஓய்ஞ்சேனெம் பெருமானே யுடையானே யடியேனை
யஞ்சேலென் றாண்டவா றன்றேயம் பலத்தமுதே. (௬)

என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கு மறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமா
னன்பாலீ யகநெகவே புகுந்தருளி யாட்கொண்ட
தென்பாலே நோக்கியவா றன்றேயெம் பெருமானே. (௭)

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
வோத்தானே பொருளானே யுண்மையுமா யின்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினாற்
பேர்த்தேநீ யாண்டவா றன்றேயெம் பெருமானே. (௮)

மருவினிய மலர்ப்பாத மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட வம்மானே. (௯)

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
றேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
றானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தா
னூனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருப்புலம்பல்.

சிவானந்தமுதிர்வு.

எ-து. சிவானந்தம்பெறுவிச்சை.

திருவாரூரிலருளிச்செய்யப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத் தயனொடுமா லறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடீ

யோங்கெயில்சூழ் திருவாரூ ருடையானே யடியேனின்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே. (௯)

சடையானே தழலாட தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியேனு
னுடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே. (௰)

உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

---

# குலாப்பத்து.

## அநுபவமிடையீடுபடாமை.

எ-து. விட்டுப்பற்றுமல் ஒருதன்மையாயது.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

---

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஓடுங் கவந்தியுமே யுறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே யெனத்தெளிந்து
கூடு முயிருங் குமண்டையிடக் குனித்தடியே
னாடுங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௧)

துடியே ரிடுகிடைத் தூய்மொழியார் தோணசையாற்
செடியேறு தீமைக ளத்தனையுஞ் செய்திடினு
முடியேன் பிறவே னெனைத்தனதாண் முயங்குவித்த
வடியேன்குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௨)

என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்க டேய்மைசெய்து

முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
வன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௩)

குறியு நெறியுங் குணமுமிலார் குழாங்கடமைப்
பிறியு மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தி லுருத்தமுதாஞ் சிவபதத்தை
யறியுங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௪)

பேருங் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
யாருங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௫)

கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடல மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ண நானணுகு
மம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௬)

மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் றோணெரிய
மிதிக்குந் திருவடி யென்றலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாச மொன்றுமிலோ மெனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௭)

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி யென்றலைமே னட்டமையாற்
கடக்குந் திறலைவர் கண்டகர்தம் வல்லாட்டை
யடக்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௮)

பாழ்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்றலையா
லாட்செய் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௯)

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தாற் றிருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பய னித்தனையு மீங்கொழிக்கு
மம்மை குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

# அற்புதப்பத்து.

## அநுபவமாற்றாமை.

எ-து. அநுபவமுற்றுதல்பொறாமைவிம்முதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மையலா யிந்த மண்ணிடை வாழ்வெனு மாழியு ளகப்பட்டுத்
தையலா ரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான் றலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவரு டந்துதன் பொன்னடி யிணைகாட்டி
மெய்யனாய் வெளிகாட்டி முன்னின்ற தோரற்புதம் விளம்பேனே.

எய்ந்தமா மலரிட்டுமுட் டாததோரியல்பொடும் வணங்காதே
சாந்தமார் முலைத் தையனல் லாரொடுந் தலைதடு மாறாகிப்
போந்தியான் றுயர்புகாவண மருள்செய்து பொற்கழலிணைகாட்டி
வேந்தனாய் வெளியே யென்முனின்ற தோ ரற்புதம் விளம்பேனே.

நடித்துமண்ணிடைப்பொய்யினைப்பலசெய்துநானெனதெனுமாயக்
கடித்தவாயிலே நின்றுமுன்வினை மிகக்கழறியே திரிவேனைப்
பிடித்துமுன்னின்றப் பெருமறைதேடிய வரும்பொருளடியேனை
யடித் தடித்துவக் காரமுன் றீற்றியவற்புத மறியேனே. (௩)

பொருந்துமிப்பிறப்பிறப்பிவைநினையாது பொய்களேபுகன்றுபோய்க்
கருங் குழலினார் கண்களா லேறுண்டு கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத் திருவொடு மகலாதே
யருந்துணைவனாயாண்டு கொண்டருளியவற்புத மறியேனே. (௪)

மாடுஞ் சுற்றமு மற்றுள போகமுமங்கையர் தம்மோடுங்
கூடி யங்குள குணங்களா லேறுண்டுகுலாவியே திரிவேனை
வீடுதந்தென்றன் வெந்தொழில்வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி
யாடு வித்தென தகம்புகுந் தாண்டதோரற்புத மறியேனே. (௫)

வணங்கு மிப்பிறப்பிறப்பிவைநினையாதுமங்கையர் தம்மோடும் [னைக்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான் பித்தனாய்த் திரிவே

குணங்களுங்குறிகளுமிலாக்குணக்கடல்கோமளத்தொடுங்கூடி
யணைந்து வந்தெனையாண்டு கொண்டருளியவற்புத மறியேனே. (சு)

இப்பிறப்பினி லிணைமலர்கொய்துநா னியல்பொடஞ்செழுத்தோதித்
தப்பிலாதுபொற் கழல்களுக் கிடாதுநான் றடமுலையார்தங்கண்
மைப்புலாங் கண்ணு லேறுண்டுகிடப்பேனை மலரடியிணைகாட்டி
யப்பனென்னைவந் தாண்டுகொண்டருளிய வற்புதமறியேனே. (எ)

ஊச லாட்டுமிவ் வுடலுயிராயின விருவினை யறுத்தென்னை
யோசை யாலுணர்வார்க் குணர்வரியவ னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையா
லாசை தீர்த்தடி யாரடிக் கூட்டியவற்புத மறியேனே. (அ)

பொச்சையான விப்பிறவியிற் கிடந்து நான்புழுத்தலை நாய்போல
விச்சை யாயின வேழையர்க்கே செய்தங் கிணங்கியே திரிவேனை
யிச்சகத் தரியயனுமெட் டாததன் விரைமலர்க் கழல்காட்டி
யச்ச னென்னையு மாண்டுகொண் டருளியவற்புத மறியேனே. (கூ)

செறியு மிப்பிறப் பிறப்பிவை நினையாது செறிகுழலார் செய்யுங்
கிறியுங்கீழ்மையுங் கெண்டையங் கண்களு முன்னியே கிடப்பேனை
யிறைவ னெம்பிரானெல்லை யில்லாததன் னிணைமலர்க்கழல்காட்டி
யறிவுதந்தெனை யாண்டுகொண் டருளிய வற்புத மறியேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

# சென்னிப்பத்து.

## சிவவிளைவு.

௪ - து. சிவனுக்குநிச்சயப்படுத்தல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தேவதேவன் மெய்ச்சேவகன் றென்பெருந்துறை நாயகன்
மூவராலு மறியொணாமுத லாயவானந்த மூர்த்தியான்

யாவராயினு மன்பரன்றி யறியொணாமலர்ச் சோதியான்
றூயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னிச் சுடருமே (க)

அட்டமூர்த்தி யழகனின்னமு தாயவானந்த வெள்ளத்தான்
சிட்டன்மெய்ச்சிவ லோகநாயகன் றென்பெருந்துறைச் சேவகன்
மட்டுவார்குழன் மங்கையாளையோர் பாகம்வைத்த வழகன்றன்
வட்டமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௨)

நங்கைமீரெனை நோக்குமின்னங்க ணாதனம்பணி கொண்டவன்
றெங்குசோலைகள்சூழ்பெருந்துறைமேயசேவகனாயகன் [கொள்வான்
மங்கைமார்கையில் வளையுங்கொண்டெம் முயிருங்கொண்டெம் பணி
பொங்குமாமலர்ச்சேவடிக்கணஞ் சென்னிமன்னிப்பொலியுமே. (௩)

பத்தர்சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனச்
சித்தர்சூழச் சிவபிரான் றில்லைமூதூர் நடஞ்செய்வா [வான்
னெத்தனாகிவந் தில்புகுந்தெமை யாளுங்கொண்டெம் பணிகொள்
வைத்தமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௪)

மாயவாழ்க்கையை மெய்யென்றெண்ணி மதித்திடா வகைநல்கினான்
வேயதோளுமை பங்கனெங்க டிருப்பெருந்துறை மேவினான்
காயத்துள்ளமு தூறவூறநீ கண்டுகொள் ளென்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௫)

சித்தமேபுகுந் தெம்மையாட்கொண்டு தீவினைகெடுத் துய்யலாம்
பத்திதந்துதன் பொற்கழற்கணே பன்மலர்கொய்து சேர்த்தலு
முத்திதந்திந்த மூவுலகுக்கு மப்புறத்தெமை வைத்திடு
மத்தன்மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௬)

பிறவியென்னுமிக் கடலைநீந்தத்தன் பேரருடந் தருளினா
னறவையென்றடி யார்கடங்க ளருட்குழாம்புக விட்டுநல்
லுறவுசெய்தெனை யுய்யக்கொண்ட பிரான்றனுண்மைப்பெருக்கமாந்
திறமைகாட்டிய சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (௭)

புழுவினாற்பொதிந் திடுகுரம்பையிற் பொய்தனையொழி வித்திடு
மெழில்கொள் சோதியெம்மீச னெம்பிரானென்னுடை யப்பனென்
றென்று,தொழுதகையினராகித்தூய்மலர்க்கண்கணீர்மல்குந்தொண்
டர்க்கு, வழுவிலாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே.

வம்பனாய்த்திரி வேனைவாவென்று வல்வினைப்பகை மாய்த்திடு
மும்பரானுல கூடறுத்தப் புறத்தனாய்நின்ற வெம்பிரா

னன்பரானவர்க் கருளிமெய்யடி யார்கட்கின்பந் தழைத்திடுஞ்
செம்பொன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. (௯)

முத்தனை முதற்சோதியை முக்க ணப்பனை முதல் வித்தினைச்
சித்தனைச் சிவலோகனைத் திருநாமம்பாடித் திரிதரும்
பத்தர்கா ளிங்கே வம்மி னீருங்கள் பாசந்தீரப் பணிமினோ
சித்தமார்தருஞ் சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

# திருவார்த்தை.

## அறிவித்தன்புறுதல்.

எ-து. நின்னாலறியப்படாததுரைக்க அறிவையென்றது.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

---

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கருணை யடியார்
குலாவுநீதி குணமாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்படுத்த
வருளறிவா ரெம்பிரா னாவாரே

மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க வவர்க்கருள் செய்தவீசன்
ஞால மதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலந்திகழுங்
கோல மணியணி மாடநீடு
குலாவு மிடவை மடநல்லாட்குச்
சீலமிகக் கருணை யளிக்குந்
திறமறிவா ரெம்பிரா னாவாரே. (௨)

அணிமுடி யாதி யமரர்கோமா
னானந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறிவா ரெம்பிரா னாவாரே. (௩)

வேடுரு வாகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட விருந்த சிவபெருமான்
சிந்தனை செய்தடி யோங்களுய்ய
வாடலமர்ந்த பரிமா வேறி
யையன் பெருந்துறை யாதியந்நா
ளேடர்களை யெங்குமாண்டு கொண்ட
வியல்பறிவா ரெம்பிரா னாவாரே. (௪)

வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கருணைக் கடலா யடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள்
பரமன் பெருந்துறை யாதியந்நா
ளுந்து திரைக்கட லைக்கடந்தன்
றோங்குமதி லிலங்கை யதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறிவா ரெம்பிரா னாவாரே. (௫)

வேவத் திரிபுரஞ் செற்றவில்லி
வேடுவனாய்க் கடிநாய்கள் சூழ
வேவற் செயல்செய்யுந் தேவர்முன்னே
யெம்பெருமான் றானியங்கு காட்டி
லேவுண்ட பன்றிக் கிரங்கியீச
னெந்தை பெருந்துறை யாதியன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பறிவா ரெம்பிரா னாவாரே. (௬)

நாத முடைய தோர் நற்கமலப்
போதினி னண்ணிய நன்னுதலா

ரோதிப் பணிந்தலர் தூவியேத்த
வொளிவளர் சோதியெம் மீசன் மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
யறியவல்லா ரெம்பிரா னாவாரே. (௭)

பூவலர் கொன்றைய மாலைமார்பன்
போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாளுமை மங்கைபங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோ
னேதில் பெரும்புக ழெங்களீச
னிருங்கடல் வாணற்குத் தீயிற்றோன்று
மோவிய மங்கையர் தோள்புணரு
முருவறிவா ரெம்பிரா னாவாரே. (௮)

தூவெள்ளை நீறணி யெம்பெருமான்
சோதி மகேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்தவீசன்
றென்னன் பெருந்துறை யாளியன்று
காதல்பெருகக் கருணை காட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை யாண்டருளுங்
கிடப்பறிவா ரெம்பிரா னாவாரே. (௯)

அங்கண னெங்களமரர் பெம்மா
னடியார்க் கமுத னவனிவந்த
வெங்கள் பிரானிரும் பாசந்தீர
விகபர மாயதோ ரின்பமெய்தச
சங்கங்கவர்ந்து வண்சாத்தி னோடுஞ்
சதுரன் பெருந்துறை யாளியன்று
மங்கையர் மல்கு மதுரைசேர்ந்த
வகையறிவா ரெம்பிரா னாவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# எண்ணப்பதிகம்.

## ஒழியாவின்பத்துவகை.

எ-து. தேகமுதலாகியஆசையையறுத்தல்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாருருவாய பிறப்பறவேண்டும் பத்திமையும் பெறவேண்டுஞ்
சீருருவாய சிவபெருமானே செங்கமல மலர்போ
லாருருவாய வென்னாரமுதேயுன் னடியவர் தொகைநடுவே [னே
யோருருவாய நின்றிருவருள்காட்டி யென்னையுமுய்யக்கொண்ட௫

உரியேனல்லேனுனக்கடிமையுன்னைப்பிரிந்திங்கொருபொழுதுந்
தரியேனாயே னின்னதென்றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோனொருவன்கண்டுகொளென்றுன் பெய்கழலடிகாட்டிப்
பிரியேனென்றென்றருளியவருளும்பொய்யோவெங்கள்பெருமானே

என்பேயுருக நின்னருளளித்துன் னிணைமல ரடிகாட்டி
முன்பேயென்னை யாண்டுகொண்ட முனிவா முனிவர் முழுமுதலே
யின்பேயருளி யெனையுருக்கி யுயிருண்கின்ற வெம்மானே
நண்பேயருளா யென்னுயிர்நாதா நின்னரு ளாணைமே. (௩)

பத்திலனேனும்பணிந்திலனேனுமுன்னுயர்ந்தபைங்கழல்காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப்பா யெம்பெருமானே
முத்தனையானே மணியனையானே முதல்வனே முறையோவென்
றெத்தனையானும் யான்றொடர்ந்துன்னை யினிப்பிரிந்தாற்றேனே.

காணுமதொழிந்தே னின்றிருப்பாதங் கண்டுகண் களிகூரப் [னே
பேணுமதொழிந்தேன் பிதற்றுமதொழிந்தேன்பின்னையெம்பெருமா
தாணுவேயழிந்தேனின்னினைந் துருகுந்தன்மையென்புன்மைகளாற்
காணுமதொழிந்தே னீயினிவரினுங் காணவு நாணுவனே. (௫)

பாற்றிருநீற்றெம் பரமனைப்பரங் கருணையோடு மெதிர்ந்து, தோற்றி
மெய்யடியார்க்கருட்டுறையளிக்குஞ் சோதியைநீதியிலேன், போற்றி

யென்னமுதே யெனநினைந்தேத்திப் புகழ்ந்தழைத்தலறி யென்னுள்
ளே, யாற்றுவனாக வுடையவனே யெனையாவ வென்றருளாயே (௬)

திருச்சிற்றம்பலம்.

---

# யாத்திரைப்பத்து.

## அநுபவாதீதமுரைத்தல்.

எ-து. அநுபவத்தெட்டாமையையறிவுறுத்தல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை
யோவா துள்ளங் கலந்துணர்வா யுருக்கும்வெள்ளக் கருணையினு
லாவா வென்னப் பட்டன்பா யாட்பட்டீர்வந் தொருப்படுமின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டுடையான்கழல்புகவே. (௧)

புகவே வேண்டா புலன்களினீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கண்
மிகவேநினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போகவிடுமின்க
ணகவேஞாலத் துள்புகுந்து நாயேயனைய நமையாண்ட
தகவேயுடையான் றனைச்சாரத் தளரா திருப்பார் தாந்தாமே. (௨)

தாமேதமக்குச் சுற்றமுந் தாமேதமக்கு விதிவகையும்
யாமா ரெமதார் பாசமா ரென்னமாய மிவைபோகக் [கொண்டு
கோமான் பண்டைத் தொண்டரொடு மவன்றன் குறிப்பே குறிக்
போமா றமையின் பொய்நீக்கிப் புயங்கனாள்வான் பொன்னடிக்கே.

அடியாரானீ ரெல்லீரு மகலவிடுமின் விளையாட்டைக்
கடிசேரடியே வந்தடைந்து கடைக்கொண்டிருமின் றிருக்குறிப்பைச
செடிசேருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமைவைப்பான்
பொடிசேர்மேனிப் புயங்கன்றன் பூவார்கழற்கே புகவிடுமே. (௪)

விடுமின்வெகுளி வேட்கைநோய் மிகவோர்கால மினியில்லை [மி
யுடையானடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோ டுடன்போவதற்கேயொருப்படு

னடைவோநாம்போய்ச் சிவபுரத்து ளணியார்கதவ தடையாமே
புடைபட்டுருகிப் போற்றுவோம் புயங்கனாள்வான் புகழ்களையே.

புகழ்மின் றொழுமின் பூப்புனைமின் புயங்கன்றாளே புந்திவைத்திட்
டிகழ்மினெல்லா வல்லலையு மினியோரிடையூ றடையாமே
திகழுஞ்சீரார் சிவபுரத்துச் சென்றுசிவன்றாள் வணங்கிநா
நிகழுமடியார் முன்சென்று நெஞ்சமுருகி நிற்போமே. (௬)

நிற்பார்நிற்க நில்லாவுலகி னில்லோ மினிநாஞ் செல்வோமே
பொற்பாலொப்பாந் திருமேனிப் புயங்கனாள்வான் பொன்னடிக்கே
நிற்பீரெல்லாந் தாழாதே நிற்கும்பரிசே யொருப்படுமின்
பிற்பானின்று பேழ்கணித்தாற் பெறுதற்கரியன் பெருமானே. (௭)

பெருமான்பேரா னந்தத்துப் பிரியாதிருக்கப் பெற்றீர்கா
ளருமாலுற்றுப் பின்னைநீ ரம்மாவழுங்கி யரற்றாதே
திருமாமணிசேர் திருக்கதவந் திறந்தபோதே சிவபுரத்துத்
திருமாலறியாத் திருப்புயங்கன் றிருத்தாள்சென்று சேர்வோமே.

சேரக்கருதிச் சிந்தனையைத் திருந்தவைத்துச் சிந்திமின்
போரிற்பொலியும் வேற்கண்ணாள் பங்கன்புயங்க னருளமுத
மாரப்பருகி யாராத வார்வங்கூர வழுந்துவீர்
போரப்புரிமின் சிவன்கழற்கே பொய்யிற்கிடந்து புரளாதே. (௯)

புரள்வார் தொழுவார் புகழ்வாரா யின்றேவந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னைமதிப்பாரார் மதியுட்கலங்கி மயங்குவீர்
தெருள்வீராகி லிதுசெய்மின் சிவலோகக்கோன் றிருப்புயங்க
னருளார்பெறுவா ரகலிடத்தே யந்தோவந்தோவந்தோவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

# திருப்படையெழுச்சி.

## பிரபஞ்சப்போர்.

எ-து. மலவிளைவற்றது.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஞானவா ளேந்து மையர்நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமி
னானநீற்றுக் கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப் படைவாராமே. (க)

தொண்டர்கா டேசெல்லீர் பத்தர்காள் சூழப்போகி
ரொண்டிறல் யோகிகளே பேரணியுந் திர்க
டிண்டிறற் சித்தர்களே கடைக்கூழைசென்மின்க
ளண்டர்நா டாள்வோநா மல்லற் படைவாராமே. (உ)

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்பா.

## அணைந்தோர்தன்மை.

எ-து. பரிசவேதிபோல என்றது.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் றேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. (க)

ஆர்க்கோ வரற்றுகோ வாடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே யென்செய்கேன்—தீர்ப்பரிய
வானந்த மாலேற்று மத்தன் பெருந்துறையான்
றுனென்பா ராரொருவர் தாழ்ந்து. (௨)

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
யுய்யும் வகையி னுயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள் வேண்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையின் மேய பிரான். (௩)

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—றென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து. (௪)

அறையோ வறிவார்க் கனைத்துலகு மீன்ற
மறையோனு மாலுமால் கொள்ளு—மிறையோன்
பெருந்துறையுண் மேய பெருமான் பிரியா
திருந்துறையு மென்னெஞ்சத் தின்று. (௫)

பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதா
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை—யத்தன்
பெருந்துறையா னாட்கொண்டு பேரருளா னேக்கு
மருந்திறவாப் பேரின்பம் வந்து. (௬)

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
யாரா வமுதா யமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையா னென்சிந்தை மேய
வொருத்தன் பெருக்கு மொளி. (௭)

யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. (௮)

மூவரு முப்பத்து மூவரு மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே யின்ப மிகும். (௯)

இருந்தென்னை யாண்டா னிணையடியே சிந்தித்
திருந்திரந்து கொண்ணெஞ்சே யெல்லாந்—தருநகாண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவா யென்மனத்தே வந்து. (௧௦)

இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியா—யன்பமைத்துச்
சீரார் பெருந்துறையா னென்னுடைய சிந்தையே
யூராகக் கொண்டா னுவந்து. (௧௧

திருச்சிற்றம்பலம்.

---

# பண்டாய நான்மறை.

## அநுபவத்துக்கையமின்மையுரைத்தல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
யுண்டாமோ கைம்மா றுரை. (௧)

உள்ள மலமூன்று மாய வுகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த—வள்ளன்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. (௨)

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
னாட்டிற் பரிப்பாக னம்வினையை—வீட்டி
யருளும் பெருந்துறையா னங்கமல பாத
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. (௩)

வாழ்ந்தார்க ளாவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலக மேத்தத் தகுவாருஞ்—சூழ்ந்தமரர்

சென்றிறைஞ்சி யேத்துந் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்து நமர். (௪)

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
வெண்ணி யெழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். (௫)

காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்
பேணு மடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையி லென்றும்
பிரியானை வாயாரப் பேசு. (௬)

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து. (௭)

திருச்சிற்றம்பலம்.

---

# திருப்படையாட்சி.

## சிவோபாதியொழிதல்.

௪-து. கிரியாசூனியம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென் வாழ்வு கடைப்படு மாகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடு மாகாதே
மாலறியா மலர்ப் பாத மிரண்டும் வணங்குது மாகாதே
பண்களிகூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டி நன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே

விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே. (௧)

ஒன்றினொ டொன்றுமோ ரைந்தினொ டைந்து முயிர்ப்பது மாகாதே
யுன்னடி யாரடி யாரடி யோமென வுய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த கணக்கது வாகாதே
காரண மாகு மனாதி குணங்கள் கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்க நடந்தன வாகாதே
நாமுமே லாமடி யாருட னேசெல நண்ணுது மாகாதே
யென்றுமெ னன்பு நிறைந்த பராவமு தெய்துவ தாகாதே
யேறுடை யானெனை யாளுடை நாயக னென்னுள் புகுந்திடிலே. (௨)

பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த பராவமு தாகாதே
யந்த மிலாத வகண்டமு நம்மு ளகப்படு மாகாதே
யாதி முதற்பர மாய பரஞ்சுட ரண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை சிந்திடு மாகாதே
சேலன கண்க ளவன்றிரு மேனி திளைப்பன வாகாதே
யிந்திர ஞால விடர்ப் பிறவித்துய ரேகுவ தாகாதே
யென்னுடை நாயக னாகிய வீச னெதிர்ப்படு மாயிடிலே. (௩)

என்னணி யார்முலை யாக மளைந்துட னின்புறு மாகாதே
யெல்லையின் மாக்கரு ணைக்கட லின்றினி தாடுது மாகாதே
நன்மணி நாத முழங்கி யெனுள்ளுற நண்ணுவ தாகாதே
நாத னணித்திரு நீற்றினை நித்தலு நண்ணுவ தாகாதே
மன்னிய வன்பரி லென்பணி முந்துற வைகுவ தாகாதே
மாமறை யும்மறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
யின்னியற் செங்கழு நீர்மல ரென்றலை யெய்துவ தாகாதே
யென்னை யுடைப் பெருமா னருளீச னெழுந்தருளப் பெறிலே. (௪)

மண்ணினின் மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே
வானவ ரும்மறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
கண்ணிலி கால மனைத்தினும் வந்த கலக்கறு மாகாதே
காதல்செ யும்மடி யார்மன மின்று களித்திடு மாகாதே
பெண்ணலி யாணென நாமென வந்த பிணக்கறு மாகாதே
பேரறி யாத வனேக பவங்கள் பிழைத்தன வாகாதே
யெண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை யெய்துவ தாகாதே
யென்னை யுடைப் பெருமா னருளீச னெழுந்தருளப் பெறிலே. (௫)

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னிய னுண்ணிடை யார்கள் கருத்து வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழு மோசையி லின்ப மிகுத்திடு மாகாதே
தன்னடி யாரடி யென்றலை மீது தழைப்பன வாகாதே
தானடி யோமுட னேயுய வந்து தலைப்படு மாகாதே
யின்னிய மெங்கு நிறைந்தினி தாக வியம்பிடு மாகாதே
யென்னைமு னாளுடை யீச னெனத்த னெழுந்தருளப் பெறிலே. (௬)

சொல்லிய லாதெழு தூமணி யோசை சுவைதரு மாகாதே
துண்ணென வென்னுள மன்னிய சோதி தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த பராபர மாகாதே
பண்டறி யாத பராநு பவங்கள் பரந்தெழு மாகாதே
வில்லிய னன்னுத லார்மயலின்றுவிளைந் திடு மாகாதே
விண்ணவரும் மறியாத விழுப்பொரு ளிப்பொரு ளாகாதே
யெல்லையி லாதன வெண்குண மானவை யெய்திடு மாகாதே
யிந்து சிகாமணி யெங்களை யாள வெழுந்தருளப் பெறிலே. (௭)

சங்கு திரண்டு முரன்றெழு மோசை தழைப்பன வாகாதே
சாதி விடாத குணங்க ணம்மோடு சலித்திடு மாகாதே
யங்கிது நன்றிது நன்றெனு மாயை யடங்கிடு மாகாதே
யாசை யெலாமடி யாரடி யோமெனு மத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன வாகாதே
சீரடி யார்கள் சிவாநு பவங்க டெரிந்திடு மாகாதே
யெங்கு நிறைந்தமு தூறு பரஞ்சுட ரெய்துவ தாகாதே
யீறறியாமறை யோனெனை யாள வெழுந்தருளப் பெறிலே. (௮)

திருச்சிற்றம்பலம்.

# ஆனந்தமாலை.

## சிவானுபவவிருப்பம்.

எ-து. சிவானந்தமேலீட்டில் கிரியாசத்தியழிவுரைத்தல்

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னே ரனைய பூங்கழல்க ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு போற்றாநின்றா ரமரரெல்லாங்
கன்னே ரனையமனக்கடையாய்க் கழிப்புண்டவலக் கடல்வீழ்ந்த
வென்னே ரனையே னினியுன்னைக் கூடும்வண்ண மியம்பாயே. (க)

என்னாலறியாப் பதந்தந்தா யானதறியா தேகெட்டே
னுன்னாலொன்றுங்குறைவில்லையுடையா யடிமைக்காரென்பேன்
பன்னாளுன்னைப் பணிந்தேத்தும் பழையவடிய ரொடுங்கூடா
தென்னாயகமே பிற்பட்டிங் கிருந்தேனோய்க்கு விருந்தாயே. (உ)

சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி யறிவின்றித்
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்றுவிழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி வாராவுலக நெறியேறக்
கோலங்காட்டி யாண்டானைக் கொடியேனென்றோ கூடுவதே. (௩)

கெடுவேன்கெடுமாகெடுகின்றேன்கேடிலாதாய்பழிகொண்டாய்
படுவேன் படுவதெல்லாநான் பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமாநரகத் தழுந்தாமே காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய்நில்லா தொழிந்தக்கா னன்றோ வெங்கணாயகமே. (ச)

தாயாய்முலையைத் தருவானே தாராதொழிந்தாற் சவலையாய்
நாயேன்கழிந்து போவேனோ நம்பியினித்தா னல்குதியே
தாயேயென்றுன் றாளடைந்தேன் றயாநீயென்பா லில்லையே
நாயேனடிமை யுடனாக வாண்டாய் நான்றான் வேண்டாவோ (ரு)

கோவேயருள வேண்டாவோ கொடியேன் கெடவேயமையுமே
யாவாவென்னா விடிலென்னை யஞ்சேலென்பா ராரே

சாவாரெல்லா மென்னளவோ தக்கவாறன் றென்றோ
தேவேதில்லை நடமாடி திகைத்தே னினித்தான் றேற்றாயே. (௬)

நரியைக்குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையா
யரியபொருளே யவநாசியப்பா பாண்டி வெள்ளமே
தெரியவரிய பரஞ்சோதீ செய்வதொன்று மறியேனே. (௭)

திருச்சிற்றம்பலம்.

# அச்சோப்பதிகம்.

## அநுபவவழியறியாமை.

எ-து. அநுபவத்ததிசயம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௧)

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணங்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௨)

பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் றன்கழலே சேரும்வண்ண
மையனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௩)

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
யெண்ணமிலா வன்பருளி யெனையாண்டிட் டென்னையுந்தன்

சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ண
மண்ணலெனக் கருளியவா ரூர்பெறுவா ரச்சோவே. (ச)

பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் னருள்பெற்றே
னுய்ஞ்சேனா னுடையானே யடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா ரூர்பெறுவா ரச்சோவே. (ரு)

வெந்துவிழு முடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறவென் றுரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா ரூர்பெறுவா ரச்சோவே. (சா)

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
யுய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
யையனெனக் கருளியவா ரூர்பெறுவா ரச்சோவே. (எ)

சாதல்பி றப்பென்னுந் தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் றன்கழலே சேரும்வண்ண
மாதியெனக் கருளியவா ரூர்பெறுவா ரச்சோவே. (அ)

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்று
னம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா ரூர்பெறுவா ரச்சோவே. (சு)

திருச்சிற்றம்பலம்.

---

ஆகத்திருப்பதிகங்கள்-ருக.

அகவலோடு செய்யுள்-கூருஅ.

---

## திருவாசகம் முற்றுப்பெற்றது.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மங்-மாணிக்கவாசக சுவாமிகள்

# திருக்கோவையார்செய்யுட்டிரட்டு.

## நூற்சிறப்பு.

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

---

திருச்சிற்றம்பலம்.

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே.(௧)

பூங்களை யார்புனற் றென்புலி யூர்புரிந் தம்பலத்து
ளாங்கெனை யாண்டுகொண் டாடும்பி ரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பலைக் கண்டிப் பரிசுரைத்தா
லீங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை யெய்துதற்கே (௨)

நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்க
ணொருத்தன் பயிலுங் கயிலை மலையி னுயர்குடுமித்
திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந் தாடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி மெல்லியல் வாடியதே. (௩)

மடுக்கோ கடலின் விடுதிமி லன்றி மறிதிரைமீன்
படுக்கோ பணிலம் பலகுளிக் கோபரன் றில்லைமுன்றிற்
கொடுக்கோ வளைமற்று நும்மையர்க் காயகுற் றேவல்செய்கோ
தொடுக்கோ பணியீ ரணியீர் மலர்நுஞ் சுரிகுழற்கே. (௪)

மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு மறந்துமற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொற்கழற் கேயடியே
னுய்வான் புகவொளிர் தில்லைநின் றோன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே. (௫)

பொருளா வெனைப்புகுந் தாண்டு புரந்தரன் மாலயன்பா
லிருளா யிருக்கு மொளிநின்ற சிற்றம் பலமெனலாஞ்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீ
ரருளா தொழியி னொழியா தழியுமென் னாருயிரே. (௬)

தேமென் கிளவிதன் பங்கத் திறையுறை தில்லையன்னீர்
பூமென் றழையுமம் போதுங்கொள் ளீர்தமி யேன்புலம்ப
வாமென் றருங்கொடும் பாடுகள் செய்துநுங் கண்மலராங்
காமன் கணைகொண் டலைகொள்ள வோமுற்றக் கற்றதுவே. (௭)

மருந்துநம் மல்லற் பிறவிப் பிணிக்கம் பலத்தமிர்தா
யிருந்தனர் குன்றினின் றேங்கு மருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம் புதைந்திரு ளேகும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறூ ரதனுக்கு வெள்வளையே. (௮)

பிரசந் திகழும் வரைபுரை யானையின் பீடழித்தார்
முரசந் திகழும் முருகிய னீங்கு மெவர்க்குமுன்னா
மரசம் பலத்துநின் றாடும்பி ரானருள் பெற்றவரிற்
புரைசந் தமேகலை யாய்துயர் தீரப் புகுந்துநின்றே. (௯)

மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகங்
காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்க்கயற்கட்
பூப்பா னலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே. (௧௦)

முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்றிருச் சிற்றம் பலமனையாய்
துனிவரு நீர்மையி தென்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோவென்று வந்திக்கு நன்னுதலே. (௧௧)

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்க நிதிவிதிசே
ரூருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியமே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கோவையார் செய்யுட்டிரட்டு
முற்றுப்பெற்றது.

# திருவாசகப்

# பாட்டு முதற்குறிப் பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அங்கணனே | ௱௩௨. |
| அங்கிபருக | எ௩ |
| அடர்புல | ௪௬ |
| அடர்கரி | ௪௫ |
| அடியாராணீ | ௱௩௪ |
| அடியார் | ௱௰௨ |
| அடியேனல் | ௱௰௩ |
| அடியேனல்ல | ௩எ |
| அட்டமூர்த்தி | ௱௨௯ |
| அணிமுடி | ௱௩௧ |
| அண்டப்பகுதி | ௰ |
| அண்ணாமலை | ௫௨ |
| அதுபழச் | அஎ |
| அத்தனே | ௱௨௧ |
| அத்தியுரித் | எ௩ |
| அத்தேவர் | ௬௩ |
| அப்பனே | ௪௰ |
| அம்மராமாம் | எ௰ |
| அம்பலத் | எ௰ |
| அம்மையே | ௱௨௰ |
| அயனையன | ௬அ |
| அயன்றலை | ௬௧ |
| அரிக்கும் | ௬௫ |
| அரியானே | ௨௬ |
| அருணனிந் | அ௬ |
| அருந்தவருக் | எ௰ |
| அருமந்த | ௬௬ |
| அருளாதொ | அ௯ |
| அருளாரமுத | ௱௧௨ |
| அருளுடை | ௱௨௧ |
| அரைசனே | ௯௰ |
| அரைபொன் | அ௯ |
| அரைசேய | ௪௬ |
| அரையாடு | ௬௬ |
| அலரவனு | ௬௯ |
| அல்லிக்கமல | ௱௧ |
| அவமாய | ௬௬ |
| அழகேபுரிந் | ௱௧௪ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அழிவின்றி | ௱௧௬ |
| அழுகே | ௩எ |
| அளவறு | ௨௯ |
| அளவிலாப் | ௱௧௧ |
| அளித்து | ௯௫ |
| அளிபுண் | ௯அ |
| அறவேபெற் | ௱௧௨ |
| அறையையே | ௱௨௧ |
| அறிவனே | ௩௨ |
| அறிவிலா | ௨௯ |
| அறுகெடு | ௫அ |
| அறுக்கிலே | ௯௪ |
| அறையோ | ௱௩எ |
| அன்பராகி | ௯௪ |
| அன்பினை | ௯௰ |
| அன்றாலநீழ | எ௨ |
| அன்றேயெ | ௱௧௪ |
| அன்னேயி | ௪௯ |
| ஆடரப்பூ | அ௧ |
| ஆடுகின்றி | ௨௯ |
| ஆட்டின் | எ௫ |
| ஆட்டுத்தேவர் | ௯௪ |
| ஆணேவலி | எ௯ |
| ஆதமிலி | ௱௨௩ |
| ஆதியுமந்த | ௪அ |
| ஆமாறுன் | ௨௫ |
| ஆயநான் | ௨எ |
| ஆயமொ | அ௫ |
| ஆர்க்கோ | ௱௩எ |
| ஆர்த்தபிற | ௫௰ |
| ஆவகைநாமு | ௧0௧ |
| ஆவாதிரு | எ௪ |
| ஆவாவரி | ௬௬ |
| ஆற்றகில்லே | ௱௧ |
| ஆனையாய்க் | ௫௫ |
| ஆனைவெம் | ௪௪ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| இடக்குந் | ௱௨௬ |
| இணையார் | எ௧ |
| இந்திரனு | ௫௩ |
| இந்திரிய | ௱௰ |
| இப்பாடே | அ௫ |
| இப்பிறப்பி | ௱௨அ |
| இயக்கிமா | ௱அ |
| இரங்குநம | அ௯ |
| இராந்திரந் | ௩௧ |
| இருகை | ௩௰ |
| இருடிணிந் | ௱ |
| இருதலை | ௪௨ |
| இருந்தென் | ௱௩அ |
| இருந்தென்னை | ௪௩ |
| இருப்பு | ௩௬ |
| இரும்பு | ௱௨௩ |
| இல்லை | ௩௯ |
| இழித்தன | ௩௪ |
| இன்பந் | அ௩ |
| இன்பம் | ௱௩அ |
| இன்பாலீ | அ௫ |
| இன்றெனக் | ௯௧ |
| இன்னிசை | அ௬ |
| ஈசனேநீ | ௩௬ |
| ஈசனேயென் | ௩௨ |
| ஈண்டிய | ௱௰௯ |
| ஈரம்பு | எ௪ |
| உகந்தானே | அஅ |
| உங்கையிற் | ௫௨ |
| உடையநா | ௩௯ |
| உடையாளு | அஅ |
| உடையானே | ௩௩ |
| உணர்ந்த | ௯௧ |
| உண்டொ | ௩௧ |
| உண்ணப் | எ௫ |
| உததமணத்த | ௨௩ |

# பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
| --- | --- |
| உம்பர் | ௱௨௰ |
| உய்யவல்லா | ௭௪ |
| உரியெனல் | ௱௩௩ |
| உருகிப்பெ | ௯௭ |
| உருத்தெரியா | ௱௰ |
| உரைமாண்ட | ௭௮ |
| உலக்கை | ௫௮ |
| எலவாக் | ௩௨ |
| உவலைச் | ௯௭ |
| உழிதரு | ௨௪ |
| உழைதரு | ௪௭ |
| உள்ளப் | ௯௪ |
| உள்ளமல | ௱௩௮ |
| உள்ளன | ௪௪ |
| உற்றவாக் | ௱ |
| உற்றுரை | ௱௨௫ |
| உன்னற்கரியசி | ௮௧ |
| உன்னற்கரியதிரு | ௮௰ |
| உன்னையுகப் | ௮௩ |
| ஊசலாட்டு | ௱௨௮ |
| ஊனுயிரா | ௫௯ |
| எங்கணுயக | ௱௫ |
| எச்சமறிவே | ௱௧௯ |
| எண்ணிலேன் | ௯௯ |
| எண்ணுடை | ௭௭ |
| எந்தையா | ௩௧ |
| எந்தையெ | ௭௧ |
| எம்பிரா | ௩௪ |
| எய்தலாவ | ௩௯ |
| எய்த்தே | ௯௮ |
| எரிமூன்று | ௭௨ |
| எறும்பிடை | ௪௪ |
| எனைநாளெ | ௱௧௫ |
| என்பாலைப் | ௱௨௪ |
| என்புள்ளுருகு | ௱௨௫ |
| என்பே | ௱௩௩ |
| என்னணி | ௱௪௰ |
| என்னப்ப | ௯௮ |
| என்னலறியா | ௱௪௨ |
| என்னை | ௪௩ |
| என்றும் | ௭௯ |
| ஏகாச | ௭௯ |
| ஏசாநிற்ப | ௮௰ |
| ஏசினும்யா | ௪௭ |
| ஏதமிலா | ௮௪ |
| ஏய்ந்த | ௱௨௭ |
| ஏராரிளங் | ௮௪ |
| ஏர்தரு | ௮௨ |
| ஏழைத்தொ | ௭௮ |
| ஏனையாவ | ௩௰ |
| ஐயநின் | ௩௫ |
| ஒண்ணித்தி | ௪௯ |
| ஒண்மை | ௪௪ |
| ஒப்புனக் | ௱௨௧ |
| ஒருவ | ௩௪ |
| ஒன்றாய் | ௯௩ |
| ஒன்றினொ | ௱௪௰ |
| ஒன்றும்போ | ௱௧௩ |
| ஓடுங்கவந் | ௱௨௫ |
| ஓயாதே | ௪௫ |
| ஓய்விலா | ௩௰ |
| ஓரொருகா | ௫௧ |
| கடகரியும் | ௭௰ |
| கடலினு | ௪௬ |
| கடலின்றிரை | ௱௰௫ |
| கடலேயனைய | ௱௰௨ |
| கடவுளே | ௬௪ |
| கடையவ | ௪௧ |
| கட்டறு | ௬௧ |
| கண்களிரண் | ௱௬௯ |
| கண்டது | ௪௫ |
| கண்ணனு | ௮௧ |
| கண்ணப் | ௯௬ |
| கண்ணார் | ௱௧௪ |
| கதியடி | ௪௯ |
| கமலநான் | ௱௯ |
| கயன்மாலை | ௯௯ |
| கரணங்க | ௯௬ |
| கருடக்கொ | ௯௭ |
| கருவாயுல | ௯௪ |
| கலந்துநின் | ௱௰௧ |
| கல்லாதபுல் | ௱௰ |
| கல்லாமன | ௫௪ |
| களிவந் | ௪௬ |
| கள்வன்கடி | ௯௫ |
| கறங்கோலை | ௯௯ |
| கற்போலு | ௭௭ |
| கற்றறியேன் | ௱௨௬ |
| கனவேயுந் | ௯௯ |
| கன்னுருகித் | ௯௯ |
| காசணி | ௫௮ |
| காட்டகத்து | ௱௬௮ |
| காணலாம் | ௬௧ |
| காணுங் | ௱௩௯ |
| காணும | ௱௬௬ |
| காணுமாறு | ௬௭ |
| காதார் | ௫௧ |
| காப்பாய் | ௱௨ |
| காமனுட | ௭௮ |
| காருடைப் | ௮௬ |
| காருறு | ௪௧ |
| காலமுண் | ௱௰௯ |
| காணார்புலித் | ௯௯ |
| கிஞ்சுக | ௮௪ |
| கிளியனார் | ௱௰௭ |
| கிளிவந்த | ௫௯ |
| கிற்றவா | ௨௯ |
| கீதமினிய | ௮௨. |
| குதுகுது | ௪௫ |
| குலங்க | ௪௫ |
| குலம்பாடி | ௯௮ |
| குழைத்தாற் | ௱௧௬ |
| குறியுநெறிய | ௱௨௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| குறைவிலா | ௯௧ |
| கூடிக்கூடி | ௱௧௩ |
| கூவின | ௮௬ |
| கூறுநாயே | ௱௧௪ |
| கூற்றை | ௱௧௯ |
| கெடுவேன் | ௱௪௨ |
| கேட்டாயோ | ௫௪ |
| கேட்டாரு | ௨௮ |
| கையார் | ௫௫ |
| கையாற் | ௯௮ |
| கொந்தணவு | ௮௩ |
| கொம்பரி | ௪௩ |
| கொம்பில | ௱௨௬ |
| கொம்மை | ௱௨௬ |
| கொழுமணி | ௪௪ |
| கொள்ளு | ௩௧ |
| கொள்ளோர் | ௪௧ |
| கொள்ளேன் | ௨௩ |
| கொன்றை | ௮௨ |
| கோணிலா | ௱௧௮ |
| கோயில்சுடு | ௬௮ |
| கோலமேனி | ௱௯ |
| கோலவரை | ௮௰ |
| கோலாலமா | ௬௯ |
| கோவே | ௱௪௨ |
| கோழிசிலம் | ௪௯ |
| கோற்றெனெ | ௱௧௬ |
| கோற்றேன் | ௮௫ |
| சங்கமரற்றச் | ௯௰ |
| சங்கரா | ௩௪ |
| சங்கு | ௧௪௧ |
| கச்சை | ௪௫ |
| சடையா | ௱௨௫ |
| சட்டோநினை | ௬௩ |
| சதுரை | ௱௧௮ |
| சந்திரனே | ௫௬ |
| சலமுடைய | ௭௰ |
| சாடியவே | ௭௬ |
| சாதல் | ௱௪௪ |
| சாதிகுலம் | ௱௰ |
| சாவமுன் | ௨௩ |
| சித்தமேபுகு | ௱௨௯ |
| சிந்தனே | ௨௭ |
| சிந்தை | ௩௬ |
| சிரிப்பார் | ௮௯ |
| சிரிப்பிப்ப | ௪௭ |
| சீரார்திரு | ௭௩ |
| சீரார்பவ | ௭௬ |
| சீலமின்றி | ௧௪௨ |
| சீவார்ந்தீ | ௯௭ |
| சுடர்பொற் | ௱ |
| சுந்தரத் | ௮௩ |
| சுந்தரநீ | ௫௯ |
| சுருள்புரி | ௯௬ |
| சூடகந்தோ | ௫௯ |
| சூடுவேன் | ௫௬ |
| சூரியனார் | ௭௫ |
| செங்கணெடு | ௫௩ |
| செங்கணவ | ௫௨ |
| செடியாராக் | ௯௮ |
| செப்பார் | ௫௫ |
| செம்மை | ௱௪௪ |
| செய்த | ௱௩௭ |
| செய்யீவாய் | ௮௪ |
| செய்வதறி | ௩௨ |
| செல்வநல் | ௩௧ |
| செழிகின் | ௪௨ |
| செழுக்கமல | ௯௫ |
| செறியுமி | ௱௨௮ |
| செறியும் | ௱௧௮ |
| சேபக்கருதி | ௱௩௫ |
| சொல்லிய | ௱௪௧ |
| சோதியாய் | ௬௨ |
| சோதியே | ௱௫ |
| சோலைப்ப | ௮௫ |
| ஞாலமிந்தி | ௯௫ |
| ஞானக்கரு | ௬௧ |
| ஞனவா | ௱௩௬ |
| தகைவிலா | ௱௧௭ |
| தக்கனு | ௭௫ |
| தக்கனையு | ௬௯ |
| தச்சுவிடு | ௫௪ |
| தந்ததான் | ௯௨ |
| தரிக்கிலே | ௩௩ |
| தவமே | ௨௪ |
| தறிசெறி | ௧௧௭ |
| தனித்து | ௪௬ |
| தனியனேன் | ௨௮ |
| தன்மை | ௩௩ |
| தாதாடு | ௮௪ |
| தாதாய்மூவே | ௧0௨ |
| தாமேதம | ௧௩.௪ |
| தாயாய் | ௧௪௨ |
| தாரகை | ௪௭ |
| தாராயு | ௩௭ |
| தாராவருளொ | ௧௧௨ |
| தாளியறுகி | ௮௧ |
| தானந்தமில் | ௬௯ |
| திகழ்த்திகழு | ௧0௧ |
| திண்போர் | ௭௩ |
| திருந்துவார் | ௧0௭ |
| திருமாலும் | ௬௫ |
| திருவார் | ௬௫ |

# பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| தில்லைமூதூர் | ௬ |
| தினைத்துணை | ௬௩ |
| தீதில்லை | ௭௭ |
| தீர்க்கின் | ௪௨ |
| தீர்ந்தவன் | ௯௪ |
| துடிகொ | ௧௦௬ |
| துடியேறிடு | ௧௨௫ |
| துணியாவரு | ௧௧௨ |
| துண்டப் | ௫௫ |
| துப்பனே | ௧௦௬ |
| தூவெள் | ௧௯௨ |
| தெங்குலவு | ௮௰ |
| தென்பாலு | ௬௯ |
| தேரைசிறுத்தி | ௭௬ |
| தேவதேவன் | ௧௨௮ |
| தேவர்கோ | ௨௮ |
| தேனகமாம | ௬௧ |
| தேனுடுகொ | ௭௧ |
| தேனைப் | ௩௩ |
| தேன்பழச் | ௮௨ |
| தேன்புக்க | ௭௰ |
| தையலார் | ௧௪௪ |
| தையலோர் | ௮௧ |
| தொண்டர்கா | ௧௩௬ |
| தோங்லுது | ௬௪ |
| நங்காயிதெ | ௬௯ |
| நங்கைமீரெ | ௧௨௯ |
| நஞ்சமர் | ௭௯ |
| நடித்து | ௧௨௭ |
| நண்ணிப் | ௧௩௯ |
| நமச்சிவாய | ௩ |
| நரியை | ௧௪௩ |
| நல்கா | ௮௯ |
| நல்லமலரின் | ௭௬ |
| நன்றுக | ௭௰ |
| நாடகத்தா | ௨௫ |
| நாதமுடைய | ௧௩.௧ |
| நாயகனுசி | ௭௫ |
| நாயிற்கடைப் | ௭௧ |
| நாயிற்கடை | ௧௧௪ |
| நாயேனை | ௬௪ |
| நாஞொடி | ௧௧௫ |
| நாஞெரென் | ௬௨ |
| நானுமென் | ௬௪ |
| நானேயோ | ௧.:௪ |
| நான்மறை | ௭௫ |
| நான்முகன் | ௰௬ |
| நான்றனக் | ௬௪ |
| நித்தமணு | ௮௧ |
| நிருத்தனே | ௱௫ |
| நிலநீர் | ௭௭ |
| நினைப்ப | ௩௫ |
| நினையப்பிற | ௱௧ |
| நிற்றார் | ௱௩௫ |
| நீக்கிமுன் | ௱ |
| நீண்டகர | ௮௧ |
| நீண்டமாலு | ௱௧ |
| நீதியாவன | ௯௯ |
| நீரின்பவெ | ௱௰௮ |
| நீலவுரு | ௮௨ |
| நெக்குநெக் | ௱௧ |
| நெடுந்த | ௪௨ |
| நெறிசெய் | ௭௨ |
| நெறியல்லா | ௱௪௩ |
| நோயுற்று | ௬௩ |
| பங்கயமா | ௭௭ |
| பச்சைத்தா | ௱௨௩ |
| பஞ்சாய | ௱௨௩ |
| பஞ்சாயவ | ௱௪௪ |
| பஞ்சின்மெல் | ௱௩ |
| படமாகவெ | ௭௩ |
| பணிவார் | ௩௭ |
| பணசுமந் | ௫௪ |
| பண்டாய | ௱௩௮ |
| பண்பட்ட | ௭௧ |
| பண்ணோர்ந் | ௱௨௩ |
| பண்ணிவேலூர் | ௱௩ |
| பத்தர்சூழப் | ௱௨௯ |
| பத்திமை | ௱௰௧ |
| பத்திலனே | ௱௩௩ |
| பந்தணைவிர | ௱௪ |
| பந்தவிகார | ௱௪௰ |
| பப்பற | ௮௭ |
| பரந்துபல் | ௨[illegible] |
| பரம்பர | ௪௫ |
| பரவுவாரி | ௨௬ |
| பரவுவாரவர் | ௯௯ |
| பரிந்துவந்து | ௱௧ |
| பரிதிவாழொ | ௱௪ |
| பருவரை | ௱௰௮ |
| பவனெம் | ௨௪ |
| பழிப்பினி | ௪௭ |
| பழுதிறெல் | ௱௪ |
| பற்றுங்கவை | ௱௰௫ |
| பன்னுட்பரவி | ௭௨ |
| பாங்கினொடு | ௱௰௧ |
| பாசம்பரஞ் | ௪௮ |
| பாசவே | ௱௨௧ |
| பாடவே | ௪௰ |
| பாடிமால்புக | ௱௩ |
| பாடிற்றிலே | ௪௭ |
| பாதாள | ௫௰ |
| பாரார்விசு | ௫௩ |
| பாருருவாய | ௱௩௩ |
| பாரொடு | ௱௨ |
| பாரோர் | ௯௮ |
| பார்பத | ௯௧ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பார்பாடு | ௬௭ |
| பார்ப்பதி | ௭௫ |
| பாலகனுர்க் | ௭௬ |
| பாலுமமுத | ௭௨ |
| பாவநாசா | ௱௪ |
| பாழ்செய் | ௱௨௬ |
| பாற்றிரு | ௱௩௩ |
| பாணினேந் | ௱௨௨ |
| பிட்டுநேர் | ௱௮ |
| பிணக்கிலாத் | ௱௮ |
| பிணியெலா | ௱௰௭ |
| பித்தனென் | ௯௧ |
| பித்தென்னை | ௱௩௭ |
| பிரமனரி | ௭௮ |
| பிறவிதனை | ௱௰ |
| பிறவியெ | ௱௨௯ |
| பிறியறியா | ௯௬ |
| புகவே | ௨௪ |
| புகவேவே | ௱௩௪ |
| புகழ்மின் | ௱௩௫ |
| புகுவதா | ௩௰ |
| புகுவே | ௩௩ |
| புணர்ப்ப | ௩௫ |
| புத்தன்புரந் | ௬௭ |
| புத்தன்மு | ௭௫ |
| புரந்தரனு | ௭௫ |
| புரன்வார் | ௱௩௫ |
| புலன்கடி | ௪௪ |
| புலையனே | ௯௩ |
| புவனியிற் | ௮௮ |
| புழுவினுற் | ௱௨௯ |
| புறனே | ௩௭ |
| புற்றில்வா | ௱௧௬ |
| புற்றுமாய் | ௯௩ |
| புன்புலால் | ௱௨௨ |
| பூங்கமல | ௱௨௪ |
| பூசுவதும் | ௬௮ |
| பூணெணுதே | ௱௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பூதங்கடோ | ௮௬ |
| பூதங்களை | ௱௰௧ |
| பூத்தாரும் | ௭௬ |
| பூமேலயனே | ௬௫ |
| பூவலர் | ௱௩௨ |
| பூவார் | ௱௩௪ |
| பூவியல் | ௫௭ |
| பூவேறு | ௬௨ |
| பெருநீரற | ௪௪ |
| பெருமான் | ௱௩௫ |
| பெரும்பெரு | ௯௬ |
| பெற்றது | ௪௪ |
| பெற்றிபிறர்க் | ௫௭ |
| பேசப்பட் | ௩௬ |
| பேசிற்று | ௨௭ |
| பேசும் | ௱௩௯ |
| பேதமில்ல | ௱௯ |
| பேராசை | ௭௨ |
| பேருங்குண | ௱௨௬ |
| பையகுவ | ௫௧ |
| பைந்நாப்ப | ௱௰௫ |
| பொச்சை | ௱௨௮ |
| பொது | ௪௫ |
| பொத்தை | ௱ |
| பொய்யவ | ௪௨ |
| பொய்யனே | ௯௩ |
| பொய்யாய | ௬௪ |
| பொய்யெல் | ௱௪௩ |
| பொருட்ப | ௭௭ |
| பொருத்த | ௩௮ |
| பொருந்து | ௱௨௭ |
| பொருளே | ௪௩ |
| பொலிகின் | ௪௨ |
| பொழிகின்ற | ௯௬ |
| பொன்னிய | ௱௪௧ |
| போகம் | ௩௫ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| போதுசேரய | ௯௪ |
| போரேறே | ௩௨ |
| போற்றியரு | ௫௨ |
| போற்றியிப் | ௩௫ |
| போற்றி-போ | ௩௪ |
| போற்றி-வாழ் | ௮௫ |
| போற்றியென்று | ௩௧ |
| போற்றியோ | ௩௪ |
| மஞ்சுலா | ௱௰௭ |
| மடங்க | ௪௩ |
| மண்ணதனிற் | ௱௪௩ |
| மண்ணின் | ௱௪௰ |
| மதிக்குந் | ௱௨௬ |
| மத்துறு | ௪௫ |
| மருவினிய | ௱௨௪ |
| மருளனேன் | ௱௭ |
| மலங்கினேன் | ௱௮ |
| மலைமகளை | ௬௯ |
| மலையனா | ௭௰ |
| மன்னவ | ௪௬ |
| மன்னவெ | ௪௰ |
| மறுத்த | ௪௨ |
| மாடுஞ்சு | ௱௨௭ |
| மாடுநகை | ௬௰ |
| மாதாடு | ௭௬ |
| மாதிவர் | ௱௩௰ |
| மாயவாழ்க் | ௱௨௯ |
| மாயவனப் | ௧௰௯ |
| மாயனே | ௯௪ |
| மாலயன் | ௧௩௰ |
| மாலறியா | ௪௯ |
| மாலேபிரம | ௬௭ |
| மாவடுவெகிர | ௬௬ |
| மாவாரவே | ௭௩ |
| மாழைமை | ௯௬ |
| மாறி-றெனே | ௨௯ |
| மாறி-றென் | ௯௰ |
| மாறிலா | ௩௮ |
| மாறுபட் | ௪௨ |
| மானமழிந் | ௭௭ |

# பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| மானேநீ | ௪௯ |
| மா-க்கிம | ௧௰௪ |
| மா-க்கியுடை | ௩௭ |
| மானே-யுமை | ௩௨ |
| மானோர்யங்க | ௧௰௩ |
| மிடைந்தெ | ௯௭ |
| மின்கணி | ௯௬ |
| மின்னிடை | ௬௰ |
| மின்னேர | ௧௪௨ |
| முடித்த | ௩௩ |
| முதலை | ௪௬ |
| முத்தணி | ௫௯ |
| முத்தனே | ௧௦௭ |
| முத்தனை | ௧௩௰ |
| முத்தன்ன | ௪௮ |
| முத்திக்குழ | ௬௭ |
| முத்திநெறி | ௧௪௩ |
| முத்தாநற்றும | ௫௭ |
| முந்தியமுத | ௮௭ |
| முழுதயில் | ௪௬ |
| முழுமுதலே | ௮௯ |
| முழிவதுங் | ௨௪ |
| முன்னைய | ௭௩ |
| முன்னனை | ௫௬ |
| முன்னிக் | ௫௧ |
| முன்னின்று | ௮௮ |
| முன்னீறு | ௭௯ |
| முன்னைப் | ௫௰ |
| முன்னையெ | ௯௯ |
| முன்னைவி | ௧௩௭ |
| மூத்தானே | ௧௨௪ |
| மூவரு | ௧௩௭ |
| மூன்றங் | ௭௯ |
| மெய்தா | ௨௩ |
| மெய்யனே | ௧௦௬ |
| மேலைவா | ௩௧ |
| மேவுமுன்ற | ௧௧௨ |
| மைப்பொலி | ௫௫ |
| மையமர் | ௬௦ |
| மையலா | ௧௨௭ |
| மையிலங் | ௩௮ |
| மொய்ப்பா | ௯௭ |
| மொய்யார் | ௫௰ |
| யாவர்க்கு | ௧௩௭ |
| யானேதும் | ௨௫ |
| யானேபொ | ௩௭ |
| வட்டமலா | ௬௨ |
| வணங்கத் | ௭௨ |
| வணங்குநி | ௩௫ |
| வணங்குமி | ௧௨௭ |
| வண்ணந் | ௨௭ |
| வந்திமை | ௧௩௧ |
| வம்பறைப்த் | ௧௨௯ |
| வம்பனேன் | ௧௦௨ |
| வருந்துவ | ௨௫ |
| வலைத்தலை | ௪௬ |
| வல்லைவா | ௧௦௩ |
| வழங்குகின் | ௯௭ |
| வளர்கின் | ௪௧ |
| வளைந்தது | ௭௪ |
| வன்புலால் | ௧௧௭ |
| வன்னெஞ் | ௬௪ |
| வாட்டடங | ௫௯ |
| வாராவழி | ௧௩௭ |
| வாவிங் | ௮௩ |
| வாழ்கின் | ௨௬ |
| வாழ்த்துவ | ௨௫ |
| வாழ்ந்தார் | ௱௩௮ |
| வாளுலா | ௱௧௭ |
| வானநா | ௩௯ |
| வானவன் | ௭௨ |
| வானுகி | ௨௫ |
| வான்கெட் | ௬௭ |
| வான்பாவிய | ௱௧௬ |
| வான்வந்த | ௫௪ |
| விச்ச | ௩௯ |
| விச்சுக் | ௩௬ |
| விச்சைதா | ௨௮ |
| விடுமின் | ௱௩௪ |
| விடைவிடா | ௱௨௰ |
| விண்ணகத் | ௮௭ |
| விண்ணு | ௫௫ |
| விண்ணோர் | ௬௭ |
| விரவிய | ௱௧௯ |
| வினைக்கேட | ௱௧௫ |
| வினைப்பிறவி | ௱௰ |
| வினையிலே | ௨௭ |
| வினையெ | ௩௰ |
| வெஞ்சின | ௭௫ |
| வெஞ்சேல | ௯௮ |
| வெந்து | ௱௪௪ |
| வெய்யவ | ௭௫ |
| வெய்யவி | ௱௩௬ |
| வெருவரேன் | ௱௧௭ |
| வெள்ளத் | ௪௩ |
| வெள்ளந் | ௨௬ |
| வெள்ளைக் | ௮௧ |
| வெறுப்பன | ௯௬ |
| வேடுருவாகி | ௱௩௧ |
| வேண்டழ்த | ௱௧௪ |
| வேண்டுநி | ௩௫ |
| வேண்டும் | ௱௧௨ |
| வேண்டேன் | ௱௧௬ |
| வேதமும் | ௬௨ |
| வேதமோ | ௮௰ |
| வேவத் | ௱௩௧ |
| வேனில்-க | ௩௰ |
| வேனில்-ம | ௨௬ |
| வைத்தநிதி | ௬௩ |
| வைப்புமா | ௯௯ |
| வையக | ௫௯ |


முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாசக விஷய சூசனுநுக்கிரமணி.

## சிவபுராணம்.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| க. "நமசிவாய" வாஅழ்க | க |
| உ. "நாதன்" ருள் வாஅழ்க | க |
| ங. இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் | ங |
| ச. ரு. "ஆகமம்" ஆகிநின்று "அண்ணிப்பான்" | ச. சு. |
| சு. எ. அ. "ஏகன்" "அனேகன்" "இறைவன்" | சு. எ. அ. |
| கூ. பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் | கூ |
| க0. "புறத்தார்க்குச்சேயோன்" "கரங்குவிவாருண்மகிழுங்கோன்" | க0 |
| கக. மாயப் பிறப்பறுக்கு மன்னன் | க0 |
| கஉ. கங. "சிவனவன்" "என்சிந்தையு ணின்றவதனால்" | கக. கஉ. |
| கச. அவனருளாலே யவன்றாள் வணங்கி | கங |
| கரு. எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான் | கச |
| கசு. ஓங்காரமாய் நின்ற மெய்யா | கசு |
| கஎ. "இயமானன்" ஆம்விமலா | கஅ. |
| கஅ. ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய் | உ0 |
| ககூ. அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டி | உக |
| உ0. தயாவான "தத்துவனே" | உஉ |
| உக. பொய்கெட்டு "மெய்யானார்" | உங |
| உஉ. சிவபுரத்தினுள்ளார் | உச |


## கீர்த்தித்திருவகவல்.


| | |
|---|---|
| உங. தில்லைமூதூ ராடியதிருவடி | உரு |
| உச. "அந்தணன்" ஆகி யாண்டுகொண்டருளி | உசு |
| உரு. சந்திரதீபத்துச் "சாத்திரனாகி" | உசு |
| உசு. அழகமர் திருவுரு-நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும் | உஅ |
| உஎ. பரம்பரத் துய்ப்பவன் | ங0 |

## உ . திருவாசக விஷய சூசனுநுக்கிரமணி.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| உஅ. ஆதிமூர்த்திகட் கருள்புரிந்தருளிய தேவதேவன் | ௩௨ |
| உகூ. "கைலை" யுயர்கிழவோனே | ௩௨ |


### திருவண்டப்பகுதி.


| | |
|---|---|
| ௩0. அண்டப்பகுதியி னுண்டைப்பிறக்கம்.........சிறியவாகப் பெரியோன் | ௩௩ |
| ௩க. "ஒருவனென்னுமொருவன்" காண்க | ௩௪ |
| ௩உ. குவளைக்கண்ணி கூறன் | ௩௬ |
| ௩௩. எய்தினர்க்காரமு தளிப்போன் | ௩௬ |


### போற்றித்திருவகவல்.


| | |
|---|---|
| ௩௪. ஊழிமுதல்வ | ௩அ |
| ௩௫. ஆறுகோடி மாயாசத்திகள் வேறுவேறுதம் மாயைகடொடங்கின | ௩௯ |
| ௩௬. சகம்பேயென்று தம்மைச் சிரிப்ப நாணதுவொழிந்து | ௪0 |
| ௩எ. மூவா நான்மறை முதல்வா | ௪க |
| ௩அ. அருவமு முருவமு மானுய் | ௪உ |
| ௩௯. பரம்பரஞ் சோதிபரனே | ௪௪ |


### திருச்சதகம். க-வது. மெய்யுணர்தல்.


| | |
|---|---|
| ௪0. கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு | ௪௫ |
| ௪க. மூவரென்றே யெம்பிரானெடு மெண்ணி | ௪எ |
| ௪உ. கழுதொடு காட்டிடை நாடகமாடி | ௫0 |
| ௪௩. பவனெம்பிரான் | ௫உ. |


### உ-வது. அறிவுறுத்தல்.


| | |
|---|---|
| ௪௪, யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன் | ௫௩ |
| ௪௫. வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான்......தம்மையெலாந் தொழவேண்டி. | ௫௬ |
| ௪௬. நாயடியேன்-பாழ்த்தபிறப்பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே | ௫எ |
| ௪எ. பாடுவன நால்வேதம் | ௬௪ |


### ௩-வது. சுட்டறுத்தல்.


| | |
|---|---|
| ௪அ. வினையிலே கிடந்தேனைப்.........னென்பாய்போல | ௬௬ |
| ௪௯. இனியென்னே யுய்யுமா.........கிடக்கின்றேனை | ௬எ |
| ௫0. தேவர்கோ வறியாத தேவதேவன்.........பாகத்தெந்தை | ௬௯ |

விஷயம். பக்கம்.
௫௧. சிவனவன் றிரடோண்மேல் நீறுநின்றது கண்டனையாயி னும் நெக்கிலை ௭௫

௫-வது. கைம்மாறுகொடுத்தல்.

௫௨. மேலைவானவரும் மறியாததோர் கோலமே ௭௬
௫௩. நள்ளுங்கீழுளும் மேலுளும்யாவுளும்-எள்ளுமெண்ணெயு ம் போனின்ற வெந்தையே ௮0
௫௪. எட்டினோடிரண்டு மறியேனையே ௮௩

௬-வது. ஆனந்தாதீதம்.

௫௫. விச்சதன்றியே விளைவு செய்குவாய் விண்ணு மண்ணக முழுதும் யாவையும் ௮௪

நீத்தல்விண்ணப்பம்.

௫௬. மருந்தினனே பிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கே ௮௭

திருவம்மானை.

௫௭. சேர்ந்தறியாக் கையானை ௮௮

திருத்தெள்ளேணம்.

௫௮. திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை ௯0

திருச்சாழல்-

௫௯. நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீழ், மலரா க விடவாழி யருளினன் ௯௧

திருவுந்தியார்.

௬0. "உருத்திரநாதனுக்கு" உந்தீபற ௯௩

திருச்சிற்றம்பலம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪ | ௨௩ | துரிய | துரீய |
| ௫ | ௨௧ | ஸாரயவாத் | ஸாரத்வாத் |
| ௬ | ௩௩ | ப்ரஹ்மையகம் | ப்ரஹ்மைகம் |
| ௭ | ௧ | ஏகனெனப் | ஏகனெனப் |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| அ | ரு | நிறுத்திடு | நிறுத்துவன் |
| ,, | கக | ஈசானன | ஈசானன் |
| ம | ரு | திருமந்திர திருமுறை | திருமந்திரத்திருமுறை |
| ,, | ருசு | மஹேஸ்வர | மஹேச்வரः |
| கக | கரு | மீளவிப்பிறவி | மீளப்பிறவி |
| கரு | உசு | நைவஸ்திரி | நைவஸ்த்ரீ |
| கசு | கரு | ஐம்பைத்தைந்தாவது | ஐம்பத்துநாலாவது |
| உ0 | எ | ஜபாலோபநிடதம் | ஜாபாலோபநிடதம் |
| உ0 | ருரு | ஜாபாபாலோபநிடதம் | ஜாபாலோபநிடதம் |
| உக | உக | பாவப்பா | பாவப்பய |
| உஉ | எ | ஷஜம் | ஷஜம் |
| ,, | கரு | த்வம் | தத்வம் |
| உஅ | உக | புகழ்த்தமையால் | புகழ்ந்தமையால் |
| ,, | ருரு | அழகர் திருவுரு | அழகமர் திருவுரு |
| ருக | உக | வைதிகசைவர் | வைதிகசைவர் |
| ருஉ | மஅ | ஸவர்யே | ச்வர்யே |
| ருரு | ருரு | பரப்ரஹ்மம் | பரம்ப்ரஹ்ம |
| ருசு | ரு | உமாதேவிவைக் | உமாதேவியைக் |
| சுஉ | கக | போதர் | போதர |
| சுஅ | கசு | மூவக்ரும் | மூவருககும் |
| ,, | உஉ | மற்பமதியிர் | மற்பமதியீர் |
| ருரு | உசு | ணிறப்பதனுக் | ணிறப்பதனுக் |
| ருஎ | கசு | சேதிக்குப் | சேதிக்கும் |
| ,, | உசு | பன்தூஉம் | ண்பதூஉம் |
| ருசு | உக | பஸ்மஜபாலோப | பஸ்மஜாபாலோப |
| ,, | உரு | ப்ரசாந்த்ரும் | ப்ரசாந்தரும் |
| சும | உஅ | ஜனகப் | ஜனகம் |
| சுசு | எ | பரம்பெருளாக | பரம்பொருளாக |
| எக | உ, அ, கஉ | பரப்ரஹம | பரம்ப்ரஹ்ம |
| எரு | உஉ | இரண்டாது | இரண்டாவது |
| ,, | ருசு | ரப்பிரமங்களாக | பரப்பிரமங்களாக |
| எசு | க | என்ற | என்று |
| எரு | க | கண்டமாத் | கண்டமாத்திரத் |
| எசு | கக | சிவலக்ஷ | சிவவக்ஷ |
| எஎ | உசு | உலகி | உலக |
| அ0 | ருக | தஙதையே | தந்தையே |
| அக | ருஉ | என்றும் | என்னும் |
| ,, | ருசு | ளுடையததலால் | ளுடையதாதலால் |

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாசக விஷய சூசனம்.

## சிவபுராணம்.

நமச்சிவாய வாஅழ்க. "நமச்சிவாய" இது பஞ்சாக்ஷரமென்று சொல்லப்படும். இந்தப்பஞ்சாக்ஷரம் வேதத்தின் மத்தியிலுள்ளது. இதனை விரிக்கின் "த்ரயீ" என்று ஸ்மிருதியாதிகளில் படிக்கப்பட்டவேதமானது ருக், யஜுர், சாமம் எனமூன்று விதமாகப் பிரிந்து விளங்கும். இம்மூன்றனுள் நடுவேயுள்ளது யஜுர்வேதம். இந்தயஜுர்வேதம் நூற்றொரு சாகைகளாக விரிந்துகிடக்கின்றது. இவற்றுள் நடுச்சாகை ஐம்பத்தோராவது சாகையாகிய ஸ்ரீபோதாயனசாகை. இந்தச்சாகை ஏழுகாண்டங்களாக அமைந்துள்ளது. இதன்மத்தியிலுள்ள காண்டமோநாலாவது காண்டமாகிய சதருத்ரீயம். இதன் நடுவிலுள்ளதுஐந்தாவது பிரஸ்னம். அதில் "நமஃஸோமாயசருத்ராயச" என்னும் அனுவாகத்தின் இருதயத்தில், "நமஃசிவாயச" என்னும் பஞ்சாக்ஷரம் பிரகாசித் தொளிர்கின்றது. இதனாலே இச்சிவமந்திரம் சகலவேத ஜீவரத்னமாயும், பரமபாவநகரமாயும், அதிக ரகசியமாயும், சர்வவேதாந்த சாரமாயுமுள்ளதோர் மந்திரமாகும். இதுவே நான்குவேதங்களின் மெய்ப்பொருளெனவும், சந்தியாகாலங்களிலோது மந்திரமெனவும், வேதசாரமாகிய சிவஞானப்பாலையுண்டருளிய ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானார் தாமருளிய திராவிடசூக்தியில் "வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது—நாதனாம நமச்சிவாயவே" எனவும், "செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்—கந்தியுண் மந்திர மஞ்செழுத் துமே" எனவும் விளக்கியருளினார். இதன்மகிமை அளவிறந்ததாதலின் வந்துழி வந்துழி விரிக்கப்படும். (க)

நாதன்றாள் வாழ்க. "நாதன்"=ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் வாச்சியப்பொருளாயுள்ள சம்புவாகிய பரமேசுவரன். இந்தப் பரமேசுவரன் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் நடுவிலுள்ள சிம் என்ற சிவபீஜத்தை முகத்திலேற்று வகரமாகிய அமிருதவாருணபீஜத்தைத் தம்மைப்பின்பற்றப்பெற்று அகிலவேதரகசியமாயும் அவற்றிற்கு ஜீவரத்நமாயும் நின்று சிவஃ என்னும்நாமத்தால்பிரகாசிக்கின்றான். ருக்வேதம்இருபத்தொரு சாகைகளிலும், யஜுர்வேதம் நூற்றொரு சாகைகளிலும், சாமவே

தம்ஆயிரஞ்சாகைகளிலும், அதர்வணவேதம் ஒன்பது சாகைகளிலும் இந்தச் சிவ என்ற சொல்லானது பேரணியாய் நின்று துரீயஸ்தானத்தை விளக்குதலாலும், பரப்பிரமத்துக்கு இடுகுறிப்பெயராய் நிற்றலாலும், மாண்டூக்கியோபநிடதம், நரசிம்மதாபனியோபநிடதம், அதர்வசிரோபநிடதம்முதலிய எல்லா உபநிடதங்களும் இதனை யளவிலாது புகழ்கின்றன. நூல்களெல்லாவற்றிலும் வேதஞ்சிறந்தது. அதனுள் மகாமந்திரசமுதாயமாகிய சதருத்ரீயம் மிகச்சிறந்தது. அதனிடத்துள் ஸ்ரீபஞ்சாக்ஷரியும் அதனில் சிவ என்னும் இரண்டட்சரமே மிகச்சிறந்தது. ஆகவே வேதபுருஷனுக்கு உருத்திரைகாதசனி கண்ணும், பஞ்சாக்ஷரம் கண்மணியும், சிவசப்தம் கட்பார்வையுமாயிருக்கின்றன. தேகத்தின் மத்தியிலுள்ள இருதயத்தில் ஆன்மா அணுரூபமாயிருந்து தேகமுழுமையும் இயக்குமாறுபோல் வேதத்தின் நடுவில் சிவசப்தம் இருந்துகொண்டு வேதமுழுமையுஞ் சிவமணங்கந்திக்கச்செய்கின்றது. இக்காரணம் பற்றியே வேதவித்துக்கள யாவரும் பதினென்குவித்தைகளின் சாரமாயுள்ளதும், பாவங்களையெல்லாம் நசிக்கச்செய்வதும் பரப்பிரமவாசகமாயிருப்பதும் சிவநாமமேயென்று துணிந்தமதிகொண்டு கூறியுள்ளார்கள். தாயுமான சுவாமிகளும் "நூற்றெட்டாதி வேதமெடுத்தெடுத்துரைத்த விருத்திக்கேற்க-அமையுமிலக் கணவடிவா யதுவும்போதா தப்பாலுக் கப்பாலா யருட்கண் ஞானி." என்று கூறியருளினார். சண்டாளனாயிருப்பினும் சிவ என்னுஞ் சப்தத்தையுச்சரிப்பானாயின் அவனோடுசம்பாஷணைசெய்— அவனோடு வாசஞ்செய்— அவனோடு கலந்துபோசனஞ்செய்— எனப்பொருள்தரும் "அபிவாயஸ் சண்டாள: சிவஇதிவாசம் வதேத்—தேநஸஹஸம் வதேத்—தேநஸஹஸம் வஸேத்—தேந ஸஹபுஞ்ஜீத்-" என்று முண்டகோபநிடதங்கூறிற்று. இந்தச்சுருதிப்பொருளையே திராவிட மகாபாஷ்யச் செல்வராகிய சிவஞானசுவாமிகள் "சிவனெனு மொழியைக் கொடியசண்டாளன் செப்பிடினவனுடனுறைக—அவனொடு கலந்துபேசுக வவனோடருகிருந்துண்ணுக வென்னும் உவமையிற் சுருதிப்பொருள்-" என்று உரைத்தருளினார்கள். ஸ்ரீவாகீசப்பெருந்தகையாரும் "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்-கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே." என்று அன்பாற்கரைந்து கனிந்துருகி யருளிச்செய்தார். இப்படிப்பட்ட அரிய பெரிய மகிமை வாய்ந்த சிவசப்தம் பாசமோசனத்துக்குப் பரமஹேதுவாயும், ஆரணத்துக்கு அன்னியமிலாச் சேமநிதியாயுமிருக்க இதைக்கேட்கக் காது செவிடுபட்டும், சொல்லவாயூமையாயும், உச்சரிப்பவரைக்காணக்கண் குருடுபெற்றும்

வாழுந்தீயோருடைய செய்கை கொடிது கொடிது, அறக்கொடிது. இச்சிவநாமத்தின் சிறப்பினை "சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்-சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்-சிவசிவவென்றிடத் தேவருமாவர்-சிவசிவ வென்றிடச் சிவகதி தானே." எனத்திருமூலரும் திருவாய்மலர்ந்தருளினர். (உ)

இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் = அடியார்களது உள்ளக்கமலத்தினின்றும் இமைப்பொழுதும் பிரியாது நிற்பவன் சம்புவாகிய சிவபெருமான். இச்சம்புவையே இருதயகமலவாசியென்று வேதாந்தங்களெல்லாமெடுத்திசைக்கின்றன. உபநிடதச் சிரசுக்களுக்கெல்லாம் சிகையாகிய அதர்வசிகை "ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வர: சம்பு ராகாச மத்யே த்யேய:=(சர்வஞ்ஞாதி கல்யாணகுணங்களாகிய) சர்வைசுவர்ய சம்பந்நரும், சர்வேசுவரரும், சம்புவாயுமுள்ளவரே இருதயாகாசமத்தியிலே தியானிக்கற்பாலர்" என்று பிரகாசப்படுத்தியது. இங்கே சம்புவென்றது சிவபெருமானுக்கேயுரிய அசாதாரணநாமம். சம்பு பத்தினியாகிய அம்மையைச் சாம்பவியென்றும், சம்புபக்தர்களாகிய சிவனடியார்களைச் சாம்பவர்களென்றும் அருணூல்கள் கூறுவதே போதுமான சான்றும். "சம்புரீச: பசுபதி சிவஸ்ஸூலி மஹேஸ்வர:" என்று அமரசிம்ஹமும் பசுபதிக்கே அந்நாமத்தைக் கூறிப்போந்தது. "சம்" எனப்படுஞ் சுகம் எவனிடமிருந்துண்டாமோ அவனே சம்புவாதலால் மெய்யடியார்களுக்கு நித்தியானுக்கிரகஞ்செய்து குன்றாச்சுகங் கொடுக்குஞ் சுதந்திரம் சிவத்தினிடத்தே இயல்பாயமைந்துள்ளதென்பது சமஸ்த சமயங்களையும். வேரறக்களைந்து தெளிபொருள் விளக்கும் வேதாந்தங்களின் முடிந்தகருத்தாம். ஆன்மாவினுடைய உள்ளமென்னும் இருதயமானது செந்தாமரை முகுளம்போன்ற அதோமுக வடிவானதும், ஐந்து துளைகளுடையதும், சரீரமத்தியத்துக்குச் சிறிது இடதுபுறத்தில் நிலைபெற்றுள்ளதும், இருபத்தாறு தறட்டெலும்புகளுக்குள் ஈசனாற் சேமித்துவைக்கப்பட்டதும் ஆகிய செந்நிறம்பொருந்திய மாமிசகண்டமாம். இதனுட்புறத்திலுள்ள வாகாயம் பூதாகாயம்போற் சடமாகாது சித்தேயாதலின் சிற்சத்திருபமாகிய சிதாகாசமாம். இந்தச் சிதாகாசமாகிய சிதம்பரத்தில் மின்னற்கொடிபோன்ற ஈசானராம் துரியமூர்த்தி சதா எழுந்தருளியிருப்பர். "ஸதா ஜநா நாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:=என்றும் ஜனங்களுடைய இருதயத்தில் எழுந்தருளியிருப்பவர்" என்னும்சுவேதாசு

வதரோப நிடத மந்திரத்தானுந் தெளிக. இந்த ஈசானர் சர்வகாரண பிரமசொரூபராதலானும் இவருக்குமேலொரு காரணரின்மையானும் அதர்வசிகோபநிடதமானது "**த்யாயீதே சாநம் ப்ரத்யாயிதவ்யம்**=ஈசானரைத்தியானிக்க விசேஷமாகத்தியானிக்க" என்று இரட்டித்துக்கூறி வற்புறுத்தியது. இந்த இருதயா காசமாகிய சிதம்பரத்தில் சிவபெருமானைத் தியானிப்பதையே தகரவித்தை அல்லது தகரோபாசனை என்று உபநிடதங்கள் கூறும். இந்தத்தகரவித்தை தைத்திரீயம், சாந்தோக்கியம், அதர்வசிகை, பிருகதாரண்ணியம்முதலிய பல வுபநிடதங்களில் விரிவாகப் புகழப்பட்டிருக்கினும் அவற்றுள்பல பரமேசுவரனுடைய சொரூபத்தைப் பொதுத்தன்மையானும் மற்றுஞ்சில சிறப்பான இடுகுறிகளானும் நிரூபித்தன. ஆயின் கைவல்லியோபநிடதமோ அவற்றையெல்லாம் அநுவதித்துப் பொதுவாகவுஞ் சிறப்பாகவுங் கூறிய சொரூப தடஸ்தலட்சணங்கள் யாவையும் உமாகாந்தனிடத்தமைத்து தகரமென்னும் இருதயகமலத்தின்கண் தியானிக்கப்படும்பொருள் காளகண்டம், திரிநேத்திரம், சதுர்ப்புஜம் முதலிய சிறப்பிலக்கணங்களமைந்த பரமசிவனேயென "**ஹ்ருத்புண்டரீகம் விரஜம் விசுத்தம் .....உமாஸஹாயம் பரமேஸ்வரம்ப்ரபும்-த்ரிலோசனம்நீலகண்டம் ப்ரசாந்தம்**" என்றற்றொடக்கத்தனவான வசனங்களால் உபாசகர்களுக்கு உண்மை நிறுவியது. சாக்ஷாத் பரமசிவம் சர்வவடிவங்களையுங்கடந்துநின்ற நிஷ்களாதீத சிற்கனசொரூபமாயினும் ஆன்மாக்களுடைய தியானயோக சமாதியின்பொருட்டு தனது தயாமூலத்தை வெளிப்படுத்தி இவ்வித துரியபெரிய வடிவமாகச் சகளீகரித்து நிற்குமென்பதுசர்வவேதாந்தங்களின் முடிந்ததுணிபாம். இந்தத் தகரோபாசனையையே தெய்வத்தன்மைத் திருவள்ளுவநாயனாரும் "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்—நிலமிசை நீடுவாழ்வார்" என்று திருவாய்மலர்ந்தருளினார். (௩)

**ஆகமமாகி**, ஆகமம்=ஆப்தவாக்கியம். ஆ=ஞானம், க=மோட்சம், ம=மலநாசம். எனவே ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ்செய்து ஞானத்தையுதிப்பித்து மோட்சத்தைத் தருதல் எனப்பொருள்படும். அன்றியும் ஆ=பாசம், க=பசு. ம=பதி எனப்பொருள்பட்டுத் தன்னைப்பழகினோர்க்குத் திரிபதார்த்தலட்சணத்தையுணர்த்துவது எனவும் பொருள் கொள்ளப்படும். இவ்வாகமம் இரண்டுவிதமாயிருக்கும். வேதத்தையநுசரித்ததொன்று. அநுசரியாததொன்று. வேதத்தை யநுசரித்தது அங்கீகாரமும் அநுசரியாதது வேதத்தில் அநதி

காரிகளாயிருக்கின்ற அப்பிராமணர்களுக்கு ஜீவனோபாயமாகவும் அசுரவ்யாமோக னார்த்தமாகவுஞ் சொல்லப்பட்டதாதலால் அப்பிரமாணமாகும். வேதத்தை யநுசரித்த ஆகமங்கள் காமிகமுதல் வாதுளாந்தமான இருபத்தெட்டுச் சிவாகமங்கள். வேதத்தை யநுசரியாத ஆகமங்கள் வாமம், சோமம், லாகுளம், பைரவம் முதலானவைகள். ஸ்மிருதி, புராணேதி காசங்களிற் கூறப்படும் ஆகமநிந்தை பிந்தியவைகளுக்கேயன்றிசிவபிரணீதமாயுள்ள சிவாகமங்களுக்கன்று. இந்த சசிவாகமங்கள் ஒருக்காலும் ஒன்றானும் பாதிக்கப்படமாட்டா. ஆதலின் சர்வோத்தமமான பதிநூல்களென்றே யுணரற்பாற்று. யஜுர் வேதத்தைச் சார்ந்த அமிர்தநாதோப நிடதமும் "ஆகமங்களுக்கு விரோதமில்லாமல் யூகிப்பதே தர்க்கமாம்" என்னும்பொருள்பட "ஆகமஸ்யா விரோதேந ஊஹநம்தர்க்க உச்யதே" என்று சிவாகமங்களை யெடுத்துப் பூஷித்தது. இன்னணம் தெளிவாகப் பூஷித்திருக்கவும் ஆகமம் என்னுஞ்சொல்லுக்கு வேதம் என்னும் பொருந்தாப்பொருள்கொண்டு இடர்ப்பட்டனர் சிலர். இது பண்டையத் தீவினைப்பயனே. வேதவழியினின்றுபிரவர்த்தித்த சிவஞானிகள் தமதாசையடங்காமல் சிவாகமத் துறையிற்படிந்து இன்புற்றார்களென உண்மைநூல்கள் பலவெழுந்துமுழங்குகின்றன. நான்குமறைகளும் ஆறங்கங்களும், மற்றுமுள்ள கலைஞானங்களும் கற்றுணர்ந்த சனகாதி மகாரிஷிகள் சிவாகம ஞானத்தாலன்றோ மோகத்தைத் தவிர்த்து மனோலயமடைந்து சின்மாத்திரமயமானார்கள். ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் "வயந்துசிவாகமயோர்பேதம்நபஸ்யாமः வேதோபி சிவாகம:=யாம்வேதசிவாகமங்கட்குப்பேதங்காண்கின்றிலம். வேதமே சிவாகமம்" என்று கூறியருளினார். இக்கருத்தைப் பின்பற்றியே "வேதவாகமச் சென்னியில் விளைபொருளபேதம்" என்று ஸ்ரீபரஞ்சோதி முனிவரும், "வேதாகமத் துணிபிரண்டில்லையொன்றென்ன வேவந்தகுருவே" என்று ஸ்ரீதாயுமானசுவாமிகளும் உரைத்தருளினார்கள். அன்றியும் "வேதாந்தார்த்த மிதஜ்ஞானம் வேதசாரமிதந்தந்த்ரம்-சித்தாந்தம் வேத ஸாரயவாத்=வேதத்தின்பொருள் இந்தஞானம், வேதசாரமாயுள்ளது இந்தச்சித்தாந்தம், சித்தாந்தம்வேதசாரமா யிருத்தலினால்" என்றுசிவாகமமுஞ் செப்பியது. வேதத்தின் ஞானகாண்டப் பொருளை விளக்கவெழுந்த சிவஞான கோசங்களிவைகளேயாதலின் இவற்றுள் புருடார்த்தங்கள் நான்கும் விரிந்துகிடக்கின்றன. இவைகளே வீடுபேற்றிற்கு முக்கியகருவிக ளென்பது மேதாவியர் துணிபு.

(ச)

அணைப்பான்=விரைவில் எழுந்தருளிவந்து அனுக்கிரகிப்பான். வேதம் பொதுவும் சிவாகமஞ் சிறப்பும், வேதம் பசுவும் சிவாகமம் அதன்பாலும், வேதம்கனியும் சிவாகமம் அதன்சாறும், வேதம் உடலும் சிவாகமம் அதன் உயிரும், வேதம் ஒருநதிக்குச் செல்லும் வழியும் சிவாகமம் அந்நதியிற்சென்று படியுந் துறையுமாயிருத்தலால், வேதவழியில் நின்று ஆகமஞானத்தைக் கைக்கொண்டவர்களுக்குப் பரமேசுவரன் விரைவில் பேரருள் புரிவானென்பது இதனுல் தெரிக்கலுற்றது. வேதம் பொருள்பலபடத்தோன்றும் சூத்திரமும், சிவாகமம் அதனை யவ்வாறுக்கவொட்டாது தெளித்துரைக்கும் பாஷ்யமுமாயிருத்தலானும், வேதத்தினது ஞானபாகத்தில் சித்தாந்தமுடிபு அற்பமும், சிவாகமத்தின் ஞானபாகத்தில் சித்தாந்தமுடிபு அதிகமுமாய் விளங்குதலானும், சிவாகம ஞானமே சிவப்பிரசாதமடைவதற்கு யாவருக்கும் இன்றியமையாதுவேண்டப்படும். சிவாகமம் வேண்டாமல் எத்தனை கோடிகாலம் வேதம்படித்தாலும் மயக்கந்தீரா தென்பது பிரமநிஷ்டாபரர் நிர்ணயம். ஆகவே ஸ்ரீதாயுமான சுவாமிகள் "ஆரணமார்க்கத் தாகமவாசி யற்புத மாய்நடந்தருளும்" எனவும், ஸ்ரீஉமாபதி சிவாசாரியர் "ஆதிமறையோதியதன் பயனென்று மறியா வேதியர்சொல் மெய்யென்று மேவாதே" எனவும் வற்புறுத்தியருளினுர்கள். (௫)

ஏகன்=சேதனசேதனப் பிரபஞ்சங்களிரண்டினிலும் ஆகாயத்தைப்போல பரிபூரண வியாபகமாயுள்ள பதிப்பொருளொருவனே "ஏகஸ்ததா ஸர்வ பூதாந்த ராத்மா=சர்வசிற்சடப் பிரபஞ்சங்களுக்கும் அந்தர் யாமியாகியஏகன்" என்று கடவல்லியுபநிடதமும், "ஏகோ ருத்ரோ ந த்விதீய:=ஒருவனே உருத்திரன் இரண்டாவதாக ஒருவனிலன்" என்று அதர்வசிரோபநிடதமும், "தேவநாம் பதிரேக:=தேவர்களுக்குப்பதியாயுள்ள ஏகன்" என்று முண்டகோபநிடதமும், "ஏகமேவாத்விதீயம்=இரண்டாவதற்றஏகம்" என்றுசாந்தோக்கியோபநிடதமும், "தமாதி மத்யாந்த விஹீனமேகம்=ஆதியந்தமில்லாதவனும் ஏகனும்" என்று கைவல்லியோபநிடதமும், "யயேக ஸ்ஸ யேகோருத்ர:=எவன் ஏகன் அவன்ஏகனுஉருத்திரன்" என்று அதர்வசிரோபநிடதமும், "ஏகோ தேவஸ் ஸர்வ பூதேஷு கூட:=ஒரே தேவன் எல்லாப் பூதங்களிலும் மறைந்தவன்" என்றுபிரமோபநிடதமும், "ப்ரஹ்மைகம் த்வம்=ஏகமாகிய பிரமம்நீ" என்று அதர்வசிரோபநிடதமும், "க்ஷரம் ப்ரதானமம்ருதாக்ஷரம்ஹர:-க்ஷரா

த் மாநா பீசதே தேவயேக:=க்ஷரம் பிரதானம்அக்ஷரம்அமிருதம் (ஆன்மா), க்ஷராத்மாக்களை ஏகதேவனாகிய ஹரன்நடத்துகின்றான்" என்று சுவேதாசுவதரோபநிடதமுஞ்சாற்றுகின்றன. இத்திறச்சுருதிப்பிரமாணவசனங்களால்சித்தசித்துப் பிரபஞ்சங்கள் யாவும்கலப்பினாலே தானேயாயிருப்பவன் சிவபிரானென்பதூஉம் அவனிடத்தே ஏகத்துவமுளதென்பதூஉம் பெறப்பட்டது. ஏகனென்னும்பெயர்சிவநாமங்களில் ஒன்றாயிருத்தல்பற்றி அதர்வசிரோபநிடதமானது"அந் அஸ்மா துச்யதே யேக:"என்றற்றொடக்கத்து மந்திரத்தில் "இனியெதனால் ஏகனெனப்படுவான், எல்லாவுலகங்களையுந்தன்னுள் ஒடுக்கிக்கொள்ளுகின்றான், எப்பொழுதுஞ்சிருஷ்டிக்கின்றான், சங்கரிக்கின்றான், காக்கின்றான் அதனாலேயே யேகனெனப்படுகின்றான்"என்று கூறிப்போந்தது. சப்தம் அர்த்தம்(சொல், பொருள்) என்னும் இருகூற்றுப் பிரபஞ்சங்களும் சிவனையே முழுமுதலாகக் கொண்டு நிலைபெறுகின்றமையாலும் அவனதுசொரூபத்தைக்கொண்டேபிரகாசிக்கின்றமையாலும் சிவமயம் என்னுஞ்சொல் வேதவேதாந்தங்களிலே கேட்கப்படுகின்றது. சனற்குமார சம்ஹிதையானது "ஸர்வம் சிவமயம் ப்ரோக்தம் ஜகதேதச் சராசரம்-ஏகயேவமஹாதேவ:ஏகயேவேதிசஸ்ருதே:=சராசரமெனப்படும் இவ்வுலகமெல்லாம்சிவமயமெனச்சொல்லப்பட்டது"மகாதேவன்""ஒருவனன்றோ"என்றசுருதிகளால்ஒருவனேயெனவும்உபதேசிக்கப்பட்டான்"என்று கூறிற்று.

அநேகன்=எண்ணிறந்தவருட்கோலங்களுடையவன்"ஏகமவ்யக்தமநந்தரூபம்=வெளிப் படாதவனும், அனந்த ரூபனுமாயுள்ளவன் ஏகன்"என்று மகாநாராயணோபநிடதமும்,"அசிந்த்ய மவ்யக்தமநந்தரூபஞ்சிவம்=மனோவிருத்திக்கெட்டப்படாதவனும், அதிசூக்குமனும், அளவிறந்தரூபனும, சிவனும்" என்று கைவல்லியோபநிடதமும்,"ஏகம்ரூபம் பஹுதாயஃகரோதி=அவன் ஒருரூபத்தையே(பக்தர்கள் பாவனைகளுக்கேற்றவாறு) பலரூபமாகச்செய்வான்" என்று பிரமோபநிடதமும், "விஸ்வஸ்ய ஸ்ருஷ்டா ரமநேகரூபம்=விஸ்வத்தைச் சிருட்டித்தவன், அநேக ரூபங்கொள்பவன்" என்று மந்திரோபநிடதமுங் கூறுகின்றன. இந்த வசனங்களால் ஏகனென்று சொல்லப்பட்ட சிவபெருமானே பஞ்சகிருத்தியங்கள் செய்து பாலிக்கும் பொருட்டும் அன்பர்கள் உபாசித்து உய்யும்பொருட்டும்தனது சத்தி சாமர்த்தியத்தால் அளவிறந்த அருட்கோலங்களையெடுத்துக் கொள்வான் என்பது பெறப்பட்டது. வேதங்களிலுள்ள சிவநாமங்கள் யாவும் தன்னிடத்து நிரம்பப்பெற்றமையால் வேதசாரமென்

னுஞ் சிவசகஸ்ரநாமத்திலும் "ஓம் அநந்தாயநம:" என்னும் நாமம் சிவபிரானுக்குச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வுண்மையையே திராவிட உபநிடதமென்று துதிக்கப்பெற்ற சிவஞானசித்தியும் "நிறுத்திடு நினைந்தமேனி நின்மல னருளினாலே" என்றும் "அருவமும்ரூபாரூப மானது மன்றிநின்ற, வுருவமுமூன்றுஞ் சொன்ன வொருவனுக்குள்ளதாமே" என்றும் எடுத்திசைத்தது. (எ)

இறைவன்=ஜகஜ்ஜந்மாதி காரணனும் பிரபு. சர்வஞ்ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம், சர்வாநுக்கிரகம் ஆகிய இம்மூன்றிலக்கணங்களையும் ஒருவராற் றருதலின்றித் தனக்கியல்பாக வுடையவனெவனோ அவனே சர்வவேதாந்தங்களிலும் இறைவனென்றுகூறப் படுவன். "எல்லாவற்றிற்கும் பிரபுஈசானன்—எல்லாவாத்மாக்களுக்கும் புகலிடமும் நண்பனும் (அவனே)" என்னும் பொருள்விளங்க "ஸர்வஸ்ய பிரபுமீசானம்—ஸர்வஸ்யசரணம் ஸுஹ்ருத்" என்று சுவேதாசுவதரோபநிடதஞ் செப்புகின்றது. ஈண்டு ஈசானன் என்னும் நாமம் சிவபெருமானுக்கே யுரிய சிறப்புப்பெயராம். "ஈஸ்வரஸ் ஸர்வ ஈசாந: சங்கரச் சந்திர சேகர:" என்னும் அமரசிம்ஹத்தாலு முணர்க." ஆதலாற்றான் "ஸப்தாதேவப்ரமித:=சத்தத்தாலன்றோ அளவிடப்பட்டவன்" என்றசூத்திரத்தில் ஸ்ரீவேதவியாசமுனிவர் ஈசானன் என்றசொல்லை பிரமத்தின் பெயராக எடுத்து வழங்கினார். ஈசானன்= உபாதியில்லாத பரமைசுவரிய விசிட்ட குண முடையவன் என்பது பொருள். அன்றியும் அந்த சுவேதாசுவதரோப நிடதமே "தமீஸ்வராணாம் பரமம்மஹேஸ்வரம்=ஈஸ்வரர்களுக்கெல்லாம்மேலான மகேசுவரன்" எனவும், "தந்தைவதாநாம்பரமஞ்சதைவதம்= தேவதைகளுக்கெல்லாம் சிறந்ததேவன்" எனவும், "பதிம் பதீநாம் பரமம்=பதிகளுக்கெல்லாம் பரமபதி" எனவும், "பரஸ்தாத் விதாமதேவம் புவனேச மீட்யம்=புகழத்தக்க புவனநாயகனும் அப்பாலுள்ள தேவனும் என அறிவோம்" எனவும், 'ஸகாரணம் காரணாதிபாதிப:=அவனே காரணன்—காரணாதிபதிகளுக்கு(பிரமவிஷ்ணுருத்ரேந்திராதிகளுக்கு)அதிபதி" எனவுமென்றுங்குன்றாச் சுதந்தரமுடைய சர்வாதிபதித்துவத்தையும், இறைமையையும் சிவபெருமா னொருவனுக்கேகூறி அவனது பரமகாரண பரமேசுவர இணையிற்பெருமையினைத் தெற்றென விளக்கியது. தைத்திரீயோபநிடதமும் "ஈசஸ் ஸர்வஸ்யஜகத: பிரபு:=ஈசன் எல்லாவுலகங்களுக்கும் பிரபு" என்று அதேபொருளை விளக்கியது. (அ)

**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்**=பிரவாகனாதியைப்போல் பின்பற்றிவாராநின்ற பிரவித்தளையைச் சேதிப்பவன் ஜடாதர மூர்த்தியாகிய சிவபெருமான். கிருத்தியகர்த்தாக்களாகிய பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் புருஷார்த்தங்கள் நான்கனுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையே தரும் ஆற்றலுடையவர்களன்றி வீட்டையளிக்குஞ் சுதந்தரமுடையவரல்லர். சிவபெருமானொருவனே அம்மூன்றையுந்தந்து சர்வபாப நிவர்த்திசெய்வதோடு சாசுவித சிவாநந்தாபி வியக்தியையும் அளிக்கும் பேராற்றல் இயல்பில் வகித்தவன். "யதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தியாநவ:—ததாசிவ மவிஜ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி:= என்று தோலைப்போல் ஆகாயத்தை மனிதர்போர்த்துக்கொள்வார், அன்றே சிவனையறியாமல் துயரத்துக்கு முடிவு உண்டாகும்" என்று சுவேதாசுவதரோப நிடதஞ் சாற்றுகின்றது. ஆகாயத்தைத் தோல்போல் போர்த்துக் கொள்பவருமில்லை. நின்மலனாகிய சிவனைவழிபடாது முத்தியடைபவருமில்லை யென்பது ஒருதலை. இதனால் சிவபெருமானே முத்திநாதனெனவும் ஏனைய பிரமவிஷ்ணு உருத்திரர் முதலிய தேவர்கள் காலந்தோறும் மாறுபடுஞ் சுதந்தர ஹீனர்களாதலால் அத்தன்மையுடையா ரல்லரெனவும் சுருதிமுடியானது உபமானஸாதிருசத்தால் நன்குவிளக்கியது. இக்கருத்தையே (மானுடன் விசும்பைத் தோல்போல் சுருட்டுதல் வல்லோனாயின்—ஈனமில் சிவனைக்காணா திடும்பைதீர் வீடுமெய்தும், என்று திராவிடபாஷ்ய கர்த்தாவாகிய சிவஞானசுவாமிகள் காஞ்சி புராணத்தில் விளக்கியுள்ளார். இதனாலன்றோ யஜுர்வேதத்தைச்சார்ந்த கர்ப்போபநிடதமும் "யதியோந்யாம் ப்ரமுச்யேயம் ப்ரபத்யே பரமேஸ்வரம்-பர்க்கம் பசுபதிம் ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்=யோனியைவிட்டு வெளிவருவேனாயின் பரமேசுவரனும், பர்க்கனும், பசுபதியும், ருத்ரனும், ஜகத்குருவுமான மகாதேவனைச் சரணமடைவேன்" என்று பசுமரத்தாணியறைந்தாற்போல் சிவபெருமானது மகிமையினை நாட்டியது. (௯)

**புறத்தார்க்குச்சேயோன்—கரங்குவிவாருள் மகிழுங்கோன்**=எப்படிப்பட்ட உயர்ந்ததேவர்களாயிருப்பினுந் தன்னை யுள்ளன்போடுவழிபடாதவர்களுக்குத் தூரனென்பதூஉம், யாவராயிருப்பினுந் தன்னை யிடையறாக் கனிந்துருகும் மெய்யன்புகொண்டு வழிபடுவார்க்கு எளியனென்பதூஉம் பெறப்பட்டது. இவ்வுண்மையை (சார்ந்தாரைக்காத்தல் தலைவர்கடன்) என்று சிவஞான போதச்செய்யுளும், (சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்-நலமிலன்) என்று ஆளுடை

டபின்ளையார் அருள்வாக்கும், (சார்ந்தார்க்கு இன்னமுதமாயினனே) என்று ஸ்ரீவாகீசப்பெருந்தகையார் தேவாரமும், (பிழைக்கின்றார் பக்கம் பேணிநின்றானே) என்று திருமந்திரதிருமுறையும் விளக்கின. கருணையே வடிவமாகக்கொண்ட மாதோர்பாகனான மகாதேவன் ஒருபெண்ணினுடைய முலையிலிருந்தும், குதிரைகட்டுதற்குக் கடாவிய ஆப்பிலிருந்தும், ஆட்டுப்பிழுக்கையிலிருந்தும் இன்னும்பலநிகிருஷ்டஸ்தானங் களிலிருந்தும் தம்மைமெய்யன்போடு வழிபட்ட அடியார்களது பூசையையேற்று அநுக்கிரகஞ் செய்தானெனின் அவனது பேரருளின்றிறத்தை வரையறுக்க யார்தரம். (ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்புங் - கேட்பான்புகி லளவில்லை கிளக்கவேண்டா) என்றார் ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானார். இறக்குமளவுங் கொடுமைபுரிந்து இறக்கும்பொழுது சிவநாமத்தை யுச்சரித்தவர்கள் அடைந்த மேம்பாடு புராணங்களில் ஏராளமாய் விரிந்து கிடக்கின்றது. அல்லாமலும் (அடியார்க் கெளியவன் சிற்றம்பலவன்) என்னும் ஸ்ரீநடராசப்பெருமானது திருவாக்கே சைவத்திருவாளரா யுள்ளார் யாவருக்கும் சிவபெருமான் றிருவடிக்கண் மேன்மேலும் பத்திமையை யுண்டுபண்ணச் சிறிதுந்தடையின்று. ஆதலாலன்றோ ஸ்ரீதாயுமானசுவாமிகள் (கண்ணாரேனுமுனைக் கைகுவியா ராயினந்த-மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே) என்று கட்டளையிட்டருளினார். (௧0)

**மாயப்பிறப்பறுக்கு மன்னன்**=மாயாமல சம்பந்தமாய்வாராநின்ற பிறவிப்பிணியை யகற்றும் மகேசுவரன் "மாயாந்துப்ரக்ருதிம் வித்யாந் மாயிநந்து மஹேஸ்வரம்=மாயையைப் பிரகிருதி (காரணம்) எனவும்-மகேசுவரனை மாயைக்கதிபதியெனவும் உணர்க" என்று சுவேதாசுவதரோபநிடதம் கூறுகின்றமையால் மாயையைத் தன்வசப்படுத்தியாளும் பேராற்றல் மகேசுவரனிடத்தில் இயல்பாயமைந்துளதென்பது பெறப்பட்டது. ஆதலின் அவனொருவனே மாயப்பிறவிக்குப் பயந்து தன்னையடைந்த ஆன்மாக்களின் பிறப்பையறுப்பானென்பது மறைமுடியின் முடிந்தகருத்தாம். தைத்திரீய நாராயணோபநிடதமும் "யப் பரஸ்ஸ மஹேஸ்வரஃ=எவர்மேலானவரோ அவர்மகேசுரர்" என்றுநாட்டியது. மகேசுவரனென்னும்பெயர் சிவனுக்கேயுரிய ரூடிநாமமாம். மகேசுவரருடைய சத்தியை மகேசுவரியெனவும், மகேசுவரருடையஅடியார்களை மாகேசுவரர்கள் எனவும் உலகங்கூறுவது பிரசித்தமாம். "சிவஸ்ஸாலீமஹேஸ்வர" என்று அமரசிம்ஹமும் அப்பெயரை சிவனுக்கே நிரூபித்தது. அல்லது

உம் ஈசுவரன், பரமேசுவரன், மகேசுவரன், சர்வேசுவரன் என்னும் நாமங்கள் ஏனையகடவுளருக்கு ஔபசாரிகமும் சிவபிராமெருவருக்கே சொந்தமுமாம் என சர்வவித்தைகளும் ஆகாயமார்க்கத் தடித்த அந்தரதுந்துபியாமெனை அறைகின்றன. என்னே! மகான், பரமன்முதலிய அற்புதவிசேஷணங்கள் சிவநாமங்களுக்கே இயல்பாயமைந்துள்ளனவெனின் "மகாவிஷ்ணு" என்னும் நாமம் ஸ்ரீமந்நாராயணனுக்குஞ் சொல்லப்பட்டுள்ளதே அதன்கருத்துயாதெனின் "கபிலஸ்து மஹாவிஷ்ணு:=கபிலன் மஹாவிஷ்ணு"என்று உபயவாதிகளாலும்வேறுபொருளுக்குப்பெயராகநிரூபிக்கப்பட்டமையால் அதுகூடாமை. ஆகவே மகான், பரமன் என்னும் நாமங்கள் சிவபெருமானுக்கேயுரிய போறாற்றல்வகித்தன. இஃதிங்ஙனமிருக்க சிவபெருமானேபிறவியை யொழிப்பான் என்பதற்கு "ஜ்ஞாத்வாசிவம் சாந்திமத்யந்தமேதி=சிவத்தையடைந்து அத்தியந்த துக்கநிவர்த்தியை யடைகின்றான்" என்றும், "ஈசந்தம் ஜ்ஞாத்வா மம்ருதா பவந்தி=ஈசனையறிந்து மீளவிப்பிறவிகொடாத நித்தியமான பிரமானந்தானுபவரூபமடைகிறான்" என்றும், "ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:=மகாதேவனையறிந்து சர்வபாசங்களினின்று விடுபடுகின்றான்" என்றும்சுவேதாசுவதரோபநிடதமும், "ஜ்ஞாத்வா தம் ம்ருத்யுமத்யேதி நாந்ய: பந்தாவி முக்தயே:=அவனை (உமாமகேசனை) யறிந்து மிருத்துவைத்தாண்டுவான்—வேறுவழிமோட்சத்துக்கு இல்லை" என்று கைவல்லியோபநிடதமுங் கூறிப்போந்தன. அன்றியும் "அபாமஸோமமம்ருதா அபூம=உமாதேவியுடன் கூடிய சோமசுந்தரனைக்கண்டோம் அமிர்தர்களென்னும் சிவமயர்களானோம்" என்று அதர்வசிரோபநிடதமுஞ்செப்புதலால் பிரமவித்யாநாதனாகிய துரீயருத்திரனை யறிந்தவர்களுக்குப் பிறவிக்கடல் விலகுதலும், பாசக்ஷயமுண்டாகுதலும் சர்வவேதாந்தப் பிரதிபந்நமாம். (கக)

சிவனவன்:=பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மூவருக்கும் மேலானபரமசிவன். இந்தப்பரமசிவனே சகுண நிர்க்குண பாவனைகளைக்கடந்த பிராம்மிய பாவனையாலுணரப்படும் உமாசமேதசிவன். இப்பரம்பொருளை வேதம் பலவிடங்களிலும்திரிமூர்த்தியுத்தீரணராயுள்ள நான்காவதான (சதுர்த்தம்) என்றுசாற்றுகின்றது. "ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்த மந்யந்தே=பிரபஞ்சமொடுங்குமிடம், சாந்தன், சிவன், இரண்டற்றவன், நான்காவது பொருள் என்று எண்ணுகிறார்கள்" என்றுநூற்றெட்டு உபநிடதங்களால் அடையப்படும் முத்திபுலகத்தை அதிதீவிரபரிபாகிக்கு எளிதி

லடைவிக்கும் பெருநிதியென முக்திகோப நிடதத்தில் புகழப்பெற்ற மாண்டூக்கியோபநிடதங்கூறுகின்றது. இதனையே "ஏகாத்ம ப்ரத்ய யஸாரம் ப்ரபஞ்சோப சமம் சிவம் சாந்தமத்வைதம் சதுர்த்த ம ந்யந்தே=ஏகாத்மஞானசாரம் பிரபஞ்ச மொடுங்குமிடம்" என்று நாரதபரிவிராஜகோபநிடதமும், "சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்த மந்யந்தே" என்று நரசிம்மதாபநியோபநிடதமும், "அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ராதீதம்" என்றுபஸ்மஜாபாலோப நிடதமும் வற்புறுத்தின. இதனால் வேதநாயகனுய் விளங்குபவர் நான்காவது பொருளாயுள்ள துரீய சிவன் என்பது தீர்மானிக்கப் பட்டது. ஈண்டு ஆரணமுடிகளிற் கூறிய சிவம் என்னுஞ்சொல் நேரேசிவபெருமானைக்குறிக்கவும் அந்தப் பதப்பிரயோகம் வருமிடந்தோறும் மங்களகரம் என்று மயங்கினர் சிலர். ஐயகோ! இதென்ன விபரீதவுணர்ச்சி. சிவன், கிருஷ்ணன் முதலியசொற்கள் பரமமங்களன், கரியன் என்னும் பொருளைத்தருவதாகக் கோசங்களிற்காணப்படினும் விசேடமாய்ப்பரமசிவனும் திருமாலும்பொருளென அதேகோசங்கள் வேறிடத்தெடுத்தோதுவது பிரசித்தமாதலால் அந்நியாயத்தைப்பற்றி விசேடப்பொருளினிடத்தே அவைகளை உபயோகித்தலே சிறப்பாம். அங்ஙனமில்வழி சிவன்தேவதை, கிருஷ்ணன் தேவதை என்பதாதி ஆன்றோர்வழக்கு அவலமாமன்றே—சிவம் என்னும் நாமம்சிவபெருமானுக்கே போந்தமை (சிவனெனுநாமந் தனக்கேயுடைய செம்மேனியம்மான்) என்னும் ஸ்ரீவாகீசமூர்த்திகள் திவிராவிட சூக்தியால் கண்டு தெளிக. (கஉ)

என்சிந்தையுணின்றவதனால்=என்மனத்தின்கண்ணிலையாக வீற்றிருத்தலினால். சாக்ஷாத்பரமேசுவரன் சர்வவியாபகமுடையவனாயிருப்பினும் மெய்யடியார்களது உள்ளக்கமலத்தில் தயிரின் நெய்போல் விளங்கியிருப்பன். ஒரு அரசன் ஓரில்லத்துக்கெழுந்தருளின் அவ்வில்லத்தைப் பலவாறு சுத்திசெய்து பலவிதங்களாலலங்கரிப்பது உலக வழக்கமன்றோ. சாதாரணமான மன்னனுக்கே அத்துணைச்சிறப் பிருக்குமாயின் மன்னர்மன்னராகிய சிவபிரான் இருதயமாகிய குகையில் நிலையாக வெழுந்தருளி யிருக்கவேண்டுமானால் அவ்விருதயம் எவ்வாறு நின்மலத்துவம் அடைந்திருக்கவேண்டுமென்பது சொல்லாமே யமையுமன்றோ. புரைதீர்ந்த சுத்தமாயிருக்க வேண்டுமென்னுங் கருத்துபற்றியே கைவல்லியோப நிடதமானது "ஹ்ருத் புண்டரீகம் விரஜம் விசுத்தம் விசிந்த்ய மத்யே=இருதயகமலத்தைத் துகளற்றதாகவுஞ் சுத்தமாகவுங் கருதி அதன் நடு

வே" என்று கூறியது. இவ்வுபநிடத மந்திரப்பொருளுக்கிசைந்தே அகத்தே அமர்ந்தபக்தி யுடையவராய் காமாதிபகைகளாறையு மறுத்து ஐம்புலன்களையு மடக்கிச் சிவஞானத்தையே பற்றுக்கோடாகக் கொண்ட அடியார்களது உள்ளக்கமலத்தைவிட்டு நீங்காது நிற்பவன் சிவபிரானென "அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கிஞானப்-புகலுடையார் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்கோயில்." என்று உலகமெலா முய்யவந்த மறைச்சிறுவர் அருளினார். அன்றியும் உண்மையான வைராக்கியம்பெற்ற சித்தமுடையவர்களாயு மிருக்கவேண்டுமென்னுங் கருத்து தோன்ற "சங்கற்பசித்தரவருள்ளக் கருத்திலுறை சாக்ஷி நீ" என்றருளினார் ஸ்ரீதாயுமான சுவாமிகள். இதனால் எல்லாம்வல்ல இறைவனாகிய சிவபெருமானைத் தியானயோக சமாதியின்கண்வைத்து சாக்ஷாத்கரிக்கும் மெய்யன்பர்களது உள்ளம் எஞ்ஞான்றுந் தூய்மையும் வைராக்கியமும் பெற்றிருக்கவேண்டு மென்பது அத்தியாவசியமாம். (௧௫)

அவனருளாலே அவன்றாள் வணங்கி=அவனது திருவருளினாலே அவனுடைய திருவடிகளை வணங்கி. ஈண்டு திருவருளென்றது சிவபெருமானுடைய திருவருட்பிரசாதம்-அதாவது மனோவிருத்திகளடங்கியபோது உண்டாகுந் திவ்விய திருஷ்டி. கண்ணாடியைவிளக்க விளக்க முன்னே அப்பிரகாசமா யிருந்தவொளி பின்னர்ப்பிரகாசமாய் விளங்கியதுபோல் அநாதியே ஆன்மாவிலே பிரிவறப்பொருந்திநின்றசிவம் சிவபாவனை கைவர கைவர அதிகமாய்ப் பிரகாசித்துத்தோன்றும். அங்ஙனந்தோன்றவே ஆன்மாவைப்பற்றியுள்ள ஆணவமலந் தேய்ந்தேய்ந்து பற்றறக்கழியும். கழியவே சிவபூரணப்பிரகாச முண்டாகும். அந்தப்பிரகாசமாகிய அருட்கண்ணாலே சிவபெருமானுடைய தாளைவணங்குதல் வேண்டும். "உளக்கண்ணுக்கல்லா தூன்கண்ணா லோருமதோ." என்றார் திருவெண்காட்டடிகள். "அவனருளே கண்ணாகக் காண்பதல்லா-லிப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்தனிவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே." என்றார் திருத்தாண்டகவேந்தர். "சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க-வந்திடுமவ் வொளிபோல மருவியரனுளத்தேவரவரவந் திடுவன்பின் மலமானதறுமே" என்றார் அருணந்தி சிவாசாரியர். இதனால் சூரியகிரணத்தின் உதவியைக்கொண்டு சூரியனைப் பார்ப்பதுபோல் சிவனருளை வாயிலாகக்கொண்டு சிவனை யுணரவேண்டுமென்பது ஒருதலை. "தத்துவமசி" என்னும் மகாவாக்கியத்தின் இரகசியார்த்தமும் இதுவேயாம். தத்=பரமாத்மாவாகிய சிவம் அல்லது பிரமத்து

க்கும், துவம்=ஜீவாத்மாவாகிய உயிருக்கும், அசி=அருட்சத்தி வாயிலாக ஐக்கியம் என்பதுபொருள். இறைவர் வாக்குமனாதீத கோசரப் பொருளாதலின் அவரது உண்மைநிலையை அவரேயறிவிக்க நாம் அவரது திருவருளை முன்னிட்டு ஒருசிறிது அறியின் அறியவதல்லது நமதுபோதத்தால் அறியத் தக்கதல்ல வென்பது பேரருளாளர் தீர்வை. இவ்வுண்மையினையே "அணுவிலணுவாயும் பெரிதிற்பெரிதாயும் உள்ளசிவபெருமான் இந்தஜந்துவாகிய ஆன்மாவின் உள்ளக்குகையின் கண்ணே அமர்ந்துள்ளானெனவும்-கிரியையில்லாதவனும், மகிமைபொருந்தியவனுமான அவ்வீசனை ஆன்மாவானவன் அவனது அருட்பிரசாதத்தினாலேசோகங்கள்தொலையக் காண்கின்றான் எனவும் பொருள்பட "அணோரணீயாந் மஹதோமஹீயாந்—ஆத்மாகுஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ:—தமக்ரதும் பஸ்யதி பீதஸோகே—தாதுப்ரஸாதாந் மஹிமாநமீசம்" என்று சுவேதாசுவதரோபநிடதமும், மகோபநிடதமும், கைவல்லியோபநிடதமுங் கூறுகின்றன. (கஅ)

எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்=எம்பெருமானே எல்லாப்பிறவிகளிலும் பிறந்து மெலிந்தேன். இதனால் தமக்கொரு தலைவனைவேண்டப்படும் ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக்கீடாக நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதங்களெய்தி மேலுங்கீழும் புக்குழன்று பிறந்திறக்கும் உண்மை சாதிக்கப்பட்டது. நால்வகைத்தோற்றங்களாவன:—அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்பவைகளாம். அவைகளுள் அண்டசம்-முட்டையிற்றோன்றுவன. சுவேதசம்-வேர்வையிலுங் கசிவிலுந்தோன்றுவன. உற்பீசம்-வித்து, வேர், கிழங்குமுதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம்-கருப்பையிற்றோன்றுவன. எழுவகைப்பிறப்புகளாவன:—தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். கருப்பையில் தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட்டையில் பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவுந்தோன்றும். வேர்வையிலுங் கசிவிலும் கிருமி, கீடம், பேன்முதலிய ஊர்வனவும், விட்டில் முதலிய சிறுபறவைகளும் ஜனிக்கும். வித்திலும் வேர், கொம்பு, கொடி, கிழங்குகளிலும் புல், பூண்டு, தாவரங்களும் உதிக்கும். தேவர்கள் பதினொரு நூறாயிர யோனி பேதம். மனிதர்கள் ஒன்பது நூறாயிர யோனிபேதம். நாற்கால் விலங்குகள் பத்து நூறாயிரயோனிபேதம். பறவைகள் பத்து நூறாயிர

யோனிபேதம், நீர்வாழ்வன பத்துநூறாயிரயோனிபேதம், ஊர்வன பதினைந்து நூறாயிரயோனிபேதம். தாவரங்கள் பத்தொன்பது நூறாயிரயோனிபேதம். ஆகத்தொகை எண்பத்து நான்கு நூறாயிரயோனி பேதமாகும்.

ஆத்மாவானது தானெடுத்த சரீரத்துக்கேற்ப மெய், வாய், கண் மூக்கு, செவி என்னும் பஞ்சேந்திரியங்களினாலும், சித்தத்தினாலும அறியும் அறிவின் வகையினாலே ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என ஐவகைப்படும். இவற்றுள் பரிசமென்னும் ஓரறிவுயிராயுள்ளவைகள் புல், பூண்டு, செடி, மரம் முதலியவைகளாம். பரிசத்தோடு இரசம் என்னும் ஈரறிவுயிராயுள்ளவைகள் இப்பி, சங்கு முதலியவைகளாம். பரிசம் இரசத்தோடு கந்தம் என்னும் மூவறிவுயிராயுள்ளவைகள் கறையான், எறும்பு, முதலியவைகளாம். பரிசம், இரசம், கந்தத்தோடு ரூபம் என்னும் நான்கறிவுயிராயுள்ளவைகள் தும்பி, வண்டுமுதலியவைகளாம். பரிசம், இரசம், கந்தம், ரூபத்தோடு சத்தம் என்னும் ஐயறிவுயிராயுள்ளவைகள் புள், விலங்கு, மக்கள், அசுரர், சுரர் முதலியவைகளாம். இவற்றுள் இறுதியிற்சொன்ன உயிர்களுக்கு ஐயறிவு ஒத்துளவேனும் மக்கட்குப் பகுத்தறியும் புத்தியும், சுராசுரருக்குப் புத்தியோடு சித்தியும், திரிமூர்த்திகட்குப் புத்தி சித்தியுடன் தங்களெல்லையில் சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களும், கிருத்தியதாரதம்மியமும், பதவிபேதமும், ஒன்றுக்கொன்று மேலிட்டிருத்தல் பற்றியுண்டாந் தாரதம்மியமுமுள.

"ஆத்மாவானது பெண்ணுமல்ல, ஆணுமல்ல, அலியுமல்ல. எந்தெந்த சரீரத்தை யெடுக்குமோ அந்தந்த சரீரத்துடன்சேரும் என்னும் பொருட்டோன்ற "நைவஸ்த்ரீ நபுமாநேஷ: நைவசாயம் நபும்சக:-யத்யச் சரீரமாதத்தே தேந தேநசயுஜ்யதே." என்று சுவேதா சுவதரோபநிடதங் கூறுகின்றது. இதனால் ஆத்மாவுக்கு தேவன், நரன், அசுரன், பசு, பட்சிமுதலிய பேதங்களும் ஆண், பெண், அலி என்னும் வேற்றுமைகளும், இளையவன் முதியவன், அந்தணன், அரசன் என்பதாதி வேறுபாடுகளும் எடுத்ததோர் சரீரோபாதிக் கேற்றபடி யமையுமே யன்றி இயல்பிலுள்ள வல்லவென்பது துணியப்பட்டது.

மேற்சொன்ன எண்பத்துநான்கு நூறாயிரயோனி பேதங்களுள் இதரயோனிகளெல்லாவற்றையும் போகத்தினாலும், பிராயச்சித்தாதிகளினாலும் நீக்கி மானுடப்பிறவியில் வருமருமை விசாரித்

துப்பார்க்கின் மிக்கவிசாலமான சமுத்திரத்தைக் கையாலே நீந்திக் கரையேறினவன் காரியத்துக் கொக்கும். அங்ஙனம் மானுடப்பிறவியில் வந்து பிறந்தாலும் மலையிலும், வனத்திலும் குறவராகவும் இருளராகவும் பிறக்காமல் பிராமணாதி நான்குவருணத்தார் நிறைந்திருக்கும் தேசத்தில் பிறப்பது புண்ணியம். அதிலும் வேதாகமநெறி நில்லாத மிலேச்சதேசமொழிந்து புண்ணியநாட்டில் பிறப்பது மிகவும் புண்ணியம். அதிலும் ஈனகுலத்திற் பிறவாமல் குன், குருடு, செவிடு, பேடுமுதலியவை நீங்கி, ஞானமுங் கல்வியும் நயந்து, தானமுந் தவமுஞ் செய்யும் உத்தமசமயத்தில் பிறப்பது அதியுக்தமான புண்ணியம். அதிலும் பரசமயங்களிற் பிரவேசியாமல் சகல சமயாதீதமாகும் சித்தாந்த சைவநெறிபேணி சுத்தசிவத்தைப் பரதத்துவமாகவறிந்து துக்க நிவர்த்தி செய்துகொள்ளுதல் உத்தமோத்தமமான அரியபுண்ணியமாம். இந்தப் புண்ணியத்தின் பயனைச்சொல்லப்புகின் சொல்லளவைக் கடங்காது.

இஃதிங்ஙனமாக, மேற்கூறிய பிறவிபேதங்களில் கல்லும் உயிரெனப்படலால் "கல்லாய் மனிதராய்ப்பேயாய்க் கணங்களாய்" என்றருளிச்செய்தபடியாம். ஈண்டு கல்லென்பது மலை. மலையானது வளர்வு, தேய்வு உடைமையானும், முன்னோர்காலத்துப் பறந்ததென்றமையானும், அகலிகை, கிரவுஞ்சன் முதலாயினோர் கல்லாய் அனேகநாள் கிடந்தமையானும், மலைத்தெய்வம் உண்மையானும், கல்லாகியமலையும் ஆருயிர் வர்க்கங்களி லொன்றாகும்.

**ஓங்கார மாய்நின்ற மெய்யா**=பிரணவவுருவாய் நின்றமெய்யனே. ஒருமுறை யுச்சரித்தமாத்திரத்தில் உயர்ந்தகதியிற் கொண்டுபோய் விடுத்தலால் பிரணவமானது ஓங்காரமென்று சொல்லப்பட்டது. "**ஓமித்யக்ஷர மேததாதௌ ப்ரயுக்தம் த்யானம் த்யாயிதவ்யம்**=ஓமென்னும் பிரணவாட்சரமே ஆதியில் உபதேசிக்கப்பட்டது-அதுவேதியானம் அதுவே தியானிக்கத் தக்கது" என்று அதர்வசிகோபநிடதங் கூறிற்று. அன்றியும் "சர்வதேவர்களுக்கும்சர்வவேதங்களுக்கும் இதுவேகாரணஸ்தானம்" என்னும்பொருள்பட "**ஸர்வதேவவேதயோநி:**" என்றுஞ் செப்பியது. சிவதருமோத்தரமும் "ஓமென்னும் பதமதனில் வேதமாதி யுற்பவிக்கு மாலவித்தினுதிக்குமாபோல்" என்று இதனையே எடுத்தாண்டது. பிரணவத்தை எப்பொழுதுஞ் சிவரூபமாகவே தியானிக்கவேண்டும். இது நான்கு அம்சங்களோடு கூடியது. நான்கு அம்சங்களும் நான்குவேதங்களா

ம். முதலமிசம் அகாரம். இரண்டாமமிசம் உகாரம். மூன்றுமமிசம்மகாரம். நான்காமமிசம்அர்த்தமாத்திரையாகியமிகச்சூக்குமமான நாதரூபம். இவற்றுள்முதல்மூன்று அமிசங்களும்முறையேபிரமன், விஷ்ணு,சிவனைக்குறிக்கநான்காமமிசம் சிவபரஞ்சுடரைக் குறிக்கின்றது. சிவரூபமானது பிரமவிஷ்ணுருத்ராதீத துரீயாகாரமாயும், சர்வவிதமான பொருட்பிரபஞ்சங்களுக்குங் காரணமாயும்நிற்றல்போல் அதற்குவாசகமாகிய சிவமந்திரமானபிரணவமும் நான்காய்நின்று சர்வசொற் பிரபஞ்சங்களுக்கும் ஏதுவாய் சிவத்துடனே அபேதத்தை யடைகின்றது. அதனல் வாச்சியவாசக சம்பந்தமானசிவத்துக்கும்பிரணவத்துக்கும் பேதம் சிறிதுங் கிடையாது. சிவமேபிரணவம் பிரணவமேசிவம் என்பதுசர்வவேதாந்தப் பிரதிபந்நமாம்.இவ்வுண்மையைத் தைத்திரீய நாராயணேபநிடதமானது "ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர் ப்ரஹ்மா சிவோமே அஸ்து ஸதாசிவோம்=வேதத்துக்கு நாயகன். பிரமனுக்கு அதிபதி, பிரமம்,சிவம்,எனக்குண்டாக, சதாசிவம், ஓம்" என்று நன்கு விளக்கியது.

அல்லதூஉம் அதர்வசிரோபநிடதமும் "ஸஓங்காரோயஓங்காரः" என்னும் மந்திரத்தில்வாசகமாகிய பிரணவத்தைஓங்காரம், பிரணவம், சர்வவியாபி, அநந்தம், தாரம், சூக்குமம், சுக்கிலம், வைத்தியுதம் என்னும் ஒன்பது பெயர்களானும் வாச்சியமாகிய சிவத்தை ஏகன், ஏகருத்திரன், ஈசானன், பகவான், மகேசுவான், மகாதேவன் என்னும் ஆறுநாமங்களானும் ஒருசொற்றொடர்புகொண்டுமுடிவுபடுத்தியது. இதனலே பிரணவத்துக்கும் சிவத்துக்கும்பொருளொற்றுமையமைக்கப்பட்டிருப்பதோடு பிரணவமே பரமசிவநாமமென்பதும் நிரூபிக்கப்பட்டது. ஈண்டு குறிக்கப்பட்ட ஆறுநாமங்களும் சிவபிரானுக்கேயுரிய ரூடிநாமங்களாம். என்னை! ஸ்ரீமந் நாராயணனுக்கே பகவான் என்னும் நாமம் சிறப்பாகவுரியதென்று விஷ்ணுபுராண முதலியவற்றுள் கூறியுள்ளதே அது பயனற்ற பதர்மொழியோ வெனின், அற்றன்று. வேதசங்கிதைகளில் பரமசிவனைத்தவிர வேறே எக்கடவுளரையும் பகுணத்தை யுடையவனென்று பொருள்கொள்ளும் பகவான் என்றசொல்லாற் சிறப்பிக்கவில்லை. பரமசிவனையோ "நமஸ்தே அஸ்துபகவः-பகவः பராசிநா முகாக்ருதி-அயம்மே அஸ்துபகவாந்-நமஸ்தே அஸ்துபகவந் விஸ்வேஸ்வராய- ஓம்நமோ பகவதே ருத்ராய=ஓபகவ! உன்னைவணங்குவாம். ஓபகவ! அப்புறம்நோக்கியவற்றை எமதுபுறந்திருப்பியருள்வாய்.இப்பகவன் எமக்காகுக, ஓபகவ!! விசுவேசுவர!! உன்னைவணங்குவாம். ஓபக

வ!! உருத்திர!! உன்னைவணங்குவாம்" என்பதாதி சுருதி கற்பசூத்திரங்கள் பன்முறையும் எடுத்துத்துதிக்கின்றன. ஹரதத்தாசாரிய சுவாமிகளும் ஓமகேசுவர! பெரிய ஐசுவரியமுள்ளவர்க ளாயினும், பெரும்புகழ் பெற்றவர்களாயினும், வீரர்களாயினும், பூமியையாளும் அரசர்களாயினும், ஒவ்வொருவிஷயங்களிற் சிறந்தவர்களாயினும் பெரியோர் அவர்களைப் பகவான்களென்று வழங்குவதில்லை. மற்று ஞானவைராக்கிய சம்பந்நர்களையே அங்ஙனம் வழங்குகின்றார்கள் என்று ஆணைதந்திருக்கின்றமையானும் "சங்கரோ பகவா னுத்யோ ரரக்ஷ சகலா: ப்ராஜா:=பகவானும் ஆதித்யருமான சங்கரர் சகலபிரஜைகளையும் ரட்சித்தார்" என்று சரபோபநிடதமும், "ஸர்வ வ்யாபீச பகவாந் தஸ்மாத் ஸர்வ கதச்சிவ:=எல்லாவற்றையும் வியாபித்தவன் பகவான்-ஆகையால் எங்கும் நிறைந்தவன் சிவனும்" என்று மந்திரோபநிடதமும் கூறுகின்றமையானும் சிவபெருமானொருவருக்கே பகவான் என்னும்பெயர் ரூடியாக நிலைக்குமே யன்றி வேறொருவருக்கும் அப்பெயர் பொருந்தாது. ஆயின் ஏனையகடவுளரும், தேவர்களும், ரிஷிகளும் அப்பெயரால் அழைக்கப்படுவது என்னையெனின், ஈசுவரசம்பந்தம் எய்திய காரணம்பற்றியன்றி வேறல்ல வென்பது சுருதியின் இருதயமாம். சிவபெருமானைப் பகவன் என்று சுருதிமுடிகள் துதிப்பதுபோல் அவரது சத்தியாகிய அம்மையாரையும் பகவதி என்று துதித்து மகிழ்கின்றன. வேறுகடவுளர் சத்திகளுக்கோ அப்பெயர் எஞ்ஞான்றுங் கிடையாது

சிவபிரான் பககுண முடையவராதலால் பகேசனெனவும் பகவானெனவும் வேதங்களிலே சிறப்பிக்கப்பட்டார். பகம் (ஐசுவரியம், வீரியம், புகழ் திரு, ஞானம், வைராக்கியம்) என்னும் அறுவகைப்பெருமைகளை அவரது திவ்ய நாமங்களே தெளிவாய் விளக்காநின்றன. ஈசுவரன்=ஐசுவரியத்தைக்குறிக்கும். உக்கிரன்=வீரியத்தை விளக்கும். சிவன்=பெரியபுகழை நாட்டும். ஸ்ரீமாந் - சந்திரசேகரன்=அழகைக்காட்டும். சர்வஞ்ஞன்=முற்றறிவைப் புகட்டும். காமரிபு-மஹர்ஷி=துறவு அல்லது வைராக்கியத்தைத் தெரிக்கும், அன்றியும் அவனது அற்புதச்செயலே பெருமையெனின் நீலகண்டன்=விஷபக்ஷணத்தை விளக்கும். விருபாக்ஷன்=காமாதி சங்காரத்தைக் காட்டும். காபாலி=பிரமன் சிரங்கொய்ததைப் பேசும். பைரவன்=விஷ்ணுவின் ரக்தபிக்ஷைகொண்டமையை விளக்கும். கங்காளன்=திரிவிக்கிரமன் என்புதாங்கிய திருமேனியைத்தெரிக்கும். சரபன்=நரசிங்கன் கெர்வ பங்கஞ் செய்தமையைநாட்டும். இன்னணங்கூறிய

பல சரித்திரங்களும் தக்கன்வேள்வி தகர்த்தல், திரிபுர சங்காரஞ்செய்தல், பிரமன்விஷ்ணு அடிமுடிதேட அனற்பிழம்பாய் நிற்றல், இன்னோரன்ன பலவேறு திவ்விய சரித்திரங்களும் வேதங்களிலேயே குறிக்கப்பட்டுள்ளன. வைதிகர்களாயுள்ளவர்களுக்கு அவைகளேயுடன்பாடு. மற்றைய வழிநூல்கள் அவற்றை ஒப்பினும் ஒப்பாவிடினும் யாதுங்குறைவில்லை. சுருதிக்கும் ஏனைய நூல்களுக்கும் விரோதமுண்டாயின் ஏனைய நூல்களைத்தள்ளி சுருதியைக்கொள்ளவேண்டியதென்று மீமாம்ஸா சாத்திரம் விதித்துள்ளது. சுருதிவசனங்களைப் புராணவசனங்கள்கொண்டு வெல்லமுயல்வது அநுசிதமாம். இந்தச் சரித்திரங்களை அகாரண சிவத்துவேஷம் மேலிட்டு, நடுவுநிலைமை குன்றி, மதாவேசம் பூண்டு தூஷிப்பவர் பண்டைய தீவினைப்பயன் மலிந்த தீயோருந்தூர்த்தருமாவர். இன்னும் இவ்வோங்காரத்தின் விரிபொருளை ஐம்பத்தைந்தாவது விஷய சூசனத்திற்காண்க. (கக)

இயமானன்=எஜமானன். சிவபெருமானுடைய அஷ்டதநுக்களில் இறுதிக்கண்ணதாகிய ஆன்மாவுக்கு எஜமானன் அவ்வெம்பெருமானொருவனே அவனையன்றி பரமபதி வேறில்லையாதலால் "ஆத்மாநஃ பசுபதி=ஆத்மாவில் பசுபதி" என்று ருக்வேதம் அவனையே புகழ்ந்தது. பாசசம்பந்தத்தினலே பசுவென்னும் வியவகாரம் உண்மையால் பசு என்னுமிடத்துப் பசு பாசம் என்னும் இரண்டுங் கொள்ளக்கிடக்கின்றன. பசுவாகிய சித்துக்கும் பாசமாகிய அசித்துக்கும் நாயகராதலால் பசுபதியென்னும் நாமம் பிரமத்துக்காயிற்று. கிருஷ்ண யஜுர்வேதமானது "யேஷாமீசஃ பசுபதிஃ பசூநாம் சதுஷ்பதா முதச த்விபதாம்= நாற்கால்களும் இருகால்களுமுடைய பசுக்களுக்கும் ஈசராயுள்ளார் பசுபதியெனப்படுவார்." என்று கூறியது. அங்ஙனமே மந்திரோபநிடதமும் "யஈசே அஸ்ய த்விபதச் சதுஷ்பதஃ= எவன் இந்த இருகால்களுக்கும் நாற்கால்களுக்கும் நாயகன்" என்று செப்பியது. அன்றியும் "காதபதிம்-மேதபதிம் ருத்ரம்=உருத்திரமூர்த்தி காதைகளுக்கதிபதி மேதைகளுக்கதிபதி." என்று ருக்வேதமும் புகழ்ந்தது. காதைகளுக்கதிபதி=உலகத்திலுள்ள சொன்மயப்பிரபஞ்சங்களுக்கெல்லாம் அதிபதி, மேதைகளுக்கதிபதி=மேதங்களெனப்படும் கன்மங்களுக்கெல்லாம் அதிபதி. இதனல் சர்வகர்மபலதாதா சிவபெருமானென்பதூஉம் ஒவ்வொரு கன்மத்துக்கும் அவரது கிருபையும் உத்தரவும் அவசியம் வேண்டுமென்பதூஉம் நிச்சயிக்கப்பட்டது. சிவபெருமானே பசுபதி யென்று விளக்குஞ்சுருதிவசனங்களிற் சிலவருமாறு:—

"உமாபதயே பசுபதயே நமோநம:=உமாபதிக்கு பசுபதிக்கு அடிக்கடி நமஸ்காரம்" (தைத்திரீயோபநிடதம்). உமாபதி: பசுபதி: பிநாகீஷ்ய மிதத்யுதி=உமாபதியும் பசுபதியும் பிநாகத்தையுடையவரும், அளவில்பிரகாசமுள்ளவரும்." (நரசிம்மதாபநியோபநிடதம்). "தஸ்மாத் ருத்ர: பசூநா மதிபதி:=ஆகையினாலே ருத்திரர் பசுக்களுக்கதிபதி." (ருக்வேதம்). "ஸர்வேஸ்வரஈச: பசுபதி:=சர்வேசுவரரும், ஈசரும், பசுபதியும்." (ஜபாலோபநிடதம்.) "பரமேஸ்வரம் பர்க்கம் பசுபதிம் ருத்ரம்=பரமேசுவரரும், பர்க்கரும், பசுபதியும், ருத்திரரும்." (கர்ப்போபநிடதம்). "ஸர்வதேவா: பசுதாமவாபு: ஸ்வயம் தஸ்மாத் பசுபதி ஸம்பபூவ=இயற்கையினாலேயே சர்வதேவர்களும் பசுக்களாவார்-ஈசர் தானாகவே பசுபதியெனச் சொல்லப்படுவார்." (சரபோபநிடதம்) "ஸ்வதச்சிவ: பசுபதிஸ்ஸாக்ஷீ சர்வஸ்ய சர்வதா=சிவபெருமான் தாமே பசுபதியாயும் சர்வத்துக்கும் சாக்ஷியாயு மிருக்கின்றார் (பாசுபதோபநிடதம்). அல்லாமலும் "அதிபதே மித்ரபதே=ஓ அதிபதி ! ஓமித்திரபதி!" என்று சாமவேதமும் அவரை அதிபதியென்று வழங்கியது. இந்திரனென்னுமிடத்து தேவேந்திரனென்றும், பாமையென்னுமிடத்து சத்தியபாமையென்றும் பொருள் கொள்வதுபோல் நாம ஏகதேசத்தில் நாமக்கிரகணமென்றும் நியாயத்தால் பதி என்னுஞ்சொல் பசுபதியாகிய சிவபெருமானையே பற்றுமென்பது வஜ்ஜிர தண்டநியாயமாம். (௧௭)

ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்=ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்பவனே. முதல் மூன்றுகிருத்தியங்களையும் ஒருங்குகூறி ஐந்தாவது கிருததியத்தையுஞ் சொன்னமையால் நான்காவது கிருத்தியமாகிய மறைத்தல் உபலக்ஷணையால்தழுவப்பட்டது. பஞ்சகிருத்தியங்களும் வேதபடிதமென்பதும், திரிமூர்த்திகளி லொருவராகிய குணருத்திரரல்லாது துரியருத்திரராகிய பரசிவமே அப்பஞ்சகிருத்தியங்களுக்கு முரியாரென்பதும் போதர "பஞ்சக்ருத்ய நியந்தாரம் பஞ்சப்ரஹ்மாத்மகம் ப்ரூஹத்=பஞ்சகிருத்தியங்களை நியமனஞ்செய்பவரும் பஞ்சப்பிரம சொரூபரும்" என்று பஞ்சப்பிரமோபநிடதமும், ஸர்வஜ்ஞ பஞ்சக்ருத்ய சம்பந்த: ஸர்வேஸ்வர ஈசா: பசுபதி:=சர்வஞ்ஞரும் பஞ்சகிருத்திய சம்பந்தரும், சர்வேசுவரரும் ஈசரும், பசுபதியும்" என்று ஜபாபாலோபநிடதமுந் தெளிவித்தன. இவ்வுண்மையினை யுணராதார் பஞ்சகிருத்தியம் வேதத்திற் சொல்லவில்லையென்று மனம்போனவாறு கூறுவர். இநதக் கிருத்தியங்க

ளெந்தும் சிவபெருமானது சந்நிதியிலே நிகழ்வனவாம். ஆதலின் அவ்வெம்பெருமானைக் கேவலம் நிமித்தகாரணமெனல் சித்தாந்தசைவநெறி உள்ளவாறுணராதார் கொள்கையாகும். "மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த—தென்னு மறையி னியன்மறந்தாய்" என்னுஞ் சிவஞானபோதச் செய்யுளின் புதைப்பொருளை யுய்த்துணர்க-"பத்யு ரஸாமஞ்ஜஸ்யாத்= பதிசம்பந்தமாகிய சமயம் அஸாமஞ்ஜஸம்" என்று வேதாந்தசூத்திரத்திற் கண்டிக்கப்பட்டுள்ளதே அச்சமயம் யாதெனின், அதுகேவலம் நிமித்தகாரணங்கூறுஞ் சைவமன்றி சமயாதீதமாம் வைதிகசைவமன்று. இவ்வைதிகசைவம் அதிசோபனமானதெனவும், குஹ்யாகுஹ்யதமமெனவும், வேதசாரமெனவும், மோக்ஷார்த்தமெனவும் கூர்மபுராணங் கூறுகின்றது. இதுவே தக்ஷிணபாசுபதமாகிய உத்தரசைவமாம். நூற்றெட்டு உபநிஷத்துக்கோர்வையில் பாசுபதோபநிஷத்து என்னும் ஒருபநிஷத்து உண்மையால் அப்பாசுபதம் கேவலம் வைதிகமெனல் பொருத்தமாம்-பாஞ்சராத்திரத்துக்கோ அவ்விதப் பெயருள்ள உபநிஷத்து ஒன்றுங் கிடையாது. ஆகவே அது அவைதிகமாம். அன்றியும் மேற்சொன்ன வேதாந்தசூத்திரத்தில் "உத்பத்யஸம்பவாத்" "நசகர்துஃகரணம்" என்னும் வாக்கியங்களில் சீவர்களுக்கு உற்பத்தியுண்டெனவும், கர்த்தாவும் கரணமும் ஒன்றெனவும் கூறுஞ் சங்கசக்கிராங்கித வைஷ்ணவபேதங்களுங் கண்டிக்கப்பட்டிருத்தல் பிரத்தியட்சமாம். (கஅ)

அறம்பாவமென்னு மருங்கயிற்றாற்கட்டி=புண்ணியபாவப்பாசமென்னும் அரியகயிற்றினாற்கட்டி. இதனால் பரமகருணாமூர்த்தியாகிய பரமேசுவரன் ஆணவவிருளில் அகப்பட்டுழலும் ஆன்மகோடிகளை ஆநந்தபரிதர்களாகச்செய்யத் திருவுளங்கொண்டு இருவினையென்னும் பாசக்கயிற்றினாற்கட்டி ஆட்டுவிக்கின்றானென்பதூஉம், அக்கட்டை யவிழ்க்கும்பேராற்றல் அவ்வமலபரமபதிக்கே இயல்பிலமைந்ததென்பதூஉம் பெறப்பட்டது. ஆகலின் எத்திறநற்பயனும் ஏகநாதனாகிய அம்புலியணிந்தபிரானருளாலன்றி ஆன்மாக்களுக்கு எக்காலத்தும் எவ்விடத்தும் அமையாதென்பது திண்ணம். "இருவினைப்பாசக்கயிற்றின்வழி யாட்டுவிப்பானுமொருவனுண்டே தில்லையம்பலத்தே" என்றார் திருவெண்காட்டடிகள். இவ்விரண்டுவினைகளே ஒவ்வொருஆன்மாவையும் எந்தத்தநுவினும் நீங்காதுபற்றிப் பின்றொடர்ந்து செல்லுமாதலால் "பற்றித்தொடரும் புண்ணியபாவமுமே" என்று மீளவும்அவரே வற்புறுத்தியருளினர். சுவேதாசுவதரோபநிடதமும் "பராச்யாம்ச்ச சர்வாந் பரிணமயேத்ய:=ப

ழையவினைகளையெல்லாம் பக்குவப்பட்டபருவத்துப் பரிணமிக்கும்
படிச்செய்து அவைகளின்பயன்களை யளிப்பான்." என்று கூறிப்
போந்தது. அதனால் ஆன்மாக்களீட்டுஞ் சர்வகன்மங்களையும் அவ்வ
வர்களே ஏருமலுங்குறையாமலும் புசிக்கும்படியூட்டி அவர்களுக்குச
சித்தசுத்திபிறந்து புலனொடுக்கி மனமடக்கித் தம்மையண்டித்தொ
ண்டுபுரியும்புண்ணியப்பேறுவாய்த்தலைவதாத்து, "ஸர்வசம்சாரபே
ஷஜட்=சர்வசம்சாரப்பிணிக்குமருந்தினர்" என்று தரிசனோபநிட
தமும் "சிவயேவ ஸதாத்யேயஸ் ஸர்வஸம்ஸாரமோசக:=சிவபெ
ருமானொருவரே சதாதியானிக்கற்பாலர் சர்வசம்சாரபந்தங்களும்
நிவர்த்தியாகும்பொருட்டு" என்று சரபோபநிடதமும், அறைந்தபடி
அவர்களது சம்சாரமென்னுங் கடுங்கானகத்தைக் கொளுத்துங் கா
ட்டுத்தீயைப்போல் பிரகாசித்துநிற்பவன் கருணாநிதியாகிய கண்ணு
தற்பிரானென்பது வெளிப்பட்டது. (கசு)

தத்துவனே=உண்மைப்பொருளே. எக்காலத்தும் அழியாமல்
நித்தியப் பொருளாயுள்ளவர் மகாதேவர் என்பது தோன்ற "த்வம்
பசுபதி." என்று ஜாபாலோபநிடதஞ் செப்பியது. தத் என்னுஞ்
சொல் பிரமத்தின் பெயராதலின் தத்துவம் என்ற சொல்லின் பொ
ருள் பிரமத்துவம் அதாவது சுத்த பிரமத்தின்றன்மை என்று கொ
ள்ளக்கிடக்கின்றது. ஓம், தத், ஸத் என்னும் இம்மூன்றும் பிர
மத்தைக் குறிக்குஞ்சொற்களென ஸ்ரீகிருஷ்ணர் உரைத்தருளின
மையால், தத்துவஞானம், தத்துவோபதேசம் என்பதாதிப் பிரயோ
கங்கள் சிவஞானம், சிவோபதேசம் என்பவற்றையே பொருளாகக்
கொண்டு விளங்குமாற்றல் பெற்றுள்ளன. சாக்ஷாத் சுத்தசிவம் தத்
துவப் பொருளாயின் பிரகிருதியின் காரியங்களாகிய பிருதிவிமுத
ல் நாதமீறுகச் சொல்லப்பட்ட முப்பத்தாறையுந் தத்துவங்களென்
று சுருதிகள் கூறியகாரணம் யாதெனின், பஞ்சபூதலயத்துடனே
தேவர்களுக்கு நாசமுண்டாயிருக்கவும் மரணையபேட்சித்து அமரரெ
ன்று சொல்லப்பட்டாற்போல தாத்வீகமாகிய சரீராதிகளைப்போல்
உடனே நாசமாகாது பிரளயபரியந்தம் நிலைத்துநிற்கையினால் தாத்
வீகங்களைநோக்கி தத்துவங்களென்று அவைகள் உபசரிக்கப்பட்டன.
அந்தத் தத்துவங்களையும் சுத்தசிவம் கடந்துநின்றமையால் தத்து
வாதீதமென்று அதேசுருதிகள் வேறிடங்களில் அப்பரம்பொருளைப்
புகழாமலிருக்கவில்லை. உலோகாயதமுதல் ஐக்கியவாதசைவ மீறுக
ச்சொல்லப்பட்ட புறப்புறச்சமயங்களிலும், புறச்சமயங்களிலும், அ
கப்புறச்சமயங்களிலும் உள்ளதெய்வங்களெல்லாம் பூதமுதல் அசுத்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

தமாயாதத்துவமீருக ஒவ்வொருதத்துவங்களினும் நிலைபெறுகின்றன. சிவாகமங்களிற் கூறப்படும் சைவமென்னும் அகச்சமயத்து அறுவகைத்தெய்வங்களாய் நின்ற அதிகாரபோகலயசிவபேதங்கள் சுத்தவித்தைமுதலிய ஐந்துதத்துவங்களுள் ஒவ்வொன்றிலும் நிலைபெறுகின்றன. சகலசமயாதீதமென்னுஞ் சித்தாந்தசைவத்தில் பிரதிபாதிக்கப்பட்ட தெய்வமாகிய சுத்தசிவமோ அந்தமுப்பத்தாறு தத்துவபடகலங்களையுங்கடந்து எல்லாத்தெய்வங்களும் தம்மாணையின்வழிநிற்கப் பிரகாசிக்கின்றது. இதுவே மறைமுடிகளனைத்தும் ஒரேமுடிவாய் முரசடித்துக்கூறிய முடிபுரையாம். அதுபற்றியே திருவெண்காட்டடிகளும் "பூதமுங் கரணம் பொறிகளும் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும்-நாதமுங் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிற்குநா ளுளதோ" எனவும் ஸ்ரீ அருணகிரிநாதரும் "ஆறுறையுந்தீத்ததன்மே னிலையைப்-பேரு வடியேன் பெறுமா றுளதோ" எனவுங் கூறி உண்மைநிறுவினார்கள். "ஸ்ரீ தாயுமானசுவாமிகளும்" "அயர்வறச்சென்னியில்வைத்து ராஜாங்கத்தில்-அமர்ந்தது வைதிகசைவ மழகிதந்தோ" என்று வீடுகாதலிப்பவர்கட்கு நன்னெறிபுகட்டியருளினார் (உ௰)

மெய்யானார்= மெய்யாகிய சிவத்தை யடைந்தவர். அதாவது சிவத்வம் விளங்கப்பெற்றவர். சிவத்துவமாவது சார்ந்ததன் வண்ணமாம் இயல்பையுடைய ஆன்மா சிவத்தோடு ஐக்கியமுற்று நிற்குங்கால் சிவத்தினுடைய சர்வஞ்ஞாதி குணங்களெல்லாம் விளங்கப்பெற்று பரிபூரண சிதாகாசசிவத்தன்மையுற்று சிவானந்தாநுபவியாய் நிற்றல். இதனையே முண்டகோபநிடதமானது "ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்சன: - பரமம் ஸாம்ய முபைதி= இத்திறமுள்ள முத்தன் புண்ணியபாவங்கள் நீர்ந்தவனாய் களங்கமற்றவனாய் சிவசாம்மியத்தை எய்துகின்றான்" என்றும், சுவேதாசுவதரோபநிடதமானது "தே தந்மயா அம்ருதா வை பபூவு:= அவர் பிரம்மமயராய் அமிர்தர்களானார்கள்" என்றுங் கூறிப்போந்தன. சர்வஞ்ஞாதி குணங்களாவன:— சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவு). நித்திய திருப்தத்துவம் (வரம்பிலின்பமுடைமை). அநாதிபோதம் (ஆணவமலசம்பந்தமற்ற சுத்தஞானசொரூபம்). சுவதந்திரத்துவம் (தன்வயமுடைமை). அலுப்தசக்தித்வம் (பேரருளுடைமை). அனந்தசக்தித்துவம் (முடிவிலாற்றலுடைமை). இவ்வறு குணங்களே சிவசாம்யம் பெற்றவர்களுக்கு வெளிப்பட்டுவிளங்காநிற்கும். ஆதலின் திருமூலர்திருமந்திரமும் "அநாதி சிவரூப மாகிய வான்மா-தநாதி மல

த்தாற் றடைப்பட்டு நின்றது - தநாதி மலமுந் தடையற்ற போதே- அநாதி சிவரூப மாகிய வாறே" என்று விளக்கியது. இந்த அறுகுண ங்களும் எண்குணங்களாக விரிட மாதலால் "தென்றிசைக்கோன் று னேவந்து கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலுங் குணமாகக்கொ ள்ளோ மெண்குணத்துளோமே" என்று கட்டளை யிட்டருளினார் திருத்தாண்டகவேந்தர். (உக)

சிவபுரத்தினுள்ளார்= சிவபுரத்திலெழுந்தருளியிருப்பார். சிவ புரமாவது புனராவர்த்தியில்லாத பிரமலோகமென்னும் மகாசிவலோ கமாம். இது அண்டகடாகத்துள்ளிருக்குஞ் சத்தியலோகம், வைகு ண்டம், கைலாசம் என்னும் ஊர்த்துவலோகங்களுக்கு அப்பாற்பட்ட சுத்தமாயாபுவனமாகிய அப்பிராகிருத மகாகைலாசம். இதுவே நிர திசயானந்தவின்பம் அநுபவிக்குமிடம். ஓங்காரத்தின் இறுதியாயுள் ள நான்காவதான அர்த்தமாத்திரையின் பொருளாகிய சோமலோக முமிதுவே. "யாவஸாநேஸ்ய சதுர்த்பார்த்த மாத்ரா ஸஸோமலோ கஓங்காரஃ=இதன் இறுதியில் நான்காவதான அர்த்தமாத்திரையு ளது அதுவே சோமலோகம் ஓங்காரம்" என்று அதர்வசிகோபநிடத ங்கூறுகின்றது. சோமலோகமாவது உமாபதியின்லோகம் சோமன்= உமையோடு கூடியசிவன். அந்த உமாபதியே திரிமூர்த்திகளுக்குமே லான சச்சிதாநந்தப் பரம்பொருளெனவும், பிரணவத்தின் துரீயபா த தேவதையெனவும், சர்வதேவர்களுக்கும் உபாஸ்யரெனவும், ஆரண முடிகளறைந்தபடி பிரமநிஷ்டாபரர்களான மகாசாம்பவர்களும் தம தனுபவத்தில் கண்டு கூறியுள்ளார்கள். திருநாவுக்கரசுசுவாமிகளும் திருவடித்திருத்தாண்டகத்தில் "அரைமாத்திரையி லடங்கும்மடி யகலமளக்கிற்பா ரில்லாவடி" என்று ஓங்காரத்தின் அர்த்தமாத்தி ரையின் பொருளாயுள்ளார் சிவபெருமானே என்று விளக்கியுள்ளார். என்னை! சிருஷ்டி, திதி, சம்ஹாரம் என்னு மூன்றுகிருத்தியங்களுக் கும் பிரமன், விஷ்ணு, உருத்திரன் கர்த்தாக்களென்று வேதங்கள் அறையாநிற்கவும் ஈண்டு உமாமகேசன் ஒருவனே உலககாரணரெ னவும், உபாஸ்யப்பொருளெனவும் எப்படிநிரூபிக்கப்படுமெனில், பி ராகிருதமான முத்தொழில்களுக்குங் கர்த்தாக்களாய் முக்குணங்க ளால் அதிஷ்டிக்கப்பட்டிருக்கும் மும்மூர்த்திகளுக்குள்ளே உருத்தி ரன் ஒருவனே உலககாரணனென்று சொல்லில் அப்பொழுது அனே கேசுவரவாத முண்டாகு மாதலால் ஆட்சேபிக்கவிடமுண்டு. இங்கு முக்குணங்களையுங்கடந்த மும்மூர்த்திகளுக்குங்காரணமாய் ஸ்தூல சூக்கும சூன்னியரூப மற்றதாய் சிதாநந்தரூபமாய் யோக விருத்தி

யினுல் சகலசப்தங்களுக்கும் வாச்சியப் பொருளாய் இருக்கும் பரவஸ்துவைச்சொன்னமையால் ஆட்சேபனைக்குச் சிறிதும் இடமின்று.

---

## கீர்த்தித்திருவகவல்

தில்லை மூதூ ராடியதிருவடி = தில்லையாகிய பழையதிருப்பதியில் தாண்டவஞ் செய்தருளிய திருவடி. தாண்டவமாவது சிருஷ்டி, திதி, சங்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்திய நடனமாம். சத்துவம், ரஜசு, தமசு என்னும் முக்குணங்களையுங் கடந்து நின்ற நின்மலசிவம் தியானயோக சமாதியினுல் சாக்ஷாத்கரித்து நிற்கும் மெய்யடியார்களின் உள்ளக்கமலத்தை அனவரதமும் இருப்பிடமாகக்கொண்டு உமாசகாயா நிலியங்களுடன் எழுந்தருளியிருப்பதுபோல், பிரமாண்டமாகிய இவ்வுலகத்திலுந் தில்லையாகிய புண்டரீகவீட்டை ஆனந்த நிருத்தனஞ் செய்யுந்தானமாகக் கொண்டு அருளைவடிவாகிய ஸ்ரீநடராஜ கோலத்தோடு எழுந்தருளியிருக்கும். இதனுல் தாவரமாகிய அண்டமுஞ் சங்கமமாகிய பிண்டமுஞ் சமமெனல் உணரற்பாற்று. சாந்தோக்கிய உபநிடதத்தில் எட்டாவது பிரபாடகத்தில் "பிரமபுரமாகிய இச்சரிரத்தில் உள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாயத்தை நாடவேண்டியது." என்பது முதலாகத் தகரவித்தை கூறப்பட்டுள்ளது. ஈண்டு ஆகாசமென்றது. "ஆகாசசரீரம் ப்ரஹ்ம=ஆகாசத்தைச் சரீரமாகவுடையது பிரமம்." என்று தைத்திரீயோபநிடதங் கூறியபடி பிரமமாகிய சிவத்துக்குப் பெயராயிற்று. பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தி னுள்ளிருக்குந் தில்லைவனம் புண்டரீகவீடெனவும், இந்தத் தில்லை வனத்தில் நிருத்தஞ்செய்யுஞ் சிவம் ஆகாசமெனவும் அறியத்தக்கது. இந்தவாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சிற்சத்திரூபமாய் விளங்கலால் சிதம்பரமெனப் பெயர்பெற்றிருக்கின்றது. இந்தசிதம்பரமும் எந்நாளும் நீக்கமின்றி யபேதமாய் விளங்குந்தன்மையால் தில்லையாகிய பழையபதியும் அப்பெயரால்விளக்கமுற்றுள்ளது. பிருதிவிமுதலனைத்தையுந் தனதுருவாக்கொண்டவிராட்புருடனுக்கு இந்தத்திருப்பதி ஹ்ருத்பத்மமத்தியக்ஷேத்திரமா யமைதலால் "சிதம்பரந்து ஹ்ருந்மத்யே" என்று தரிசனுேபநிடதங் கூறிற்று. ஸ்ரீதாயுமானசுவாமிகளும் "களங்கமிலுலகந்தானே ககனமாய்ப் பொலியப் பூமி-வளர்ந்ததா ளென்ன வுள்ளா மன்றொ மறையொன் றின்றி" என்று சிதம்பரத்தையே இருதயத்தானமாக

விளக்கியருளினர். "தானுடைத் தன்தசையாடும்" என்னும் பழமொழிக்கிணங்கக் கருணாநிதியாகிய சிவபெருமான் சராசரப்பொருள்களனைத்தையும் இயக்குதலாகிய வானந்தநிருத்தனம் இந்தத் திவ்விய க்ஷேத்திரத்திலே செய்தருளுகின்றார். தகரமாகிய உள்ளக்கமலத்தின்கண் உபாசிக்கப்படும் பொருள் சிவபரமாத்மா வென்பதூஉம், அவரையவ்வாறு ஸ்ரீமந்நாராயணர் வழிபட்டுக்கொண்டிருக்கின்றாரென்பதூஉம், தைத்திரீயோபநிடதம் விதந்தபடி அண்டத்திலுள்ள சிதம்பரக்ஷேத்திரத்திலும் அந்நாராயணர் ஸ்ரீ நடராஜப்பெருமானையே சேவித்துக்கொண் டிருக்கின்றாரென "வண்ணப மணிமார்பன் புதல்வனொடும் மனைவியொடுங் குடிபுகுந்து வணங்கிப் போற்றும்-புண்டரிக புரத்தினில் நாதாந்த மோனப் போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே" என்று மீளவும் தாயுமானசுவாமிகள் வற்புறுத்தியருளினார்கள். (உ௩)

அந்தணன்=அந்தத்தை யண்ணினவன்-பிராமணன். தேவர்களில் உருத்திரன் பிராமணனும், விஷ்ணு க்ஷத்திரியனும், இந்திரன் சூத்திரனும், மற்றைத்தேவர்கள் சங்கரஜாதியாயு முள்ளார்களெனப் பொருள்பட "ப்ராஹ்மணோ பகவான்ருத்ர꞉ க்ஷத்ரியோ விஷ்ணு ருச்யதே-ப்ரஹ்மா வைஸ்ய இதிப்ரோக்தோ வ்ருஷலஸ்து புரந்தர꞉- ஸங்கராஸ் ஸர்வதேவாஸ்ஸ." என்று பராசர புராணங் கூறிற்று. அம்பிகைபாகனுன சிவபிரானார் சேதனசேதனப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் பதியாயினும் விசேடமாய் அந்தணாளர்க்குப் பதியாதலின் அந்தணரெனச் சிறப்பிக்கப்பட்டனர். அப்பிராமணன் (பிராமணனல்லாதவன்) பிராமணனுக்கு அதிபதியாகமாட்டான். ஆகவே பிரமன் என்ற பிராமணனுக்கும் பதி சிவனாதலால் "ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர்=வேதத்துக்கு அதிபதி-பிரமனுக்கு அதிபதி" என்று தைத்திரீய நாராயணோபநிடதஞ் சிவபிரானைப் புகழ்ந்தது. சாமவேதப் பிரபதப் பிராம்மணமும் "த்வம் தேவேஷு ப்ராஹ்மணோஸி அஹம் மனுஷ்யேஷு-ப்ராஹ்மணோ ஹி ப்ராஹ்மணமுபதாவதி உபத்வா தாவாமி த்வயா ப்ரஸூத இதம் கர்ம கரிஷ்யாமி= நீதேவர்களுள் பிராமணன்- நான்மனிதருள் (பிராமணன்) பிராமணன் பிராமணனையன்றோ வழிபடுவான். (ஆதலால்) உன்னையான் வழிபடுவேன். உன்னுடைய அனுஞ்ஞையைப் பெற்று இக்கருமத்தைச் செய்கிறேன்" என்று ஈசனுக்கே பிராம்மணியங் கூறியது. மேலும் சுவேதாசுவதரோபநிடதமும் "விப்ரஸ்ய ப்ருஹத꞉=(பரமேசுவரன்) பெரிய பிராமணன்" என்று கூறி உண்

மைகிறுவியது. சராசரப்பிரேரகனுகிய பரமசிவத்தின் திவ்வியநாமங் களிலொன்ருகிய "பர்க்கன்" என்னும் பெயரும் அளவில் பெருமைபெற்ற ஸ்ரீகாயத்திரி மகாமந்திரத்தில் பிராம்மணத்துவ காரணமாய் நிற்றலின் அந்தணர்கள் யாவருக்குங் குலதேவதை அம்புலியணிந்த பிரானே யென்பது ஆரணங்களின் முடிந்த கருத்தாம். ஆதலினன்றே "அந்தணர்தஞ் சிந்தையானை" என்று திருநாவுக்கரசுசுவாமிகளும் திருவாய்மலர்ந்தருளினுர்கள். ஆகவே பிராமணர்கள் வேறுகடவுளரைப் பரமபதியாக வழிபடுதல் விசாரக்குறைவும் மதாபிமானமுமேயாம். ஏனைய கடவுளரை ஒவ்வோர் கர்மங்களில் ஒவ்வோர்பயனைக்கருதி வழிபடவேண்டியது வேதசம்மதமாயினும் பிறவிப்பிணிக்கு அச்சமுற்றயாவரும் பரசிவ சரணுகதியே பரமதாரகமாகக் கொள்ளல்வேண்டும். (உச)

சாந்திரனுகி=சாஸ்திரபோதகனுகி. சாஸ்திரமென்னுஞ்சொல் லேத்தாதுவின்படி பொருள்கூறின்,சாஸ்=அருள்புரிவது,திர=காப்பது, அதாவது ஆத்மாக்களைநறியகட்டளைகளால் அருள்வயப்படுத்திக் காப்பது என்றுபொருள்படும்.வேதகர்த்திருத்துவம்,வேதவேத்தியத்துவம்,வேதஜ்ஞத்துவம்முதலிய எல்லாப்பெருமைகளும் சிவபெருமானிடத்தே இயல்பாயமைந்துள்ளன. "வேதை ரநேகை ரஹமேவ வேத்யோ-வேதாந்த க்ருத் வேத் விதேவ சாஹம்=வேதங்களெல்லாவற்ருலும் அறியற்பாலன் நானே-வேதங்களை வெளியிட்டவனும் நானே-வேதங்களை யறிந்தவனும் நானே" என்று கைவல்லியோபநிடதமும், "ஈசானஸ் ஸர்வ வித்யாநாம்=ஈசானன் சர்வவித்தைகளுக்கும் நாயகன்" என்று தைத்திரீயோபநிடதமும் நரசிம்மதாபநியோபநிடதமுங் கூறிப்போந்தன. முனிவர்கோமானுகிய வியாசமுனிவரும் "சாஸ்திர யோநித்வாத்=சாஸ்திரகாரணனுதலின்" என்னுஞ் சூத்திரத்தால் ஈசானனே சாத்திரங்களை வெளியிட்டவரென்று நன்குநிரூபித்துள்ளார். சாத்திரம் நாதரூபமா யிருத்தலால் நாதரூபிணியாகிய உமாதேவி பங்கனே சாத்திரனெனச் சொல்லப்படுவான். பிரமவித்தையின் சுவதந்திரதேவதை உமாதேவியே யென்பது கௌரி என்னும் நாமத்தால் விளங்கும். கோ=சத்தம் அல்லது ஒலி, கௌரி=நாதத்தின் அபிமான தேவதையாகிய உமாதேவி. அவரே பிரமவித்தியாதேவியெனச் சொல்லப்படுபவர். அந்தத் தேவியாரின் ஆண்மைபூண்டே திருமாலானவர் அர்ஜுனனுக்குப் பிரமவித்தையென்னுங் கீதையை வெளியிட்டாரென்பது பிரமநிஷ்டாபரர் யாவருக்கும் ஒப்பமுடிந்த துணிபாம். "யாஉமா ஸாமஹாவிஷ்

ணு:=எவள் உமையோ அவள் மகாவிஷ்ணு" என்னும் வேதவசனமே இவ்வுண்மையினை நிலை நிறுத்தும். அன்றியும் உமாதேவியினது புருஷாம்சம் பிரகிருதி ரூபமாகிய விஷ்ணுவென்று சர்வவேதவேதாந்தங்களும் நிச்சயித்துக் கூறுகின்றன.

இஃதிங்ஙனமிருக்க, சுவேதா சுவதரோபநிடதமானது "எவன் பிரமதேவனை முதலில் சிருஷ்டித்தான்-எவன் அவனுக்கு வேதங்களையுபதேசித்தான்—அந்த ஆத்மபுத்திப்பிரகாசனுன தேவனை மோட்சத்தை விரும்பி யான்சரணமடைகின்றேன்" என்னும் பொருள் விளங்க "யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்-யோவைவேதாம் ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை-தம்ஹதேவ மாத்மபுத்தி ப்ரகாசம்-முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே" என்று கூறி சர்வான்மாக்களுக்கும் உய்யும்நல்வழி காட்டியது. அந்த வாய்மையையே உபப்ரஹ்மணமும் "ஈசானஸ் ஸர்வவித்யாநாம் ஸயேவாதி குருர்புதா:-தஸ்ய சிஷ்யோ மஹாவிஷ்ணுஸ் ஸர்வஜ்ஞான மஹோததி:=ஈசானன் சர்வவித்தைகளுக்கும் ஆதி குரு-ஓபண்டிதர்காள்! அவருக்குச சீடராகிய மஹாவிஷ்ணு சர்வஞானக்கடலாம்" என்று நிரூபித்தது. ஸ்ரீதாயுமானசுவாமிகளும் "விஷ்ணு வடிவான ஞானகுருவே" என்று கட்டளையிட்டருளினர். மேலும்சிவஞானசித்தியும், "ஆரண மாகமங்க ளருளினு லுருவுகொண்டு-காரண னருளாலுகிற் கதிப்பவரில்லையாகும்-நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நாகர்க்கெல்லாஞ்-சீரணி குருசந்தானச் செய்தியுஞ் சென்றிடாவே" என்று புகழ்த்தமையால் உலகத்திலுள்ள ஒவ்வொரு சமயத்துக்கும் ஒவ்வொரு குருவுளரேனும் சமயநூல்களெல்லாவற்றினுந் தலைமையாகிய வேதாகமசாத்திரங்களைக் குருபரம்பரையின்கண் வைத்த சிவபெருமானொருவரே வைதிகஞானயோக ஆதிகுருவாம். அவரிடந்தோன்றியபிராஹ்மணர்கள் வேறு பெயரால் அழைக்கப்படாது குருக்களென்னும் ரூடிப்பெயரால் அழைக்கப்படுவதே போதுமான சான்றாம். அவர்களை ஆதிசைவரெனவும், சிவத்விஜரெனவும், சிவவேதியரெனவும், சிவப்பிராஹ்மணரெனவுஞ் சொல்லப்படுவர். அவர்கள் ஏனையோர்போல் ஆச்சிரமமுதலிய காரணங்களாலன்றி ரூடியாற் குருக்களென்னுந் திருநாமத்தைப் பெற்றவராதலின் பொதுவகையால் யாவருக்கும், சிறப்புவகையால் சைவருக்கும், சிவபிரானைப் போலவே பிரதம ஆசிரியராவர். (உ௬)

அழகர்திருவுரு-நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும்=அழகமர்ந்த திருமேனியில் திருவெண்ணீற்றுக்கொடியை உயர்த்திக்காட்டி

யும். திருவெண்ணீறாகிய பஸ்மம் ஆன்மாக்களின் தீவினைகளனைத்தையும் நீறுபடுத்தலால்நீறெனவும்,அழியாச்செல்வமருளலால்விபூதியெனவும், ஆன்மாக்கடோறுங்கலந்துள்ள மலமாசைக் கழுவுதலால் க்ஷாரமெனவும், அறியாமை யழியும்படிச்செய்து அநுபவஞானமாகிய சோதியைத்தருதலால் பசிதமெனவும், ஆன்மாக்களுக்குப் பூதம், பிரேதம், பிசாசம்,பிரமராக்ஷசம், அபஸ்மாரம்முதலானவைகளாலுண்டாகுந் துன்பத்தை யொழித்து இரட்சிப்பருளலால் இரட்சை அல்லது காப்பு எனவும்பெயர்பெறுமென்று "பஞ்சபிர்நாமபிர்பிருஸ் ஸமைச்வர்ய காரணத்பூதி:" என்றற் றொடக்கத்து மந்திரங்களில் பிருஹஜ்ஜாபாலோபநிடதம் நன்கு விளக்கியுள்ளது. வேதங்கள் நான்கும் சிவபெருமானொருவரையே த்யேயப்பொருளாக அறுதியிட்டபடி திருவெண்ணீறாகிய பஸ்மத்தையும் ஞானச் சின்னமாகவும சிறந்த தவவேடமாகவுங் கூறியுள்ளன. இந்தத்திருவெண்ணீறு வைதிகமென்பது மாலயன்முதலான கடவுளர்யாராலும் மறுக்கவொண்ணாத பரமசித்தாந்தமாம். இதனை உத்தூளனமாகவுந் திரிபுண்டரமாகவுந் தரித்தல்வேண்டும். திரிபுண்டரமாவது மூன்றுரேகைகளாகத் தரித்தல். இம்மூன்று ரேகைகளின் சொரூபங்களையுணருமிடத்து பதி, பசு, பாசமென்னுந் திரிபதார்த்தங்களையும், அகார உகார மகாரமென்னும் வியஷ்டிப் பிரணவத்தையும், ரூபம் ரூபாரூபம் அரூபமென்னும் மூன்றுவடிவங்களையும், சிருஷ்டிதிதி சம்ஹாரமென்னும் முத்தொழில்களையும், இச்சாஞானக்கிரியையென்னும் முச்சத்திகளையும், மற்றுமுள்ளவைகளையும் உணர்த்துவனவாம். திரிபுண்டரத்தில் மேலாக விளங்கும் ரேகை சாமவேத சொரூபமாகவும்,நடுவிலுள்ளரேகையஜுர்வேதசொரூபமாகவும்,அடியிலுள்ளரேகைருக்வேதசொருபமாகவும், சொல்லப்படுகின்றன. இந்தத் திரிபுண்டரமாகிய மூன்றுரேகைகள் மும்மலம். முக்குற்றம், முக்குணம்,முக்கரணம்,முச்சரீரம், முக்காலம், முச்சுட்டு. முப்பிறவி, முப்பதவி, முத்தாபம்,மூவினை, மூவுலகம், மூவிடம் இவைபோல்வன எல்லாச் சார்புகளையும் அறவேகெடுத்து ஞானமேற்றி யுண்டாகும் வண்ணம் மேனிலையாய பெரும்பேற்றைத் தெரிவிக்கும் மூன்றுகொடிகள்போல் நெற்றியில் நிமிர்ந்து விளங்கலால் நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும் எனக் குறிப்பிக்கப்பட்டது. திருவெண்ணீறானது நெற்றியினிடத்து மூன்று கொடிகள்போல் நிமிர்ந்து என்ஞான்றும் பிரகாசிக்கும்படி சர்வாத்மாக்களுடைய நெற்றிகளும் நெடுமையாகப் படைக்கப்படாது திரிபுண்டரத்துக்கியையக் குறுக்காகச் சமைக்கப்பட் டிருத்தலே போதுமான நிதரிசனமாம். ஆதலினன்றே தைத்திரீயோபநிடதமானது

"சத்யாந்ந ப்ரமதிதவ்யம்-தர்மாந்ந ப்ரமதிதவ்யம்- குசலாந்ந ப்ரமதிதவ்யம்- பூத்யைந ப்ரமதிதவ்யம்- ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம்ந ப்ரமதிதவ்யம்= சத்தியத்தினின்றும் நழுவுதல் கூடாது. தர்மத்தினின்றும் நழுவுதல் கூடாது. தன்னைக்காப்பாற்றுங் காரியத்தினின்றும் நழுவுதல்கூடாது. பூதியணிதலினின்றும் நழுவுதல் கூடாது. வேதத்தை ஓதல், ஓதுவித்தல் இவைகளினின்றும் நழுவுதல் கூடாது" எனப்பலவிதிகளையும் விதித்து பஸ்மதாரணமும் யாவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதென்று ஸ்பஷ்டமாய்ப் புகழ்ந்து துதித்தது. ஈண்டு பூதியென்னும் பதத்துக்குத் திரவியம் என்று அர்த்தம்பண்ணி இடர்ப்பட்டனர்சிலர். "பூதியினைத் தான்கொடுத்த லாற்பூதி யென்னும்பேர்-ஓதுவர் வெண்ணீற்றினுக் கென்றோர்" என்னுந் தத்துவஞானியின் வாக்கை யூகித்துணர்க. இன்னம் இதன்விரிபொருளை ருக-வது விஷய சூசனத்திற் காண்க. (உகூ)

பரம்பரத்துய்ப்பவன்= மிகவும் மேலான முத்தியுலகத்தில் வைப்பவன். ஈண்டு முத்தியுலக மென்றது துரீயபிரம சிவலோகமென்னுஞ் சோமலோகமாம். இதுவே விஷ்ணுபதத்தின் மேலாய சிவலோகமென்னும் பொருள்பட "விஷ்ணோஃ பரமம்பதம்" என்று தைத்திரீயோபநிடதங் கூறிற்று. அன்றியும் "ஞேயம் விஷ்ணு பதாதூர்த்வம் திவ்யம் சிவபதம் ஜகத்=விஷ்ணுபதத்தின் மேலாயறியப்படுவது மகத்தாகிய திவ்விய சிவபதமாம்", என்று சிவதருமோத்தரமு முரைத்தது. என்னை! "விஷ்ணோஃ பரமம்பதம்" என்னும் வசனத்துக்கு விஷ்ணுவினுடைய பரமபதமென்று பொருள்கொண்டால் குற்றமென்னையெனின் கூறுதும். அதர்வசிகோபநிடதமானது "சர்வதேவாஸ் ஸம்விஸந்தீதி விஷ்ணுஃ=சர்வதேவர்களும் ஒடுங்குமிடமாதலால் விஷ்ணு" என்று அவ்விஷ்ணுவின் பெயரைச் சிவபரமாக நிரூபித்தமையால் அண்டத்தில் உமாகாந்தனுடைய சோமலோகமே பரமபதமாம். அதை யடைந்தவர்களே மீளப்பிறப்பதில்லை. அல்லதூஉம் கைவல்லியோபநிடதமானது "சாக்கிரம், சொற்பனம், சுழுத்தியென்னும் மூன்று ஸ்தானங்களினும் முறையே எது புஜிக்கத்தக்கதோ, எவன் புஜிக்கிறவனோ, எதுபோகமோ அவைகளுக்கு விலட்சணமாயும், சாட்சியாயும், சின்மாத்ரமாயுமுள்ளநான் சதாசிவன்" என்னும் பொருள்போதர "த்ரிஷு- தாமஸு-யத்போஜ்யம்-போக்தா போகச்சயத்பவேத்-தேப்யோவிலக்ஷ ஸ்ஸாக்ஷீ-சிந்மாத்ரோஹம் ஸதாசிவஃ" எனவும், பிரமோபநிடத

மானது பிரமம் நான்குபாதமுடையதாய் விளங்குகின்றதெனவும், சாக்கிரத்தில் பிரமனும், சொற்பனத்தில் விஷ்ணுவும், சுழுத்தியில் உருத்திரனும், துரீயத்தில் அழிவற்றதும், ஆதித்தியனும், விஷ்ணுவும், ஈசுவரனுமாயுள்ளதெனவும் பொருள்பட "தந்த்ர சதுஷ்பாதம் ப்ரஹ்ம விபாதி-ஜாகரிதே ப்ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணுः- ஸுஷுப்தௌருத்ரஸ் துரீயமக்ஷர-மாதித்யோ விஷ்ணுஸ்சேஸ்வரச்ச" எனவும் கூறிப்போந்தன. ஈண்டு பிரமோபநிடதத்திற் சொன்ன விஷ்ணுசப்தம் ஈசுவர சப்தத்துக்கு விசேஷணமாகக் கொள்ளப்பட்டுள்ளது. அப்படியேன் கொள்ளவேண்டும். விஷ்ணுவையே துரீயமூர்த்தியாகக் கொள்ளலாகாதோ வெனின் அப்பொழுது சொற்பனஸ்தானத்திலுள்ள விஷ்ணுவுக்கும் துரீயஸ்தானத்திலுள்ள விஷ்ணுவுக்கும் பேதங்கூறவேண்டும். அங்ஙனங்கூறவோ வைணவமதம் இடந்தராது. இரண்டாவது ஸ்தானத்திலுள்ள விஷ்ணுமூர்த்தி மூன்றாவது ஸ்தானத்திலுள்ள உருத்திரமூர்த்தியிற் குறைந்தவரும், நான்காவது ஸ்தானத்திலுள்ள துரீயமூர்த்தி, மூன்றாவது மூர்த்தியைப்பார்க்கிலும் உயர்ந்தவராயு மிருக்கின்றமையால் தாழ்வு உயர்வுகளாகிய இருதன்மைகளை ஒரே மூர்த்தியினிடஞ் சேர்த்தல் முற்றும் அசம்பாவிதம். ஆதலின் இரண்டாவது விஷ்ணுவேறு, நான்காவது விஷ்ணுவேறு என்பதே திண்ணம். இந்தச் சித்தாந்தத்தை வைணவர்கள் ஒருபோதும் ஒப்பார்கள். ஆகவே வைதிகவழி சார்ந்துய்யும் வைதீகசைவர்களுக்கே துரீயத்துவம் நிலைபெறுயிருக்கின்றமையானும், பிரம விஷ்ணுருத்திர பதங்களுக்குமேல் சிவபதம் ஒன்றுளதெனக் கொண்டமையானும், "ப்ராணம் மநஸி ஸஹகாரணைஸ்ஸம ப்ரதிஷ்டாப்ய: த்யாதா ருத்ர:=பிராணன்களை இந்திரியங்களுடன் மனத்திற்சேர்த்து தியானிப்பவன் ருத்திரன்" என்று அதர்வசிகோபநிடதப் பிரமாணவாயிலாகச் சங்காரருத்திரனை வேறு தேவர்களோடு சேர்த்து அவன் எழுந்தருளியிருக்குங் கைலாயத்தை ஊர்த்துவலோகங்களில் ஒன்றாக ஓதுக்கினமையானும், ஈண்டு சோமலோகமென்றது பிரகிருதி வர்ஜிதமான மகாசிவலோகமாம். இதனையே கைவல்லியோபநிடதமும், முண்டகோபநிடதமும், கடவல்லியுபநிடதமும் "தேப்ரஹ்மலோகேஷு பராந்தகாலே பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே=அவர்கள் (ஞானயோகிகள்) மகாசங்கார காலத்தில் பிரமலோகமென்னுஞ் சிவலோகத்தில் பராமிர்தராய்ப் பரமுத்தியிற்றலைப்படுவர்" என்று புகழ்ந்தன. இன்னும் இப்பிரமலோகத்தின் பெருமையினை (௨௧), (௪௦) வது விஷயசூசனங்களில் விளக்கியுள்ளாம்-ஆண்டு கண்டுதெளிக. (௨௭)

ஆதிமூர்த்திகட் கருள்புரிந்தருளிய தேவதேவன்=முதன்மையான மும்மூர்த்திகட்குந் திருவருள் சுரந்தருளிய தேவதேவனாகிய மகாதேவன். கிருத்திய கர்த்தாக்களாகிய பிரமன், விஷ்ணு. சிவன் என்னுங் குணமூர்த்திகள் மூவரும் உமாசகாயரும், பரமேசுவரரும், திரிநேத்திரரும், நீலகண்டரும், சந்திரசேகரரும், பராநந்தத் தாண்டவருமான பரசிவப்பிரபுவின் றிருவருள்பெற்றவரெனவும், இவர்கள் தங்கள் தங்கள் தொழில்களை நடாத்துவதற்கு அவரே பரமகாரணரெனவும், அவரொருவரே யேவுதற்கர்த்தா, இவர்களியற்றுதற்கர்த்தாக்களெனவும் அவர் சங்கற்பஞ் செய்யாதுழி இவர்கள் விசுவகாரியங்களை நடாத்த சக்தியற்றவர்களெனவும் இதனால் உணரற்பாற்று. ஆகவே வேதமானது மகாதேவன் என்னுஞ்சிறப்பு நாமத்தைச் சிவனுருக்கே சமர்ப்பித்தது. அதர்வசிரோபநிடதமானது "இனியெதனால் மஹாதேவனெனப் படுகின்றான்-எவன் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு மகத்தாகிய பரமாத்தும ஞானயோக ஐசுவரியத்தின் பொருட்டுப் பூசிக்கப்படுகின்றான். அதனால் மஹாதேவன் எனப்படுகின்றான்." என்னும் பொருள் விளங்க "அத அஸ்மா துச்யதே மஹாதேவ:-ஸர்வாந் பாவாந் பரித்யஜ்ய-ஆத்மஜ்ஞான யோகைஸ்வர்யே மஹதி மஹீயதே-தஸ்மா துச்யதே மஹாதேவ:" என்று கூறிற்று. இதரதேவர்களைப் பூசிப்பதால் அளவுள்ளவானந்தங் கைக்கூடுமென்றும், மகாதேவனை வழிபடுவதால் அளவிலாவானந்தமாகிய பரமாத்தும ஞானயோக ஐசுவரியம் வந்து பொருந்துமென்றும், இந்தச்சுருதியால் வியக்தமாகியது. ஆதலின் வேதசிரசின் இரகசியக்கருத்தாவது வேறுதேவர்களைப் பூசிக்கும் பேதைமையையொழித்துவிட்டு மகாதேவனொருவரையே சந்ததமும் பூசிக்கவேண்டுமென்பதாம். இவ்வுண்மையினை "வாதுசெய்துமயங்குமனத்தரா-யேதுசொல்லுவீராகிலுமேழைகாள்-யாதோர் தேவரெனப் படுவோர்க்கெலாம்-மாதேவனலாற் றேவர்மற்றில்லையே" என்னுந் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாக்கானும், "காண்பவன் சிவனேயானு லவனடிக் கன்புசெய்கை-மாண்பற மரன்றன்பாத மறந்துசெய் யறங்களெல்லாம்-வீண்செயல்" என்னுஞ்சிவஞானசித்திச் செய்யுளானுந் தெளிக. இருக்குஜயம் போக்கிய சைவசிகாமணியாகிய ஸ்ரீஞானசம்பந்தச் செல்வரும், "திருச்சிற்றம் பலமேய-செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே" என்று திருவாய்மலர்ந்தருளினார். (உஅ)

கைலை=நித்தியமான மகாகைலாசம்-இதுவே நிரதிசயாநந்தவின்பமநுபவிக்குமிடம். கைலாசமானது உத்தரகைலாசம், தக்ஷிண

கைலாசம், ஊர்த்துவலோககைலாசம், மகாகைலாசம் எனப்பலவகைப்படுதலின் காரியமூர்த்தியாகிய உருத்திரருடை கைலாசத்துக்கும் துரீயமூர்த்தியாகிய மகாசதாசிவருடைய மகாகைலாசத்துக்கும் பேதம்பெரிதெனவுணரற்பாற்று. எக்காலத்தும் எவ்விடத்தும் வேறு எப்பொருளையு முணர்த்தாத பேராற்றல்வகித்த திரிலோசனன், நீலகண்டன், உமாபதி, விருபாட்சன் என்றற்றொடக்கத்தனவான திவ்வியநாம வைரவாணிகளைப்பெற்ற துரீயசிவன் எழுந்தருளியிருக்கும் சாசுவித ஸ்தானமே இதுவாகும். இதனையே திருவள்ளுவநாயனார் "வானோர்க்குயர்ந்தவுலகம்" எனவும் "வானொன்னும்வைப்பு" எனவும், "நிலமிசை" எனவுங் கூறியருளினார். அடியார்களையாட்கொள்ள அருட்டிருமேனி தாங்கிவரும் அம்புலிசூடியவெம்பெருமான் அசலனாதலின் அவனெழுந்தருளியிருக்குமிருப்பிடமும் அசலமாகவே மறைமுடிமுழக்கிஃது. சுவேதாசுவதரோபநிடதமும் கிரியின்மேலிருந்து உலகத்துக்குச் சுகமளிக்குங்காரணத்தால் சிவபெருமானைக் "கிரிசந்த"என்றுதுதித்தது. கிரி=மலை, சம்=சுகம், த=செய்பவன்-எனவே மலையினிடமிருந்து சுகமளிப்பவன் என்பது பொருள். பஸ்மஜாபாலோபநிடதமும் "கைலாஸ சிகராவாஸ மோங்கார ஸ்வரூபிணம்=கைலாச சிகரத்தில் வாசஞ்செய்பவரும், ஓங்காரஸ்வரூபரும்" என்று கைலாயத்தையும் அதன்கண்வசிப்பவரையும் புகழ்ந்துபேசியது. (உ௬)

---

## திருவண்டப்பகுதி.

அண்டப் பகுதியினுண்டைப்பிறக்கம் .....சிறியவாகப் பெரியோன்=இல்லத்தில் நுழைகின்ற சூரியகிரணபத்திகளில் அளவற்ற அணுக்கூட்டங்கள் காணுமாறுபோல் அசித்துப்பிரபஞ்சத்தினது எண்ணிறந்தகோடி அண்டங்கள் சிவபரமாத்துமாவின் முன்னர் அணுக்களாகத்தோன்றுமென்பது இதனால் வெளியாயிற்று. பல்லாயிரகோடியண்டங்களும் அணுக்களாகும்படி பெரிதானவரும், அணுக்களெல்லாம் அண்டங்களாகும்படி சிறிதானவரும், சிவபெருமானொருவரே எனப்பொருள்கொண்டு தைத்திரீயோபநிடதமானது "அணோரணீயாந் மஹதோமஹீயாந்" என்று தொடங்கி அவரை "மஹிமாநமீசம்" மகிமாதி சப்தத்துடன் கூடிய ஈசசப்தத்தால் விளக்கி, "எவர்மேலானவரோ அவர் மகேசுரர்" என்றுபொருள்பட 'யஃபரஸ் ஸமஹேஸ்வர:" என்று முடிவுபடுத்தி, அம்மகேசுரர் "ருதம் சத்யம் பரப்ரஹ்மம் புருஷம் க்ருஷ்ண பிங்களம்—ஊர்த்

வரேதம் விரூபாக்ஷம் விஸ்வரூபாயவை நமஃ=மாறுபடாதமெய் யினரும், சத்தியரும், பரப்பிரமமும், புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்வவீரியரும், விரூபாக்ஷரும், விசுவரூபருமாயுள்ளார்க்கு நமஸ்காரம்'' என்று துதித்து சிவபரமாத்மாவினது தடஸ்தலட்சணத்தை விசதப்படுத்தியது. அன்றியும் அவ்வுபநிடதமே "அம்பிகாபதயே" "உமாபதயே" "பசுபதயே" "ப்ரஹ்மாதிபதிர்" "ப்ரஹ்மணோதிபதிர்," என்றுகூறி சர்வபிராமணகுல தேவதையாகிய உமாகாந்தன் மகிமையினை விளக்கிற்று. இவ்வுண்மையினை யறியும் புண்ணியமில்லாதார் பிரமனுடைய நெற்றியிலே தோன்றிய குணருத்திரனைத் துரியமூர்த்தியாகிய சிவபெருமானென மயங்கி அவனே சேதன கோடிகளில் ஒருவனுகப் படிக்கப்பட்டானென்று வசைமொழி கூறி மாளாநிற்பர்: ஐயகோ! இது வேதவியலறியாதார் கொள்கையாம். அகத்தில்சத்துவமும் புறத்தில்தாமதமும் உபாதியாகப்பெற்ற சிவன்வேறு அருட்பராசத்திசமேத சிவபிரான் வேறு என்பதே மறைமுடிகளின் முடிந்த தீர்வையாம். சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமனுக்கு உள்ளும்புறமும் ரஜோகுணமும், ஸ்திதிகர்த்தாவாகிய விஷ்ணுவுக்கு உள்ளும்புறமும் முறையே தமசும், சத்துவமும், சம்ஹாரகர்த்தாவாகிய உருத்திரனுக்கு உள்ளும்புறமும், முறையே சத்துவமும் தமசும் குணங்களாக உள்ளன வென்று ஸ்மிருதிபுராணேதிகாசங்கள் யாவும் ஒருங்கெழுந்து கண்டோக்தியாய்க் கோஷிக்கின்றமையால், பகவற்கீதையில் "நிஸ்த்ரைகுண்யோ" என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறியபொருள் குணமூர்த்திகளைக் கடந்த துரியசிவமேயாம்-அந்தச் சிவத்தையே "ஈஸ்வரஸ் ஸர்வ பூதாநாம்" என்று மீண்டும் அவரே வற்புறுத்தியருளினர். (௲0)

ஒருவ னென்னு' மொருவன் காண்க=ஒருவனென்னுஞ் செந்தமிழ்ப்பெருவழக்கு சிவபெருமானுக்கே கூறப்பட்டுள்ளது. பிருதிவிமுதல் நாதமீறுகச் சொல்லப்பட்ட தத்துவதாத்விக சமூகங்கள் யாவுஞ் சங்கரிக்கப்படும் மகாபிரளயத்தில் அழியாது எஞ்சிநிற்பவன் சிவபெருமானொருவனே. ஆதலின் "ஈறிலாதவனீச னொருவனே" எனவும், "ஒருவனு யுலகேத்த நின்றநாளோ" எனவும் ஸ்ரீவாகீச மூர்த்திகள் திருவாய் மலர்ந்தருளினார்கள். மகாசங்காரகாலத்தில் கிருத்திய கர்த்தாக்களாகிய விஷ்ணுவாதி தேவர்கள் தத்தமாற்றலோடு நிலைபெற்றிருக்க மாட்டார்களோ வெனின் அப்பொழுது மகாப்பிரளயமென்பதில்லையாம். சங்காரகர்த்தா சிலவற்றை யொழித்துஞ் சிலவற்றை நிறுத்தியுஞ் சங்கரிப்பானுமல்லன். சர்வ சங்கார

காலத்தில் உருத்திரர் ஒருவர் தவிற இரண்டாவது வஸ்துவுக்கு இருப்பே கிடையாதென்றும் பிரமன், விஷ்ணு, சூரியன், அக்கினி, சந்திரன், நட்சத்திரங்களாகிய ஒருபொருளும் இல்லையென்றும் பொருள்பட "ஏகயேவ ருத்ரோ நத்விதீயாய தஸ்தே-நப்ரஹ்மா நவிஷ்ணுர் நசூர்யோ நாக்னி சந்த்ர தாரகா:" என்று ஜாபாலோபநிடதங் கூறிற்று. ஈண்டு உருத்திரர் என்றது சர்வசங்கார மூர்த்தியாய்ச் சம்சார பந்தத்தைச் சேதிக்கும் பேராற்றல் வகித்த பிறப்பிலிப்பிரானே யன்றி காலருத்திரனல்ல. மறைமுடியானது "ஒருவனே" என்று தேற்றியும் போதாது "இரண்டாவது இல்லை" என்றுங் கூறிய சொன்னயத்தையும் யூகித்தறிக. என்னை! மகோபநிடதமானது. "ஏகோஹவை நாராயண ஆஸீத்-நப்ரஹ்மா நேசாந:=நாராயணன் ஒருவனே யிருந்தான், பிரமனிருந்திலன்; ஈசானன் இருந்திலன்" என்று கூறியதே அதன்கருத்து யாதெனின் இங்கு குறிக்கப்பட்ட பிரளயகாலத்து நாராயணனது இருப்பு ஸ்தூல சிருட்டிக்குப் பூர்வமுஞ் சூக்ஷ்ம சிருட்டிக்குப் பின்னுமென்றே அறியக்கிடக்கின்றது. ஏனெனின் இந்த வசனத்தில் நாராயணனும், பிரமனும், உருத்திரனும் பிரஸ்தாபிக்கப்பட்டார்களே யன்றி துரீயசிவப்பிரஸ்தாபங் கிடையா. கற்பபேதங்களில் ஒருகற்பத்தில் பிரம ருத்திரர்களைநோக்க நாராயணனுக்கு ஆதிக்யமுண்டென்பது யாவருக்குஞ் சம்மதம். "நப்ரஹ்மா நேசாந:" என்ற வாக்கியத்தோடு "நவிஷ்ணு:" என்று சேர்த்து சுருதி கூறியிருப்பின் நாராயணனுக்குத் துரீயத்துவமும் ஒருவனென்னுஞ் சிறப்புப்பெயரும் நிலைபெறும். அங்ஙன மில்லையாதலின் பிரமன், ஈசன், இவர்களுக்கு மேலாகத்துதிக்கப்பட்ட நாராயணன் ஆகிய மூவர்களும் மகாப்பிரளய காலத்தில் சங்கரிக்கப் படுவார்களென்பதே திண்ணம். இந்த மகோபநிடதமே வேறோரிடத்தில் "ப்ரஹ்மாவிஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வே வா பூதஜாதய:-நாச மேவாநுதா வந்தி ஸலீலா நீவ பாடபம்=பிரம விஷ்ணு ருத்திரர்களும், ஏனைய வெல்லாவுயிர்களும் பிறந்தழியும் இயல்பின-நெருப்பில் நீர்த்துளிபோல்" எனவும் "ஸசிவஸ்ஸ-ஹரிர்விதி:=அவனே சிவன், அவனே அரி, அவனே பிரமன்" எனவுங் கூறிப் போந்தமையால் இம்மூவர்களுக்கும் மேலான துரீயசிவனே பிரளயகாலத்தில் சேடித்து நின்ற ஒருவனென்னும் பெயருக்குரியவனென்பது சுருதிமுடியின் இருதயமாயிற்று. அன்றியும் அதர்வசிரோபநிடதமும் "இனியெதனா லொருவனெனப் படுகின்றான்-எல்லாவுலகங்களையுந் தம்முள் ளொடுக்கிக் கொள்ளுகின்றான்-எப்பொழுதுஞ் சிருஷ்டிக்கின்றான்-சங்கரிக்கின்றான்-காக்கின்றான்-அத

னுலே ஒருவனெனப் படுகின்றான்." என்னும் பொருளுண்டாக "அத அஸ்மாதுச்யதயே." என்றதற்றொடக்கதது வசனத்தில் நன்குநிரூபித்துள்ளது. (௩௧)

குவளைக் கண்ணி கூறன்=நீலமலர்போலுங் கண்களையுடைய உமாதேவியைக் கூறாக வுடையன். அகண்டாகார சச்சிதாநந்த சொயம்பிரகாசமாய்த் தன்னுண்மையில் நிற்கும் அநாதிமுத்த சித்துருவாகிய பரமசிவம், மாயையில் ஸ்வரூபசத்தாய் அடங்கியுள்ள பசுபாசங்களை நாமரூப வேறுபாடுகளுக்குரிய தூலரூபத்தோடு வெளிப்படுத்து முகத்தால், தமது அருட்சத்தியை முதலில் தோற்றுவித்து, இச்சாஞானக்கிரியா சொரூபனாய், பரமகருணாமயத் திருமேனிதாங்கி, இந்திரதனுசுபோல், நீலமும் பொன்மையும் பெற்று, அர்த்தநாரீசுவர வடிவமாய்ச் சோமலோகத்தில் எழுந்தருளியிருக்கும். இதுவே பரப்பிரமத்துக்குத் துரீய பெரிய வடிவமாகும். இந்தப்பெரிய வடிவத்தையே சகல வநர்த்தங்களையு மொழித்து சகல நற்பயன்களையுங் கைகூடச்செய்புஞ் சிந்தாமணியை நிகர்த்த பொய்யாமொழியாகிய வேதங்கள் "அம்பிகாபதயே" "உமாபதயே" "உமாஸஹாயம்" எனப் பற்பல நாமங்களால் ஓயாமல் துதித்துக்கொண்டு இளைப்பாறும். சிவம் சத்தியோடு சேர்ந்தாற்றான் எத்தொழிலையுஞ்செய்யவல்லது என்னும் பொருள் விளங்க "சிவமெனும்பொருளு மாதிசத்தியொடு சேரினெத்தொழிலும் வல்லதாம்" என்று சங்கராசாரியர் அருளிச்செய்தனர். ஸ்ரீதாயுமானசுவாமிகளும் "இடமொருமடவாளுலகனைத் தீந்திட் டெவ்வுலகத்தையு மீன்றுந்-நடமுறுமகிலமடங்குநாளம்மை தன்னையு மொடுக்கிவிண்ணெனவே." என்று கட்டளையிட்டருளினர். யஜுர் வேதத்தைச்சார்ந்த உருத்திரஹ்ருதயோபநிடதமானது "வாமபார்ஸ்வே உமாதேவி." என்று அர்த்தநாரீசுவர மூர்த்தத்தையே புகழ்ந்துள்ளது. இது ஆண்பெண் என்னும் ஆன்மாக்கள் ஒன்றுபட்டுக் காதலித்து வாழும்பொருட்டதாக அகண்டாகார சிவம் தன்னிலெழுந்து அமைத்துக்கொண்ட கருணைவடிவமாம். இந்த வடிவமே சர்வான்மாக்களுக்கும் மோட்சப்பிரதாயகமாம். ஆதலினன்றோ பிருகஜ்ஜாபாலோபநிடதமும் "சிவசக்தியமிருதங்களின் ஸ்பரிசங் கிடைத்தால் மரணமேது" என்னும் பொருள்பட "சிவசக்த்யம்ருதஸ்பர்சே லப்தயேவ குதோம்ருதி:" என்று கூறி உண்மை வலியுறுத்திற்று. (௩௨)

எய்தினர்க் காரமு தளிப்போன்=தன்னை வந்தடைந்தவர்களுக்கு அரிய அமிர்தத் தன்மையை யளிப்பவன். அமிர்தம் என்னுஞ்

சொல் மரணமின்மை யென்று செம்பொருள் தருமாயினும் ஈண்டு மோட்சமென்னுஞ் சிவத்துவத்தையே அவாவிநின்றது. இதுவே சிவசாயுச்சியமாம். "ஈசனை யறிந்தவர்களுக்கு எல்லாப்பாசங்களும் ஒழியும்" என்பதாதி பலமந்திரங்கள் வேதாந்தங்களிற் கேட்கப்படுகின்றமையால் ஆணவமலச் சிதைவுடன் கூடிய சுத்தான்ம ஸ்வரூபமான சிவத்வாபிவியக்தியே அமிர்தமாம். அவிமுக்த ஜாபாலோபநிடதமானது "ஏதாநி ஹவா அம்ருதஸ்ய நாமதேயாநி-ஏதைர்ஹவா அம்ருதோ பவதி=இவைகளன்றே அமிர்தனுக்கு நாமதேயங்கள். இவைகளாலன்றே அமிர்தனுவான்" என்று சிவபெருமானுக்கே அந்நாமத்தை யெடுத்தோதியது. கைவல்லியோபநிடதமும் "சிவம் ப்ரசாந்த மம்ருதம் பிரமயோநிம்=சிவனாய், பிரசாந்தராய், அமிர்தராய், பிரமகாரணராய்" என்று அவ்வாறே கூறியுள்ளது. அமிர்தன்=நித்தியனாகியசிவன். எனவே மரணமென்ற ஜீவலிங்க மில்லாதவன் என்பது பொருள். மரணப் பிணியானது எஞ்ஞான்றும் பிறவிப் பிணியின் உடன்நிகழ்வதாதலால் பிறப்பிலிப்பிரானே அமிர்தனுவான். "அமிர்தத்தன்மை யென்ற மோட்சத்துக்குப் பிரபு ஈசானனே" என்பது போதர "உதா ம்ருதத் வஸ்யேசாநः" என்று மந்திரோபநிடதம் அறைதலால் மங்கைபாகனான சிவபெருமானே மோட்சதான சுதந்தர னென்பது தெற்றெனத் துணியப்பட்டது. அவ்வெம்பெருமானையுணர்ந்தவர்கட்கேபாசக்ஷயமும் முத்திப்பேறும் உண்டாமென்பது "அபாமஸோம மம்ருதா அபூம=உமாதேவியோடு கூடிய பரமசிவனைக் கண்டோம், அமிர்தர்களானோம்" என்னும் அதர்வசிரசின் மந்திரமே போதுமான சான்றாம்-அன்றியும் சுவேதாசுவதரோபநிடதமும் "ஸ-நிர்மலா மிமாம்சாந்தி மீசாநோ ஜோதி ரவ்யயः=அவ்வயனும், ஜோதிரூபனு மாயுள்ள ஈசானன்முற்றும் நிர்மலமான சாந்தியைக் (கொடுப்பானாக)" எனவும், "ப்ரதான க்ஷேத்ரஜ்ஞ பதிர் குணேசः- ஸம்ஸார மோக்ஷ ஸ்திதி பந்தஹேதுः= பிரதானத்துக்கும் (பாசத்துக்கும்), க்ஷேத்திரஞ்ஞனுக்கும்(பசுவுக்கும்), பதியாயுள்ளவரும், சம்சாரத்தின் பந்தத்துக்கும், ஸ்திதிக்கும், மோட்சத்துக்குங் காரணரா யுள்ளவரும், சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடைய ஈசரேயாம்" எனவுங் கூறிப்போந்தது. அமிர்தனென்னும் பெயரை நாராயணன் முதலியோருக்கு நாராயணோபநிடத முதலிய உபநிடதங்கள் குறித்தபோதினும்;அது சிவபெருமானுக்கே யுரிய இடுகுறிப் பெயராயிருத்தலால் சிவநாமதேய மென்பதே முடிந்ததுணியாம். காயத்திரி மாமந்திரத்தை அக்கினி, ஆதித்தன் முதலிய தேவர்கள்

வழிபாட்டில் ஆரணங்கள் விநியோகப்படுத்தினும் இறுதியில் அது பிரமமந்திரமே யாயிருத்தல்போல வேதங்களின் ஒவ்வொரு ருத்திரத்திலும் பரசிவமே அமிர்தபரப்பிரம ரூபமாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றமையால் அந்தச் சிவமே அமிர்தசப்தத்துக்குப் பொருளென்பது தேற்றம். அங்ஙனமே ஸ்மிருதி புராணேதிகாசங்களும் நிச்சயப் படுத்தியுள்ளன. (௩௩)

---

## போற்றித்திருவகவல்.

ஊழிமுதல்வ=பிரளயமுதல்வனே, பிரமாண்டப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மகாப்பிரளயம், பிரதம மகாப்பிரளயம் என்னும் ஐவகைப்பிரளயங்களில் இறுதிக் கண்ணதாகிய பிரதம மகாப்பிரளயத்தும் அழியாமல் நிலைபெற்று அந்தப் பிரளயத்தைச் செய்யும் முதல்வன் சிவபெருமானொருவனே. ஆதலினன்றே சுவேதாசுவதரோப நிடதமானது "எப்பொழுது இருள் (மகாசங்காரகாலம் உளதாயிற்றோ அப்பொழுது பகலுமில்லை இரவுமில்லை, சத்துமில்லை அசத்துமில்லை, சிவன் ஒருவர்மாத்திரம் உளராயினார் என்னும் பொருள்விளங்க "யதாதமஸ்தந் நதிவா நராத்ரி:-நஸந் நசாஸ்ச் சிவயேவ கேவல:" என்று கூறிப்போந்தது. இதனால் சிவன் என்னுஞ்சொல்லினால் உணர்த்தப்படும் பரம்பொருளே சிருஷ்டிக்கு முன்னுஞ் சங்காரத்துக்குப் பின்னும் உளதாகிய பரப்பிரமமென அறியக்கிடக்கின்றது- இதுவே "ஜந்மாத்யஸ்ய யத:= எங்கிருந்து இதன்பிறப்பு முதலாயின (உண்டாயிற்று)" என்னும் பிரம சூத்திரத்திலும் விளக்கப்பட்டது. தைத்திரீயோபநிடதமும் "எங்கிருந்து இவ்வுலகமெல்லாம் பிறக்கின்றனவோ, எதினின்று பிறந்தவை நிலையுறுகின்றனவோ ஒழியுங்கால் அவை எங்கே பிரவேசிக்கின்றனவோ அதனை யறியவிரும்பு- அதுபிரமமாம்" என்னும் பொருள்கொண்டு "யதோவா இமாநிபூதாநி ஜாயந்தே யேநஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்ய பிஸம் விசந்தி தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம" என்று கூறிற்று. அன்றியுங் கைவல்லியோபநிடதத்தில் "மய்யேவ ஸகலம் ஜாதம் மயிஸர்வம் ப்ரதிஷ்டிதம்-மயிஸர்வம் லயம் யாதி தத் ப்ரஹ்மா த்வய மஸ்ம் யஹம்=என்னிடத்திலிருந்தே எல்லாமுண்டாயிற்று, என்னிடத்திலே எல்லாம் நிலைத்தது, என்னிடத்திலே எல்லாமொடுங்குகின்றது. அந்த இரண்டாவதற்ற பிரமமும்யானே" எனவும், மந்திரோபநிடதத்தில் "யயேவைக தத்பவே ஸ்த்பவே

ச-யயேதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி=எவ்வொருவனே உலகத்தின் உற்பத்தியிலும், உபசங்காரத்திலும் உள்ளான்-எவர் இவனையறிவார் அவர் அமிருதராவார்” எனவும் எழுந்த சுருதிவசனங்களால் பிரபஞ்சத்தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும்பரமகாரணமாய பிரமலட்சணம் நன்கு உணர்த்தப்பட்டது. இந்தப் பிரமமே சிவபரம்பொருளென்னும் ஊழிமுதல்வனென்பது இன்னும் அனேக சுருதிமுகங்களாலுந் தெற்றென நிரூபிக்கப்படும். (௩௪)

ஆறுகோடி மாயாசத்திகள் வேறுவேறுதம் மாயைகள் தொடங்கின=இதனால் மாயாசத்தியின் வல்லபம் இனைத்தென்பது நாட்டப்பட்டது. ஆறுகோடி யென்பது ஓர்தொகையா யிருப்பினும் “அளவிறந்த” என்னும் பொருள்பட நின்றது. சாக்ஷாத் சிவபிரானை திருமால் நேரேதரிசித்தும் மாயாவல்லபத்தால் மயங்கி நீயாரெனக் கேட்டனரெனின் மற்றை யாரோ மாயையைக் கடக்கவல்லவர். மாயாவல்லபங் கூறுமிடத்து “கலையை மதிக்கும் புலவர்தமைச் சித்தர் குழாத்தைக் கடவுளரை-நிலையை மதிக்கு முனிவரரைத் திசைமாமுகனை நிரைவளையாச்- சிலையை மதிக்கு நெடியோனை விழுங்கியுமிழாத் திறன் மாயை” என்று பிரபுலிங்கலீலையும், “மாயவன் பிரமனீசன் யாரையு மயக்கஞ்செய்யுங்-காயமோ மாயையாறு லியாரி தைக் கடக்க வல்லார்” என்று வல்லளலார்சாத்திரமுந் தெளிவித்தன. உலகிற்கு உபாதான காரண மெனப்படும் மாயையின் சொரூபத்தை விசாரிக்கின் அழிவற்றதாயும், ஒருவருக்குந் தோன்றுததாயும், ஒன்றுயிருக்கிற நிலைமையினை யுடையதாயும், பிரபஞ்சமுண்டாவதற்கோர் வித்தாயும், ஜடமாயும், எவ்விடத்தும் வியாபகமுடையதாயும், மலரகிதனை பரமேசுவரனுக்குப் பரிக்கிரக சத்தியாயும், ஆன்மாக்களுக்குத் தனு கரண புவனபோகங்களாய் விரிந்தவோர்மலமாயும், என்றும் மயக்கத்தினைச் செய்வதாயு முள்ள இலக்கணங்களை யுடையதாம். இந்த மாயையாகிய யந்திரமென்னுஞ் சக்கரத்தை யடைந்திருக்கின்ற சகல பிராணிகளையும் தனது மாயையால் சுழற்றிக்கொண்டிருப்பவரும், சகல பிராணிகளுடைய இருதயத்தில் இருப்பவரும் ஈசுவரர் என்னும் பொருள்பட “ஈச்வரஸ் ஸர்வ பூதாநாம் ஹ்ருத்தே சேர்ஜுந திஷ்டதி-ப்ராமயந் ஸர்வ பூதாநி யந்த்ரா ரூடாநி மாயயா” என்று ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக் குபதேசித்துள்ளார். இங்கே கிருஷ்ணர்தனக்கு அன்னியமான ஈசுவரனைக் குறித்தபடியால் அவ்வீசுவரனே உமாநாதனென உய்த்துணரக் கிடக்கின்றது. அன்றியும் பஞ்சப்பிரமோபநிடதமும் “மா

யயா மோஹிதாச் சம்போ மகாதேவம் ஜகத்குரும்-நஜாநந்தி சுராஸ் ஸர்வே சர்வகாரண காரணம்=தேவர்களனைவரும் சம்புவின் மாயையால் மோகிக்கப்பட்டு ஜகத்குருவும், சர்வ காரணர்களுக்குங் காரணருமான மகாதேவரை யறிகின்றாரில்லை" என்று கூறிப்போந்தது. ஆகவே சம்புவே மாயையை நடத்துபவ ரென்பது தீர்மானம். ஆதலினன்றோ அவருக்கு மாயீ யென்றநாமஞ் சுருதிகளிற் கேட்கப்படுகின்றது. (ரு)

சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப நாணது வொழிந்து= "உலகத்திலுள்ளார் உலகநடை சற்றுந்தெரியாத பேயரென்று தம்மைப்பார்த்து நகைக்கவும், சிவஞானிகளா யுள்ளார் ஞானநெறி கிஞ்சித்து மறியாத மலப்பேய ரென்று தாமும் அவர்களைப் பார்த்துச் சிரித்தலும் இயல்பாதலின் நாணங்கொள்வதை யொழித்து என்றருளியபடியாம். உலகமுய்ய வவதரித்த நம்பரமாசாரியர் என்றும் ஈசனது திருவடியிணையை மறவாது நிரந்தர சிவசிந்தனையிலிருந்து பிரபஞ்சத்தை முற்றும் மறந்தவராயும், பரமேசுவர நாம ரூப திவ்விய நாயகமந்திர நாதகலாநுசந்தான மகாயோகத்தால் தன்மயராயும், பாலர் உன்மத்தர் பசாசாதிகளைப் போல ஆனந்தபரவசசித்தவிருத்தியுடையவராயும், பரம னடியாராயும் இருந்தனரென்பது இதனால் தெரிக்கலாயிற்று. சர்வ பாசங்களையுமொழித்த ஜீவன்முத்த தன்மையும் இதுவேயாம். ஆதலினன்றோ சுக்ல யஜுர்வேதத்தைச் சார்ந்த ஹம்ஸோபநிடதமானது "தஸ்மிந் மநோ விலீநே-மநஸிகதே ஸங்கல்ப விகல்பதக்தே-புண்யபாபே-ஸதாசிவோம் சக்த்யாத்மா-ஸர்வத் ராவஸ்திதஸ் ஸ்வயம் ஜ்யோதி:- சுத்தோ நிரஞ்ஜனச் சாந்த தமம் ப்ரகாசய தீதி=அதனால் மனோலய மென்னும் மனநாசம் வந்துற்றபொழுது சங்கற்ப விகற்பங்க ளொழிந்தவனாய், புண்ணிய பாபமற்றவனாய், சதாசிவ சொரூபனாய், பிரணவ சக்திமயனாய் எங்கும் நிறைந்த சொயம்பிரகாச சொரூபனாய், சுத்தனாய், பற்றில்லாதவனாய், சாந்தனாய்ப்பிரகாசிப்பான்" என்றுசிவாநுபவம் சுவாநுபவமாகக்கொண்ட சிவஞானிகளது தன்மையை விளக்கிக்காட்டிற்று. இந்தச் சிவஞானிகள் பிராரத்துவ தேகமுள்ளமட்டும் பற்றற்று போகத்தை விரும்பாதிருந்தாலும் சாகப்போவார் யாதொரு போகத்தை இச்சியாதிருக்கவும் சுற்றத்தாரா யுள்ளவர்கள் அவரை வேண்டிக் கொடுவந்து புசிப்பித்தல் போல் பிராரத்துவமும் இவர்களுக்கு வலியக் கொடுவந்து புசிப்புக்கு மென்பது திண்ணம். இவர்கள் என்ஞான்றும் உண்மைநிட்டையை மேற்கொண்டு சிவபெருமானுடைய

திருவடிநிழலையே பற்றியிருப்பவ ராதலால் இவர்களுக்கு விருப்பு வெறுப்பென்ப தில்லை. வினைகளைச் செய்தாராயினும் ஒருபயனையும் நாடுவதில்லை. சமயாசாரம், தவம், விரதாநுட்டானம், ஆச்சிரமதருமம், மூர்த்தித் தியானபாவனை, சித்தசலனம், சமயத்துக்கேற்ற வேடம், விடயங்களை விடுதல் பற்றுத லாகியநியமம், அந்தக்கரண தண்டம், இராசத தாமத குணங்களை யடக்கி சத்துவகுண மேலிட்டிருத்தல் இவைபோன்ற விதிவிலக்குகள் ஒன்றுமில்லை. எனவே இவையாவும் ஞானசாதகனுக்கே யன்றி ஞானசித்தனுக் கல்ல வென்பது வெளிப்படை. இவர்க ளிவ்வாறு உலகநடைக்கு வேறுபட் டிருத்தலைக்கண்டு மலசம்பந்திகளா யுள்ளார் தங்கள் தங்கள் மனஞ்சென்றவாறு பேசிச்சிரித்தல் உலகவியல்பாம். இவர்கள் முற்றறிவுடையராய் பிரபஞ்ச மயக்க மொழித்தவராயினும் உலகத்தார் பார்வைக்குப் பெரிய பயித்தியம் பிடித்தவர்போல் காணப்படுவர். ஆதலினன்றே அவிமுக்த ஜாபாலோபநிடதமானது "அநுந்மத்தா உந்மத்த வதாசரந்த:=மயக்கமற்றவர் மயக்க முற்றவரைப்போல் சஞ்சரிப்பர்" என்று புகழ்ந்தது. அன்றியும். "யதாஜாத நுப தரோநீ=பிறந்தவாறு உருவந்தரிப்பர்" என்றும் இசைத்தது. (௩.௯)

மூவா நான்மறை முதல்வா=மூப்படையாத நான்கு வேதங்களுக்கு முதல்வனே. ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் மறை நான்கும் பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலிய பலகடவுளரைப்பரப்பிரமங்களென்று பலவிடங்களிற் றுதிக்கினும், மூர்த்தித் திரயாதீத சிவபெருமா னொருவரையே த்யேயராகச்சிறப்பாகப் பிரகாசப் படுத்தியது. ஏனைய கடவுளரை யெவ்விடத்தும் எஞ்ஞான்றும் அவ்வாறு த்யேயராகக் கூறியதின்று. அந்தத்யேய வஸ்துவைச் சொல்லுமிடத்து சிவசப்தத்தாலும், ஈசான சப்தத்தாலும், ருத்ரசப்தத்தாலும், ஈசுவரசப்தத்தாலும், பிரமசப்தத்தாலும், சம்புசப்தத்தாலுமேபன்முறை விசேடமா யெடுத்துக் கூறிற்று. இதனுல் சிவஈசான ருத்ரசம்புவாதி நாமங்களேபரதத்துவபோதகநாமங்களாகும். அவற்றுள் சிலவேதவசனங்கள்வருமாறு:-"சிவ ஏவஸ்தாத்யேய:=சிவனொருவரே சதாதியானிக்கற்பாலர்"என்று சாபோபநிடதமும், "சிவ ஏகோ த்யேய:=ஏகராகிய சிவபிரானுரே தியேயர்"என்று அதர்வசிகோபநிடதமும்"த்யாயீதேசாநம்=ஈசானரே தியானிக்கப்படுவர்" என்றுமீண்டும்அதேவுபநிடதமும், "ஸ்ஏகோருத்ரோத்யேய:=ஏகராகியருத்திரரே தியானிக்கத்தக்கவர்" என்று பிப்பலாதோபநிடதமும், "காரணந்துத்யேயச் சம்பு:=காரணராயுள்ள சம்புவே தியேயப்பொருள்" என்று

அதர்வசிரோபநிடதமும் குன்றின்மேலிட்ட விளக்குபோல் தெரிக்க லுற்றன. இவ்வித சுருதிவசனங்களால் துரியமூர்த்தியாகிய சிவபெருமானே த்யேயரென்றும், உபாஸ்யரென்றும், சேவ்யரென்றும், மற்றவர்கள் தியாதாக்களென்றும், உபாசகர்களென்றும், சேவர்களென்றும், நன்கு நிரூபிக்கப்பட்டன. அல்லதூஉம் உபாசகர்கள் உண்மையறிந்து உய்யும் வண்ணம் பெருந்தேவர்களாகிய நாராயணரையும் உருத்திரரையும் தியாதாக்களெனப்பொருள்கொண்டு "நாராயண பரோத்யாதா" என்றுதைத்திரீயோபநிடதமும், "த்யாதாருத்ர:" என்று அதர்வசிரோபநிடதமும் முறையிடுகின்றன. ஈண்டு "த்யாதாருத்ர:" என்று கூறினமையால் தியானத்துக்கு விஷயமாக நிரூபிக்கப்படும். துரீயருத்திரன் த்யாதாவெனக் கூறப்படுங் குணருத்திரனிலும் வேறென்பதே தீர்மானம். ஒருவனே தியானஞ்செய்பவனும் செய்யப் படுபவனுமாதல் கூடாமையன்றோ? துரீயருத்திரனைத் தியேயப் பொருளாகக் கொண்ட அதர்வசிரோபநிடதத்திற்றானே பிரம விஷ்ணு ருத்ரேந்திரர்கள் படைக்கப்பட்டவர்களெனவும், ஆதலின் அன்னோர் காரணர்க ளாகமாட்டார்க ளெனவும், காரணராவார் சர்வைசுவரிய சம்பந்நரும், சர்வேசுவரரும், சம்புவாயு முள்ளாரெனவும், அவரே தஹராகாச மத்தியில் தியானிக்கத் தக்கவரெனவும் பொருள் போதர "ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூ யந்தே நகாரணம் காரணந்து ஸர்வைச்வர்யஸ் ஸம்பந்ந ஸர்வேச்வர: சம்புராகாசமத்யே த்யேய:" என்று உண்மை யுரைக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வவேத வேதாந்தங்களுக்கும் முதல்வன் சிவபிரானென்பதே முடிந்த வுண்மையாம். இவ்வுண்மையை யுணராச் சிலர் புராணவசனங்களைக்கொண்டு ஏனைய கடவுளருக்குத் தியேயத்வங் கூறுவர். வைதிக விவகாரத்தில் வைதிக விவகாரமே பிரதானமாதலால் புராண வசனங்களினுஞ் சுருதி வசனங்களே சாலச் சிறப்புடைத்தாம். ஆதலின் சிவபெருமானே பரம்பொருளெனக் கூசா துரைத்தல் நடுவுநிலை குன்றா மாந்தர் கொள்கையாம். (௩௭)

**அருவமு முருவமு மானாய்**=அருபமும் ரூபமுமானவனே. இனம்பற்றி ரூபாரூபமுந் தழுவப்படும். அநாதிமுத்த சித்துருவாகியபரமசிவம் சர்வவடிவங்களையுங் கடந்திருப்பினும் ஆன்மாக்களுக்குப் போகமும், யோகமும், வீடும் உதவுமுகத்தால் காருண்ணியத்தினாலே அருட்டிருமேனி தாங்கிக்கொள்ளும். பொன்கட்டியானது பூஷணங்களாகக் காரியப்பட்டகாலத்து அநுபவத்துக்குரிய சிரேஷ்ட பதார்

ந்தங்களாய் ஆன்மாக்களுக்குச் சுகத்தைத் தருதல்போல், இமைப்பொழுதும் உபகாரமல்லாது ஒன்றையும் இயக்காது நிற்குங் குணக்கடலாகிய பரசிவம் உமார்த்த சரீராதி திவ்விய மங்கள தேஜோரூப வடிவங்களாய்ச் சகளீகரித்தே அனுபவ வேத்யமாய் ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தை விளைவிக்கும். அகரமானது தானே தனித்தும் ஆகாராதி வடிவங்க ளெடுத்தும் ககரமுதலிய மெய்களை இயக்குமாறுபோல் நிஷ்களாதீதமாயுள்ள பரசிவமும் எண்ணிறந்த அருட்கோலங்களைத் தாங்கி சேதநாசேதனப் பிரபஞ்சங்களை யியக்கும். இவ்வருள் வடிவங்கள் யாவும் மலரஹிதமாதலால் அப்பரசிவமே யென்றும், அதன் தயாமூலம் வெளிப்பட்ட தடஸ்த வடிவங்களென்றும் வேதம் பன்முறை முழக்கும். "நிறுத்துவன் நினைந்த மேனி நின்மலனருளி னாலே" என்னுஞ் சிவஞானசித்தி செய்யுளுக் கிணங்க சுவேதாசுவதரோப நிடதமும் "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியாச=அவனது சத்தி பரையெனவும், பலவகையாகவுங் கேட்கப்படுகின்றது ஆயினும் (தாதான்மியமாய்) இயற்கையிலமைந்தது ஞானமும் பலமுங் கிரியையுமாம்" என்று கூறிமகிழ்ந்தது. ஈண்டு துரியசிவம் கொள்ளுந் திருமேனியாவும் அவரது சத்தியே யென்பதுதெள்ளிதிற்பெறப்பட்டது. அதனால் அச்சிவம் உருவம், அருவம், உருவருவம் எனமூன்று திருமேனியுமாகலாம். அல்லது அம்மூன்றிற்றனித்தனியொவ்வொன்று மாகலாம். உருவமென்றபோது அதனை அருவமென்றே சாதித்தல் கூடாமை. அருவமென்றபோது உருவமென்றே சாதித்தல் கூடாமை. உருவருவமென்றபோதும் அவ்வாறேயாம். ஆதலாற்றான் சிவபரம்பொருள் கொள்ளுங் கோலங்கள் யாவும் சிற்கனமென்று வைதிகசைவமொப்பி அப்பரம்பொருளுக்குத் தடஸ்தம் சொரூபம் என்னும் இருதிறவிலக்கணங்களையுங் கூறியகிழ்கின்றது. இதனால் அவ்வைதிகசைவமொன்றே துவிதமாகவும், அத்துவிதமாகவும், விசிட்டாத்துவிதமாகவும், இம்மூன்றுக்கும் அதீதமாகவும் அவ்வவ்வமயத்துக்குத் தக்கபடி பிரகாசித்தொளிரும். (௩௭)

நிற்க, அப்பரம்பொருள் பலவடிவங்கள் தரிக்கினும் அதற்கியைபிலுள்ள சொரூபவிலக்கணமாவது தொழில், குணம், இச்சை, வெறுப்பு விகாரம் ஒன்று மில்லாத சுத்தசைதன்னிய சொரூபமே சுபாவமாகவுடையதாகும். அதனை விரிக்கின் முயற்கோடுபோல காணப்படாத அரூபமுமன்று. பிரபஞ்சத்தி லுண்டான வடிவங்கள்போல அதுவிதுவென்று சுட்டியறியப்படும் ரூபமுமன்று. சித்தாகிய ஆன்மவர்க்க

இவர்களது திருமேனிகளே பிரமசொரூபமாயின் இவற்றின் சாக்ஷாத்காரமன்றி முத்தி வேறுண்டென்பது பெறப்படமாட்டாது. படாதாகவே இந்த சாக்ஷாத்காரமே பிரமாநந்தாநுபவ நிலையாகவேண்டும். அப்படிக்கின்றி இம்மூவர்களையும் ஜீவர்களென்று வேதம் ஓதுக்கினமையால் இவர்களது பதங்களெல்லாம் பாரதந்திரிய துக்கக்களஞ்சியங்களே யன்றி சிறிதேனுந் துயரமணுகப்பெறாத சுத்த பரமானந்தாநுபவ சாம்ராஜ்யமான மோட்ச மல்லவாம். அவைகளையடைந்தவர் பூலோகத்துக்கு மீள்வாராயினர். மீளாத விடமே அதனினும் மேலானதன்றோ. ஆதலின் "மாலயனு யிந்திரனும் வாழுவதாய் மாளுவதாஞ்-சாலமயல் பார்த்துத் தலையசைப்பர்" என்றுகண்ணுடையவள்ளலாரும், "விதியார் படைப்பு மரியா ரளிப்பும் வியன்கயிலைப்-பதியார் துடைப்பும் நம்பா லணுகாது பராநந்தமே-கதியாக்க் கொண்டு" என்று திருவெண்காட்டடிகளும் சிவப்பிரசாத மெய்தினோர்களது தன்மையை விதந்தோதி யருளினார்கள். ஆயின் புனராவர்த்தியில்லாத மோட்ச லோகந்தான் யாதெனின், பிரம விஷ்ணு ருத்திரலோகங்களுக் கதீதமாய் சுத்தமாயா புவனமாய் அதர்வசிகையில் பிரணவத்தின் நான்காவது மாத்திரையின் ஸ்தானமாய்ப் படிக்கப்பட்ட மகாகைலாசமென்னும்சோமலாகியசிவபுரமாம். இதுவே ப்ரஹ்மலோகமென்றுங் கூறப்படும். இதை யடைந்தவரது தன்மையைச் சாந்தோக்கியோபநிடதமானது "ப்ரஹ்மலோகஸப்பத்யதே நசபுநரா வர்த்ததே நசபுநராவர்த்ததே=சிவலோகத்தை யடைந்தவன்மீளப்பிறக்கின்றானில்லை. மீளப்பிறக்கின்றானில்லை" என்று கூறிற்று. இந்தஉபநிஷத்தின் பொருளையே முனிவேந்தராகிய வியாசபகவானும்"அநாவ்ருத்திஃசப்தாதநாவ்ருத்திஃசப்தாத்=மீளப்பிறப்பதில்லை மீளப்பிறப்பதில்லை." என்று தமதுவேதாந்தசூத்திரத்து இறுதியத்தியாயத்து இறுதிப்பாதத்து இறுதிச்சூத்திரத்திலே இருமுறை யடுக்கிக் கூறினார். எம்மை யாட்கொள்ள வெழுந்தருளிவந்தமணிவாசகப்பிரானும் "வானவூர் கொள்வோம் நாம் மாயைப்படைவாராமே"-எனவும்"அண்டர்நா டாள்வோம்நாமல்லற்படை வாராமே" எனவும் திருப்படையெழுச்சி என்னுந்திருப்பதிகத்தில்திருவாய்மலர்ந்தருளினார். பகவற்கீதையிலும் இந்தச் சிவபுரத்துச் சிறப்பினை, "தமேவ சரணம் கச்சஸர்வ பாவேந பாரத தத்பரஸ்தாத் பராம்சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி சாஸ்வதம்=அவரையே சகலமான தன்மையாலும் சரண மடையக்கடவாய்-அந்த ஈசுவரனுடைய அநுக்கிரகத்தாலே சர்வோத்தமமான சாந்தியையும் சாசு

விதமான ஸ்தானத்தையும் அடைவாயாக" என்று படர்க்கைப்பொருளைச் சுட்டி ஸ்ரீ கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளினார். ஈண்டு குறித்த ஸ்தானம் பரமபதமென்றால் இழுக்கென்னையெனில், பரமபத நாதனான ஸ்ரீ மந்நாராயணன் கற்பந்தோறும் பூமியில் அவதரிப்பதால் அவன் எழுந்தருளியிருக்கும் பதவி மீளாப்பதவியெனல் பொருந்தாது. ஸ்ரீ மத் உமாசமேத பரமசிவம் பக்தர்கள் மனங்களிக்க ஆங்காங்கு ஆவிர்ப்பவிப்பதன்றி எங்கும் பிறப்பதின்மையால் அவரது திவ்விய லோகமாகிய சிவபுரமே என்றும் பிறப்புப்பிணி வந்தெய்தப் பெறாத சாசுவித ஸ்தானமாம். அந்த ஸ்தானத்தை யடைந்தவர்களுக்கும் மகாசங்கார காலமெனப்படும் மகாப்பிரளயகாலத்தில் விதேக கைவல்லியமாகிய பரமுத்தி சித்திப்பது திண்ணமாதலால் அதுவே மோட்சபதமென்று சொல்லப்படும்.

என்னை! தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் "தாம்வீழ்வார்மென்றோட் டுயிலினினிதுகொ, றாமரைக் கண்ணா னுலகு" என்று திருக்குறளிற் கூறியிருத்தலால் செங்கண்மாலுலகமே பேரின்ப வீடெனவும், அவ்வீட்டுத்தலைவனே பரம்பொருளெனவுங் கொண்டால் குற்றமென்னையெனின் அதுகூடாது. தீவினை நல்வினை யென்னும் இரண்டனுள் தீயனவொழிந்துழி நல்லன பொருந்துதலும், அதுவு மொழியுங்கால் இறைவனருள் கூடுதலும் உலகத்தில் பிரத்தியட்சம். ஆதலின் இம்மை, மறுமை,வீடு என்னும்மூன்றனுள் இம்மையி லனுபவிக்கும் இகலோக வின்பத்துக்கு மாறாய் மறுமையில் நுகரும் பரபோகத்தையே அவ்வுலகு குறிக்கின்றமையின் அது பேரின்பவீடாதல் செல்லாதாம். வீடு என்பது விடுதல் என்னும் பொருளைத்தருதலால் செங்கண்மா லெழுந்தருளி யிருக்கும் உலகத்தைப்பற்றுதல் விமலஞானநந்த வீடாகாது மறுமைப்போகத்தை அநுபவிக்கும் உலகங்களிற் சிறந்ததாமென்பதே யமைவுடைத்து. ஆதலினன்றோ "அருளபெற்றவர்க ணித்தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவும்-இனுதுநிலை யிதுதானுங்காயமுண்டே லிருங்கன்ம மாயமலமெல்லா முண்டாம்" என்று பதமுத்தியைத் தூஷித்துரைத்தது சிவஞானசித்தி. ஸ்ரீதாயுமான சுவாமிகளும் "சாலோக மாதி சௌக்கியமும் விட்டநம்பால் - மேலான ஞானவின்பயேவுநா ளெந்நாளோ" என்று வற்புறுத்தியருளினார். (சO)

பூவரேன்றே யெம்பிரானேடு மெண்ணி=சாக்ஷாத் சர்வேசுவரனுகிய சிவபெருமானைத் திரிமூர்த்திகளில் ஒருவனுக வெண்ணி. ஸ்ரீகண்ட சரீர சரீரியாய் விளங்கும் பரமேசுவரன் பிரமவிஷ்ணுருத்

திரர்களையதிஷ்டித்துநின்றுகொண்டுஅவரவர்கள்தொழில்களைநடாத்துகின்றமுறைமையினால் அவரவராய்த் தியானம் பண்ணப் படுவானன்றி அவர்களுடனே யொருவனாகவெண்ணப்படுவா னல்லன். பிரமனுக்குச் சிருட்டித்தொழிலும், விஷ்ணுவுக்குக் காத்தற்றொழிலும், உருத்திரனுக்குச் சங்காரத்தொழிலும் சாத்திரங்களிற் சொல்லப்படினும் உருத்திராதிட்டானமே ஏனைய ரிருவரிடத்தும்வியாபித்து யாவும் நடாத்துகின்ற தென்பது வேதமுடிகளின் தாற்பரியம். "கார்யம் விஷ்ணுःக்ரியாப்ரஹ்மா காரணந்துமஹேச்வரः=காரியம் விஷ்ணு,கிரியைபிரமா, காரணன் மகேசுவரன்" என்றுருத்திரஹ்ருதயோபநிடதமும், "பராத் பரதரோ ப்ரஹ்மாதத்பராத்பரதோஹரிः- தத்பராத்பரதோ ஈசःதஸ்மா துல்யோதிகோநஹிः= பரத்துக்குப் பரமாயுள்ளவர் பிரமா-அவருக்கு மேலாயுள்ளவர் ஹரி-அவருக்கு மேலாயுள்ளவர் ஈசர்-அவருக்குச் சமானமானவரும் துல்யரும் ஒருவருமில்லை" என்று சரபோபநிடதமுங் கூறுகின்றன. இதனால் உருத்திரமூர்த்திக்கு அடங்கினவர் மற்றிருவரென்பது சித்தமாயிற்று. இந்த ஈசராகிய உருத்திரரையே பிரம விஷ்ணுக்களோடு சே...ர்த்துப் படைக்கப்பட்டவரென்றும். ஜகஜ்ஜந்மாதி காரணரல்லரென்றும், த்யாதா வென்றும், அதர்வசிகோபநிடதமானது வரையறு... முறையிடுமாயின், மூவருக்கும் அதீதராகிய பரமசிவத்தை மூவரிலொரு...வராகச் சேர்த்துப் படித்தல் மகாபாதகமாம். ஆதலினன்றோ "ஓத...நூணை வித்தகரை மூவரிலொருத்தரென வோதியிடு மற்பமதியிர்" ...என்று திருவருணைக் கலம்பகமும் "மூவா முதலா முதல்வனை...யு மூவுலகிற்-சாவார் பிறப்பார்க டங்களையுந்- தேவாக, வொக்க நி...னைவாருக் கல்லவோ வேரேழு மிக்க நரகம் விதித்தது காண்" என்...ஸ்ரீ இரட்டையர் தைவீகவுலாவும் விசதப் படுத்தின. அன்றியும் ...இருக்குவேதமானது பரமசிவனை வேறு தேவர்களுக்குச் சமமா...யாவது கீழாயாவது கருதித்தொழுதல் உருத்திரகோபஹேதுவ...வென்று "மாதோருத்ரः" என்றதற்றொடக்கத்துவசனத்தில் உண்மை நிறுவியது. ஆயின் வைதிக சைவரென்று சொல்லப்படும் சகல சமயாதீதாத்துவித சித்தாந்தசைவர்கள் சங்கார கர்த்தாவாகிய உருத்திர மூர்த்தியைக் கடவுளாக வழிபடுத லில்லையோ வெனின் உண்மைகூறுதும். இந்த உருத்திரர் பந்தம் நீங்கி முத்திபெற்ற கடவுளாதலால் பரசிவத்துக்குரிய வெல்லாப்பெயரும், வடிவும், தொழிலும் ஏற்று வேதாகமங்கள் முதலியவற்றை அறிவுறுக்குங் குரவராய், அயன்மா லிருவருக்கும் மேலாய்ச் சைவத்தினெய்தி சமயதீக்ஷை பெற்

ேரால் வழிபடுங் கடவுளராயினரன்றி "விஸ்வாதிகோருத்ரோ ம
ஹர்ஷி:=விசுவத்தைக் கடந்தவர் உருத்திரர் மகரிஷி" என்று தை
த்திரீயோபநிடதங் கொண்டாடியவிசுவசேவியராகிய துரீயமூர்த்தி
யல்லர். இதனால் சித்தாந்த சைவத்தில் பிரதிபாதிக்கப்படும் பரதத்
துவப் பொருளாயுள்ளார் இன்னாரென்பது தெற்றெனை விளக்க
ப்பட்டது.

அல்லதூஉம், பாரதம் அநுசாஸநிக பர்வத்தில் சிவபெருமான்
தனது வலப்பாகத்தினின்றும் உலகத்தைப்படைக்கும்பொருட்டு பி
ரமனைச் சிருஷ்டித்தாரென்றும்,இடப்பாகத்தினின்றும் உலகத்தைக்
காக்கும் பொருட்டு விஷ்ணுவைச் சிருஷ்டித்தாரென்றும், யுகத்தின்
முடிவில் சங்காரத்தின் பொருட்டு உருத்திரனை யந்தப்பிரபுவே சிரு
ஷ்டித்தாரென்றும் பொருள்பட "ஸோஸ்ருஜத் தக்ஷிணா தங்காத்
ப்ரஹ்மாணம் லோகஸம்பவம்-வாமபார்ச்வாத் ததாவிஷ்ணும்
லோகரக்ஷார்த்த மீச்வர:-யுகாந்தே சைவஸம்ப்ராப்தே ருத்ரம்
ப்ரபு ரதாஸ்ருஜத்" என்று கூறப்பட்டுள்ளது. இதனால் வேத சம்ம
தமாகிய நான்காவது தெய்வம் சிவபெருமானென்பதே முடிந்த க
ருத்தாம். இவ்வாறேசிவபுராணங்களெல்லாம் அயனரியரன் என்னு
ம்மூம்மூர்த்திகளையும் விளக்கி அவர்களைத் தமதாணையின்வழிந டாத்
தும் பரசிவனையும் விளக்குதலின் அந்தப் புராண சரித்திரங் கட்
குரிய மூர்த்திகள் நால்வரென்பது வெளிப்படை. இம்முடிபுக்கே
தேவார திருவாசகமும் மெய்கண்ட சாத்திரங்களும் ஒப்பியுள்ளன.
விஷ்ணு புராணங்களோ அயனரனாகிய இருவர்களை மாத்திரம்விள
க்கி விஷ்ணுமூர்த்தியையும் விளக்குதலின் அந்தப் புராணசரித்தி
ரங்கட்குரிய மூர்த்திகள் மூவரென்பதே வெளிப்படை. இம்முடிபு
க்கே ஆழ்வார் பாடல்களும் சம்மதித்துள்ளன. இதனால் ஆழ்வார்பா
டல்களனைத்தும் விஷ்ணுபுராணங்களிற் கூறிய முடிபையே எடுத்
தாண்டதென்றும், சதுர்த்த வாச்சிய மூர்த்தம் விஷ்ணுபுராணங்க
ளில் வெளிப்படையாகச் சொல்லவில்லை யென்றும், திதிகர்த்
தாவாகிய விஷ்ணுமூர்த்தி எஞ்ஞான்றும் அம்மூர்த்தமுடையா ரா
காரென்றும் ஏற்பட்டது. வேதம் எப்படி நான்குமூர்த்திகளையும் வி
ளக்கி முடிவில்நான்காவது மூர்த்திக்கேபரத்துவம் நிரூபித்ததோ,
அப்படியே புராணேதிகாசங்களும் நிரூபித்தமையால்வேத புராணே
திகாசங்கள் யாவும் சத்தியமாகச்சிவபரத்துவபோதக உண்மைநூல்
களென்பதேதுணிபு. இவ்வுண்மையினை யறியாதார்சிவபுராணங்களி
ற் சிவனுக்கும் விஷ்ணுபுராணங்களில் விஷ்ணுவுக்கும் முனிவர்கோ

பாலாகிய வியாசர் பரத்துவங்கூறி குழப்பி வைத்தாரென்று மயங்கி நிற்பர். அந்த வியாசபகவான் அந்தந்த மூர்த்தியை வழிபடும் பக்குவர்களுக்கு அன்பு முதிரும்படியாக வேதம் எப்படிக்கூறிற்றோ அப்படியே கூறினாரன்றி குழப்பி வைத்தனரல்லர். கீழ்ப்பட்டாரை நோக்கி மேற்பட்டாருக்குப் பரத்துவங் கூறுதல் சாத்திர சம்மதமாதலின் புராணங்களின் பிராணனை யறிதலே அறிவுடையோர் செய்கையாம். அக்கினிபுராணம், சூரியபுராணம், பிரமபுராணம் ஆகிய விவைகளைச் சொன்னதுபோல் விஷ்ணு புராணத்தையும் சிவபுராணத்தையும் வியாசர் சொன்னமையால் அவைகளைக் கொண்டே விஷ்ணுமூர்த்திக்காவது உருத்திர மூர்த்திக்காவது முடிவான பரத்துவஞ் சாதித்தல் சிறிதும் ஒவ்வாத காரியமாம். அவர்களைப் பரப்பிரமமாகச் சொன்ன சுருதிவசனங்கள் "அந்நம் ப்ரஹ்ம", "மநோப்ரஹ்ம", "விஞ்ஞானம் ப்ரஹ்ம", "ஆதித்யோப்ரஹ்ம" என்றற்றொடக்கத்து வாக்கியங்களோடே இனம்பெறு மென்பதற்குயாதும் ஐயுறவில்லை. இத்திற முண்மைப்பொருள் சற்குரு கடாட்சமும் சத்திநிபாதமும் இல்லாதார்க்கு விளங்குதல் மிகவரிதாம். (சக)

பேயொடு காட்டிடை நாடக மாடி=பேய்களோடு சுடுகாட்டினிடத்து நடனஞ்செய்து. சுடுகாடாவது ஊருக்குப் புறத்திலுள்ள புறங்காடாம். இதில் பூதங்களும், பேய்களும், பிசாசுகளும்வாசஞ்செய்யும். இவைகளெப்பொழுதும் ஜீவர்களை யிடர்ப்படுத்தி வதஞ்செய்வதையே தொழிலாகப் பூண்டிருக்கும். மகாசமுத்திரத்தின் ஜலமானது பிரவாகங்கொண்டு கரைகடந்து போகாவண்ணம் அச்சமுத்திரத்தின் மத்தியிலுள்ள வடவைத்தீ அப்பெரும் வெள்ளத்தைக் கிரகணஞ்செய்து நிற்பதுபோல் பரமேசுவரனும் எண்ணிறந்த ஆர்கட்டாறும் அடுத்துள்ள எண்ணிறந்த சுடலைகளில் வசிக்கும் பூதம் பேய் பிசாசங்கள் வரம்புகடந்து சென்று சர்வப்பிராணிகளையும் இடர்ப்படுத்தாதபடி அவைகளுக்குத் தலைவனான மயானருத்திரனை யதிஷ்டித்து அவைகளோடு நடனஞ் செய்யாநிற்பன். "சங்கரோ பகவாநாதித்யோ ராரக்ஷ ஸகலா: ப்ரஜா:= பகவானும் ஆதித்தியருமான சங்கரர் சகலப்பிராணிகளையும் ரட்சித்தார்" என்று சரபோபநிடதமும், "யஇமாந் லோகா நீசத ஈசநீபி:= எவர் இந்த லோகங்களையெல்லாம் நியமன சக்திகளினலே ஆளுகின்றார்" என்று சுவேதாசுவதரோபநிடதமுஞ் செப்பியவாறு எல்லாப்பிராணிகளையும் இரட்சித்தல் சிவபெருமானுக்குரிய அருட்குணமாகும். ஆதலின் பேய்களோடு நடனஞ்செய்கின்றானென்று குறிப்பிக்கப்பட்டது. இதனால் சிவ

பெருமான் லோகோபகாரமாய்ச் செய்யும் அருணுடகம் எவ்வாற்று னுந் தாழ்வாக வெண்ணப்படமாட்டாது. இங்ஙனமிருக்க வேறு பொருளாவது- பரமபதியாகிய சிவபெருமான் சர்வ சங்காரகாலத் தில் சகல ஜீவகோடிகளையும் சர்வலோகங்களையுஞ் சங்கரித்த போ ழ்து அவையாவும் சுடலையாய்விடும். அத்தகைய சுடுகாடென்னும் மகாமசானத்தில் அவ்வெம்பெருமான் தானேமுதற்பெருங் கடவு ளென்பதூஉம், தனக்கு மேலொரு கடவுளின்றென்பதூஉம், யான் பரம் யான்பரம் என்று இறுமாப்பெய்தி யுழலும் மாலயன் முதலிய கடவுளர் யாவரும் இடையே இறந்தழிந்தொழியும் பசுக்களென்ப தூஉம், தாமொருவனே ஆதியந்தங்கடந்த முன்னைப்பழம்பொருட் கும் முன்னைப்பழம்பொருளாயுள்ளவ னென்பதூஉம், தன்னையடை ந்து உள்ளன்போடு வழிபடும் மெய்யன்பரே மீளாமுத்திபெற் றுய் வரென்பதூஉம்நிலைநிறுத்தும் வண்ணம்அண்டங்களையெல்லாம் எடு த்துண்ணுங்கணங்களோடு தாண்டவம் புரிந்தருளுவன். அக்காரண த்தால்"ஈமத்தாடி","சுடலையாடி"முதலிய பல அரியநாமங்கள் அ ப்பெருமானுக்கு வழங்கப்பட்டு வருகின்றன."நள்ளிருளி னட்டம் ப யின்றாடுநாதனே" என்றமலர்மொழியின்கருத்தும் இதுவேயாம். இ னி ஞானார்த்தமாவது:—பிருதிவி முதல் நாதமீறாகச் சொல்லப்பட் டமுப்பத்தாறு தத்துவங்களும் ஞானக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு ஒழிந்துநின்ற விடமாகிய புருவமத்தி சர்வசூன்ய மயானமென்னும் ஞானச்சுடலை யாகும். இந்தவிடம் இராப்பகலற்றதாயும், நினைப்பு மறைப்பு ஒழிந்ததாயும், பரவெளியாயு மிருத்தலால் ஜீவன்முத்தர்க ளனைவரும் இதையே நிலையிடமாக நித்தமும் பற்றியிருப்பார்கள். ஸ்ரீதாயுமானசுவாமிகளும்"இராப்பகலில் லாவிடமே யெமக்கிடமெ ன் றறிந்தே" என்றும்,"நினைவொன்றும் நினையாமல் நிற்கினக மென்பார்" என்றுஞ்சாற்றியருளினர். சாதாரணமாகப் பேயானது ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம் முதலான தொழில்களற்றிரு த்தல்போல ஜீவன்முத்தர்களாகிய சிவஞானிகளும் பேய்க்குண மரு வி அது, தான் என்று அபிமானிக்கப்படும் உடம்பினழகையும், அவ் வுடம்பின் பாதுகாப்புக்கு இன்றியமையாது வேண்டப்படும் அகப் பற்று புறப்பற்று என்னும் இருவகைப் பற்றுக்களையு மொழித்து வா னகமும் மண்ணகமும் வணங்கும்படி வீற்றிருப்பார்கள். அவர்களோ டு சர்வேசுவரனாகிய சிவபெருமானும் எக்காலமும் ஆனந்த நடனம் புரிந்தருளுவன். அந்நடனங் காரணமாக அப்பேரருளாளனுக்குப் "பேயோடாடி" என்னுந் திருநாமம் அவனது எண்ணிறந்த நாமங் களில் ஒன்றாகப் படிக்கப்பட்டுள்ளது. ஜீவன்முத்தர்கள் பேய்க்குண

மருவி யிருப்பார்களென்பதற்குப் பிரமாணம். "பாலரொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுவே-சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே" என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கும், "பாலருட னுன்மத்தர் பசாசர்குண மருவிப் பாடலினோடாடலிவை பயின்றிடினும் பயில்வர்" என்னுஞ் சிவஞானசித்தி செய்யுளும், "நன்பகற் கனகுந் தானுர் ஞானநல் லறிவேகொண்டு கொன்புனை பித்தர்பாலர் பிசாசர்தங் கொள்கையாளுர்" எனனும் பரஞ்சோதிமுனிவர் பான்மொழியும், "பிள்ளையுடைக் கண்களாற் பின்னைப் பேய்த்தொண்டர்காண்பதென்னே" என்னும் ஸ்ரீவாகீசப் பெருந்தகையார் திராவிடசூக்தியும் நிதரிசனமாம். (௯௨)

**பவனெம் பிரான்**=பவன் என்னுந் திருநாமமுடையவன் எனக்குத் தலைவன். பவன்=எக்காலத்தும் எவ்விடத்து முள்ளவன். அஷ்டமூர்த்தங்களில் பிருதிவி யென்னுந் தநுவில் சிவனுர் பவராய் விளங்குதலால் "**ப்ருதிவ்யோபவ:**" என்றிருக்வேதங்கூறுகின்றது. சராசரப் பொருள்களனைத்துந் தோன்றுவதற்கு இருப்பிடமா யிருத்தலால் யோகத்தானும், கோசங்கள் யாவும் அச்சொல்லைச சிவத்துக்கே யுரியநாமமாகக் கூறுதலால் இடுகுறியானும், பவநாமம் பரமேசுவரனையே குறிக்கும் யோகரூடிப்பெயராம். இப்பொருளையே சுவேதாசுவதரோபநிடதமும் "**தம்விஸ்வரூபம் பவபூதம்**=அவன் விசுவரூபன் பவபூதன்" என்று சாற்றியது பவன் முதலிய அஷ்டநாமங்களும் (பவன், சர்வன், ஈசானன், பசுபதி, உருத்திரன், உக்கிரன், பீமன், மகாதேவன் என்பனவைகளாம்) சிவனுருக்கே சிறந்தன, மென்பது யாவரானும் மறுக்கவொண்ணுத் துணிபாம். அஃதெங்ஙனெனின், எக்காலத்தும் எவ்விடத்தும் உண்மையால் **பவன்** எனவும், எல்லாவற்றையுஞ் சங்காரஞ் செய்தலால் **சர்வன்** எனவும், உபாதியில்லாத பரமைசுவரிய விசிட்டகுண முடைமையால் **ஈசானன்** எனவும், பசுபாசங்களுக்கு நாயகமா யிருத்தலால் **பசுபதி** எனவும், சம்சார ரோகத்தை உருகச்செய்தல் **உருத்திரன்** எனவும், சூரிய சந்திராதி ஒளிகளால் அடக்கப்பட மாட்டாமையால் **உக்கிரன்** எனவும், எல்லா வான்மாக்களையும் நியாமகஞ் செய்து அவற்றுக்கு அச்சமுண்டாக்குதலால் **பீமன்** எனவும், மகத்துவமும் பிரகாசமுமுண்மையால் **மகாதேவன்** எனவும் சிவனுர் புகழப்பட்டனர். அதுபற்றியே ருக்வேதம் "**ப்ருதிவ் யோபவ:- ஆபச்சர்வ:- அக்நேருத்ர:. வாயுர்பீம:-ஆகாசஸ்யமஹாதேவ:-ஸூர்யஸ்யோக்ர:- சந்த்ரஸ்யஸோம:- ஆத்மாந: பசுபதி:**=பிருதிவியிற் பவராயும், அப்புவி

ற் சர்வராயும், தேயுவில் உருத்திரராயும், வாயுவில் பீமராயும், ஆகாசத்தில் மஹாதேவராயும், சூரியனில் உக்கிரராயும், சந்திரனில் சோமராயும், ஆத்மாவில் பசுபதியாயும் (விளங்குகின்றார்)" என்று விளக்கிற்று. உண்மை யிவ்வாறிருக்க, அறிவுள்ளீடில்லாத சிலபாஞ்சராத்திரிகள் புராண வசனங்களையே முக்கியப் பிரமாணமாகக்கொண்டு குணமூர்த்தியாகிய உருத்திரர்பிரமனுடைய நெற்றியிலிருந்து தோன்றிய பொழுது ரோதனஞ் செய்தபடியால் உருத்திரர் என்னும் நாமம் பெற்றாரெனவும், அவர் போக்கொணாத பாபியா யிருந்தபடியால் மீண்டும் மீண்டும் அழுதாரெனவும், அவரது பாபவிமோசனார்த்தமாகப் பிரமமூர்த்தி பவன், சர்வன் முதலான எழுபெயர்களைத் தந்தாரெனவும் இழிவாகப் புலம்புவார்கள். அந்தோ ! இவர்களிவ்வாறு பிதற்றுதலால் உய்த்துணரக் கிடக்கின்றது யாதெனின், போக்கொணாத பாவங்களை யெல்லாம் போக்கும் பேராற்றல் உபநிஷத் விசிட்டமான சிவநாமங்களுக்கே இயல்பிலமைந்ததன்றி வாசுதேவ நாமமாகிய விஷ்ணுவாதி நாமங்களுக்கு அத்துணையாற்றல் இல்லையென்பதே யாம். கமலத்தண்ணல் தியான மாற்றுழி அவனதுபுருவ மாப்பண் பரசிவ வருளால் பூவையோர் பங்கன் அழுதுகொண் டுதித்த அபிநய வைபவம் கல்வி, கேள்வி, அறிவு முதலியவற்றாற் சிறந்த வல்லார்வாய்க் கேட்டுத் தெளிதலே சிறப்புடைத்து. அவ்வரிய வுண்மை பிரம நிஷ்டாபர ரல்லாதார்க்கு விளங்குதல் வெகுதூர்லபம். அன்றியும் அங்ஙனந் தோன்றிய உருத்திரர் கிருத்திய கர்த்தாக்களுடன் ஒருவராகப் படிக்கப்பட்ட சங்கார ருத்திரரே யன்றி சகல சமயாதீ தாத்துவித சித்தாந்த சைவர்கள் பரவும் துரீய ருத்திரராம் பரசிவப்பிரபு வன்று. (௪௩)

---

## ௨-வது அறிவுறுத்தல்.

**யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்**=நான் பிறவித் துன்பத்துக்குச் சிறிது மஞ்சேன். இறத்தலுக்கு என் செய்யக் கடவேன். பிறத்தல் துன்பம் இறத்தல் துன்பத்தினும் அறக்கொடிது என்பதனை யொருவாறு விளக்குதும். ஆன்மாவானது சூக்ஷ்ம சரீரத்தோடு பிதாபுசிக்கும் அன்னபானத்துடன் சென்று அவனுதரத்திற் றங்கியிருந்து பிறகு அவனிடத் துண்டாகிய சுக்கிலம் மாதாவினிடத் துண்டான சுரோணிதத்தில் பவளப்பையில் முத்தை வைத்ததுபோல் பதிகிற வுதரத்து பிராணவாயுவை வாக

ணமாகவும் மனதை வழியாகவுங் கொண்டு சுக்கில சுரோணிதத்தி னறலைப்பிலே பதியும். அங்ஙனம் பதிந்து கன்மத்துக்கீடாக மூன்ற ரைக்கோடி யுரோமத் துவாரமும், எழுபத்தீராயிர நாடியும், வாயு விற் பிரதானமான தசவாயுவும்,நவத்துவாரமும், எண்சாணுடம்பும், எழுதாதுவும், ஆறுதாரமும்,ஐந்துபொறியும்,நாலுகரணமும், மூன்று மண்டலமும், இரண்டுவினையும், அவையிற்றை யொன்றெனப் போர்த்த புறத்தோலுமாக ரூபீகரிக்கும். அப்படி ரூபீகரித்து மாதாவின் கருப்பாசயப் பையில் நாளுக்குநாள் அவயவங்களெல்லா முண்டாய் ஒருவடிவாகத் திரளும். பிறகு தாய்புசிக்கு மாகாரத்தை அறுசுவை யடைவாக நாபிச்சூத்திரத் துவாரா வேற்றுக்கொண்டு அந்த அன்னரசத்தின் மிகுதியாலே அந்தக்கரணங்க ளுண்டாக அவற்றால் சுக துக்கங்களை யநுபவிக்கும். பிறகு பூர்வ ஜன்மங்களிற் செய்த புண்ணிய பாவங்கள் புத்தியிற் சொற்பனம்போல் வந்துதோன்ற அக்கணமே சுழிமுனை நாடி யடைபட்டு இடைகலையும் பிங்கலையுந் திறக்க பிராணவாயுவு பிரவேசித்து மேல்நோக்கி நாசித் துவாரங்களினாலே நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசமாக வுசசாரணஞ் செய்யும். அக்காலத்தில் தானடைந்துள்ள கருப்பவாசம் மிகவும் இழிவானதென்றும், அதனால் மிக்கவேதனையே யுண்டாகிறதென்றும், கர்ப்பத்தினின்றும் பிறந்தபோழ்தே சாக்ஷாத் சர்வேசுவரனுடைய திருவருளால் ஞானாசிரியன் றிருவடியடைந்து எக்காலத்திலும் அழிவில்லாது நித்தியமாய் விளங்கும் சிவசாக்ஷாத்காரம் பெற்று அவலமாகிய பிறவிப்பிணியை ஒழித்துவிடக் கடவேனென்று விசாரித்துக் கொண்டிருக்கும். இக்கருத்தையே கர்ப்போபநிடதமானது "யதியோந்யாம் ப்ரமுச் யேயம்ப்ரபத்யே பரமேச்வரம் பர்க்கம்பசுபதிம்ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்=யோனியை விட்டு வெளிவருவேனாயின் பரமேசுவரனுட், பர்க்கனும், பசுபதியும், ருத்திரனும், ஜகத்குருவுமான மகாதேவனை சரணமடைவேன்" என்று புகன்றது. இவ்வாறு விசாரித்துக்கொண் டிருக்கும்போழ்தே கருப்பாசயப்பை யுறுத்துதலினால்பெரிய கற்பாறையின் கீழ் அகப்பட்டா னொருவன் நெருக்கப்பட்டு துயர மடைவதுபோல் மிகவுந் துயரமடைந்து உளமழிந்து சோரும். அன்றியும் கருப்பாசயத்து நீராகிய வெள்ளம் மீக்கொண்டு நிற்கையினால் சமுத்திரத்தில் மரக்கலத்தினின்றும் வீழ்ந்தமிழ்ந்தினவன் துயர மடைவதுபோல் துக்கித்துப் புத்திமயங்கி யிருக்கும். மேலும் தாயின் உதராக்கினி சுடுகையினால் நெருப்பினின்று நீங்காம லிருக்கின்ற இருப்புக் குடத்தில் வைக்கப்பட்டவன் துயரமடைந்து ஆவிசோர்வதுபோல் துன்புறும்.

இதுவுமல்லாமல் இருப்பூசியைக் காய்ச்சி சரீரத்தில் தொளைத்திடப் படுபவன் அடையும் துன்பத்தைப் பார்க்கிலும் எண்மடங்கு துயர மடைந்து அழுந்தும். இவ்வாறு துயரத்திலழுந்தி பீதியடைந்து மெய்மறந்திருக்கின்றபோது முப்பத்திரண்டு நூறாயிரத்து நாற்பதினாயிரம் சுவாசங் கழிந்து உதரகன்மந் தொலையவே தாயினிடத் துண்டான பிரசூதவாய்வு பிரவேசித்து உடலை மடக்கித் தலைகீழாகத் தள்ளும். அப்பொழுது ஆன்மாவானது தன்பலமெல்லாங் கெட்டு மிகவும் மயக்கமடைந்து முன்னெண்ணியிருந்த நல்ல நினைவுகளை யெல்லாமொழித்து ஆலையிலே நெருக்கப்படுங் கரும்புபோல் தாயின் யோநித்துவாரத்தில் நெருக்கப்பட்டு சரீரத்துடன் பூமியில் விழும். பிறவித் துன்பம் இவ்வாறு பயத்தை யுண்டுபண்ணுதலால் மேற் சொன்ன கெர்ப்போபநிடதமானது "கர்ப்பவாஸேமஹத்துக்க: கர்ப்பவாசமானது மகத்தாகிய துக்கம்" என்று வற்புறுத்தியது.

இனி இறத்தல்துன்பமோ இதனினும் எண்மடங் கதிகமாம். அதனைச் சுருங்கச் சொல்லின் ஐம்பொறிகளும் அறிவழிந்து சரீரஞ் சஞ்சரிக்காமல் கிடையாய் விழுந்து கிடக்கையில் ஆன்மாவானது தனக்கெதிரிலுள்ள பொருளையும், பூவையும், பூவையரையும் நினைத்து நினைத்து இனியிவைகளை யநுபவிப்பார் யாரோவென்றும், இவைகளை விட்டுநீங்குங்காலம் நமக்குவந்து வாய்த்ததே யென்றும், நாம் நமது நமது என்று அதிகமாய் அபிமானம் வைத்திருந்த இவையாவும் இப்பொழுது அந்நியமாயிற்றே யென்றும், பாந்தள்வாயிற் பற்றிய தேரையைப்போல் கலக்கங்கொண்டு துயரமடைந்து ஆவி சோரும். அன்றியும் தனக்கெனவோரறிவுமில்லாமல் செய்கையற்று பிராணன் மாத்திரம் நீங்காதிருக்குந் தருணத்தில் முதல் முதல் கெடுவது நேத்திரமாதலால் கண்பஞ்சடையும். முதல் கண்கெடவேண்டிய காரணம் யாதெனின் ஆன்மாவானது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளினும் ஒப்பநிற்பினும் கண்ணிந்திரியத்தைப்போல் மற்ற இந்திரியங்கள் சேய்மைக்கண்ணுள்ள விடயங்களை வியாபித்தறிய மாட்டாது தம்மாட்டு வந்த விடயங்களையே அறிகையாலும், கண்ணிந்திரியமோ தன்னிடத்துவந்துற்ற விடயங்களையும் தூரத்திலுள்ள பொருள்களையும் அறிதலாலும், எல்லாவுறுப்புக்களிலும் கண்ணே பிரதானமா யிருத்தலாலும் முதல் முதல் கெடுவது கண்ணிந்திரியமாகும் இவ்வாறு கண்கெட்டுப்பஞ்சடையவே அருகிலுள்ளோர் வடிவம் தனக்குப் புலப்படாது. புலப்படாதாகவே அவர்களை மீளவும் பார்க்கவேண்டுமென்னும் அவா தன் னு

ஸ்னத்தின்கண் ணெதிகரித்தெழ விழித்து விழித்துப் பார்க்கும். அங்ஙனம் பார்த்துந் தன்னெண்ணம் நிறைவேறப் பெறுமையினல் அல்லலுற் றழுந்தும். பிறகு காது செவிடுபடும். படவே அவர்கள் பேசும் வார்த்தைகள் தனக்குக் கேளாது. பிறகு பரிசவுணர்ச்சி கெடும். கெடவே அவர்கள் செய்யும் உபசாரங்கள் தனக்குத் தெரியாது. பின்னர் நாவிழுந்து போகும். போகவே அவர்களைத் தான் அழைக்கக் கூடாமையாகும். பின்னர்நாசியில் கந்தவுணர்ச்சியறும். அறவே அவர்கள் தனக்குக் கொடுக்கும் வஸ்துக்கள் இன்னவை யென்று அறியக் கூடாமையாகும். இவ்வாறு இவ்வைம்பொறியும் ஒன்றின்பின் னென்றாகக் கெடுவதன்றி ஜயமேலிடுதல் முதலிய அபாயங்களால் ஏககாலத்தில் புலனீங்கி அறிவழிந்துகெடுதலுமுண்டு. அப்பொழுது ஆன்மா படுந்துயரம் அளவிட்டுச் சொல்லமுடியாது. ஆகவே "பட்டிடப் படுந்துயர் பகரற் பாலதோ" என்றும், "மரிப்பதி னருந்துயர் மதிக்கின் மற்றிலை" எனறும் சிவதருமோத்தரங் கூறிற்று. ஆளுடையயடிகளும் "சாதல் சாதல் பொல்லாமை" என்று மரணவேதனையின் கொடுமையை யாவரும் நடுக்கங் கொள்ளக் கூறியருளினர். இந்தகொடிய மரணவேதனையையும், தேக அநித்தியத்தையும், ஆன்மாவின் சுதந்தர ஹீனத்துவத்தையும், யாதாமொருவர் தனிமையாயிருந்து சிறிது சிந்தித்துப்பார்க்கின் உடனே உயிர்க்குறுதியைத்தேடிக்கொள்ள யாதோரையமு மிராதென்பது திண்ணம், திண்ணம்.

வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால் தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெலாந் தொழவேண்டி = பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் உன்னைத்துதிப்பதுந் தாம் செல்வப் பெருக்கோடிருந்து சுகவாழ்வு வாழும் பொருட்டே. மனத்தை யுன்னிடத்துப் பதியச் செய்வதுந் தாமுயர்வடைந்து தம்மை யாவரும் வணங்க விரும்பியே. இதனல் எப்படிப்பட்ட உயர்ந்த தேவர்களாயினும் சிவபெருமானை சித்தசுத்தியுடன் திரிகரணங்களால் ஆராதனைசெய்தாலன்றி அரிய ஐசுவரியங்களையும் சிறிலாப் பதங்களையும் அடையமாட்டார்களென்பதுநிரூபிக்கப்பட்டது. அன்றியுஞ் சிவாராதனையே மற்றெல்லா வாராதனங்களினுஞ் சிறந்ததென்பதூஉம், மிகமேலான தென்பதூஉம் நாட்டப்பட்டது. "**தவச்ரியே மருதோ மர்ஜயந்த- ருத்ரயத்தே-ஜநிமசா ருசித்ரம்பதம் யத்விஷ்ணேருபமன்ய தாயிதே**" என்றற் றொடக்கத்துருக்வேதவசனத்தில் சமஸ்ததேவர்களும் ரௌத்ரமாகிய சிவலிங்காராதனத்தால் தங்கள் தங்கள் ஐசுவரியங்களை யடைந்தார்களென்றும், விஷ்ணு

வானவர் சிவபூசைசெய்தே பரமபதவாழ்வு எய்தினரென்றுங்கூறப்பட்டுள்ளது. இன்னும் அடியிற்குறிக்கும் பிரமாணங்களும் இவ்வுண்மையினை வலியுறுத்தும்:— "வண்ணெருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும், அண்டர்தொழ வாழுன்னிறுமாப்பு மாலால-முண்டவனைப் பூசித்தபேறென் றுணர்ந்திலையால்" (திருவிளையாடற்புராணம்). "வான மேத்த யான் வைகுந்த வாழ்வு பெற்றதுவும், ஞான நான்முகன் சத்திய வுலக நண்ணியதும், ஏனை விண்ணவர் தத்தம வாழ்க்கையெய்தியதும், ஆனுயர்த்தவ னருட்குறி யருச்சனைப் பயனால்" (காஞ்சிபுராணம்). "குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக்குஞ்சாரும்-படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப்பரமேட்டி" (திருவிளையாடற்புராணம்). இதனால் உயர்ந்தபடியிலுள்ள பெருந்தேவர்கள் பதங்களனைத்தையும் ஆராய்ந்து அந்நியமிலாச் சிவார்சனையே தருமென்பது சுருதி சம்மதமாம். (சரு)

**நாயடியேன்-பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே**= நாயடியேனாகிய யானும் பாழாகிய பிறவித்தளையைச் சேதிக்கும் பொருட்டு உன்னைத் துதிக்காநின்றேன். தேவர்களனைரும் தாமுயர்ந்து தம்மை யாவருந்தொழும்வண்ணம் உன்னைத்துதித்தால் நானொருவன் கொடிய ஜனனமரண சம்சாரத்துக்குப் பயந்து அது நீங்கும்பொருட்டு உன்னைச் சரண்புகுந்து உன்னையேதுதிக்காநின்றேன். அயன் அரி. அரன் முதலிய தேவர்க ளனைவரும் கொடிய பவப்பிணி யணுகப்பெற்றவர்க ளெனவும், அவர்களும் வெல்லக்கூடாத அப்பிணியை யகற்றுபவன் தேவதேவனாகிய சிவபிரானெனவும் இதனால் நிச்சயிக்கப்பட்டது. அன்றியும் அச்சிவபிரானேமேற்படி தீப்பிணி யற்றவனாகலின் அப்பிணியினின்றும் நிவர்த்தி செய்விக்கும் பேராற்றல் அவ்வெம்பெருமானுக்கே இயல்பி லமைந்ததெனதூஉம், ஜனனமரணப் பிணிப்புண்டு அலைவாரைக் காத்தல் அப்பிணியால் வருந்தும் மற்றவராகிய அயனாதியரா லியலா வென்பதூஉம், அந்தப் பிணியற்ற மும்மலரகித முக்கண்மூர்த்தியே அநேகரிடத் தச்சமுற்ற முமூட்சுக்களால் வழிபடத்தக்கவனென்பதூஉம் நாட்டப்பட்டது. அதனாலன்றோ சுவேதாசுவதரோபநிடதமானது. "**அஜாத இத்யேவ கஸ்சித்புநஃ ப்ரபத்யதே-ருத்ரயத்தே தக்ஷிணமுகம் தேநமாம் பாஹிநித்யம்**= பிறப்பில்லை யென்றே பயந்தவனொருவன் ஒருத்ரா! உனது தென்றிசைநோக்கிய திருமேனியாதுளது அதனை வணங்குவான்-அதனால் என்னை நித்தியமுங்காப்பாயாக" என்று உண்மை யறிவுறுத்தியது. ஆயின் "**நாராயணாத் ப்ர**

ஹ்மா ஜாயதே-நாராயணாத் ருத்ரோ ஜாயதே= நாராயணனிடத்தில் பிரமா உண்டாகின்றார்-நாராயணனிடத்தில் உருத்திரன் உண்டாகின்றார்" என்று நாராயணோபநிடதங் கூறியுள்ளதே அது பசையற்ற மொழியோ வெனின் அற்றன்று. அடியிற் குறிக்கப்படும். உபநிடதப் பிரமாண வசனங்களின்படி பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகியமும்மூர்த்திகளுக் கப்பால் பரமேசுவரனாகிய உமாநாதன் துரீயமூர்த்தியாகச் சொல்லப்பட்டமையானும், சுருதிகளில் ஒருவனையே பெற்றவனாகவும் பிறந்தவனாகவுங் கூறுவதாகப் பொருள் கொண்டு அவைகளை அப்பிரமாணமாக்குதல் எவ்வாற்றானுங் கூடாமையானும், பிறவாத்தன்மையைத் துரீய ருத்திரனிடத்தும் பிறப்பைக் காரிய மூர்த்தியாகியகுணருத்திரனிடத்துஞ் சேர்த்திடல் வேண்டுமென்பதே சர்வ வேதாந்த சம்மதமாகும். நாராயணோபனிடதங் கூறியபடி நாராயணனிடத்துப் பிறந்தவன் அவனோடு ஒருவனாகப் படிக்கப்பட்ட குணருத்திரனன்றி துரீய ருத்திரனல்ல-துரீயருத்திரனுக்கு எஞ்ஞான்றும் எவ்விடத்தும் பிறப்புமில்லை, இறப்புமில்லை. மற்றைக்கடவுளர்போல் ஜயந்தியுங்கிடையாது. எனவே புருஷ வீரியாநுப் பிரவேசமும், மாதுரு கர்ப்ப வாசமும், யோநிஜத்துவமும் சிவத்துக் கில்லையென்பதே தேற்றம். அதுபற்றியே "எல்லாப் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ், சொல்லாற் றெளிந்தே நஞ்சோணேசர்-இல்லிற், பிறந்தகதை யுங்கேளோம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங்கேட் டிலேம்" என்று சைவத்திருவாளர் கட்டளையிட்டருளினார். என்னை! பரமபதநாதனை ஸ்ரீமந் நாராயணனுடைய அவதார வியவகாரங்க ளெல்லாம் பிரமன் முதலியோர் செய்த பிரார்த்தனைக்கு எளிவந்து ஏனையோர்போல் வினைவயத் தாகாது சுவேச்சா மாத்திரத்தாற் செய்யப்பட்டதெனவும், அவ்வப்போது கொண்ட மானுட பாவ முதலியவற்றால் அநர்த்தரூபமாய்த் தோன்றிய சோகம் மோகம் முதலான வெல்லாம் அந்தந்த அவதாரங்கட்கியைந்த அபிநய மாத்திரையே யன்றி பிறிதல்ல வெனவுங்கொள்ளலாகாதோ வெனின், அப்படிக் கொண்டாலும் அவ்வித வநர்த்தங்கட்குஞ் சிறிது மிடனாகாத சிவபிரான் உண்மையினை வரையறுக்க யார்தரம். கமலக்கண்ணனை ஜீவனென்று மற்றிருவரோடுஞ் சேர்த்து வேதம்ஓதுக்கியபடியால் அவனது அவதாரத்திற் கொண்ட சோகமோகதாபங்கள்யாவும் அவனுக்கியல்பிலமைந்த ஜீவகுணங்களா மென்றே தெள்ளிதிற்றுணியப்படும்.-அவனைப்பரம்பொருளாகக்கொண்டால்உண்டாகு மிழுக்கினை, ஸ்ரீதாயுமானசுவாமிகள் "அல்லலாந் தொழில்படைத்தே யடிக்கடியுருவெடுத்தே, மல்லன்மா ஞாலங்காக்கவருபவர்

கடவுளென்னிற், றொல்லையாம் பிறவிவேலைத்தொலைந்திடா திருணீ ஙகாது, நல்லது மாயைதானும் நானெனவந்துநிற்கும்" என்றுதிரு வாய் மலர்ந்தருளினர். இனி மேற்குறித்த சுருதிவசனங்கள் வரு மாறு:—

(க) "ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரசூயந்தே நகாரண ம்-காரணந்து ஸர்வைச்வர்யஸ் ஸம்பந்நஸ் ஸர்வேச்வர சம்பு ராகா ச மத்யே த்யேயః= பிரமவிஷ்ணு ருத்ரேந்திரர்கள் சிருஷ்டிக்கப் பட்டவர்கள் அவர்கள் காரணர்களாகமாட்டார்கள் காரணராவார் சர்வைசுவரிய சம்பந்நரும், சர்வேசுவரரும், சம்புவாயு முள்ளவரே இருதய வாகாயமத்தியில் தியானிக்கற்பாலர்".(அதர்வசிகோபநிடதம்)

(உ) "அவஸ்தாத் த்ரயாதீதம்துரீயம்ப்ரஹ்மஸஜ்ஞிதம்-ப்ரஹ்ம விஷ்ணு வாதிபிஸ் ஸேவ்யம் - ஸர்வேஷாம் ஜனகம்பரம்ஈசானம்பர மம்வித்யாத்= சாக்கிர முதலிய மூன்று அவஸ்தைகளுக் கதீதரும் துரியரும், பிரமமென்று பேருள்ளவரும், பிரம விஷ்ணு வாதிகளால் சேவ்யமானவரும், சகலருக்கும் ஜனகரும், பரதத்துவ மானவரும், பரமருமான ஈசானரையேஅறியத்தக்கது."(பஞ்சப்பிரமோபநிடதம்)

(ஈ) "அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதம்-ஏ கமாசாஸ்யம் பகவந்தம் சிவம் ப்ரணம்ய= இரண்டற்றவரும், சதுர்த்தவாசியரும், பிரம விஷ்ணு ருத்திரர்களைக் கடந்தவரும், உபாசிக்கத்தகுந்த ஒருவருமாகிய ஷட்குண சம்பந்நரான சிவனை நமஸ்கரித்து." (பஸ்மஜாபாலோபநிடதம்)

(ச) "உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலக ண்டம் ப்ரசாந்தம்.........ஸப்ரஹ்மா ஸசிவஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷரః பரமஸ்வராட்-ஸயேவ விஷ்ணுஸ் ஸப்ராணஃ= உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும்,நீலகண்டரும், ப்ரசாந்தரும் .....(ஆகிய சிவத்தைத்தியானித்தே இருளுக்கப்பாற் செல்வன்) அவரே பிரமா, அவரே சிவன் (ருத்திரன்), அவரே இந்திரன், அவரே அழிவற்றவர், அவரேபரமர், அவரே சொப்பிரகாசர், அவரே விஷ்ணு அவரே பிராணன்." (கைவல்லியோபநிடதம்)

(ரு) "அகாரம் ப்ரஹ்மணம் நாபௌ உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே- மகாரம் ருத்ரம் ப்ரூமத்யே ஓங்காரம் ஸர்வேச்வரம் த்வாத சாந்தயே=அகாரமாகிய பிரமாவை நாபியிலும், உகாரமாகியவிஷ்

ணுவை இருதயத்திலும், மகாரமாகிய உருத்திரனைப் புருவமத்தியி லும், ஓங்காரமாகிய சர்வேசுவரனைத் துவாதசாந்தத்திலும் தியானி க்கவேண்டும்." (சரபோபநிடதம்)

(௬) தஸ்யாச் சிகாயா மத்யே பரமாத்மா வியவஸ்திதஃ- ஸப் ரஹ்மா ஸசிவஸ் ஸஹரிஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷரஃ பரமஸ்வராட்=அந் த (நாராயணரது) இருதயாக்கினி சிகையிலே பரமாத்மா வசிக்கின் றனர். அவரேபிரமா, அவரேசிவன், அவரேவிஷ்ணு, அவரே இந்தி ரன், அவரே அழிவற்றவர் அவரேபரமர், அவரேசொப்பிரகாசர்." (தைத்திரீயோபநிடதம்)

(எ) "ப்ரஹ்மா விஷ்ணுசச ருத்ரச்ச ஸர்வேவாபூதஜாதயஃ-நாச மேவாநுதாவந்தி ஸலிலா நிவபாடபம்=பிரமவிஷ்ணு ருத்திரர்களு ம், ஏனைய வெல்லாவுயிர்களும் பிறந்தழியும் இயல்பின-நெருப்பில் நீர்த்துளிபோல." (மகோபநிடதம்)

(அ) "ஹேயாங் விஷ்ணவாதிகாங் ஸுராங்-சிவயேவ ஸதாத்யே யஸ் ஸர்வஸம்ஸார மோசகஃ= ஹேயகுண வடிவங்களை யுடைய விஷ்ணு முதலிய தேவர்களைக் கைவிட்டு சர்வசம்சார பந்தங்களை நிவர்த்திசெய்யுஞ் சிவபெருமானொருவரே (தூர்யருத்திரரே)சதா தியானிக்கற்பாலர்." (பைப்பலாதோபநிடதம்)

(கூ) "ப்ரஹ்ம விஷ்ண் வீசா நேந்த்ராதிநாம் நாமரூப த்வாரா ஸ்தூலோஹ மிதி மித்யாதயா ஸஜைசாம் ஜீவஃ=பிரமவிஷ்ணு ருத் ரேந்திரர்கள் நாமரூபமூலமாய்த் தூலதேகத்தோடு வியாபிக்கின்றவ ர்களாதலால் ஜீவர்களெனப்படுகின்றார்கள்."(நிராலம்போபநிடதம்)

(௰) "யஸ்யாங்கஜோஹம் ஹரிருத்ரமுக்யஃ= விஷ்ணுவையும் உருத்திரனையும் முன்னர்க்கொண்டயான் எவருக்குப் பிள்ளையோ- எனவே, பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்று வரிசையாகப் படிக் கப்படும் நாங்கள் மூவரும் யாரிடத்தில் பிறந்தேமோ." (சரபோபநிடதம்)

(௰க) "த்ரிநேத்ரம் த்ரிகுணாதாரம் த்ரயாணம் ஜநகம் ப்ரபு ம்=மூன்று நேத்திரங்களை யுடையவரும், மூன்று குணங்களுக்கு ஆ தாரமானவரும், பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்றுமூ ர்த்திகளுக்கு ஜனகருமான பிரபுவை" (பிருஹஜ்ஜாபாலோபநிடதம்

மேற்கூறிய உபநிடதப் பிரமாண வசனங்களால் திரிமூர்த்திவேறு அவருக்கு மேலான துரீயசிவன் வேறு என்பதூஉம், அவரேமோட்சகர்த்தா வென்பதூஉம் தெற்றெனநிரூபிக்கப்பட்டது. ஆயின் பகவற்கீதையில் ஸ்ரீ வாசுதேவன் தானே மோட்சகர்த்தா வென்று கூறியிருப்பதோடு "எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு என்னொருவனையே சரணாகதியடை—நான் உன்னைச் சமஸ்த பாபங்களினின்றும்விடுவித்துமோட்சத்தை யடையும்படிச் செய்கிறேன்பயப்படாதே." என்னும் பொருள்தோன்ற "ஸர்வதர்மாந் பரித்யஜ்யமாமேகம் சரணம் வ்ரஜ:—அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோட்சயிஷ் யாமி மா சுச:" என்று முடிவு படுத்தியிருப்பது என்னையெனிற் கூறுதும். மேலே காட்டிய வேதாந்த வசனங்களின்படி ஸ்ரீ வாசுதேவன் மும்மூர்த்திகளி லொருவனாதலானும், அவனை அயன், அரி, அரன் என்னும் மூவர்களுக்கு மேலான சதுர்த்தவாச்சிய மூர்த்தமாகச் சுருதிகள் நிச்சயிக்காமையானும், வைணவ புராணங்கள் நான்கும் பன்னிரு ஆழ்வார் பாடல்களும் மூன்று மூர்த்திகளையும் விளக்கி அம்மூர்த்திகளுக்கு முதலாவான் மூரிநீர்வண்ணனே யென்று காத்தற்கடவுளையே குறிப்பிக்கையானும், கிருத்திய கர்த்தாக்களாகிய அம்மூவரை நகாரணமென்றும், ஜீவர்களென்றும், பற்பல வேதவாக்கியங்கள் ஆங்காங் கெழுந்து ஒதுக்குகின்றமையானும், மூவரையுங் கடந்த தனிமுதலே மோட்சகர்த்தாவென்பது, வெள்ளிடை மலைபோல் விளங்காநிற்கும். ஆகவே ஸ்ரீ வாசுதேவன் என்னையே வழிபடுக வென்றது ஆசாரியனாகிய வென்னையே வழிபடுக வென்றதன்றி விமலஞானாநந்த வீட்டையளிக்கும் பதியாகிய வென்னை வழிபடுக வென்றதன்மையாது. என்னிடத்தில் அம்புலி சூடிய வெம்பெருமானை வழிபடக்கடவாய்-அல்லது என்னை அவனாகப்பாவித்து வழிபடுவாய் என்பதே உண்மையான வுறுதிப்பொருளாம்-"ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி= பிரமத்தை யறிந்தவன் பிரமமே யாவான்" என்னும் வேதவசனமும், "இட்டனெனக் காண்பனய னேவலரை யேவலரென்—றிட்டனையார் காண்பாரியம்பு" என்னுஞ் சைவத்திருவாளர் வாக்கும், இப்பொருளை வற்புறுத்தும். அல்லாமலும், "பஶ்யமேயோக மைச்வர்யம்= ஈசுவர சம்பந்தமான என்னுடைய ஐசுவரிய யோகத்தை (நீ) பார்க்கக்கடவாய்." என்னுங் கண்ணன் வசனமே தான் ஈசுவரனல்ல வென்பதையும், ஈசுவரசம்பந்த மெய்தினவ னென்பதையுந் தெளிவாய்த் தெரிக்காநிற்கும். மேலும் "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ=அந்த ஆதிபுருஷனையே நான் சரணமடைகின்றேன்-எந்த ஸ்தானத்தை யடைந்தவர்கள் மீண்

யும் பிறப்பதில்லையோ அந்தஸ்தானம் தேடத்தக்கது." என்னும் மீண்டும் அவனது வசனமே தான் பிரபத்திசெய்யும் அடிமை யென்பதையும், தனக்கு ஈசுவரன் அந்த ஆதிபுருஷ னென்பதையும் வெளிப்படையாக விளக்குகின்றது. ஆதலினன்றே வேதசாரத்தை வெளியிடவெழுந்த புராணங்களும் பரசிவத்துக்கு அடுத்தவரும் அவரது சத்திமயமா யமைந்தவரும் ஸ்ரீமந் நாராயணரே என்று அறைகூவி நின்றன.

அமிர்த நாதோபநிஷத்தும் "ஓங்கார ரதமாருஹ்ய விஷ்ணும் க்ருத்வாது சாரதிம் - ப்ரஹ்மலோக பதாந்வேஷீ ருத்ராராதந தத்பர:= ஓங்காரம் என்ற ரதத்திலேறி விஷ்ணுவை சாரதியாகக் கொண்டு பிரமலோகபதத்தைத் தேடிச்செல்வான்-(துரீய)ருத்திராராதனையில் பேரன்புடையவன்" என்று புகழ்ந்தது. ஞானத்தாயாராகிய ஒளவையாரும் ஸ்ரீமந் நாராயணன் சிவபக்தசிகாமணியும் உபாசக சிரேஷ்டனுமாதலால் அவனுடைய கருணைபலத்தினாலே பரமசிவன் திருவடிகளிற் பேரன்புஉண்டாகுமென்று கொண்டு "திருமாலுக்கடிமைசெய்" என்று ஆணைதந்தருளினர். இதனால் சைவர்கள் விஷ்ணுவைத் தூஷிக்கின்றார்களென்னுங் கூற்று முற்றும் அபத்தமாம். சைவர்கள் விஷ்ணுவாலயங்களுக்குச்சென்று ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியைத் திரிகரணங்களாலும் வழிபடுதல் உலகப்பிரசித்தம். பாஞ்சராத்திரிகளோ அவ்வாறுசிவாலயங்களுக்குச்சென்று சிவபிரானை வழிபடுவதில்லையாதலின் அவர்களே சிவநிந்தகர்களாவர். என்னை? கற்புடைய மாதர்கள் தங்கள் கணவரையன்றி வேறுபுருஷரை நாடாதவாறுபோல பாஞ்சராத்திரிகளும் அவ்வாறு செய்கின்றார்களெனின் அது பொருத்தமின்மையென்பது காட்டுதும். ஒருவன் தன் நாயகியைப்பார்த்து நீ என்னையே சரணாகதியடைவாய், நானே உனக்கு உபாயமென்று கூறினால், நீ யென்னையொழிந்த மற்றவர்களை நிந்தனைசெய்யென்றும், அவர்களை யுபசரிக்கவேண்டாமென்றுங் கருத்தாமோ? நானே உனக்கு நாயகனாதலால் என்னையே பற்றியிருப்பாயென்றும், நீ கதியடைவதற்கு நானே காரணனன்றிப்பிறர் காரணரல்லரென்றும், பிறரை நாயகனாக நாடாதேயென்றுங் கருத்தாமன்றி வேறன்று. அதுபோல் தனது சமயக்கடவுளுக்கு விரோதமாகப் பிறதெய்வங்களைப் பரதத்துவமாகப் பாவிப்பது குற்றமாகுமேயன்றி அவர்களை வணங்குவது குற்றமாகாது. தனது கணவன் வேறொரு வடிவிலுள்ளானென்றறிந்தும் அவனைநிந்திப்பது இழிபேயன்றிசிறப்பல்ல. அங்ஙனம் நிந்திப்பதால் தனது கற்புத்தன்மைக்குக் குறைவு

நேரிடுவதோடு அவனுடைய முனிவுக்கும் இலக்காகவேண்டியிருக்கின்றதென்பது வெளிப்படை. ஆதலினன்றோ ஆழ்வார்கள் தங்கள் சமயத்தில் விஷ்ணுமூர்த்தியைப் பரம்பொருளாகப் பாவினார்களாயினும் சிவபிரானையும் திருவெண்ணீற்றினையும் ஆங்காங்கு புகழ்ந்துள்ளார்கள். ஸ்ரீதாயுமானசுவாமிகளும் "அருள்வடிவேழுமூர்த்தமவைகள் சோபானமென்றே, சுருதிசொல்லியவாற்றாலே தொழுந்தெய்வமெல்லா மொன்றே, மருளெனக்கில்லை முன்பின் வருநெறிக்கிவ்வழக்குத், தெருளின் முன்னிலையா முன்னைச் சேர்ந்து யான் றெளிகின்றேனே." என்று திருவாய்மலர்ந்தருளினார்.

நிற்க "ஸர்வதர்மாந்" என்னுஞ் சுலோகமானது பகவற்கீதையின் இறுதியிலுள்ள பதினெட்டாவது அத்தியாயத்தின் அறுபத்தாறாவது சுலோகம். இதற்குமுன்னுள்ள (௬௰௧-வது) சுலோகமாகிய "ஈஸ்வரஸ்ஸர்வபூதாநாம்" என்னுஞ் சுலோகமானது கிருஷ்ணனுக்கு அந்நியமான ஈசுவரனுடைய இருப்பைக்காட்டுகின்றது. (௬௰௨-வது) சுலோகமாகிய "தமேவசரணங்கச்ச" என்னுஞ் சுலோகமானது அந்த ஈசுவரனுடைய சாசுவிதமான ஸ்தானத்தைச் சாற்றுகின்றது. (௬௰௩-வது) சுலோகமாகிய "இதிதே ஜ்ஞாந மாக்யாதம் குஹ்யாத்குஹ்ய தரம்மயா விம்ருஸ்யை ததஸே ஷேண யதேச்சஸி ததாகுரு=இவ்விதம் ரகசியங்களுக்கெல்லாம் அதிரகசியமான ஞானவேதுவாகிய சாத்திரம் என்னாலே உனக்குச் சொல்லப்பட்டது-இந்தச்சாத்திரத்தைப் பூர்த்தியா யாராய்ந்து எவ்வாறு விரும்புகின்றாயோ அவ்வாறுசெய்" என்னுஞ் சுலோகமானது கீதை மிகவும் ரகசியமானதென்று கூறுகின்றது. பின்னர் (௬௰௬-வது) சுலோகமாகிய "ஸர்வதர்மாந்" என்னுஞ் சுலோகமானது கிருஷ்ணனது மகிமையினை விளக்குகின்றது. இவ்வாறு கீதையின் உபசம்ஹார அத்தியாயத்தில் சர்வபூதங்களினும் அந்தர்யாமியாயும், தனக்கந்நியமாயுமுள்ள ஈசுவரனது இருப்பைச் சொல்லி பின்னர் அவனது பிரசாதத்தால் அடையப்பெறும் பேற்றையும் விளக்கி, அநந்தரம் தன்னையே சரணாகதி யடையும்படிக்கூறி, தானதனால் மோட்சத்தைப் பெறும்படிச் செய்விப்பதாகவும் போதித்தமையால், கிருஷ்ணன் ஈசுவரனல்லவென்பதூஉம், அவன் ஈசுவரன் றிருவடியை யடையச்செய்யும் சோகம்பாவனை முதிர்ந்த ஈசுவர சம்பந்தமெய்திய பரமாசாரியனென்பதூஉம், நன்கு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த உண்மையையே "அருவெனு மமலன்றா னருளில னெனினுஞ்சார் - குருபர னருளுண்டேலெனிலொரு குறையுண்டோ - திருவடிதரவந்தார் திருவுள மிவ

ரென்று-னுறுதுயர் களைகின்று-ரொருவரு மிலைகண்டீர்" என்று பிரமகீதையும், "குரவர் தமக்கர்ச் சனைகள் கொடுப்ப தெமக்காகும்-விரவி லெமக்குப் புரிபிழை யாசான் விடுவிப்பான்-கரவிலவர்க்குப் புரிபிழையெம்மாற் களைவாகா-பரம பதத்தைத் தருவதொருத்தன் பணியன்றே" என்று விருத்தாசலபுராணமும் பிரகாசப்படுத்தின. ஆகவே கீதாசாரியனாகிய கிருஷ்ணனை ஜகஜ்ஜந்மாதி காரணனும் பரம்பொருளாக மயங்கி இடர்ப்படாது பரமாசாரியராக வழிபடுதலே கீதையின் அதிரகசியார்த்தமாம். "யஸ்யதேவேபராபக்திர் யதாதேவேததாகுரௌ = எவனுக்குத் தேவனிடத்தில் பூரணமான பக்தியுண்டு—தேவனிடத்தி லுள்ளதுபோல் குருவினிடத்திலு முண்டு" என்னும் சுவேதாசுவதரோபநிடத மந்திரத்தையுஞ் சிந்தித்துத்தெளிக. ஆதலாற்றான் ஆசிரியர் போதாயன முனிவரும் ஆன்மாக்களை யாட்கொள்ளும் ஆசாரியன் திருமேனியில் சிவனைப் பூசிக்கவேண்டுமென்று விதித்தனர். சிவஞானசித்தியும் "பரப்பிரம மிவனென்றும் பரசிவன்றானென்றும் பரஞான மிவனென்றும் பராபரன்றானென்றும்—அரன்றருசீர் நிலையெல்லா மிவனே யென்று மருட்குருவை வழிபடவே யவனிவன்றானே" என்று வற்புறுத்தியது. அவ்விதியையே அர்ச்சுனனும் அஞ்ஞான்று அமர்க்களத்தில் அநுஷ்டிப்பவனாய்த் தனக்குக் கீதோபதேசஞ் செய்தருளிய கண்ணன் திருமேனியில் சிவபூசை முடித்துக்கொண்டானென்று பாரதங் கூறிற்று. ஆதலினன்றோ வியாசர் கிருஷ்ணர் இருவர்தவிர அர்ச்சுனனுக்குச் சமானமான சிவபக்தன் எங்குமில்லை யென்று நூல்கள் கூறுகின்றன. சிவபெருமானே முத்திநாதன் என்னும் உண்மை கீதோபதேசத்தால் அர்ச்சுனனுக்கு நன்கு விளங்கினமையால் கீதோபதேசமானபிறகும் அவ்வுபதேசத்தின் பயனாகச் சிவபூசையை மரண பரியந்தமும் விடாது செய்துவந்தனன். வேதசிரசுக்களுக்கெல்லாஞ் சிகையாகிய அதர்வசிகோபநிடதமும் தனது இறுதிமந்திரத்தில் "மோட்சமென்கிற சிவத்தைக் கொடுப்பவன் சிவனே யாகலின அவனொருவனே மற்றெல்லாவற்றையும் விட்டுத் தியானிக்கத் தக்கவன்" என்னும் பொருள்பட "சிவஏகோ த்யேயச் சிவங்கரஃ—ஸர்வமந்யத் பரித்யஜ்ய" என்று குன்றின்மேலிட்ட விளக்குபோல் விளக்கியது. (௩௬)

பாடுவன நால்வேதம் = நான்கு வேதங்களும் சிவபெருமானுடைய பெரும்புகழைப் பாடாநின்றன. வேதங்கள் நான்கனுள் இருக்குவேதம் இருபத்தொருசாகையும், யஜுர்வேதம் நூற்றொரு சாகையும்,

சாமவேதம் ஆயிரஞ்சாகையும், அதர்வணவேதம் ஒன்பதுசாகையுமா யுள்ளன. இந்த ஆயிரத்து நூற்று முப்பத்தொரு சாகைகளில் ஒன்றிலாவது தத்துவாதீதனாகிய பரமசிவத்தின் பெரும்புகழ் கூறப்படாம லிருக்கவில்லை. ஒவ்வொருசாகையிலும் அவனது திவ்விய நாமங்களின் தொகுதியாகிய ருத்ரம் படிக்கப்பட்டிருக்கின்றது. ஏனைத் தேவர்களுக்கோ அத்துணைச் சிறப்பு கிடையாது. கற்புடைய ஸ்திரீயானவள் தனது கணவனுடைய பெருமையினைச் சமயம் வாய்த்த போதெல்லாம் புகழ்ந்து பேசுதல்போல் வேதநாயகியும் தனது நாயகனுடைய என்றுங்குன்றா மகிமையினைப் பலதிறத்தானுஞ் சிறப்பித்துப் புகழவேண்டி தனது சாகைகடோறும் பரமேசுவர நமஸ்காரங்களையும், பரமேசுவர தோத்திரங்களையும், பரமேசுவர பாரம்யங்களைப் பலவிதமாய் நிரூபிப்பதையுமே அமைத்துக்கொண்டனள். அன்றியும் வேதத்துரோகிகளா யுள்ளார் நடுவுநிலைகொன்று தன்னைக் கொடுக்காவண்ணஞ் சிவநாமதேய ரத்தின ரட்சாபந்தனமும் ஆங்காங்கு அமைத்துக்கொண்டனள். ஆதலின் மறைகள் நான்கும் எப்பொழுதும் எவ்விடத்தும் எல்லாத்தேவரினுஞ் சிறந்த சிவத்தின் மகிமையினையே பெரும்புகழாகப் பாடிக்கொண்டிருக்கின்றன வென்பது துணியப்பட்டது. வேதங்க ளெல்லாவற்றானும் பிரதிபாதிக்கப்பட்ட பெருமையுள்ளவன் சிவபெருமானே என்பதைச் சர்வான்மாக்களும் நன்குணரவே "வேதை ரநேகை ரஹமேவ வேத்யோ= எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் யானே" என்று கைவல்லியோபநிடதமும், "நதஸ்ய ப்ரதிமா அஸ்தி-யஸ்யநாம மஹத்யச:= அவனுக்குச் சமானமானவ ரில்லை-எவன் பெயரே பெரியபுகழாம்" என்று சுவேதாசுவதரோபநிடதமுங் கூறின. அன்றியும் வேதங்களின் ஞானகாண்டப்பொருளை விளக்க வெழுந்த உத்தர பாகங்களாகிய வேதாந்தங்கள் ஈசாவாஸ்யமுதல் முக்திகோபநிடத மீறாய நூற்றெட்டு உபநிடதங்களாக விரிந்து கிடக்கின்றன. அவற்றுள் ஈசாவாஸ்ய மென்னும் உபநிஷத்தின் பிரதம உபக்கிரமத்தில் "ஈசாவாஸ்ய மிதம் ஸர்வம்" என்றற் றொடக்கத்து மந்திரத்தில் ஈசசப்தமிருத்தலானும், இறுதியிலுள்ள முத்தி கோபநிடத மென்னும் உபசம்ஹாரோபநிடதத்தில், "கைவல்ய முக்திரேகைவ பாரமார்த்திக ரூபிணீ." என்னும் மந்திரத்தில் ஈசனோ டிரண்டறக் கலக்குங் கைவல்லியசப்தம் கேட்கப்படுகின்றமையானும், மீமாம்ஸகர் கூறும் உபக்கிரம உபசம்ஹார நியாயம் பற்றி நூற்றெட்டு உபநிடதங்களும் சிவபெருமானுடைய பெரும்புகழையே பேசிக்கொண்டிருக்கின்றன வென்பது தெள்ளிதிற் றுணியப்பட்டது. (௩௭)

## ௫-வது. சுட்டறுத்தல்.

வினையிலே கிடந்தேனைப் புகுந்துநின்று போதுநான் வினைக்கேட னென்பாய்போல=சரீர சம்பந்த வினைகளிலே பிணிப்புண்டு கிடந்தவென்னை வலியவந்து நின்று "வா" நான் வினைகளைக் கெடுக்கும் பாவநாசன் என்று சொல்வாய்போல. ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் ஆன்மாவை யநாதியே பந்தித்துள்ளன. கன்மமலமாகிய வினைகளின் பகுப்பு ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் என மூன்று திறப்படும். மனவாக்குக் காயங்களினாலே ஈட்டப்படும். புண்ணிய பாவமாகிய இருவினைகள் எடுத்தபிறப்பில் ஈட்டப்படுகையில் தூலகன்மமாய் ஆகாமியமெனப் பெயர்பெறும். பிறகு பக்குவப்படும் வரையில் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும்போது சூக்கும கன்மமாய் சஞ்சிதமெனப் பெயர்பெறும். பின்னர் பயன்படுகையில் பக்குவப்பட்ட சஞ்சிதகன்மங்கள் மேலெடுக்கும் உடம்பையும் அதுகொண் டநுபவிக்கப்படும் இன்ப துன்பங்களையுந் தந்து பிராரத்துவமெனப் பெயர்பெறும். அவற்றுள் ஆகாமிய சஞ்சிதமாகிய விரண்டும் சிவனருளாலும் குருகடாட்சத்தாலும் ஒழியும். பிராரத்துவமோ அநுபவித்தே ஒழிக்கற்பாலதாயினும் இடைவிடாப் பாவனையால் அவாவற்றவிடத்து வாதிப்பதன்றுமென்பது லோகாநுபவம். எடுத்த உடம்பின்கண்ணே அநுபவிக்கப்படும் பிராரத்துவம் ஆதிபவுதீகம், ஆதியாத்மீகம், ஆதிதைவீகம் என முத்திறத்தாற் பலதிறப்பட்டு விரியும். ஆதிபவுதீகம் சடம்வாயிலாக வருவதெனவும், ஆதியாத்மீகம் சடத்தோடுகூடிய சேதனம் வாயிலாக வருவதெனவும், ஆதிதைவீகம் ஒருவாயிலா லன்றி தெய்வந்தானே காரணமாக வருவதெனவும், அறியற்பாலன. அவற்றுள் சுபத்தமெனப்படும் ஓர்வகை வினைகள் சிவதன்மத் தொருப்பட்டிருப்பவரை வாதியாது. யந்தமெனப்படும் வினைகள் சிவஞானிகளை வாதியாது. தீவிரமெனப்படும் வினைகள் எல்லாரையும் வாதிக்குமாயினும் சிவஞானிகளை மிகுதியும் வாதியாது, ஆகாமியமும் எருது. சீந்தற்றண்டு முதலான ஔடதங்களும் மந்திரங்களும் இம்மையிலே பயன்றருவதுபோல் ஆன்மாக்கள் இவ்விடத்தியற்றும் வினைகளிற்சில இம்மையிலேயே பயன்றரும். இவைகளுக்கு திருஷ்டமென்று பெயர். சிலவினைகள் இம்மையிலே பயனைத்தராது மறுமையிலே பயன்றரும், இவைகளுக்கு அதிருஷ்டமென்று பெயர். பூமியிலுண்டாகுஞ் சிலவிளைவுகள் விளைந்தவருடத்துக்குப் புசிப்புமாயும் வருகிறவருடத்துக்கு விதையுமாயும் இருப்பதுபோல் இம்மையிலே

செய்யும் அசுவமேதயாகம் பிரமகத்தி முதலிய வினைகள் இம்மையி ற்றானே சுகத்தையுந் துக்கத்தையும் முறையே தந்து மறுமையில் சுவர்க்கத்தையும் நரகத்தையுந் தரும். இவைகளுக்குத் திருஷ்டாதி ருஷ்ட மென்றுபெயர். ஆயின் ஒருவன் தானீட்டிய வினைகளுக்குத் தக்கபடி வேதாகமங்களிற் கூறியுள்ள பிராயச்சித்தாதிகளைச் செய்யி ன் அவைகள் நீங்குமென்று நூல்களிற் கூறியதென்னையெனின், அவ் வினைகளின் கௌரவமாத்திரங் கெடுமேயன்றி தோஷம் சேடித்து நிற்குமெனல் திண்ணம். எவ்வாறெனில், ஒருவன் பிரமகத்தி கோ வதை முதலான வினைகளைச்செய்து அவற்றிற்குத்தக்க பிராயச்சித் த மியற்றினால் நரகவேதனைக்குண்டான கௌரவங்கெட்டு கொலை தோஷ மாத்திரம் சேடித்துநிற்கும். அப்படி சேடித்துநின்ற தோஷ த்தின்பயன் மேலுடலெடுக்கைக்குத் தொந்தனையாகும். இவ்வாறு வினைகள் பிரவாகாநாதியாக ஆன்மாவைப் பற்றியிருத்தலால் "வினை ப்போகமே தேகங்கண்டாய்" என்றார் வெண்காட்டடிகள். (சஅ)

இனியேனுனே யுய்யுமா றென்றென் றெண்ணி யஞ்செழுத் தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை=இனி கடைத்தேறும்வழி யா தென்று பன்முறை சிந்தித்துப் பஞ்சாக்ஷரமாகிய தெப்பத்தைப் பற் றிக்கொண்டு கிடக்கின்ற வென்னை. பௌவமென்னுஞ் சமுத்திரமா னது தன்னுள் வீழ்ந்தாரை ஒரோவழி கொல்லுங்கொடுமை யுடை யது. பெரும்பிறவிப் பௌவமோ அப்படிக்கின்றி அனைவரையும் எ ஞ்ஞான்றும் தன்னுள் வீழ்த்திக்கொல்லும் வெவ்விய வாற்றல்பெற் ற கொடுமையுடையது. அந்தப்பெரும்பிறவிக்கடலைக் கடக்கவேண் டுமாயின் நல்லதெப்பமாயும், எல்லா நன்மைகளைச் செய்யவல்லதா யும்,நற்றுணையாயு மிருப்பதோர் கருவிவேண்டும். அதுஐந்தெழுத்தா கிய பஞ்சாக்ஷரமே. ஆதலின் சர்வான்மாக்களும் அதனையே பற்றிக் கிடத்தல் இன்றியமையாத கடனாம். பிடித்தலாவது=மனத்தை யொருக்கிச் செபித்தல் "த்யாந நிர்மதநாப்யாசாத் பாசந்தஹதிப ண்டித:=(இடைவிடாதுசிந்தித்தலாம்.) தியானமென்னுங் கடைதல் வாயிலாகப் பிறந்த சிவஞானக்கினியினால் பாசத்தை அறிஞன் தகிக் கின்றான்" என்று கைவல்லியோப நிடதங்கூறிற்று. இந்த ஐந்தெழு த்தாகிய பஞ்சாக்ஷரம் முதலாவது விஷயசூசனத்திற் சொல்லியபடி வேதங்களின் சாரமாயிருத்தலினால் ஏனைய மந்திரங்களின் பொரு ள்களனைத்தையும் தன்னுள்ளடக்கிக்கொண்டு தான் சிரசாய் விளங் கிக்கொண் டிருக்கின்றது. அன்றியும் தான் சிவபெருமானுக்குத் தி ருமேனியாய் ஆலம்விக்தைப் போன்று அனேக பொருள்களை யுள்ள

டக்கிக்கொண்டு முக்குணாதீதமாய் அப்பெருமானுடைய மேன்மை பொருந்திய பிரணவத்தில் வீற்றிருக்கின்றது. சிவத்துக்கு மேலாந் தத்துவம் எவ்வாறின்றோ அவ்வாறே வேதசிரசாயமைந்துள்ள இந்தத் திருவைந்தெழுத்துக்கு மேலான மந்திரமே கிடையாது. அண்ட சராசரங்களுக் கெல்லாம் மூலகாரணனாகிய சிவபிரானைத் தெரிந்தவர்கட்கு மற்றுள்ள தேவர்களால் அடையத்தக்க பயன் யாதுள? அதுபோல் சிவபிரானது திருவைந்தெழுத்தையுந் தெரிந்தபிறகு மற்றுமுள்ள மந்திரங்களால் அடையவேண்டிய பயனொன்றுமில்லை. பிரமன் முதலாகக் கூறப்படுந் தேவர்கூட்டங்கட் கெல்லாம் சிவபிரானெவ்வாறு பரிசுத்தரோ அவ்வாறே சத்தகோடி மகாமந்திரங்கட்கும் திருவைந்தெழுத்தே மகாபரிசுத்தமாகிய மந்திரமாம். இதனை யாவர் தியானிப்பார்களோ அவர்கள் நிழலைப் பரிசிக்கினுந் தரிசிக்கினும் பாதகங்கள் பறந்தோடுமென்றால் இதன்மகிமையினை இவ்வளவினதென்று வரையறுக்க யார்தாம். இந்தத் திருவைந்தெழுத்தினுலேயே ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன், ஐங்கருமேந்திரியம், பஞ்சகர்த்தாக்கள், பஞ்சகிருத்தியங்கள், பஞ்சப்பிரமங்கள் முதலான அனைத்தையும் சிவநிஷ்டைகூடும் அறிஞர்கள் ஆன்மாக்களுக்கு உணர்த்துவார்கள். இம்மகாமந்திரம் "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்தால் விளங்கும். இதை ஆசிரியர் உரைத்த உபதேசப்படி நல்லமுகூர்த்தத்தில் தொடங்கி ஆயுள்நாள்வரையில் விடாது மனவொருப்பாட்டோடு ஜபிக்கவேண்டும். எதைமறந்தாலும் உயிர்க்குறுதியைத் தரும் பஞ்சாட்சரத்தை மாத்திரம் மறத்தல் கூடாது. ஆதலினன்றோ ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் "நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" என்று கட்டளையிட்டருளினர். இப்படிப்பட்ட அரிய பெரிய மகிமைவாய்ந்த பரமவைந்தெழுத்தாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமானது பவசாகரத்தில் வீழ்ந்தழுந்துகின்ற ஆன்மாக்களைவருக்கும் சிறந்த தெப்பமாயும், முத்திக்கரையிற் கொண்டுபோய் தப்பாது சேர்க்கும் நற்றுணையாயும், இருத்தல்பற்றி பஞ்சப்பிரமோபநிடதமானது "பஞ்சாக்ஷரமயத்சம்பும் பரப்ரஹ்மஸ்வரூபிணம்-நகாராதியகாராந்தம் ஜ்ஞாத்வா பஞ்சாக்ஷரம் ஜபேத்=பரப்பிரம ஸ்வரூபமாயுள்ள பஞ்சாக்ஷரத்தைத் தன்மயமாகக் கொண்டவர் சம்பு, பஞ்சாக்ஷரம் நகாரம்முதல் யகாரம் இறுதியாக வுள்ளதென அறிந்து ஜபிக்கக்கடவர்" என்று உண்மை நாட்டியது. இதனையே கஞ்சனூர்ச்செல்வரும் யாவருங்காண அனற்படிந்த அயப்படியேறிச் சிறப்பித்து சிவபரத்துவத்தை நாட்டினர்.

நிற்க, இந்தப் பஞ்சாக்ஷரமானது உச்சரிக்கிற முறைமையினாலே ஸ்தூலம், சூக்ஷமம், காரணம், மகாகாரணம், அதிசூக்ஷமம் அல்லது மகாமநு என ஐவகைப்படும். ஸ்தூல பஞ்சாக்ஷரம் "நமः சிவாய" என்று சொல்லப்படும். சூக்ஷமபஞ்சாக்ஷரம் சிவாயநமः என்று சொல்லப்படும். ஸ்தூலம் போகத்தையும், சூக்ஷமம் மோட்சத்தையுந் தருதலால் முமூட்சுக்கள் எஞ்ஞான்றும் சூக்ஷமபஞ்சாட்சரத்தையே விதிப்படி ஜபிக்கக்கடவர். ஆதலினன்றோ "சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கபாய மொருநாளு மில்லை" என்றார் ஔவைப்பிராட்டியார். கோவை வேந்தரும் "நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம வெனப்பெற்றேன்." என்றனர். இந்தச் சூக்ஷமபஞ்சாக்ஷரத்திலுள்ள சிகாரம் சிவம், வகாரம் அருள், யகாரம் ஆன்மா, நகாரம திரோதை, மகாரம் மலம் என்று சொல்லப்படுதலால் இந்த முறைமையினை யுணர்ந்து, ஊனநடனமாகிய நகாரமகாரத்தில் சென்று ஜனன மரணப்பட்டுப் போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்தி, சிகார முதலாக வுச்சரித்து அப்படி உச்சரிக்கிற முறைமையினையும் விட்டு வகாரமாகிய ஞானந் தானாய் நிற்கவே சிகாரமாகிய ஞேயத்திலே அழுந்துவிக்கும். அது எப்படியெனில் பேசுமெழுத்தாகும் சத்தியாகிய யகாரமிடமாகப் பேசா வெழுத்தாகுஞ் சிவமாகிய சிகாரத்தி லழுந்தவே அத்தன்மை யுண்டாகும். அதுவே மோனமுத்திரை யென்னுங் கைக்காட்டி லுணரக்கிடக்கின்றது. அதனை விளக்கின் கைத்தலமொன்றிலே கநிட்டை, அநாமிகை, மத்திமை என்னும் மூவிரல்களோடு இயல்பாகவே சேர்ந்து நிற்கும் தர்ச்சனியை (சுட்டுவிரலை) அவற்றினின்றும் வேறுபிரித்து அங்குட்டத்தோடு (பெருவிரலோடு) ஏகமாயடங்கி நிற்க வமைப்பதுபோல், ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மலங்களோடு இயல்பாகவேகூடியிருக்கும் ஆன்மாவைஅவற்றினின்றும் வேறுபிரித்துச்சிவபிரானது ஞானாநந்த வடிவமாகிய திருவடி நிழலிலே அடங்கி நிற்க அழுந்துதலாம். இந்த அநுபவரகசியமும், பஞ்சாட்சரம் ஏகாக்ஷரமாகும் முறைமையும் (வகாரத்தில்நகாரமும், யகாரத்தில் மகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும் அதில் யகாரமும் ஒடுங்குதல்), காரண பஞ்சாக்ஷரம் மகா காரணபஞ்சாக்ஷரம் மகாமநு ஆகிய விம்மூன்றும், உபதேசக்கிரமத்தால் அறியத்தகும் அதிரகசிய மாதலால் குருபரன் றிருத்தாளைச்சேர்ந்து வழிபட்டுக் கேட்டு தெளிந்துகொள்க. (௬௯)

தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை, மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி

**மூதாதை மாதாளும் பாகத்தெந்தை**=தேவர்கட் கரசனுகிய இந்திரனும் உணரக்கூடாத தேவாதிதேவன்-செழுமையாகிய வுலகங்களைப்படைத்துக் காத்து அழிக்கின்ற மற்றையோராகிய பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் முதல்வனுய் நின்ற ஆதிபுருடன்-உருவமுடையவன்-யாவர்க்கும் பாட்டன் - உமாதேவியால் ஆளப்படுகின்ற இடதுபாகத்தை யுடையவன் என்பது பொருள். இதனுல் சுத்தசிவத்தின் தடஸ்த லட்சணங் கூறப்பட்டது. தடஸ்த லட்சணமாவது சிவபெருமானுடைய தயாமூலம் வெளிப்பட்ட அவசரம். இது பரம கருணைமயத் திருமேனியாயும், முத்தொழில்களும் தனது சந்நிதியில் நடைபெற்று விளங்கச் சாட்சிமாத்திரமாயும், முக்குணங்களில், தோய்ந்துள்ள மும்மூர்த்திகளுக்குப் பரமாயும், மனோவிருத்திகளுக் கெட்டாத நின்மலமாயும், ஆதிநடுவந்தமில்லாத் தனிமுதலாயும், விபுவாயும், சிதாநந்த ரூபமாயும், உள்ளதோர் சகளவடிவமாம். இவ்வடிவம் நித்திய விபூதிமயமாய் விளங்கும் ஸ்ரீ சோமலோக மென்னும் மகாசிவலோகத்தில் எழுந்தருளி யிருக்குமிருப்பு. இது மகாசிவலோகத்தில் மாத்திரமன்று, யோகிகள் இருதயகமலத்தும், மகாசிதம்பரத்தும், அன்பர்கள் பரிபாகத்துக்குத் தக்கபடி ஆங்காங்கு ஆவிர்ப்பவித்தும், நித்திய செயம்பிரகாசச சொரூபமாய் விளங்கிக்கொண் டிருக்கும். இதற்குச் சிறப்பிலக்கணமாவது மாதாளும்பாகம். மாது என்றால் உருத்திரனது சத்தியாய உருத்திராணியல்ல. மற்று உலகமீன்றருளிய பராசத்தி யெனப்படும் பேரின்பமயமான பிரமவித்தியா தேவியாம். இந்தத்தேவியே தேவேந்திரனுக்கு யட்சதத்துவம் போதித்த பெருமாட்டியெனக் கேனோபனிடதம்புகலும். இவ்வம்மையை பரசிவசத்தி எனவும், மாதேவன் பாகத்தாய உமையம்மையெனவும், ஆரணமுடிக ளனைத்தும் ஒருங்குசேர்ந்து அறையாநிற்கும். உமா வென்னுஞ் சொல், உகார மகார அகாரங்களாகிய வியஷ்டிப் பிரணவத்தில், அதற்கியல்பி லமைந்த அகார உகார மகாரங்களாகிய மாத்திரைகள் முறைபிறழ்ந்து, உமா எனத் தேவியார் திருநாமமாய் நிற்கும். இதுபற்றியே "**க்ருஷ்ண பிங்களம்**=கருமையுஞ்செம்மையுங்கலந்த திருமேனி" எனவும், "**உமா பதயே பசுபதயே**=உமையின்பதிக்கு பசுபதிக்கு" எனவும் தைத்திரீயோபநிடதஞ் செப்பியது. இங்கு மாதாளும்பாகங் குறித்தமையால் காளகண்டம், கண்ணுதல் முதலிய மற்றைச் சிறப்பிலக்கணங்களுந் தழுவப்படும். இவ்வித இலக்கணங்களை வேறு எக்கடவுளருக்கும் எவ்விடத்தும் எச்சமயத்தும் வேதங்கள் கூறினதின்று. சிவபெருமா னொருவருக்கே இயல்பிலமைந்த அசாதாரண இலக்கணங்க

ளாகவும், நற்காரண வாக்கியங்களாகவும், ஒருங்கு சேர்ந்து கூறியுள்ளன. அவற்றுள் சிலவருமாறு:— (க) ருதம் சத்யம் பரப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்-ஊர்த்வரேதம் விருபாக்ஷம் விஸ்வரூபாயவை நம=மெய்யினரும், சத்தியரும், பரப்பிரமசொரூபரும், புருஷரும், கருமையுஞ் செம்மையுங் கலந்த திருமேனியுடையவரும், ஊர்த்வ வீரியமுடையவரும், விரூபாட்சரும், விசுவரூபருமாயுள்ளார்க்கு நமஸ்காரம். (தைத்திரீயோபநிடதம்), (உ) ருதம் சத்யம் பர ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்-ஊர்த்வ ரேதம் விருபாக்ஷம் சங்கரம் நீலலோஹிதம்-உமாபதி: பசுபதி: பிநாகீஹ்யமிதத்யுதி:=மெய்யினரும்..... ...சங்கரரும், நீலலோகிதரும், உமாபதியும், பசுபதியும், பிநாகியரும், அளவில் பிரகாசமுள்ளவரும் (நரசிம்மதாபநியோபநிடதம்), (௩) ருதம் சத்யம் பர ப்ரஹ்ம ஸர்வஸம்சார பேஷஜம்-ஊர்த்வரேதம் விருபாக்ஷம் விஸ்வரூபம் மஹேச்வரம்= மெய்யினரும ........சர்வ சம்சாரப் பிணிக்கு மருந்தினரும் ........ (சரிசனோபநிடதம்), (ச) த்ரிலோசனம் உமார்த்ததேஹம் வரதம்= முக்கண்ணரும், உமைபாகரும், வரதரும் (யோகதத்வோபநிடதம), (ரு) பஞ்சவக்த்ர முமா ஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்தம்= ஐந்துமுகங்களுடையவரும், உமாசகாயரும், நீலகண்டரும், பரமசாந்தரும். (மண்டலப் ப்ராஹ்மணோபநிடதம்,) (சா) உமா ஸஹாயம் பரமேஸ்வரம் ப்ரபும்-த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம் .....(கைவல்லியோபநிடதம்), (எ) த்ரிநேத்ரம் த்ரிகுணாதாரம் த்ரயாணம் ஜநகம் ப்ரபும்=(ப்ருஹஜ்ஜாபாலோபநிடதம்), (அ) ஓங்கார ஸ்வரூபிணம் மஹாதேவ முமார்த்த தேஹசேகரம்-ஸோம ஸூர்யாக்னி நயநம்- (பஸ்மஜாபாலோபநிடதம்).

இன்னணம் அளவில் வசனங்கள் ஆரணமுடிகளில் விரிந்து கிடக்கின்றன. சாந்தோக்கியம், பிரகதாரண்ணியம், தைத்திரீயம் முதலிய உபநிடதங்களில் தகரோபாசனா மூர்த்தியாகப் புகழ்பெற்றவர். பிரமனோ, விஷ்ணுவோ, ருத்திரனோ, சத்தியோ, அக்கினியோ, சூரியனோ, வாயுவோ, மற்றியாரோ வென நிகழுமைய மறுக்குமாறு மேற்காட்டிய உபநிடதவசனங்கள் யாவும் ஒருங்கெழுந்து தகரவித்தியாத் துரீயப்பிரமம் உமாசகாயம், திரிநேத்திரம், நீலகண்டம் முதலிய அற்புத வடையாளங்கள் அமையப்பெற்றுள்ள ஒப்புயர்வில்லாமயகள விக்கிரகமென முழக்குகின்றன. இதனுல்சர்வான்மாக்களுக்கும் உபாஸ்யப் பொருளாயுள்ளவர்சிவபரம்பொருளென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நிரூபிக்கப்பட்டது. அல்லாமலும், தை

த்திரீயோபநிடதமானது துரீய மூர்த்தியாகிய சிவபிரானுக்குச் சத்தியோசாதமுதல் ஈசானம் இறுதியாயுள்ள பஞ்சப்பிரம மந்திரங்களைக்கூறி "ஹிரண்யபதயே அம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோநம:" என்று துதித்துப் புகழ்ந்தமையால் சிவபிரானைத் தவிர வேறு எக்கடவுளரையும் அவ்வுபநிடதமானது உபாஸ்யப்பொருளாகச் சிறப்பித்தோதவில்லை யென்பது பரமசித்தாந்த மாயிற்று. அங்ஙனமிருக்க "விரூபாக்ஷன்" என்றபதத்துக்கு ஒன்றுக்கொன்று மாறுரூபம் பெற்ற சூரிய சந்திரர்களை நேத்திரமாகக் கொண்டவரெனவும், "க்ருஷ்ண பிங்கள:" என்ற சொல்லுக்கு ஓரவதாரத்தில் கருமையும் ஓரவதாரத்தில் செம்மையும் பெற்றவரெனவும், வலிந்து பொருட்படுத்தி விஷ்ணுவினிடஞ் சேர்க்க விடர்ப்பட்ட வீணர் சித்தாந்தம் அவலமாயிற்றன்றோ. அப்படி முரண்பட்டுக் கூற முயன்றது தமது கடவுளுக்குவேறு அடையாளங்கள் வேதாந்தங்களிற்சொல்லப்படாமையால் மதாபிமானமும் அழுக்காறு மென்னுது வேறு யாதெனப் புகல்வது. "நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்ய வர்ணாய ஹிரண்ய ரூபாய" என்று மீளவும் அந்தத் தைத்திரீயோபநிடதமே புகன்றபடி தகரமாகிய உள்ளக் குகையின்கண் தியானிக்கப்படும் சோதிர்மயப் புருடன் மும்மூர்த்திகளையுங் கடந்த உமாசகாய சிவபெருமானென்பதே திண்ணம். கைவல்லியோபநிடதமும் சர்வவித்தைகளினுஞ் சிறந்தது தகரவித்தை யெனவும், அதனினும் மிகச் சிறந்தது உமாசகாயோபாஸ்தி யெனவும் வற்புறுத்தியது. ஆதலாற்றான் ஆசிரியர் ஹரதத்தாசாரிய சுவாமிகளும் நாராயணனுக்கு அந்தர்யாமி சிவனேயாதலால் அவனை நாராயணனது திருமேனியின்கண் உபாசிக்க வேண்டுமென்று தைத்திரீய நாராயணோபநிடதப்பிரமாணங்கொண்டு சாதித்துள்ளார். அங்ஙனமாயின் வேதங்களிலும், உபப்ராஹ்மணங்களிலும் (புராணங்களிலும்), பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலிய கடவுளரைப் பரதத்துவங்களாகவும், வழிபடு கடவுளராகவும், உலகத்தைச் சிருட்டித்தவர்களாகவும், ஊழிகாலத்துக்குப்பின்னு முள்ளவர்களாகவும், சராசரங்களுக்கு அதிபதிகளாகவும், அந்தர்யாமிகளாகவும், ஓதியுள்ளனவே அவ்வசனங்கள் யாவும்வெறுங் கூற்றோவெனின் அற்றன்று. அந்த வசனங்கள்யாவும் பிரபல ப்ரமாணங்களுடன் முரணுவழி அக்கடவுளரை ஒருபரமான்வினுடைய நியமன சத்திகளாகவும், விபூதிகளாகவுங் கொண்டு ஒரேபொருளைச் சுட்டிமுடிகின்றனவென முடித்துக்கூறுதலே பரமசாம்பவர்களது முடிந்த தீர்மானம். சர்வ சுருதிமுடிகளுக்கும் இதுவே ஒப்பமுடிந்த

துணியாம். ஆதலினன்றே எண்ணிறந்த வேதவசனங்க ளெழுந்து அவனே பிரமன், அவனே விஷ்ணு, அவனே சிவன் என்றுநாட்டின. கிருத்திய கர்த்தாக்களாகிய மும்மூர்த்திகளையும் அவ்வாறுபிராணாதி யசேதனங்களைப்போல் அவனது விபூதிகளாக நிரூபித்தமையால் அவர்களைப் பரதத்துவமாகக் குறிக்கும் பல வேத வசனங்களையும் ஔபசாரிகமாகக் கொள்ளுதலே சால்புடைத்தாம். அது பற்றியே சுவேதா சுவதரோபநிடதம் "ஏகயேவ ருத்ரோ நத்விதீயாயதஸ்துః யஇமாந் லோகா நீசத ஈசநீபிః= இரண்டாவதிலதாய், உருத்திர ரொருவர்மாத்திரம் உளராய், இந்த லோகங்க ளெல்லாவற்றையும் நியமன சக்திகளால் ஆளுகின்றார்" எனவும், அதர்வசிரோபநிடதம் "யஇமாந் லோகா நீசத ஈசநீயுః ஜநநீயுః=எவர் இந்த உலகங்க ளெல்லாவற்றையும் ஈசனிகளும், ஜனனிகளுமான பரமசக்திகளால் ஆளுகின்றார்" எனவும் வரையறுத்துக் கூறின.

என்னை! மேற்சொன்ன உபாசகாயாதி சிறப்பிலக்கணங்க ளமைந்த பரமசிவனைக் கூறும் வசனங்களையும் அவ்வாறு ஔபசாரிகமாகக் கொள்ளலாகாதோ வெனின், அது கூடாமை. ஆறுவது விஷயசூசனத்தில் காட்டிய பிரமாணங்களின்படி துரீய ருத்திரனொருவனிடத்தே ஏகத்துவம் அமைந்திருப்பதானும், அவ்வுருத்திரனுக்கும் பிரமத்துக்கும் பெயரொற்றுமை கொண்டு "ஏகஏவ ருத்ரோ நத்விதீயாய தஸ்தே=உருத்திரமூர்த்தி யொருவரே யிருக்கின்றார் இரண்டாவதில்லை" எனவும் "ஏக மேவாத்விதீயம் ப்ரஹ்மா= பிரமமொன்றே யுளது. இரண்டாது இல்லை" எனவும், "ஸர்வோஹ்யேஷ ருத்ரః=உருத்திரரே எல்லாமாயிருக்கின்றார்" எனவும், "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மா=பிரமமே எல்லாமா யிருக்கின்றது" எனவும், சுவேதாசுவதரம், சாந்தோக்கியம், தைத்திரீயம் முதலிய உபநிடதங்கள் கூறுகின்றமை யானும், பிரமாதிகளைப்போல் ஏகதேச வசனங்களில் சர்வ சொரூபத்துவம் நிரூபிக்காது வேதசாகைகளிலுள்ள ஒவ்வொரு உருத்திரசங்கிதையிலும் ஸ்ரீமதுமாபதியையே சர்வ சொரூபனெனத் தீர்மானித் திருப்பதானும், சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்கள் யாவும் ஒருங்கெழுந்து சிவனே பரதத்துவமென நிர்ணயித்திருப்பதானும், பரமசிவனைப் பரதத்துவமாகக் கூறும் வாக்கியங்கள் எஞ்ஞான்றும் உபசார வசனங்களாகாவாம்.

ஆயின், வைதிகர்களா யுள்ளவர்கள் பிரமனையும், விஷ்ணுவையும், சிவனையும் பரப்பிரமங்களாக வழிபடுகின்றார்களே அஃதென்னையெனின், தைத்திரீயோபநிடதமானது "ஸர்வோவைருத்ரః=எல்

லாம் உருத்திரனே" என்ற கூறினமையானும், கைவல்லியோபநிடதமானது "ஸ்ப்ரஹ்மாஸசிவ:"என்றற்ரெடக்கத்து மந்திரத்தில் "ஸயேவ ஸர்வம்=அவனே எல்லாம்" என்று திரிமூர்த்திகளையும். உமாமகேசனது விபூதிகளாகத் துதித்திருக்கின்றமையானும், எவரெவர்கள் எந்தெந்த தேவர்களிடத்து அன்பு செலுத்துகின்றார்களோ அவரவர்களுக்கு அந்தந்தத்தேவர்களை யதிஷ்டித்து அந்த உமாமகேசனே அனுக்கிரகஞ்செய்கின்றனென்பது முடிந்த ர்தீவைபு நாம் ஆதலினன்றோ பகவற்கீதையில், "எந்தெந்த பக்தன் எந்தெந்த தெய்வவிக்கிரகத்தை விசுவாசத்தோடு பூசிப்பதற்கு விரும்புகின்றானோ அந்தந்தப் பக்தனுடைய அந்தந்த விசுவாசத்தை ஸ்திரமானதாகவே நான்செய்கிறேன்" என்னும் பொருள்பட "யோயோ யாம் யாம் தநும்பக்த: ஸ்ரத்தயார்ச் சிதுமிச்சதி-தஸ்யதஸ்யா சலாம் ஸ்ரத்தாம் தாமேவ விததாம் யஹம்" என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறியுள்ளார்-அவ்வாறே, "யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியங்கே - மாதொரு பாகனார்தாம் வருவர்" என்று சிவஞானசித்தியிலும், "ஓவாதே-எவ்வுருவில் யாரொருவ ருள்குவா ருள்ளத்து -அவ்வுருவாய்த் தோன்றி யருள் கொடுப்பான்-எவ்வுருவுந்-தானேயாய் நின்றளிப்பான் றன்னிற் பிறிதுருவ - மேனோர்க்குங் காண்பரிய வெம்பெருமான்." என்று திருஆதியுலாவிலும்சைவத்திருவாளர்கள் ஆணைதந்துள்ளார்கள். இதனால் பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளைப் பரமேசுவரன் திருமேனியெனப் பாவித்துத்துணிந்து வழிபடுவோர்க்கே முத்தி சித்திக்குமேயன்றி அவர்களை அவ்வுமாசகாயப் பரம்பொருளெனவும், அப்பரம்பொருளுக்கு மேலாந் தனிமுதலெனவும், அவனுக்குங் காரணமாம் பொருளெனவும், நினைத்து வழிபடுவோர்க்கு எஞ்ஞான்றும் வீடு கூடுவதின்றென்பது நாட்டப்பட்டது.அதாவது அவர்கள் இடர்படுவோரென்பதே திண்ணம். அரசன் பரிவாரங்களான மந்திரி முதலானவர்களை அவனாணையேற்ற பரிவாரங்களென்றறிந்து அவரவருக் குரியபடி நடப்பவர்க்கே இகலோக சுகமுண்டாவ தன்றி அவர்களே அரசனெனநம்பி நடப்பார்க்கு யாண்டும் சுகமில்லை யன்றோ - அன்றியும் அவ்வாறு விபரீதங் கொண்டு மயங்கிநடப்பவர் படுங்கடுந்துயரமே இதற்கு நிதரிசனமாம். பகவற்கீதை முழுதிலும் ஸ்ரீகிருஷ்ணன் தன்னை ஈசுவரனாகவும், சிருஷ்டி முதலிய சர்வ கர்த்திருத்துவ முடையவனாகவும் விதந்து கூறியது சோகம்பாவனையால் ஈசுவரப் பிரசாதமெய்திய காரணம் பற்றியன்றி வேறன்று. இவ்வுண்மை மதம், மானம், மயக்கம், முதலியன பற்

றிப் பிணங்கும் புல்லறிவாளர்க்குச் சிறிதும் விளங்குதலரிது. நுண்ணறிவும் நடுவுநிலைமையும் உடையராய் நோக்க வல்லார்க்கே எளிதில் இனிது விளங்குவதாம். ௫௦

---

## ௪-வது. ஆத்துமசுத்தி.

சிவனவன்றிர டோண்மேல் நீறுநின்றது கண்டனை யாயினும் நெக்கிலை=சிவபிரானது திரண்ட புயங்களின்மேல் திருநீறு நிலைபெற்றிருப்பதைக் கண்டும் மனம் உருகினாயில்லை. எல்லா வேடங்களினும் உத்தமமானது தவவேடம்-அதனினும் உத்தமோத்தமமானது திருநீற்றுப் பொலிவு. அந்தத் திருநீற்றின்பொலிவைக் கண்டமாத்திரத்தில் எப்படிப்பட்டவர்களுடைய உள்ளமுங் கண்ணும் கவரப்பட்டு அவ்வெழிலோடு ஒற்றித்து நிற்றல் பாலர்முதல் விருத்தர் இறுதியாயுள்ள ஆன்மாக்களது அநுபவப் பிரசித்தம். திருநீறானது சர்வஐசுவரியங்களுக்குங் காரணமா யிருத்தலால் ஐசுவரிய காரணனாகிய பரமேசுவரனுக்கு பரம வணிகலனா யிருக்கின்றது. ஐசுவரிய விருப்பமுடையார் யாரோ அவரே அதையணியும் பாக்கியம் பெற்றவர். அவர்களுக்கே அது இன்றியமையாது வேண்டப்படுவது. திருநீறு தரிப்பதனா லுண்டாகும் பயனை பிருகஜ்ஜாபாலோபநிடதமானது, "பஸ்மதாரணஞ் செய்வதினாலேயே மோக்ஷமுண்டாகின்றது - சிவசாயுஜ்யமும் அடையப்படுகின்றது-அவன் மீளத்திரும்புகிறதில்லை. அவன் மீளத்திரும்புகிறதில்லை." என்னும் பொருள்தோன்ற, "பஸ்மதாரணாதேவ முக்திர்பவதி-சிவசாயுஜ்யமவாப்நோதி-நஸபுநராவர்த்ததே-நஸபுநராவர்த்ததே' என்று கூறிற்று. இதனால் பஸ்மதாரணமே பாபக்ஷய ஹேதுவென்பதூஉம், மோட்சபலமென்பதூஉம் நன்கு நிரூபிக்கப்பட்டது. எல்லாக் கன்மங்களுக்கும் இதுவே முக்கியாங்கமாகவும், ஞானாங்கமாகவும், இருக்கின்றமையால் வேதத்திலுள்ள கன்மகாண்டத்திலும் ஞானகாண்டத்திலும் இதுவே புகழப்பட்டிருக்கின்றது. நூற்றெட்டு உபநிடதங்களிலே இதன் மகிமையைப் பேசும் உபநிடதங்கள் பதினைந்து. "பூத்யைந்ப்ரமதிதவ்யம்=பூதியை யணிதலினின்றும் நழுவுதல் கூடாது" என்று தைத்திரீயோபநிடதமானது பஸ்மதாரணத்தைத் தெளிவாய் விதித்திருக்கின்றது. திருநீற்றுக்குரிய பெயரைந்தனுள் பூதியும் ஒன்றாதலால் அது பஸ்மமென்பதே சர்வ வேதாந்த சம்பிரதாய ரகசியமாம் "ஐச்வர்ய காரணாத்பூதி:=ஐசுவரியத்துக்குக் காரணமா யிருத்தலால் பூதியெனப்ப

டும்” என்று பிருகஜ்ஜாபாலோபநிடதமே அப்பொருளை விளக்கிய து. ஆதலின் பஸ்மதாரணம் வேதசம்பந்தமான வைதிகமாம். வேத மார்க்கத்துக்குப் புறம்பான கொள்கையை (எனவே பஸ்மதாரண த்துக்கு அன்னியமான புண்டரங்களை) விஷ்ணுபுராணம் நக்கின மெனக் கூறுகின்றமையால் அக்கொள்கைகள் யாவும் பதிதமென வும், பாஷாண்டமெனவுஞ் சொல்லப்படும்.

அன்றியும், “யதிகளுக்கு ஞானத்தைத் தருவதாயும் வானப்பிர ஸ்தர்களுக்கு வைராக்கியத்தைக் கொடுப்பதாயும் உள்ளது” எனப் பொருள்கொண்டு “யதீநாம் ஜ்ஞாநதம் ப்ரோக்தம் வநஸ்தாநாம் விரக்திதம்” என்றும், “எவர்கள் பஸ்மதாரணத்தை விட்டுக் கன்மத் தை அநுஷ்டிக்கின்றார்களோ அவர்களுக்குக் கோடிஜன்மங்களினும் சம்சாரத்தினின்றும் விடுதல் உண்டாகாது” எனப்பொருள்பட “யே பஸ்மதாரணம் த்யக்த்வா கர்ம குர்வந்தி மாநவ:- தேஷாம்நாஸ் தி விநிர்மோக்ஷஸ் ஸம்ஸாராஜ் ஜந்ம கோடிபி:” என்றும், “இது வே விஷ்ணுவுக்கும் சங்கரருக்கும் ஞானத்தைப் புகட்டியது-பிரம்ம ஹத்திமுதலிய பாவங்களைப் போக்கவல்லது - மிக்க ஐசுவரியத்தைக் கொடுக்கக் கூடியதென்றே (துரீய) சிவனது மார்பி லணியப்பெற்ற து” எனப் பொருள்விளங்க “ஏததேவ ஹரிசங்கரயோர் ஜ்ஞா ந ப்ரதம்-ப்ரஹ்மஹத்யாதி பாபநாசகம்-மஹாவிபூதி தமிதி சிவலக்ஷ விஸ்திதம்” என்றும், மேற்சொன்ன ஜாபாலோபநிடதமே விதந்தெ டுத்துக் கூறுமாயின் இந்தத் திருநீற்றின் பெருமையினை அளவிட்டு க்கூறுந் தகைமைத்தோ. யாக்கை நிலையாமையை அடிக்கடி நினைப்பூட் டும் பொருட்டும், உயிர்க்குறுதியைத் தேடிக்கொள்ளும் பொருட்டும், “பஸ்மாந்தம் சரீரம்=பஸ்மத்தை இறுதியாகவுடையது சரீரம்” என்று தசோபநிடதங்களில் ஆதியந்தங்களிலுள்ள ஈசாவாஸ்யோபநி டதமும், பிருகஜ்ஜாபாலோபநிடதமும், ஸ்பஷ்டமா யறையுமாயி ன் இந்தத் திருவெண்ணீற்றை விரும்பி யணியாதார் யாரோ! அ தை யணிந்தவர்களைக் கண்டவுடன் மனங்கனியாதார் யாரோ! “மு டிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னுமிந்த—படிசார்ந்த வாழ் வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்-அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவா ரில்லையே” என்று வெண்காட்டடிகள் வி ளக்கிய வியன்வாக்கை யுன்னியுன்னி யுண்மைதேர்க-இத்துணைச்சி றப்பினையும், பெருமையினையும் வேதபடிதமாயுள்ள இப்பஸ்மம் வகி த்திருக்குமாயின் பாஞ்சராத்திர ஆவேசம் பூண்ட சிலர். இதனை நிந்

திப்ப தென்னையோ வெனின், "ஓவித்யானே! மகா பாதகங்களோடு கூடினவனுக்கும், பூர்வ ஜன்மங்களிலே அனேக அபராத மிழைத்தவனுக்கும், திரிபுண்ட ரோத்தூளனத்தில் த்ருடமான த்வேஷமுண்டாகின்றது" என்னும் பொருள்போதர "மஹாபாதக யுக்தாநாம் பூர்வஜந்மார் ஜிதாகஸாம்-த்ரிபுண்ட் ரோத்தூளன த்வேஷோ ஜாயதேஸ்ய த்ருடம்புநஃ" என்று பிருகஜ்ஜாபாலோபநிடதமே வெள்ளிடை மலைபோல் விளக்கிய படியால் பாஷாண்டிகளாகிய பாவிகளுடைய ஊழின் வலியைத் தடுக்க யார்தரம். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று—சூழினுந் தான்முந் துறும்." என்று திருவாய் மலர்ந்தருளிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது திருவாணையும் பொய்க்குமோ. ஸ்ரீ வாகீசப் பெருந்தகையாரும் "தாயினும் நல்ல சங்கரனுக் கன்ப—ராயவுள்ளத் தமு தருந் தப்பெறார்—பேயர்பேய்முலை யுண்டுயிர் போக்கிய-மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே" என்று இப்பாஷாண்டிகளினது நிலைமையை வெளிப்படையாகக் கூறியருளினார். எல்லாவற்றையும் அநுஷ்டித்தற்குச் சாதனமாகிய உடம்பை நிலைபெறச் செய்வதற்கு வேண்டப்படுவன வற்றைக் கூறுகின்ற ஆயுள்வேதமும் வியாதிகளுக்குப் பரிகாரமாகச் சொன்ன "மணி மந்திர ஔஷதம்" என்னும் மூன்றனுள் திருநீறே ஔஷதமாதலின் உயிர்ப்பிணியும், உடற்பிணியும், பவப்பிணியும் ஒருங்கேயறுப்பதும், பூசவும் புசிக்கவும் மருந்தாவதும், அதுவே என வியந்தது. "திருநீறு இட்டயோர்கெட்டார் சிவனை மறந்து யாருய்ந்தார்" என்னும் பழமொழியையும் யூகித்துணர்க-ஆதலினன்றோ "திக்பஸ்மரஹிதம் பாலம்-திக்க்ராம சிவாலயம்=பஸ்மமில்லாத நெற்றியைச்சுடு-சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து" என்று இடித்துரைத்தது பிருகஜ்ஜாபாலோபநிடதம். ஔவைப் பிராட்டியாரும் "நீறில்லாநெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்" என்று கூறியருளினார். இதனால் உலகித்தை வெறுத்து மோட்சமே பொருளென நிற்கும் சந்நியாசியும் திருவெண்ணீற்றைத் தள்ளொணாதென்பது பசுமரத்தாணி யறைந்தாலன்ன நாட்டப்பட்டது. ஆதலின் "பஸ்மோத் தூளனம் பரமஹம்ஸஸ்ய=பஸ்ம உத்தூளனம் பரமஹம்சனுக்கு முரியது" என்று நாரத பரிவிராஜகோப நிடதமும், சந்நியா சோபநிடதமும் கூறின.

அல்லதூஉம், மேற்குறித்த பிருகஜ்ஜாபாலோபநிடதமே "ஸ்ரீகௌதம விவாஹகாலே தாமஹல்யாம் த்ருஷ்ட்வா ஸர்வதேவாஃ காமாதுரா அபவந்த ததாநஷ்ட ஜ்ஞாநா துர்வாஸஞ் கத்வா பப்ருச்சுஃ" என்றெழுந்து செல்லும் வசனங்களில் கௌதமரது விவா

சகாலத்தில் அகலிகையின் பேரழகைக் கண்டு சகல தேவர்களும் காமனால் பீடிக்கப்பட்டு ஞானத்தை யிழந்தார்களெனவும், அப்பொழுது அவர்களனைவரும் துர்வாசரை யடைந்து பாப விமோசனார்த்தமாகப் பரிகாரங் கேட்க அவர் பஸ்மாவைக் கொடுத்தாரெனவும், அதை வாங்கி தேகமுழுமையும் பூசிக்கொண்டு ரஜோ குணத்தினின்றும் நீங்கி மிக்க தேஜசு உடையவர்களானார்களெனவும், பின்னர் அசசுதரானவர் "பஸ்மா பக்ஷ்ய தச்சுத:" என்னும் வசனத்தின்படி அந்தப் பஸ்மத்தை மருந்துபோல உட்கொண்டாரெனவும், அங்ஙனம் உட்கொண்டு ஆநந்த பரவசராய் சிவபெருமானைத் தியானித்து "நமஸ்தேஸ்து நமஸ்தேஸ்து த்வாமஹம் சரணம் கத=நமஸ்காரம், உனக்கு நமஸ்காரம் உன்னை நான் சரணமடைந்தேன்."எனத் துதித்து, "த்வத் பாதயுகளே சம்போ பக்திரஸ்து ஸதாமம=சம்புவே! உமது பாதகமலங்களிரண்டினிலும் எனக்கெப்பொழுதும் பக்தியிருக்கட்டும்" என்றும், "பஸ்ம தாரண சம்பந்நோ மமபக்தோ பவிஷ்யதி=எனது பக்தன் பஸ்ம தாரணத்துடன் கூடினவனாய் ஆகக்கடவன்." என்றும் விண்ணப்பித்து சிவப்பிரசாத மெய்தினரெனவுங் கூறுகின்றது. இதனால் திருநீற்றின் மகிமை யளவிறந்ததென்பது நிரூபிக்கப்பட்டது. அந்நீற்றை விஷ்ணுமூர்த்தியே பாப விமோசனார்த்தமாக அணிந்து துதித்தன ரென்று வேதம் முறையிடுமாயின் அதன் பெருமையினை வரையறுத்தோதுவாரார். ஆதலினன்றோ வைணவ ஆழ்வாரும் நடுநிலை குன்றாது மெய்ந்நவசனத்துக் கிணங்க "நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியா ரென்றோடும்." என்று உத்தம வைணவர்களுய்யும் நெறியைப் புகட்டியருளினார். ஜகதாசாரிய மூர்த்திகளாகிய மணிவாசகப்பிரானும் "வெண்ணீறணிகிலாதவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே"என்று உபதேசித்தருளினார். சிவபக்தி குருபக்தி யில்லாதார்க்கு எவ்வளவு போதித்தாலும் அவை நிஷ்பலமாவது பிரத்தியட்சப் பிரமாணமாதலால், ஈண்டு யாம் சுருதிபோதகமாகக் கூறியவுண்மைகள் யாவும் பிறவியந்தகர்க்கு வெய்யோனொளி விளங்காததுபோல், நடுநிலைகொன்று தின்னும் மதாபிமான மேற்கொண்ட புறச்சமயிகளுக்குவிளங்குத லரிதாம். ஆயினும் அவர்களும் மனக்கோட்டம் விட்டுச்சிறிது ஆராயப்புகின் வாய்மை வெல்லுமென்பதற்கு யாதொரு தடையுமின்று. (௫க)

## ரு—வது கைம்மாறுகொடுத்தல்

மேலை வானவ நும்மறி யாததோர் கோலமே=மேலுலகிலு ள்ள தேவர்களும் உணரக் கூடாததாகிய ஒப்பற்ற திருவுருவமே. இ தனால் பரப்பிரமமாகிய சிவபெருமானது திவ்விய திருவுருவம் யாவரா லும் இத்தன்மைய தென அறிதற்கரிதென்பது விளக்கப்பட்டது. இதனை விளக்க சாமவேதத்ததைச் சார்ந்த கேனோபநிடதத்தில் ஒரு கதையுளது. அதுவருமாறு—இந்திரன் முதலிய தேவர்களனைவரும் தங்களுக் குண்டாகிய அசுரவிஜயம் தங்களுடைய சாமர்த்தியத்தி னாற் கிடைத்ததென்றும், தங்களுக்குத் தலைவர் சிவபெருமானென்ப தை மறந்தும், அகங்கரித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் ஒரு யக்ஷகோலந் தாங்கி இந்திரன்முன் சென்று ஒருயர்ந்த ஸ்தானத்தி ல் எழுந்தருளியிருந்தனர். அவரது ரூபத்தைத்தேவர்கள் அறிந்து கொள்ளாதபடியால் அவர்கள்யாவரும் அருகிலிருந்த அக்கினி பகவா னைப் பார்த்து ஓஅக்கினியே! நமக்கெதிரில் தேஜோரூபமாய் விளங் கிக்கொண்டிருக்கும் யக்ஷனை நீர் இன்னானென்று தெரிந்துகொள்ளு மென்றார்கள். உடனே அக்கினி யானவன் யக்ஷமூர்த்தி எழுந்தருளி யிருக்குமிடத்திற்கு ஓடோடியும் வந்தனன். அப்பொழுது அந்த ய க்ஷமூர்த்தி அக்கினியைப்பார்த்து நீயாரென்று கேட்க அக்கினி பக வான் நான் பூமியிலுள்ள சமஸ்த சராசரப் பொருள்களையும் நீறுக்க வல்லவ னென்றான். பிறகு யக்ஷமூர்த்தி ஒரு துரும்பை யெடு த்து அவன் முன்னை போட்டு இதைப்பஸ்ம மாக்குதி என்றனர். உடனே அக்கினியானவன் அதிக கோபங்கொண்டு தனது சப்தஜ் வாலைகளுந் தோன்ற வியாபித்து அதைக்கொளுத்த முயன்றான் அது கொளுத்தப்படாம லிருந்தபடியால் அக்கினி பரிபவப்பட்டு அ த்துரும்பைக் கொளுத்துவதற்குத் தனக்குச் சாமர்த்திய மில்லையெ ன்று கண்டு தேவர்களிடம் திரும்பிவந்து ஓதேவர்காள்! அந்த யக்ஷ னுடைய மகிமையைச் சொல்வதற்கும் நினைப்பதற்கும் சக்தியற்றவ னு யிருக்கின்றே னென்றான் பிறகு தேவர்கள் வாயுபகவானை யனு ப்பினார்கள். அவனும் அப்படியே சென்று துரும்பை யசைக்கப் பார் த்தும் முடியாமற் போனபடியால் வெட்கப்பட்டுத் திரும்பித் தேவர் களிடம் வந்து யக்ஷமூர்த்தியின் பிரபாவத்தை அக்கினி சொன்னது போற் சொன்னான். அப்பொழுது தேவர்க ளனைவரும் தேவேந்திர னைப் பார்த்து ஓஇந்திரா! நீயாவது நமக்கெதிரி லிருக்கின்ற யக்ஷ னை இன்னானென்று அறிதி யென்று சொல்ல அவ்வார்த்தையைக் கேட்டு இந்திரனும் யக்ஷமூர்த்தியின் சமீபத்தில் போய்நின்றான்

அதுகண்ட யக்ஷமூர்த்தி மறைந்து விட்டனர். உடனே லோகமாதாவாகிய உமாதேவியார் அங்கெழுந்தருள தேவேந்திரனானவன் தேஜோமயமாய் விளங்கிக் கொண்டிருந்த இமாசலத்தின் புத்திரியான உமாதேவியைப் பார்த்து இந்தயக்ஷமூர்த்தி யாரென்று கேட்டான். அப்பொழுது பார்வதியானவர் "ஓஇந்திரா! அந்த யக்ஷமூர்த்தியை என்னவென்று நினைக்கின்றாய். அவர் எமதுபதி. உங்களுக்குப் பரப்பிரமம். ஜயத்தை யுண்டுபண்ணியது அவருடைய சத்தியென் றறிந்துகொள்" என்று சொல்லி மறைந்தருளினர். உடனே இந்திரன், வாயுவு, அக்கினி முதலிய எல்லாத் தேவர்களும் பார்வதியின் திருவாக்கினாலே பரப்பிரமத்தை யறிந்து உய்யும்வழிதேடிக்கொண்டார்கள். இவ்வாறு பரப்பிரம சிவமகிமை வேதாந்தத்திலே விளக்கமாகக் கூறப்பட்டிருத்தலால் சிவபெருமானுடைய கருணாமயத் திருவுருவம் எப்படிப்பட்ட உயர்ந்த தேவர்களுக்கும் அவனது திவ்விய திருவருட் பிரசாதத்தினாலே உணரற்பாலதன்றி வேறெவ்வகையானு மில்லையென்பது பெறப்பட்டது. அன்றியும் "அவனன்றியோரணுவு மசையாது" என்னும் ஆப்தர் திருவாக்கும் நிலைநாட்டப்பட்டது. ஈண்டு ஆரணமுடியாகிய கேனோபநிடதம் "ஸோமா நா ஹுமாம் ஹைமவதீம்=மிகப்பிரகாசமாகிய இமாசலத்தின் புத்திரியான உமாதேவி" என்றுவியக்தமாக விளக்கியிருக்கவும் அதற்கேற்ப சங்கராசாரியர் முதலானோர் இமயமலையின் பெண்ணான பார்வதியென்று பொருள்விரித்திருக்கவும் அதனைச் சிறிதுங் கருதாது "புருஷாகாரமுதையான உமையாய்த்தோன்றிய லக்ஷுமி என்று அர்த்தம்பண்ணி அவ்விலக்ஷுமியால் விளக்கப்பட்டபிரமம் யக்ஷனாய்வந்த ஸ்ரீயப்பதி என்று வைணவ ஆசாரியராகிய ராமாநுஜர் மாறுபடக் கூறியுள்ளார். இதென்கொலோ. "மெய்ப்படுநூன் முறைகண்டும் மோகத்தாற் றம் மதமே மேற்கொண்டுள்ளார்" என்னும் பரஞ்சோதிமுனிவர் பான் மொழியையு முய்த்துணர்க. (ருஉ)

நானுங் கீழுனும் மேலுளும் யாவுளும் - எனுளு மெண்மேனயும் போனின்ற வெந்தையே=உள், புறம், நடு, கீழ், மேல், பக்கம் என்று சொல்லப்பட்ட எவ்விடத்திலும் எள்ளும் எண்ணெயும்போல் கலந்துநின்ற எமது தந்தையே-இதனால் சிவபெருமான் விந்து, மோகினி, மான்என்னும் மூவகைப் பிரகிருதிகளிலுமுள்ள சராசரங்கள் யாவற்றுள்ளும் சர்வபரிபூரணனாய் நீக்கமற நிறைந்திருக்கின்றானென்பது விளக்கப்பட்டது. அவன் அங்ஙனமில்வழி சடசித்துக்களனைத்தும் ஒருங்கேஓரியல்பாக அறியும் அறிவும், அவைகளைத் தொழிற்ப

டுத்துங் கர்த்திருத்துவமும், சர்வான்மாக்களையும் அநுக்கிரகஞ்செய்யும் பேரருளும் அவனிடங் குன்றும். குன்றவே ஐசுவரியமுடையவனாதல், சர்வாந்தர்மியாதல், வியாபகனாதல் முதலிய எல்லா வசாதாரண குணங்களும் குன்றி ஏகதேசவர்த்தியாயத் துடக்குறுவன். ஆதலால் இறைவனுக்கு எஞ்ஞான்றும் சர்வவியாபகம் எள்ளி லெண்ணெய் போலும், எரியுறு நீர்போலும் இன்றியமையாத விலக்கணமாம். "திலேஷு—தைலம்= எள்ளிலெண்ணெய்" என்றும் இவ்வுபமானத்தையே பிரம்மோபநிடதமும், மந்திரோபநிடதமும் ஹம்ஸோபநிடதமும், நிறுவின. அல்லதூஉம், எல்லாப் பூதங்களுள்ளத்து முள்ளவனும், எல்லாவற்றையும் வியாபித்தவனும் பகவானுகையால் எங்கும் நிறைந்தவன் சிவனும்" என்னும் பொருள்பட "ஸர்வபூத குஹாசயஃ ஸர்வ வ்யாபீச பகவாந் தஸ்மாத்ஸர்வ கதச்சிவஃ" என்று சுவேதாசுவதரோபநிடதமும், "எல்லாவற்றையும் வியாபித்தவனும், எல்லாப் பூதங்களுக்கும் அந்தராத்மாவா யுள்ளவனும், கன்மங்களுக்கு அதிபதியும்" என்றுபொருள்போதர"ஸர்வ வ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா - கர்மாத்யக்ஷ:" என்று பிரம்மோபநிடதமும்சிவவியாபக விலக்கணத்தைத் தெளிவாய் விளக்கின. என்னை! "அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்திதஃ= உள்ளும்புறம்பும், அதனையெல்லாம் வியாபித்து நின்றனன் நாராயணன்." என்று நாராயணோபநிடதங் கூறியுள்ளதே அதன்பொருள் யாதெனின், மூலப்பிரகிருதி வாசுதேவ னுருவமாகலின் அதற்குள் அவனது வியாபகம் அமைவுடைத்தென்பதே பரமசித்தம். அடிப்புறத்துள்ள ஆன்ம தத்துவங்களுக்குக் காரணமாய மூலப்பிரகிருதிக்குமேல் வித்தியாதத்துவங்களுக்கு ஏதுவாம் சூக்ஷமப்பிரகிருதியும், சிவதத்துவங்களுக்குக் காரணமாம் பரப்பிரகிருதியும்,நடுப்புறத்தும்,தலைப்புறத்தும்இருப்பதாக "ஆத்ம தத்வமயோபாகே வித்யா தத்வஞ்ச மத்யமே - ததக்ரே சிவதத்வந்து க்ரமாத் தத்வாதி ஸந்திஹ" என்று ஜாபாலோபநிடதம் உரைத்தது. அன்றியும்சிவம்,சத்தி,சாதாக்கியம், ஈசுவரம்,சுத்தவித்தைஎன்னுஞ் சிவதத்துவங்களைந்தையும், "சிவஃ சக்திச்ச ஸாதாக்ய மீசஷ் வித்யாக்ய மேவச"என்று மீளவும் அவ்வுபநிடதமே எடுத்துப் போதித்தலானும், காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்றும் வித்தியாதத்துவங்களேழையும் "கால ஸ்வபாவே நியதிர்ய த்ருச்சா" என்னும் மந்திரத்தில் சுவேதாசுவதரோபநிடதம் விளக்கிக் கூறுதலானும், மூத்திற மாயாதொகுதி முழுமையிலும் நாராயணனுக்கு வியாபகமில்லை யென்

பதே சுருதியுக்தமாம். ஆதலினன்றோ தைத்திரீயோபநிடதமானது ஸ்ரீமந் - நாராயணனை "விஸ்வம்நாராயண:= விசுவரூபி நாராயணன்" எனவும், சிவனை "விஸ்வாதிகோருத்ர:= விசுவத்தைக்கடந்தவன் உருத்திரன்" எனவுங் கூறி, சிவவிஷ்ணுக்களது ஏற்றத்தாழ்வுகளை நன்குவிளக்கியது. அன்றியும், மந்திரோபநிடதமும், முண்டகோபநிடதமும் "எவனிலும் மேலானதும் கீழானதும் ஒன்றில்லை எவனிலுஞ் சிறியதும் பெரியதும் ஒன்றில்லை - எவன் விருக்ஷம்போல் அசைவற்றவனாய் ஏகனாய் பரமாகாசத்தில் இருக்கின்றான் - அந்தப் புருஷனாலேயே ஈதெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கின்றது" என்னும் பொருள்போதர "யஸ்மாத் பரம்நா பரமஸ்தி கிஞ்சித்" என்றற்றொடக்கத்து மந்திரத்தில் தெளிவாய் போதித்திருக்கின்றன. இன்னனம் அநந்த பிரமாண பாஹுள்யங்களால் சிவபிரானொருவருக்கே சர்வபரிபூரணத்துவம் நிலைபெற்று விளங்கியதென்பது ஒருதலையாற் றுணியப்பட்டது. அர்ச்சுனன் வில்லடி, பாண்டியன் பிரம்படி, ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி யோகபோக கோலம், உமாதேவியார் கண்களை மூடியலீலை, யட்சகோலந் தாங்கிவந்து துரும்பையசைக்கச் செய்தல், கண்ணன் முதலான சேதனாசேதனருக்குள்ளிருந்து சிவபூசையேற்றுக்கொள்ளுதல், இவைமுதலிய பலவேதோபப்பிரம்மணசரித்திரங்களும் சிவபெருமானுடைய சர்வபரிபூரண வந்தரியாமித்துவத்தை நன்குநிரூபிக்கின்றன.

நிற்க, விஷ்ணு புராணப் பிரமாணத்தின்படி ஸ்ரீ வாசுதேவனுடைய வியாபகப் பரப்பை விரிப்பின், நாம் வாசஞ் செய்யும் இப்பூமண்டலமானது பிருதிவிதத்துவத்திலுள்ள ஆயிரகோடி யண்டங்களில் ஓர்பிரமாண்டத்தி லுள்ளது. இந்தப் பிரமாண்டத்தின் உயர வகலங்களின் பிரமாணங்களைச சொல்லின் பூமிக்குக்கீழ் காலாகினி உருத்திர புவன மீறாக அண்டகடாகக் கனமுட்பட பூலோகம்வரையிலும் ஐம்பது கோடி யோசனை யுயரமும், பூலோகத்துக்குமேல் சிவலோக மீறாக அண்டகடாகக் கனமுட்பட ஐம்பது கோடி யோசனை யுயரமும், பூலோகத்தின் மத்தியிலிருக்கும் மகம்மேருவின் நடுவினின்றும் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு இந்நான்கு திசைகளின் அண்டகடாகக் கனமீறாக ஐம்பதுகோடி யோசனை தூரமும் பொருந்தியுள்ளது. இங்ஙனம் கீழும்மேலும் பக்கங்களும் நூறு கோடி யோசனை யளவின் விரிவைப் பெற்றுள்ள இந்தப்பிரமாண்டம் அண்டகடாகத்துக் கப்பால் ஜலத்தினாலே சூழப்பட்டுள்ளது. அந்த ஜலஆவரணம் அதனினும் பதின்மடங்கு விரிவும் உயர்ச்சி

யு மேற்றமுமுள்ள தேயுவினாலே சூழப்பட்டுள்ளது. அந்தத் தேயுஆவரணம் அதனினும் பதின்மடங்கு விரிவும் உயர்ச்சியு மேற்றமுமுள்ள வாயுவினாலும், அந்த வாயுஆவரணம் அதனினும் பதின்மடங்கு அதிகமுள்ள ஆகாசத்தினாலும், அந்த ஆகாசஆவரணம் அதனினும் பதின்மடங்கு அதிகமுள்ள அகங்காரத்தினாலும், அந்த அகங்கார ஆவரணம அதினினும் பதின்மடங்கு அதிகமுள்ள மகதத்துவத்தினாலும், அந்த மகதத்துவ ஆவரணம் அதனினும் பதின்மடங்கு அதிகமுள்ள பிரகிருதி தத்துவத்தினாலுஞ் சூழப்பட்டுள்ளது. அந்தப் பிரகிருதி தத்துவம் அநந்தமென்று சொல்லப்படுதலால் அதில் அனேகவாயிரங் கோடிகோடிஅண்டங்களுண்டு. அத்தனையும் "வாசுதேவாபரப்ரகிருதி" என்றுசுருதிகூறியபடி ஸ்ரீவாசுதேவனுக்கு உருவமாகலின் அவற்றுள் அவனது வியாபகம் விரிந்து கிடக்கின்றது. இனி விஸ்வாதீதனான சிவபிரானது வியாபகமோ அந்தப் பிரகிருதி தத்துவத்தின் மேலும் நூறுமடங்கு விரிவும் உயர்ச்சியுமுள்ள அராக அண்டமும், அதன்மேலும் நூறுமடங்கு அதிகமுள்ள வித்தையண்டமும் அதன்மேலும் நூறுமடங்கு அதிகமுள்ள கலையண்டமும், அதன்மேலும் நூறுமடங்கு அதிகமுள்ள நியதியண்டமும், அதன்மேலும் நூறுமடங்கு அதிகமுள்ள காலஅண்டமும், அதன்மேலும் ஆயிரமடங்கு அதிகமுள்ள அசுத்தமாயையும், அதன்மேலும் பதினாயிரமடங்கு அதிகமுள்ள சுத்தமாயையிற் சுத்தவித்தையும், அதன்மேலும் பதினாயிரமடங்கு அதிகமுள்ள மகேசுவரமும் அதற்குமேல் சாதாக்கியமும், அதற்குமேல் பரவிந்தும் அதற்குமேல் பரநாதமும் ஆகிய இவற்றை யெல்லாங்கடந்து சொல்லிறந்துநின்ற தொன்மையதா யோங்கி விளங்குதலால். அப்பிரானுக்கே சர்வ பரிபூரணத்துவம் நிலைபெறும். அதனால்எங்கும் செறிந்தவன் சிவனும் என்பது ஒருதலை. ஆதலினன்றோ "உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி, யிலகுஞ் சிவனெம்மிறை" என்றது ஞானக்குறள். திராவிடசுருதியும் "அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை யாரூரிற் கண்டடைந்தேனானவாறே." என்று மூவகைப் பிரகிருதிகளுக்கும் அப்பாற்பட்டவர் சிவபிரானென்று துதித்தது. (௫௯)

**எட்டி னோடிரண்டு மறி யேனையே**=எட்டிரண்டுந் தெரிக்கா நின்ற பொருளை யறியாத வென்னை. எண்ணெட்டு, இரண்டென்னும் எண்கள் தமிழில் 'அ'' என்றும் "உ" என்றும் குறிக்கப்படுதலால் அகாரஉகாரமகாரங்களாலாயபிரணவாக்கரத்தை யறியாதவென்னை என்பது பொருள். அகாரம், உகாரம், மகாரம் ஆகியமூன்றும் ஒருங்குசே

ர்ந்ததே மூலமந்திரமாகிய பிரணவமாம்-நாராயணோப நிஷதமானது "அகாரஉகாரோமகாரஇதிதானேகதா ஸம்பவத்ததேததோம்தி= அகாரம்,உகாரம்,மகாரம் இவைகளை யொன்றுசேர்த்தலால்பிரணவ மாகின்றது" என்றுகூறிப்போந்தது. "நூ"(துதித்தல்)என்ற தாது விலிருந்து தோத்திரம் என்றபொருளில் "நவ:" என்ற சொல்லு ண்டாக அதனோடு "ப்ர" என்னும் உபசர்க்கத்தைச் சேர்க்க "ப்ர ணவ" என்றசொல்லமைந்தது. இருக்கு முதலிய சமஸ்தவேதங்க ளும் பிரணவத்திலிருந்துதோன்றி தோத்திர ரூபங்களாயிருத்தலா ல் அவையனைத்தும் பிரணவதேவதைக்கே சொந்தமாகும். பிரணவ தேவதை சாக்ஷாத்பரசிவமே என்பது பதினாறாவது விஷயசூசனத் திற்காண்க. பிரணவ மென்னுந் தனிமந்திரம் சமஷ்டிப் பிரணவ மெனவும், வியஷ்டிப்பிரணவமெனவும் இருதிறப்படும். சமஷ்டிப் பிரணவமாவது தொகுத்துக் கூறுவது, அது ஓம் என்பதாகும். விய ஷ்டிப் பிரணவமாவது வகுத்துக்கூறுவது, அது அ, உ, ம என்பதா கும். இந்த வியஷ்டிப் பிரணவமாகிய அகார, உகார, மகார மென் னும் மூன்றும் முறையே இறந்தகால நிகழ்கால எதிர்காலங்களையு ம், சாத்துவித இராசத தாமத குணங்களையும் பிரம விஷ்ணு ருத்தி ரர்களையும், காருகபத்திய தக்ஷிண ஆகவனீயாக்கினிகளையும், இருக் கு யஜுர் சாமவேதங்களையும் உணர்த்தாநிற்கும். அகாரம் வாய்திற த்தலினாலே சிருட்டியையும், உகாரம் இதழ்குவித்தலினாலே திதி யையும், மகாரம் வாய்மூடுதலினாலே சங்காரத்தையும் குறிப்பிக்கின் றமையால் எல்லாவுலகங்களும், எல்லாச்சுருதிகளும் இந்தப்பிரண வத்திலே தோன்றி நின்று ஒடுங்குமென்பது பெறப்பட்டது. பிரண வம் அகார உகார மகாரங்களாக விரிந்து மூன்றெழுத்தாயும், இம்மூ ன்றுங் கூடி ஓம் என்று உச்சரிக்கப்படும்பொழுது நாதமாயும், ஓம் என்று எழுதும்பொழுது விந்துவாயு மிருப்பதால் முதல் மூன்றெ ழுத்தும் இந்த விந்துநாதங்களாகிய வரிவடிவும் ஒலிவடிவுங் கூடி ஐந்தெழுத்தாயிற்று. சுருதியும் "ப்ரதமந்தா ரகாகாரம் த்விதீ யம் தண்டமுச்யதே-த்ரிதீயம் குண்டலாகாரம் சதுர்த்தம் அர்த் தசந்த்ரகம் — பஞ்சமம் பிந்துசம்யுக்தம் ப்ராணவம் பஞ்சல க்ஷணம்" என்றுகூறிய பிரமாணத்தின்படி முதல் நட்சத்திராகார மும், இரண்டாவது தண்டா காரமும், மூன்றாவது வட்டவடிவும், நான்காவது அர்த்தசந்திரவடிவும், ஐந்தாவது பிந்துவோடுகூடின வடிவுமாகிய ஐந்திலக்கணங்க ளுடையததலால் பிரணவமும் ஐங்க லைக ளுடையதாயிற்று. மேலும் ருக்வேதத்தின் முதலிலேயுள்ள "அக்நிமீளே" என்னும் மந்திரத்தின் முதலில் அகாரமும், மத்தி

யிலுள்ள "சஜத்ரோபந்து" என்னும் மந்திரத்தின் மத்தியில் உகரமும், அந்தத்திலுள்ள "சடாநப்பரம்" என்னும் மந்திரத்தின் முடிவில் மகரமும் போந்தமையால் ருக்வேதமுழுமையும் தொகுப்புற பிரணவமாயிற்று. இந்தப் பிரணவம் இன்னதென்று விளக்கவே இரண்டாவதாகிய யஜுர்வேதம் எழுந்து முதலிலும், இறுதியிலும் பிரணவத்தைச் சொல்லி மத்தியில் "நமசிவாயச" என்று பஞ்சாக்ஷரத்தை யோதிப் பொலிவெய்தியது. இதனால் பிரணவமே பஞ்சாக்ஷரமாயிற்று. பிரணவத்துக்கும் பஞ்சாக்ஷரத்துக்குஞ்சிறிதும்பேதமின்மையால் பஞ்சாக்ஷரமானது பிரணவத்தைப்போன்று பிரதக்மந்திரமும் பரமபாவநகரமான மோக்ஷ மந்திரமுமாம். பிரணவம் வேறுதுணை வேண்டாது உச்சரிக்கப்படுவதுபோல் பஞ்சாக்ஷரமும் வேறொன்றின் ஆஸ்ரயமில்லாமல் ஜபிக்கப்படும். ஆகவே இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரேமந்திரமாம். இவ்வுண்மையை ஸ்ரீதாயுமான சுவாமிகளும் "ஓங்காரமா மைந்தெழுத்தாற் புவனத்தை யுண்டுபண்ணி - பாரங்காய்நடத்தும் பொருளே யகண்ட பரசிவமே" என்று வற்புறுத்தியருளினார்கள்.

இற்க, மேலே கூறிய பிரணவ விலக்கணங்களைத்தனுள் முதலிரண்டு உறுப்புக்களாகிய தாரகாகார தண்டாகாரங்கள் ஏனைய மூன்று உறுப்புக்களினின்றும் நீங்கி நிற்கும்வழி, முற்றியக்கம் பெருமையால் ஊமையெழுத்தெனவும், வேதாந்த சிரசாய்நிற்கும் மௌனக்குறியெனவுஞ் சொல்லப்படும். அன்றியும் மூலக்கணபதி நிலையமெனவும், அட்சரங்களின்வித்தெனவும், பிள்ளையார் சுழியெனவும் புகழப்படும். இந்தக்குறி (சுழி) - "உ" - இதுவேயாம். இதிலுள்ள வட்டவடிவு சிவசத்திபீடமென்றும், ஆவிடையென்றும், பிந்துவென்றும், மூலாதாரமென்றுஞ் சுருதிகள் அறையுமாறு பிரகாசித்துக்கொண்டிருக்க, நீள்வடிவு - மூலஸ்தம்பமென்றும், சிவலிங்கமென்றும், நாதமென்றும், பிரமநாடியென்றும் விளங்கிக்கொண்டிருக்கும். இந்தச் சுழியினை யாதானுமொன்றை எழுதத்தொடங்குவதன்முன் தலைப்பில் தீட்டிக்கொள்ளும் சாம்பிரதாய மானது, யாதா மொருகிரியை முட்டின்றி முடித்துக்கொள்ளும்பொருட்டு அக்கிரியைக்குமுன் பிள்ளையார் உரு பிடித்து வைத்திடுவதை யொக்கும். சாக்ஷாத் பரமேசுவரனாலே சிருஷ்டிக்கப்பட்ட இப்பிண்டத்தில் தாரக ஓங்காரம் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே தமிழிலும் கிரந்தத்திலும் இப்பிள்ளையார் சுழி அமைக்கப்பட்டுள்ளது. வேறுபாஷைகளில் அவ்விதம் அமைக்கப்பட்டிருக்கவில்லை யென்பது பிரத்தியட்சப் பிரமா

ணமாம். இத்தகைய மேன்மைபொருந்திய பிள்ளையார்சுழி அடங்கியுள்ளபிரணவமானது சர்வதேவர்களுக்கும் பிறப்பிடமாயும், சிவபிரானொருவருக்கே யிருப்பிடமாயும் விளங்குகின்றமையால் பராநந்தத்தாண்டவஞ் செய்யும் ஸ்ரீநடராஜப்பெருமானுடைய திவ்வியதிருமேனியோடு பிரிபடா திருக்கின்றது. இக்கருத்தையே அதர்வசிகோபநிடதமும் "ஏததக்ஷரம்பரம்ப்ரஹ்ம= இவ்வட்சரம் பரப்பிரம்மசொரூபம்" என்று கூறிப்போந்தது. இதனால் சொல்லுக்கும் பொருளுக்கு முள்ள அபேத சம்பந்தங் காரணமாகப் பிரணவமேபிரமமெனா நிரூபித்ததாயிற்று. (நிச)

---

## ம-வது. ஆனந்தாதீதம்

விச்சகன்றியே விளைவு செய்குவாய் விண்ணு மண்ணக முழுதும் யாவையும்=விண்ணுலகம், மண்ணுலகம், ஏனையவுலகமாகிய வெல்லாவற்றையும் வித்தில்லாமலேயுண்டாக்குவாய். பிரபஞ்சத்தொகுதிமுழுதும் மாயையினின்றுந் தோன்றியதாக "மாயையிலுள்ளவஞ்சம் வருவது போவதாகும்" என்று சிவஞானசித்தி மொழிந்திருக்க, இங்கு வித்தில்லாமலே யென்று கூறியது என்னை யெனின், இச்சாமாத்திரத்திலே எல்லாஞ் செய்யவல்ல சிவபிரான் ஒருகாரணத்தினின்று ஒன்றைத் தோற்றுவித்தா னெனில் அவனது சர்வசுதந்தரத்துக்கு இழுக்குண்டா மாதலால் அவனது அகடிதகடன சாமர்த்தியத்தை விளக்க வெழுந்தது இந்தத் திருவாக்கு. சூரியன் இச்சாவெத்தன மின்றி யிருக்கவும், அவனது சந்நிதியில் ஒன்று மூகையாகவும், ஒன்று அலர்ந்தும், ஒன்று உலர்ந்தும் தாமரை முத்தொழிற்படுதல் போலும், புருஷனது சந்நிதானததில் ஸ்திரிக்கு இன்பமுஜநித்தல் போலும், சிவ சந்நிதானத்திலே மாயையில் சிருஷ்டியாதி தோன்றும என்பதே முடிபாம். முண்டகோபநிடதமும், பிரகதாரண்ணியோபநிடதமும் "யதேதத்ஸத்யம்யதாஸு-தீப்தாத்" என்றற்றொடக்கத்து வசனத்தில் எப்படி எரிந்துகொண்டிருக்கும் அக்கினியிலிருந்து அனேக பொறிகள் உண்டாகின்றனவோ அப்படியே அக்ஷரப் பிரமத்தினின்றும் ஸ்வரூப சத்தாய் மாத்திரம் அடங்கியிருந்த பசுபாசங்கள் நாமரூப வியாகத்துக்குரிய பலவித ஸ்தூல ரூபத்தோடு சிருஷ்டி காலத்தில் உண்டாகின்றன வென்று கூறுகின்றன. கிழங்கிலே நின்றும் பிறக்குந் தாமரையை சேற்றிலே நின்றும் பிறந்தது என்று பொருள்பட பங்கஜம் என்று கூறுமாறு, மாயையிலே நி

ன்றுந் தோன்றிய உலகத்தை பிரமத்திலே நின்றுந் தோன்றிய தெ ன்று கூறுதல் உபசாரமேயாம். "மாயையுடையவன் மாயையி னின் றும் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கின்ருன் - அவனிடமே மற்றவர் மா யையால் கட்டுப்பட்டுள்ளார்" என்னும் பொருள்போதர, "அஸ்மா ந் மாயீ ஸ்ருஜதே விஸ்வமேதத் தஸ்மிம் ச்சாந்யே மாயயா ஸந்நி ருடா:" எனவும், "மாயை காரணம், மகேசுவரன் மாயீ, என்றறியவே ண்டியது" என்னும் பொருள்பட "மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத் மாயிநந்து மஹேச்வரம்" எனவும் சுவேதாசுவதரோபநிடத முறை த்தலால் பிரபஞ்சத்தொகுதி முழுவதுந் தோன்றுவதற்கு வித்தாயு ள்ளது மாயை யென்பதே வேதசம்மதமாம். இதனுல் மாயை மித் தையென்று கூறும் வாதம் அடாதாயிற்று - ஸ்ரீ தாயுமானசுவாமிகளு ம் "அண்டபகி ரண்டமு மாயா விகாரமே அம்மாயை யில்லாமை யே" என்று திருவாய் மலர்ந்தருளினுர் - ஈண்டு அம்மாயையென்ற து மாயையின் காரியத் தொகுதியையேயாம். (ருரு)

---

## நீத்தல்விண்ணப்பம்.

மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே=பிறவி ப்பிணியி லகப்பட்டு முடங்கிக் கிடந்தவர்கட்கு ஔஷதரூபமா யிருப் பவனே. யாண்டு பிறப்புளது ஆண்டு இறப்புளது, யாண்டு பிறப்பில் லை ஆண்டு இறப்பில்லை என்பது தர்க்கசாத்திர நியதி. பிரபல சுரு திகளாகிய மறைமுடிகள் யாவும் அயன், அரி, அரன் என்னுந் திரிமூ ர்த்திகளையும் நியமிக்குந் துரியமூர்த்தியாகிய சிவபெருமானுடைய மகிமையினை யெடுத்துப் பேசுந்தோறும் பேசுந்தோறும் அவ்வெம் பெருமான் நிரந்தர சிவசிந்தனையைப் பெற்ற மெய்யடியார்களுளங் களிக்க ஆங்காங்கு ஆவிர்ப்பவிப்பதன்றி அவனுக்கு எஞ்ஞான்றும் பிறப்பில்லை யென்றே பகர்கின்றன. ஆதலின் அம்மகானுக்கு மகாச ங்காரகாலத்தும், "தஸ்மா உபஸம் ஹார்த்ரே மஹாக்ராஸாய வை நம:=மகாசங்காரஞ் செய்பவரும் எல்லாவற்றையும் கவளீகர ணஞ் செய்பவருமா யுள்ளார்க்கு நமஸ்காரம்" என்று அதர்வசி ரோபநிடதம் உரைத்தபடி, தானே அத்தொழிலை யியற்றும் வினைமு தலாதலின் இறப்பு அல்லது அழிவு இல்லை யென்பது துணியப்பட் டது. அங்ஙனந் துணியப்படவே அவனது இறவாத்தன்மை பசுக் களுக்குச் செய்யும் பாசநிக்கிரகத்தையும், ஞானநுக்கிரகத்தையும் விளக்கி முத்திப்பேற்றை யளிக்கும் பேராற்றலையும் புலப்படுத்தாநி

ன்றது. சுவேதாசுவதரோபநிடதம் "அஜம் த்ருவம் ஸர்வதத்வை விசுத்தம்=பிறவாதவரும், நித்தியரும், தத்துவங்களெல்லாங் கடந்தவரும்" எனவும், பிரகதாரண்ணியோபநிடதம் "ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மா ஜரோமர:=இந்தப் பெரிய மகானுகிய பரமான்மா ஜனையில்லாதவரும், இறவாதவரும்" எனவுங்கூறிப்போந்தன. யூபத்திற் கட்டுப்பட்டிருக்கும் பசுவானது தானேயக்கட்டை யவிழ்த்துக் கொள்ளமாட்டாதாற்போல பிறவியென்ற பிணியில்சிக்குண்டு கிடக்கின்றவர்கள் தாமேயப்பிணியையகற்றிக் கொள்ளமாட்டார்கள் திரிமூர்த்திகளும் பாசத்தாற் பீடிக்கப்பட்ட தீப்பிணி யுடையவர்களென்று வேதம்பல்காலும் பகர்தலால் அவர்களும் அச்சமுறும்படியான ஜனன மரணமாகிய துக்கத்தை யொழிக்கும் பேராற்றல் வகித்த பேரருளாளன் அப்பிணியி லகப்படாத சிவபிரா னென்பதே தேற்றம். ஆகவே அச்சிவ பரம்பொருளே பவசாகரத்துக்கு மருந்தினர் என்பது வெளிப்படை. திருவெண்காட்டடிகளும் "பிறவாதிருக்க வரந்தால் வேண்டும் பிறந்துவிட்டா, லிறவா திருக்க மருந்துண்டுகாணிதுவெப் படியோ, அறமார் புகழ்தில்லையம்பலவாண ரடிக்கமலம், மறவா திருமனமே யதுகா ணன்மருந் துனக்கே" என்று கூறி உண்மைநிறுவினர் (௰௯)

---

## திருவம்மானை.

சேர்ந்தறியாக் கையானை=பிறரை வணங்கும்பொருட்டு சேர்ந்தறியாத கைகளுடையவனை. சேதனு சேதன ரூபமாகிய சகலப் பிரபஞ்சங்களையும் தமது பேரருள் வியாபகப் பரப்பில் வைத்து நியமித்து நடாத்தும் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான் சர்வாத்மாக்களும் தம்மைவழிபட் டுய்யும் பொருட்டுத் தாமே எஞ்ஞான்றும் எவ்விடத்தும் சர்வலோக சரண்யராய் நிற்றலானும், தமக்குச்சமானரும் அதிகரு மில்லாமல் தாமே சர்வ சுதந்தரரா யிருத்தலானும், பிறர் சங்கற்பத்துக்கும் கன்மத்துக்கும் வசப்படாது தாமே யகில லோகங்களுக்கும் நியந்தாவாய்ப் பிரகாசித்தலானும், எல்லாவான்மாக்களுந் தம்மைக் கைகுவித்து வணங்கத் தாம் வீற்றிருப்பதன்றி தாமெப்பொழுதும் பிறரை வணங்கும் பொருட்டுக் கரங்களைக் குவித்தவரல்லர். பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலான சமஸ்ததேவர்களும் தமக்கு எஞ்ஞான்றும் வழியடியாரெனவும், தாமெப்பொழுதும் ஒருவருக்குங் குடியல்லாத் தன்

மைய ரெனவும் ஆரணங்க ளறைந்தபடி ஸ்ரீ ஆளுடைய வரசுகளும் "பரமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்" என்று தமது திராவிடசூக்தியில் உபதேசித்துள்ளார். இதனால் சகலவழிபாட்டுக்கும், சர்வஸ்தோத்திரங்கட்கும் விஷயமாவார் சிவபெருமானென்பது நாட்டப்பட்டது. ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுள ரிருக்காதி வேதமுநிவர், எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்க ளிரவிமதி யாதியோர்கள், கந்தருவர் கின்னரர்கண் மற்றையர்க ளியாவருங் கைகுவித் திடுந்தெய்வமே, கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு கருணா கரக் கடவுளே'" என்று கூறி உண்மை நிறுவினர். தைத்திரீயோபநிடதமானது "விஸ்வம் பூதம் புவனம் சித்ரம் பஹுதா ஜாதம் ஜாயமானஞ்சயத்-ஸர்வோஹ்யேஷ ருத்ரஸ் தஸ்மை ருத்ராய நமோஅஸ்து=பிரபஞ்சம் நித்தியமோ அநித்தியமோ விசித்திரமோ அனேகவிதமாக வுண்டானதோ உண்டாகிறதோ எல்லாப் பிரபஞ்சத்திற்கும் நிர்வாஹன் இந்த வுருத்திரன் ஆதலால் அப்படிப்பட்ட உருத்திரனுக்குநமஸ்காரம்" எனவும், "யோருத்ரோஅக்நௌ யோஅப்ஸு யஓஷதீஷு யோருத்ரோ விஸ்வா புவநாவிவேச தஸ்மை ருத்ராய நமோஅஸ்து=எந்த ருத்திரன் அக்கினியிலுள்ளான், எவன் நீரிலுள்ளான், எவன் ஓஷதிகளிலுள்ளான், எவன் எல்லாப்புவனங்களிலும் உட்பிரவேசித்தான், அந்த உருத்திரனுக்கு நமஸ்காரம்" எனவும், கூறிப் போந்தமையால் சர்வ ஜகத்காரண பரப்பிரமம் துரீய ருத்திரரெனவும், அவரே நமஸ்காரத்துக்குரியபரம்பொருளெனவும் இனிது போதிக்கப்பட்டது. அன்றியும் நமஸ்காரங்களெல்லாம் சிவபெருமானுடைய சொத்தாயுள்ளன வென பலவேதபாகங்கள் பன்முறையெழுந்து நிரூபிக்கின்றமையால் அவருக்குச் செய்யப்படும் பலவகை வழிபாடுகளில் நமஸ்காரம் மிகச்சிறந்ததென்பது நன்குணரக் கிடக்கின்றது. இவ்வுண்மையை யுணராச் சிலர் "ஸர்வ தேவ நமஸ்காரம் கேசவம் ப்ரதிகச்சதி" என்னும் ஸ்மிருதிவசனத்தை ஆதாரவாகக்கொண்டு சகலதேவர்கள் செய்யும் நமஸ்காரம் கேசவனையே சாருமென்று புலம்பாநிற்பர். இது அசங்கதம். சந்தியாவந்தனம் தொடங்குகையில் பரமேசுவரப் பிரீதியார்த்தம் என்று ஆரம்பித்தலால்கேசவம் என்னும் சப்தம் பரமேசுவரராகியதுரீயசிவத்தையே பற்று மென்பதற்கு யாதுமையுறவில்லை-ஆதலினன்றோ "தத்வேத குஹ்யோபநிஷத்ஸு கூடம்= அந்தப்பரம்பொருளே வேதங்களில்மிகவும் ரகசியமான உபநிடதங்களில் மறைக்கப்பட் டுள்ளது" என்று மந்திரோபநிடத முரைத்தது.

வேதங்களிலுள்ள எல்லா வுபநிடதங்களும் ரகசியமே யாயினும் பிரமவிஷ்ணுருத்ராதிகளைக் கடந்த துரீயப்பொருளை யுணர்த்தும் உபநிடதங்களே மிக்க ரகசியமாம் என்பது வேதாந்தத்தின்கருத்தாம். இப்படிப்பட்ட வுண்மைப் பொருள் பூர்வ புண்ணிய சுகிருத முடையவர்களுக்கும், திருநீற்றின் குறிவழி நிற்குங் கொள்கை யுடையவர்களுக்குமே விளங்காநிற்கும். ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "சைவசமயஞ் சமயமெனி லச்சமயத், தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனி—லைவரையென், ருனந்த வெள்ளத் தழுந்துவது முத்தியெனில், வானந் [illegible]ள் பெய்ம்மின் மழை" என்னும் பாசுரத்தைக்கூறி தமது அரிய அற்புதச் செய்கையால் சிவபரத்துவத்தை நாட்டினர். (௫௭)

---

## திருத்தெள்ளேணம்.

**திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை**=*காத்தற் றொழிற்குரிய மகாவிஷ்ணுவும் வராக வுருவேற்று பூமியைப் பிளந்து சென்றுங் காணொணாத திருவடியை. முன்னொரு காலத்தில் பிரமவிஷ்ணுக்களாகிய விருவரும் தம்மறிவு மயக்கத்தால் யாம் பரம் யாம்பரம் என்று அகங்கரித்து இகலியபோது அவர்களுடைய அகங்கார மொடுங்கும்படி அவர்கள் மத்தியில் அனற்பிழம்பாய் நின்றனர் சிவபெருமான். அப்பொழுது திருமாலானவர் அவ்வனற் பிழம்பின் அடியைக் காணும்பொருட்டு பூமிக்குள் தேடிச்சென்றும் அது பாதாள மேழினுக்கப்பாலும் ஊடுருவிச் சென்றமையால் அலுத்து எல்லைகாணாது மயங்கினர். பிறகு தம்மிடத் துண்டாகிய பேதமையை யொழித்துவிட்டு பூமியின்மேல் வந்துநின்று சிவபெருமானைப் பலவகையானுந் துதித்துச் சிவப்பிரசாதத்தை யெதிர்நோக்கி யிருந்தனர். இந்தத்திவ்விய சரித்திரம் ருக்வேத ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. அதுவருமாறு:—*"**விஷ்ணுர்வே வராஹம் ரூபமாஸ்தாய பூமிந் விதாரயந் ஸஹஸ்ரம் ஸமா ஆஸந், பாதாந்வேஷண பரோபூத்வா, த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி, த்வமேவ ப்ரர்தாஸி, த்வமேவ ஜ்யேஷ்டோஸி, த்வமேவ ஸ்ரேஷ்டோஸி, யஏவம் மஹிமாநம், வேதா த்ருஷ்டா பவதி, விஜ்ஞாதா பவதி, கர்தா பவதி, காரயிதா பவதி, யஏவம் வேதா, சிவசாயுஜ்ய மாப்நோதி சிவசாயுஜ்ய மாப்நோதி**=*விஷ்ணுவானவர் வராகமாகிப் பூமியைக் கிழித்துச் செல்லுங்கால் ஆயிரவருடங்களாயின. சிவனாரது பாதத்தைத் தேடுவதில் அவாவுடையவர்தாயு*

நீர், தந்தையுநீர், உடன்பிறந்தாருநீர், மூத்தாருநீர், உயர்ந்தாரு நீர் என்று துதித்தனர். இம்மகிமையை யறிய வல்லா னெவனோ அவனே காண்கின்றவ னாகின்றான், அறிந்தவனாகின்றான், கர்த்தாவாகின்றான், காரியஞ்செய்கின்றவனாகின்றான், இவ்வித மறிய வல்லானெவனோ அவனே சிவசாயுஜ்யத்தை யடைகின்றான், சிவசாயுஜ்யத்தை யடைகின்றான்" என்பதாம். அன்றியும், சரபோபநிடதமும் "எவருடைய பாதாரவிந்தங்கள் விஷ்ணுவால் தேடப்படுகின்றனவோ அந்த விஷ்ணுவினுடன்கூடி" என்னும் பொருள்பட "யத் பாதாம் போருஹத்வம் த்வம் ம்ருக்யதே விஷ்ணு நாஸஹ" என்று கூறிப்போந்தது. இவ்வாறு இந்தச்சரித்திரம் சுருதி ஸித்தமாயிருக்கவும் பொய்க்கதை யென்று வைணவ ஆவேசம் பூண்டசிலர் குணருத்திரர் பரமாகக் கூறும் அபகர்ஷபுராண வசனங்களை யாதாரமாகக்கொண்டு மறுக்கப்பார்க்கின்றனர். ஐயகோ! இதென்ன அவிவேகம். சுருதி வசனத்துக்குமுன் புராணவசனம் பலிஷ்டப்பிரமாணமாகுமா? சுருதி வசனத்துக்கும் புராணவசனத்துக்கும் விரோதமுண்டாகில் புராணவசனத்தைத் தள்ளி முதனூலாகிய சுருதி வசனத்தையே தழுவ வேண்டுமென்னும் மீமாம்ஸாசாத்திர விதியை எங்கே தள்ளுவது? ஆதலின்பரந்தாமன் பன்றியுருவங்கொண்டு பரப்பிரமமாகிய பரமசிவத்தின் பாதத்தைத் தேடினனென்பதே பரமசித்தம். சங்கராசாரியரும் "விதித்வம் விஷ்ணுத்வம்" என்னுஞ் சுலோகத்தில் (ஹம்ஸமாகவும் வராஹமாகவும் பிறந்துழன்று உன்னைமறக்கத்தக்க பிரமவிஷ்ணுக்களது பிறவிகளை விழைந்திலேன்) என்று சிவபெருமானை நோக்கி முறையிட்டிருக்கின்றனர். ஈண்டு திருமால்கொண்ட வராகவுருவம் அவரது பத்தவதாரங்களில் அடங்கிய தன்று. அப்பத்திலுள்ள வராகவதாரம் வேறுகாரணம் பற்றியே யாமென்றுணர்பாற்று. (௩அ)

---

## திருச்சாழல்.

நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ, ழலராக விடவாழி யருளினன் = நன்மையுடைய ஸ்ரீமந் - நாராயணன் தன் கண்ணைப் பறித்துச் சிவபெருமானுடைய திருவடியில் மலராக வர்ச்சிக்க (அதனால் மகிழ்ந்து) சக்கராயுதத்தைப் பிரசாதித்தனர் அவ்வெம்பெருமான். இதன் வரலாறு வேதத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. அதாவது:— திரிகர்த்தாவாகிய விஷ்ணுமூர்த்தி சிவபி

ரானுடைய திருவடிப்போதில் பேரன்புபூண்டு நாடோறும் ஆயிரங் கமலமலர்களா லர்ச்சித்து வந்தனரெனவும், அங்ஙனம் அர்சசித்து வருகையில் ஓர்நாள் ஒருமலர் குறையக்கண்டு அக்குறையை நிறைத்தற்பொருட்டுத் தன்கண்ணைப்பிடுங்கி இறைவன் றிருவடிமேல் சாத்தின ரெனவும், அப்பொழுது இறைவன் மகிழ்ந்து சக்கரப்படையை அவருக்கருளின ரெனவும் போந்ததாம். அதர்வணவேதத்தைச் சார்ந்த சரபோபநிடதம் "யோவாமபாதார்ச்சித விஷ்ணுநேத்ரஸ் தஸ்மை ததௌ சக்ரமதீவ ஹ்ருஷ்டஃ-தஸ்மை ருத்ராய நமோ அஸ்து=எவருடைய இடதுபாதத்தில் விஷ்ணுவானவர் தமது கண்மலரை யர்ச்சித்துசுதரிசன மென்னுஞ் சக்கரம் பிரசாதிக்கப் பெற்றுக்கொண்டனரோ அந்த உருத்திரமூர்த்திக்கு நமஸ்காரம்" என்று கூறியது. இதனால் விஷ்ணு சேவகரெனவும் த்யாதா வெனவும், சிவபெருமான் சேவ்யரெனவும் த்யேய ரெனவும் நிரூபிக்கப்பட்டது. தைத்திரீயோபநிடதமும் "தஸ்யாச் சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித=அந்த நாராயணருடைய இருதயாக்கினியின் சிகாமத்தியில் பரமாத்மாவுளர்" என்று உணர்த்தியபடியானும், அதற்கிணங்க திருநாவுக்கரசு சுவாமிகளும் "பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள்வா னுள்ளத்தானும்" என்று திருவாய்மலர்ந் தருளினமையானும், விஷ்ணு உபாசகரென்பது வேறுபிரமாணம் வேண்டப்படாது வலியுறுத்தப்பட்டது. அங்ஙனம் வலியுறுத்தப்படவே, அவர் சிவஞானிகளுட் சிறந்தவரென்பதூஉம், மனோ நிக்கிரகஞ்செய்து பரசிவோபாஸ்தி செய்யும் மெய்யடியார்களுக்கு அவரது கருணைபலமே பேரன்பை யுண்டாக்கு மென்பதூஉம் நாட்டப்பட்டது. ஆதலாற்றான் உண்மைச்சைவர்க ளனைவருந் தமது கிரியார்ச்சனையிற் சத்த குருபூசையில் அவரைச் சிறப்பித்துப் பூசித்து வருகின்றார்கள். அப்பையதீக்ஷித சுவாமிகளும் "அபாரம் விஜ்ஞாதும் கிரீச" என்றதற்றொடக்கத்து வசனத்தில் "ஓகிரீச! உம்முடைய அளவில்லாத மகிமையினை யறியவும், உமது சரணாரவிந்தங்களில் உறுதியான அன்பைச் செலுத்தவும், உம்முடைய பூசைகளாற் பூரணமான பிரசாதத்தைப் பெறவும் உலகத்தி லொருவனே சக்தன்-அவன் விஷ்ணு" என்று துதித்தனர். அவ்வாறே ஆசிரியர் ஹரதத்தாசாரியரும் "ஓ பரமேசுவரா! இந்தப் பத்மநாபன் பரப்பிரமமென்றும், பரதத்துவமென்றும், பரஞ்சோதியென்றுஞ் சொல்லப்படுவோன். உம்முடைய பாவனையிலாழ்ந்து உம்மிலும் வேறாகாது நின்றவனாதலால் கருடபாவனை செய்யும் மாந்தரிகன் கருடனாவதுபோலாயினன்" என்றரு

ளினர். இத்தகைய அநந்த பிரமாண முகங்களால் சிவபெருமா னுடைய திருவடிக் கமலங்களில் அர்ச்சனையாற்றும் நெறியினன் திருமாலென்பது தெள்ளிதிற் பெறப்பட்டது. (௫௬)

---

## திருவுந்தியார்.

உருத்திர நாதனுக் குந்தீபற. உருத்திர நாதனுக்கு=உருத்திரனாகிய இறைவனுக்கு, அல்லது, உருத்திரர்களுக் கெல்லாந் தலைவனா யிருப்பவனுக்கு என்பது பொருள். உருத்திரர் ஏகாதசருத்திரர், சதருத்திரர், சஹஸ்ரருத்திரர், சம்ஹாரருத்திரர், சாலோகசாமீப சாரூபமுற்ற ருத்திரர் எனப் பலதிறப்படுவர். அவர்களுக் கெல்லாந் தலைவராகிய துரீயருத்திரரே ஈண்டு குறிக்கப்பட்டவர். அவரே திரிமூர்த்திபரர். உருத்திரன் என்னுஞ் சொல்லுக்கு உரோதனம் (அழுகையைச்) செய்பவனென்று வைணவமதத்தினர் சாதாரணமாகப் பொருள்கூறி மயங்குவர். அச்சொல் அங்ஙன மொருவாறு பொருள் தருமாயினும் "ருத்தி ஸம்ஸாரது:கம் தத்ரா வயதியः ப்ரபு: ருத்ர இத்யுச்யதே." என்று உபப்பிரமணங்கூறியபடி "ருத் என்பது சம்சாரதுக்கம், அதனை ஓட்டுவிப்பான் அவனே ருத்திரனெனப் படுவான்" என்பதே உண்மைப்பொருள். தென்மொழிக் கந்தபுராணமும் "இன்னலங் கடலுட்பட்டோர் யாரையுமெடுக்குமாற்றா—லுன்னரும் பரமமூர்த்தி யுருத்திர னெனும்பேர் பெற்றான்" என்று இப்பொருளையே வற்புறுத்தியது. இன்னமும் இதன் வேறு தெளி பொருளையுஞ்சிறிது விரிப்பாம். (க) ருத்=சப்தமயப்பிரபஞ்சம், அதனைத்தன் வசப்படுத்தினவன், எனவே சர்வசப்தங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவன். (உ) ருத்=பிரமவித்தை, அதனாலே ஆன்மாக்களிடத்துப் பொருந்தியுள்ள அநாதி மலத்தைக் கரையச்செய்பவன். (௩) ருத்=ஆவரணம், அதனை யொழிப்பவன் (௪) ருத்=பிரமஞ்ஞானம், அதனை நேரிலுஞ் சதாசாரியனை யதிஷ்டித்தும் உபதேசிப்பவன். (௫) ருத்திரன்=சங்காரகாலத்தில் சர்வான்மாக்களையுங் கதறச்செய்பவன், (௬) ருத்திரன்=சகல நற்பிரவிருத்திகளையுந் தடுக்குந் தமோகுணத்தைத் தன்வசப்படுத்தினவன். (௭) ருத்திரன்=பிரமனுடைய முகாவிர்ப்பவ லீலையில் அழுகையை அபிநயித்தவன். (௮) ருத்திரன்=சப்தமயப்பிர பஞ்சத்தை யொழிப்பவன், எனவே மௌனசமாதியை உபதேசிப்ப வன். (௯) ருத்திரன்=உலகத்திலுள்ள ஆன்மாக்களிடத்தமைந்த அஞ்

ஞானத்தைத் நோக்கித் தான் துயருறுபவன், எனவே பிறர் துயரமே ற்காமையென்ற கருணைக்கு நிதியாயுள்ளவன் (ய) ருத்திரன்=சர்வேசுவர ஞானத்தால் சர்வஜகத் பயங்கரன். இன்னோரன்ன பலபொருள்கள் உருத்திர சப்தத்துக்குப் பாஷ்யங்களினும், புராணேதிகாசங்களினும் விரிந்து கிடக்கின்றன. ஆதலாற்றான் சிவநேயமலிந்த செல்வர்களனைவரும் தந்தம் ஆசிரியமூர்த்திகளை மோட்சத்தை யளிக்குஞ் சிவபெருமானாகப் பாவித்துப் பூசித்துவருகின்றார்கள். இவ்வாய்மைக்கு அன்று அமர்க்களத்தில் ஸ்ரீ கிருஷ்ணனைப் பூசித்த பற்குனனே சாலுங்கரி. இதனால் ருத்திரநாமம் பிரமத்துக் குரியதென்பது நிலைநாட்டப்பட்டது. (சுய)

இன்னணம் திருவருட்களிப்பின் மிகுதியால்வரைந்து வெளிப்படுத்தியஇவ்வறுபது விஷய சூசனங்களையும் பிறப்பிலிப்பிரானும் பிறைசூடிய நாதனுமான சிவபெருமானுடைய திருவடிப்போதுக்கு ஓர்சிறு வில்வத்தளிராக வளித்திட்டேமாதலால் வைதிகசைவர்களனைவரும்இதனையேற்று அன்பின்பெருக்கால் ஆநந்தபரவசசித்தவிருத்தியுடையவராய்ச் சிவத்தியானப் பொலிவுடன் விளங்கியிருக்கத் திருவருளைச் சிந்திக்கின்றேம். சுபம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்.

## திருவாசக விஷய சூசனம்.

## முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா,

## திருப்பல்லாண்டு,
## திருமந்திரத்திரட்டு,
## பிரபந்தமாலைத்திரட்டு,
## பெரியபுராணச் செய்யுட்டிரட்டு.

இவை


இரங்கோன் - சமரசஞானசன்மார்க்கசபைத்தலைவரும்,
[illegible]கந்திராபாக்கும் - சித்தாந்தஞான[illegible]தாபகரும்,
சித்தாந்தஞானநிஷ்டருமாகிய
சோளங்கிபுரம்

**ஸ்ரீமத்-சிவஅருணகிரிமுதலியார்**

அவர்களால்


பாசுரங்க[illegible] தளைகள் பிரித்துப்
பரிசோதிக்கப்பட்டு,

ஷெயார் தமையனாரும்
பென்ஷன் சுபேதாரும் பெஞ்சுமாஜிஸ்ட்ரேட்டுமாகிய
சோளங்கிபுரம்

**ஸ்ரீ - சிவசிதம்பரமுதலியாரவர்கள்**

நல்லாதரவால்


ம-௱-௱-ஸ்ரீ
ப. அ. சோமசுந்தர செட்டியாரவர்களது
சென்னை,
வித்யா பாஸ்கர அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.
விசுவாவசு ௵ பங்குனிமீ
1906.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா-திருப்பல்லாண்டு=சேந்தனார்முதலிய ஒன்பதின்மர் திருவாய் மலர்ந்தருளிய ஒன்பதாந் திருமுறை.

திருமந்திரத்திரட்டு=கயிலாயச்சித்தர் என்னும் திருமூலநாயனார் திருவாய்மலர்ந்தருளிய பத்தாந் திருமுறையினின்றுந்திரட்டப்பட்டது.

பிரபந்தமாலைத்திரட்டு=திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் திருவாய்மலர்ந்தருளிய பதினோராந்திருமுறையென்னும் பிரபந்தங்களினின்றும் திரட்டப்பட்டது

பெரியபுராணச் செய்யுட்டிரட்டு= அருண்மொழித்தேவராகிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பன்னிரண்டாந் திருமுறையென்னும் பெரிய புராணத்தினின்றுந் திரட்டப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சூசிபத்திரம்.


| திருப்பதிகம். | பக்கம். |
|---|---|
| **க. திருமாளிகைத்தேவர்** | |
| க கோயில் | ரு |
| உ கோயில்உயர்கொடியாடை | ச |
| ங கோயில்-உறவாகியயோகம் | சா |
| ச கோயில் (இணங்கிலாவீசன்) | ௰ |
| **உ. சேந்தனார்** | |
| க திருவீழிமிழலை | கக |
| உ திருவாவடுதுறை | கச |
| ங திருவிடைக்கழி | கசா |
| **ங. கருவூர்த்தேவர்.** | |
| க கோயில் | ககூ |
| உ திருக்களந்தையாதித்தேச்சரம் | உஉ |
| ங திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் | உச |
| ச திருமுகத்தலை | உஎ |
| ரு திரைலோக்கியசுந்தரம் | ௩௰ |
| சா கங்கைகொண்ட சோளேச்சரம் | ௩க |
| எ திருபூவணம் | ௩ச |
| அ திருசசாட்டியக்குடி | ௩சா |
| கூ தஞ்சையிராசராசேச்சரம் | ௩கூ |
| க௦ திருவிடைமருதூர் | சஉ |
| **ச. பூந்துருத்திநம்பிகாடநம்பி** | |
| க திருவாரூர் | சச |
| உ கோயில் | சரு |
| **ரு. கண்டராதித்தர்.** | |
| க கோயில் | |
| **சா. வேணாட்டடிகள்** | |
| க கோயில் | சஅ |
| **எ. திருவாலியமுதனார்** | |
| க கோயில்-பாதாதிகேசம் | ரு௦ |
| உ கோயில்-பவளமால்வரை | ருக |
| ங கோயில்-அல்லாய்ப்பகலா | ருங |
| ச கோயில்-கோலமலர் | ருச |
| **அ. புருடோத்தமநம்பி.** | |
| க கோயில்-வாரணி | ருக |
| உ கோயில்-வானவர்கள் | ருஎ |
| **கூ. சேதிராயர்.** | |
| க கோயில் | ருகூ |
| **சேந்தனார் திருப்பல்லாண்டு.** | |
| க கோயில் | சாக |


திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா அருளிச்செய்த ஒன்பதுநாயன்மார் திருநாமமும் திருப்பதிகவகையும் பண்ணின்வகையுந் தெரியுமடைவு.

செம்பொன்மணி யம்பலத்து நிருத்தனுர்க்குத்
திருவிசைப்பா வுரைத்தவர்தந் திருப்பேர்சொல்லிற்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த்தேவர்
பரிவுடைய சேந்தனுர் கருவூர்த்தேவர்
நம்பிகா டவர்கோனற் கண்டராதித்தர்
நன்குயர்வே ணுட்டடிக டிருவாலியமுத
நம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதிராய
ராகவிவ ரொன்பதின்மர் தாமுறைகண்டடைவே. (க)

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்குசேந்த
ரன்புறுபல் லாண்டொன்றே டிசைப்பாமூன்று
திடமுடைய கருவூரர் பத்துவீறிற்
சிறந்தகா டவிரண்டு கண்டர்வேணுடர்
படிபுகழோவ் வொன்றுதிரு வாலிநான்கு
பன்னுபுரு டோத்தமனு ரிரண்டுசேதிராய
ருடையதிருக் கடைக்காப்பொன் றுகவிருபத்தொன்
பானேது செய்யுண்முந் நூற்றறுபதினேடைந்தே (உ)

ஐந்துடனல் வருமுரைத்த திருக்கடைக்காப்பிற்பண்
ணறையின்மா ளிகைத்தேவர் நான்கிலொன்றுகாந்தார
முந்துகரு வூரர்பத்தி னிரண்டுபுறநீர்மை
மொழிந்திடுகாந் தாரமொன்று காடவர்கோனிரண்டி
னந்தவில்சா ளரபாணி யொன்றுவேணுட்டடிக
ளவின்றதொன்று புறநீர்மை திருவாலியமுதர்
பந்தமறச் சொன்னுன்கி னென்றுநட்டராகம்
பகர்ந்திடினேன் றிந்தளமற் றனைவயும்பஞ்சமமே. (ரூ)

---

சில திருப்பதிகங்களிலே
சில திருப்பாசுரங்கள் இறந்து விட்டன.

உ

சிவமயம்.

# திருவிசைப்பா.

## திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா.

### க. கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (க)

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
யடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
வயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. (உ)

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாமகண் டாவண்ட வாணா
நற்பெரும் பொருளா யுரைகலந் துன்னை
யென்னுடை நாவினா னவில்வா
னற்பனே னுள்ளத் தளவிலா வுன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடீ

கற்பமா யுலகா யல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. (௩)

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாயென்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணா ளிமவான்
மகளுமை யவள்களை கண்ணே
யருமையின் மறைநான் கோலமிட் டரற்று
மப்பனே யம்பலத் தமுதே
யொருமையிற் பலபுக் குருவினின் றனையைத்
தொண்டனே னுரைக்குமா றுரையே. (௪)

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா வெங்கள்
காலகா லாகாம நாசா
வாலமே யமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியே னற்றவத் தாயைத்
தொண்டனே னணுகுமா றணுகே. (௫)

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
வாறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன்செ யம்பலத் தரசே
யேறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே. (௬)

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கண்மூன் றுடையதோர் கரும்பே
யனகனே குமார விநாயக சனக
வம்பலத் தமரசே கரனே
யுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா றுகரே. (௭)

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னு மின்னு நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
யறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசா
யாலின்கீ ழிருந்தவம் பலவா
புறஞ்சமண் புத்தப் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. (அ)

தக்கனற் றலையு மெச்சன்வன் றலையுந்
தாமரை நான்முகன் றலையு
மொக்கவிண் டுருள வொண்டிருப் புருவ
நெறித்தரு ளியவுருத் திரனே
யக்கணி புலித்தோ லாடைமே லாட
வாடப்பொன் னம்பலத் தாடுஞ்
சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் றொடருமா தொடரே. (௯)

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்
கருள்புரி வள்ளலே மருளா
ரிடங்கொண் முப்புரம்வெந் தவியவை திகத்தே
ரேறிய வேறுசே வகனே
யடங்கவல் லரக்க னருட்டிரு வரைக்கீ
ழடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே யுன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே. (௧௦)

மறைகளு மமரர் கூட்டமு மாட்டா
தயன்றிரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிக
ளறைகழ லரன்சீ ரறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்குமம் பலத்து
ணிறைதரு கருணா நிலயமே யுன்னைத்
தொண்டனே னினையுமா நினையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## உ. கோயில் - உயர்கொடியாடை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உயர்கொடி யாடை மிடைபட லத்தி
 னொமதா மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
 பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிக ணிரந்துசேர் கனக
 நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறு மமரர் மகுடந்தோய் மலர்ச்சே
 வடிகளென் மனத்துவைத் தருளே. (க)

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
 கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சா
 லெழின்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியந்
 திரண்டசிற் றம்பலக் கூத்தா
வுருவளர் ரின்பச் சிலம்பொலி யலம்பு
 முன்னடிக் கீழதென் னுயிரே. (உ)

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலங்
 கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
 பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவரடி முறையா
 லிறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தர முனிவர் நினைதிருக் கணைக்கா
 ணினைந்துநின் றுருழிந்ததென் னெஞ்சே. (ங)

தேர்மலி விழவிற் குழலொலி தெருவிற்
 கூத்தொலி யேத்தொலி யோத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
 பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பிற்
 றிகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா

வார்மலி முலையாள் வருடிய திரண்மா
மணிக்குறங் கடைந்ததென் மதியே. (௪)

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்
கிளங்கமு குளங்கொளீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதண
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொணீர்த் தரளத் திரள்கொணித் திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்த
பொறையணி நிதம்பப் புலியதளாடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே. (௫)

அதுமதி யிதுவென் றலந்தலை நூல்கற்
றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணுந் தேரருஞ் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்த
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி
வளைப்புண்டென் னுண்மகிழ்ந் ததுவே. (௬)

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூ லகலம்
பொருவரை புரைதிண் டோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு வுதரத் தார்திசை மிடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த
வுருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து
கிடந்ததென் னுணர்வுணர்ந் துணர்ந்தே. (௭)

கணியெரி விசிறு கரந்துடி விடவாய்க்
கங்கணஞ் செங்கைமற் றபயம்
பிணிகெட விவைகண் டரன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே
சீர்கொள்சிற் றம்பலக் கூத்த
வணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய
சோதியு ளடங்கிற்றென் னறிவே. (௮)

திருநெடு மாலிந் திரனயன் வானோர்
திருக்கடைக் காவலி னெருக்கிப்
பெருமுடி மோதி யுகுமணி முன்றிற்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரந்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்த
கருவடி குழைக்கா தமலச்செங் கமல
மலர்முகங் கலந்ததென் கருத்தே. (௯)

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம்
பெருந்தடங் கண்கண்மூன் றுடையோன்
பேர்களா யிரநூ றுயிரம்பி தற்றும்
பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகுங் கொன்றையுந் துன்று
சென்னிச்சிற் றம்பலக் கூத்த
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்த
நிகழ்ந்தவென் சிந்தையு ணிறைந்தே. (௰)

காமனைக் காலன் றக்கன்மிக் கெச்சன்
படக்கடைக் கணித்தவ னல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்த
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பரென் புன்சொலின் பொருளே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## ௩. கோயில் - உறவாகியயோகம்.

பண் - ப ஞ் ச ம ம்.

திருச்சிற்றம்பலம்.

உறவா கியயோகமும் போக முமா
யுயிராளி யென்னுமென் பொன்னொ ருநாட்

சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
 சிலைகொண்டு பன்றிப்பின் சென்று நின்ற
மறவா வென்னும்மணி நீர ருவி
 மகேந்திர மாமலை மேலு றையுங்
குறவா வென்னுங்குணக் குன்றே யென்னுங்
 குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (க)

காடாடு பல்கணஞ் சூழக் கேழற்
 கடும்பின் னெடும்பகற் கான டந்த
வேடாம கேந்திர வெற்பா வென்னும்
 வினையேன் மடந்தை விம்மா வெருவுஞ்
சேடாவென் னுஞ்செல்வர் மூவா யிரஞ்
 செழுஞ்சோ தியந்தணர் செங்கை தொழுங்
கோடாவென் னுங்குணக் குன்றே யென்னுங்
 குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (உ)

கானே வருமுர ணேன மெய்த
 களியார் புளினநற் காளா யென்னும்
வானே தடவு நெடுங்கு டுமி
 மகேந்திர மாமலை மேலி ருந்த
தேனே யென்னுந் தெய்வவாய் மொழியார்
 திருவாளர் மூவா யிரவர் தெய்வக்
கோனே யென்னுங்குணக் குன்றே யென்னுங்
 குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (ங)

வெறியேறு பன்றிப்பின் சென்றொ ருநாள்
 விசயற் கருள்செய்த வேந்தே யென்னு
மறியேறு சாரன் மகேந் திரமா
 மலைமே லிருந்த மருந்தே யென்னு
நெறியேயென் னுநெறி நின்ற வர்க
 ணினைக்கின்ற நீதி வேதாந் தநிலைக்
குறியேயென் னுங்குணக் குன்றே யென்னுங்
 குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (ச)

செழுந்தென்ற லன்றிலித் திங்கள் கங்கு
 றிரைவீரை தீங்குழல் சேவின் மணி
யெழுந்தின்றென் மேற்பகை யாட வாடு
 மெனைநீ நலிவ தென்னே யென்னு

மழுந்தா மகேந்திரத் தந்த ரப்புட்
கரசுக் கரசே யமரர் தனிக்
கொழுந்தே யென்னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (ரு)

வண்டார் குழலுமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத் தின்பின்
கண்டார் கவலைவில் லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தா யென்னும்
பண்டாய மலரயன் றக்க னெச்சன்
பகலோன் றலைபற் பசுங்கண்
கொண்டா யென்னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (சு)

கடுப்பாய்ப் பறைகறங்கக் கடுவெஞ் சிலையுங்
கணையுங் கவணுங் கைக்கொண்
டுடுப்பாய் தோல்செருப் புச்சு ரிகை
வராகமுன் னோடி விளியு ளைப்ப
நடப்பாய் மகேந்திர நாதநா தாந்தத்
தரையா வென்பார்க்கு நாதாந் தபதங்
கொடுப்பா யென்னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (எ)

சேவேந்து வெல்கொடி யானே யென்னுஞ்
சிவனேயென் சேமத் துணையே யென்னு
மாவேந்து சாரன் மகேந்தி ரத்தில்
வளர்நாய காவிங்கே வாரா யென்னும்
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலிய நின்ற
கோவேயென் னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (அ)

தரவார் புனஞ்சு னைதா ழருவித்
தடங்கல் லுறையு மடங்க லமர்
மரவார் பொழிலெழில் வேங்கை யெங்கு
மழைசூழ் மகேந்திர மாம லைமேற்
சுரவா வென்னுஞ் சுடர்நீண்மு டிமாலய
னிந்தி ரன்முதற் றேவர்க் கெல்லாங்

குரவா வென்னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௯)

திருநீ றிடாவுருத் தீண்டே னென்னுந்
திருநீறு மெய்த்திரு முண்டத் திட்டுப்
பெருநீ லகண்டன் றிறங்கொண் டிவள்
பிதற்றிப் பெருந்தெ ருவே திரியும்
வருநீ ரருவி மகேந்தி ரப்பொன்
மலையின் மலைமக ளுக்க ருளுங்
குருநீ யென்னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௧௦)

உற்றாயென் னுமுன்னை யன்றி மற்றொன்
றுணரே னென்னு முணர்வுகள் கலக்கப்
பெற்றாய வைந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர வெண்ணீ றிடப்பெற்றே னென்னுஞ்
சுற்றாய சோதி மகேந்தி ரஞ்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாயென் னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௧௧)

வேறா கவுள்ளத் துவகை விளைத்
தவனிச் சிவலோக வேத வென்றி
மாறா தமூவா யிரவரையு மெனையும்
மகிழ்ந் தாள வல்லா யென்று
மாறார் சிகர மகேந்தி ரத்துன்
னடியார் பிழைபொ றுப்பாய் மாதோர்
கூறா யென்னுங்குணக் குன்றே யென்னுங்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

## ச. கோயில் - இணங்கிலாவீசன்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

இணங்கிலா வீச னேசத் திருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன் மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறிற் கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (க)

எட்டுரு விரவி யென்னை யாண்டவ னீண்டு சோதி
விட்டிலங் கலங்கற் றில்லை வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத் தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (உ)

அருட்டிரட் செம்பொற் சோதி யம்பலத் தாடு கின்ற
விருட்டிரட் கண்டத் தெம்மா னின்பருக் கன்பு செய்யா
வரட்டரை யரட்டுப் பேசு மழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (ங)

துணுக்கென வயனு மாலுந் தொடர்வருஞ் சுடரா யிப்பா
லணுக்கருக் கணிய செம்பொ னம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச் சிதம்பரைச் சீத்தை யூத்தைப்
பிணுக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (ச)

திசைக்குமிக் குலவு சீர்த்தித் தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடு நமர்களை நணுகா நாய்க
ளசிக்கவா ரியங்க ளோது மாதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (ரு)

ஆடர வாட வாடு மம்பலத் தமிர்தே யென்னுஞ்
சேடர்சே வடிகள் சூடத் திருவிலா வுருவி ஞரைச்
சாடரைச் சாட்கை மோடச் சழக்கரைப் பிழுக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (சு)

உருக்கியென் னுள்ளத் துள்ளே யூறலந் தேறன் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச் செல்வன்பாற் செல்லுஞ் செல்வி
னருக்கரை யள்ளல் வாய கள்ளரை யவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (எ)

செக்கரொத் திரவி நூறு யிரத்திர ளொப்பாந் தில்லைச்
சொக்கரம் பலவ ரென்னுஞ் சுருதியைக் கருத மாட்டா
வெக்கரைக் குண்ட மிண்ட வெத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (அ)

எச்சனைத் தலையைக் கொண்டு செண்டடித் திடப மேறி
யச்சங்கொண் டமர ரோட நின்றவம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக் கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (கூ)

விண்ணவர் மகுட கோடி மிடைந்தொளிர் மணிகள் வீசு
மண்ணலம் பலவன் கொற்ற வரசனுக் காசை யில்லாத்
தெண்ணரைத் தெருளா வுள்ளத் திருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (க0)

சிறப்புடை யடியார் தில்லைச் செம்பொனம் பலவற் காளா
முறைப்புடை யடியார் கீழ்க்கீ ழுறைப்பர்சே வடிநீ றாடா
ரிறப்பொடு பிறப்பி னுக்கே யினியராய் மீண்டு மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## சேந்தனார் திருவிசைப்பா.

### க. திருவீழிமிழலை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஏகநா யகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே. (க)

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. (உ)

மண்டலத் தொளியை விலக்கியா னுகர்ந்த
மருந்தையென் மாறிலா மணியைப்
பண்டல ரயன்மாற் கரிதுமா யடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூ ராளுங்
கொண்டலங் கண்டத் தெங்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே. (௩)

தன்னடி நிழற்கீ ழென்னையுந் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
யென்னிடைக் கமல மூன்றினுட் டோன்றி
யெழுஞ்செழுஞ் சுடரினை யருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்கு வெண்பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. (௪)

இத்தெய்வ நெறிநன் றென்றிருண் மாயப்
பிறப்பறா விந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயி
லத்தெய்வ நெறியிற் சிவமலா தவமு
மறிவரோ வறிவுடை யோரே. (௫)

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோ டழுந்தி யானவமே

புக்கிடா வண்ணங் காத்தெனை யாண்ட
புனிதனை வனிதைபா கனையெண்
டிக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. (௬)

கங்கைநீ ரரிசிற் கரையிரு மருங்குங்
கமழ்பொழி றழுவிய கழனித்
திங்கணேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் றோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத் தென்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ வினியே. (௭)

ஆயிரங் கமல ஞாயிறா யிரமுக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி யுமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. (௮)

எண்ணில்பல் கோடி சேவடி முடிக
ளெண்ணில்பல் கோடிதிண் டோள்க
ளெண்ணில்பல் கோடி திருவுரு நாம
மேர்கொண்முக் கண்முக மியல்பு
மெண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தண ரேத்து
மெண்ணில்பல் கோடி குணத்தரேர் வீழி
யிவர்நம்மை யாளுடை யாரே. (௯)

தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திர னிந்திர னெச்சன்
மிக்கநெஞ் சரக்கன் புரங்கரி கருடன்
மறலிவே ளிவர்மிகை செகுத்தோன்

றிக்கெலா நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் றிருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. (௧0

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மே
லருள்சொரி தருமுயா பதியை
வளங்கிளர் நதியு மதியமுஞ் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்
றுந்தனைச் சேந்தன்றா தையயான்
களங்கொள வழைத்தாற் பிழைக்குமோ வடியேன்
கைக்கொண்ட கனககற் பகமே. (௧௧

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்க
ளெஞ்சிலு ணிறைந்துநின் றானே
வேடலங் காரக் கோலத்தி னமுதைத்
திருவீழி மிழலையூ ராளுங்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத் தேனே. (௧௨

திருச்சிற்றம்பலம்.

---

## உ. திருவாவடுதுறை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப் புகழா ளாயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர் மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை யமுதே யென்றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன் றருளாதொழி வதுமா திமையே.

மாதி மணங்கம ழும்பொழின் மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச் சுருதி விதிவழி யோர்தொழு

மாதி யமரர்பு ராணனு மணியா வடுதுறை நம்பிநின்ற
நீதி யறிகிலள் பொன்னெடுந் திண்டோள் புணரநினைக்குமே. (உ)

நினைக்கு நிரந்தர னேயென்னுநிலாக்கோலச்செஞ்சடைக்கங்கைநீர்
நனைக்கு நலங்கிளர் கொன்றைமே லயம்பேசு நன்னுத லங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகண் மணவாள நம்பியண் சாந்தையூர்
தனக்கின்ப னாவடு தண்டுறைத் தருணேந்து சேகர னென்னுமே.

தருணேந்துசேகரனேயெனுந்தடம்பொன்னித்தென்கரைச்சாந்தை
யூர்ப், பொருணேர்ந்தசிந்தையவர்தொழப்புகழ்செல்வமல்குபொற்
கோயிலு, ளருணேர்ந்தமர் திருவாவடுதுறையாண்டவாண்டகையம்
மானே, தெருணேர்ந்தசித்தம்வலியவாதிலகநுதலிதிறத்திலே. (௪)

திலக நுதலுமை நங்கைக்குந் திருவா வடுதுறை நம்பிக்குங், குலக
வடியவர்க் கென்னையாட் கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல், லல
தொன்றறிகின்றிலேமெனுமணியும்வெண்ணீறஞ்செழுத்தலால், வல
தொன்றிலளிதற்கென்செய்கேன்வயலந்தண்சாந்தையர்வேந்தனே.

வேந்தன் வளைத்தது மேருவில் லரவுநாண்வெங்கணைசெங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம் பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதலயன் சாரதி கதியரு ளென்னுமித் தையலை
யாந்தண் டிருவா வடுதுறை யான்செய்கை யாரறி கிற்பரே. (௬)

கிற்போமெனத்தக்கன்வேள்விபுக்கெடுத்தோடிக்கெட்டவத்தேவர்க
ள், சொற்போலுமெய்ப்பயன்பாவிகாளென்சொல்லிச் சொல்லுமித்
தூமொழி, கற்போன்மனங்கனிவித்தவெங்கருணா லயாவந்திடாயெ
ன்றுற், பெற்போபெருந்திருவாவடுதுறையாளிபேசாதொழிவதே.

ஒழிவொன் றிலாவுண்மை வண்ணமு முலப்பில ளுறின்பவெள்ளமு
மொழிவொன்றிலாப்பொன்னித்தீர்த்தமுமுனிகோடிகோடியாமூர்
த்தியு,மழிவொன்றிலாச்செல்வச்சாந்தையூரணியாவடுதுறையாடிரு
ளிழிவொன்றிலாவகையெய்திநின்றிறுமாக்குமென்னிளமானனே.

மானேர் கலைவளை யுங்கவர்ந் துளங்கொள்ளைகொள்ளவழக்குண்டே
தேனே யமுதேயென் சித்தமே சிவலோக நாயகச் செல்வமே
யானே யலம்புபு னற்பொன்னி யணியா வடுதுறை யன்பர்தங்
கோனேநின் மெய்யடி யார்மனக் கருத்தை முடித்திடுங் குன்றமே.

குன்றேந்தி கோகன கத்தய னறியா நெறியென்னைக் கூட்டினு
யென்றேங்கி யேங்கிய ழைக்கின்று ளிளவல்லி யெல்லைக டந்தன

ளன்றேய லம்புபு னற்பொன்னி யணியா வடுதுறை யாடினா
னன்றே யிவணம் பரமல்ல னவலோக நாயகன் பாலளே. (௧௦)

பாலு மமுதமுந் தேனுமா யானந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலுமெ ன்றுயிர்ப் போகமாம் புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த் திருவா வடுதுறை வேந்தனோ
டாலு மதற்கே முதலுமா மறிந்தோ மரிவைபொய் யாததே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## ௩. திருவிடைக்கழி.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகன் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
னென்னுமென் மெல்லிய லிவளே. (௧)

இவளைவா ரிளமென் கொங்கைபீர் பொங்க
வெழில்கவர்ந் தானிளங் காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்க ணங்கையா னைக்குங்
குழகனல் லழகனங் கோவே. (௨)

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்
காவனற் சேனை யென்னக்காப் பவனென்
பொன்னைமே கலைகவர் வானே

தேவினற் றலைவன் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மண்ணியன் றனே. (அ)

தானமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளறன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. (௯)

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வைய
முய்யமற் றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. (௰)

கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட
வாண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடையான் மதலை
கார்நிற மாறிரு மருகன்
றிளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
முளையிளங் களிறென் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொன் முருகவேள் பரிந்தே. (கக)

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் தூரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது வென்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியிற்

திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொன்
மையல்கொண் டையுறும் வகையே. (எ)

வகைமிகு மசுரர் மாளவந் துழிஞை
வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகு மனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்றிரு வடிக்கென்
றுடியிடை மடவரு டங்கினளே. (அ)

தொடங்கினண் மடலென் றணிமுடித் தொங்கற்
புறவிதழ் தாகிலு மருளா
னிடங்கொளக் குறத்தி திறத்திலு மிறைவன்
மறத்தொழில் வார்த்தையு முடையன்
றிடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
தறுமுகத் தமுதினை மருண்டே. (கூ)

மருண்டுறை கோயின் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள்செயா விடுமே
விடலையே யெவர்க்குமெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. (க0)

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தாய்மொழி யமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்தசொல் லிவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற

வெழுங்கதி ரொளியை யேத்துவார் கேட்பா
ரிடர்கெடு மாறுலா மனமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

# கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

## க. கோயில்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
கறையணற் கட்செவிப் பகுவாய்ப்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
பாம்பணி பரமர்தங் கோயின்
மணம்விரி தருதே மாம்பொழின் மொழுப்பின்
மழைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை யரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (க)

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்து
மேழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்று
லஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (உ)

தாயினே ரிரங்குந் தலைவவோ வென்றுந்
தமியனேன் றுணைவவோ வென்று
நாயினே னிருந்து புலம்பினு லிரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (ங)

துந்துபி குழல்யாழ் மொந்தைவா ணியம்பத்
தொடர்ந்திரு டியர்கணந் துதிப்ப
நந்திகை முழவு முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயி
லந்தியின் மறைநான் காரணம் பொதிந்த
வரும்பெறன் மறைப்பொருண் மறையோர்
சிந்தையி லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௪)

கண்பனி யரும்பக் கைகண்மொட் டித்தென்
களைகணே யோலமென் றோலிட்
டென்பெலா முருகு மன்பர்தங் கூட்டத்
தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பிற்
செண்பக மரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௫)

நெஞ்சிட ரகல வகம்புகுந் தொடுங்கு
நிலைமையோ டிருள்கிழித் தெழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்றொளி துளும்பும்
விரிசடை யடிகடங் கோயி
லஞ்சுடர்ப் புரிசை யாழிசூழ் வட்டத்
தகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுட ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௬)

பூத்திர ளுருவஞ் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
றூத்திரட் பளிங்கிற் றோன்றிய தோற்றந்
தோன்றநின் றவன்வளர் கோயி
ஞாத்திரண் மறையோர்ந் தோமகுண் டத்து
நறுநெயான் மறையவர் வளர்த்த
தீத்திர ளரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௭)

சீர்த்ததிண் புவன முழுவது மேனைத்
திசைகளோ டண்டங்க ளனைத்தும்

போர்த்ததம் பெருமை சிறுமைபுக் கொடுங்கும்
புணர்ப்புடை யடிகடங் கோயி
லார்த்துவந் தமரித் தமரரும் பிறரு
மலைகட லிடுதிரைப் புனிதத்
தீர்த்தநீ ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (அ)

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
யன்னதேன் கலந்தின் னமுதுகந் தளித்தாங்
கருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடுந்
தென்னதே னரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௯)

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கு
மொளிவளர் திருமணிச் சுடர்கான்
றெம்பிரா னடஞ்செய் சூழலங் கெல்லா
மிருட்பிழம் பறவெறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரங் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனு லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௧0)

இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத்
தெண்ணிலங் கண்ணில்புன் மாக்க
டிருந்துயிர்ப் பருவத் தறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயிற்
பொழிலகங் குடைந்துவண் டுறங்கச
செருந்தியின் றரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## ௨. திருக்களந்தையாதித்தேச்சரம்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கலைகடம் பொருளு மறிவுமா யென்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினு நல்ல
முக்கணு னுறைவிடம் போலு
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலா மறையவர் முறையோத்
தலைகடன் முழங்கு மந்தணீர்க் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௧)

சந்தன களபந் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடுஞ்
செந்தழ லுருவிற் பொலிந்துநோக் குடைய
திருநுத லவர்க்கிடம் போலு
மிந்தன விலங்க லெறிபுனந் தீப்பட்
டெரியவொத் தெழுநிலை மாட
மந்தண ரழலோம் பலைபுனற் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௨)

கரியரே யிடந்தான் செய்யரே யொருபாற்
கழுத்திலோர் தனிவடஞ் சேர்த்தி
முரிவரே முனிவர் தம்மொடா னிழற்கீழ்
முறைதெரிந் தோருடம் பினராம்
இருவரே முக்க ணாற்பெருந் தடந்தோ
ளிறைவரே மறைகளுந் தேட
வரியரே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௩)

பழையராந் தொண்டர்க் கெளியரே மிண்டர்க்
கரியரே பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாப்
பிச்சரே நச்சரா மிளிருங்

குழையராய் வந்தென் குடிமுழு தாளுங்
குழகரே யொழுகுநீர்க் கங்கை
யழகரே யாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (௪)

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனிற்
றவளமே களபந் தவளமே புரிநூ
றவளமே முறுவலா டரவந்
துவளுமே கலையுந் துகிலுமே யொருபாற்
றுடியிடை யிடமருங் கொருத்தி
யவளுமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௫)

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்தில நிரைத்திலங் கினவே
போலுமே முறுவ னிறையவா னந்தம்
பொழியுமே திருமுக மொருவர்
கோலமே யச்சோ வழகிதே யென்று
குழைவரே கண்டவ ருண்ட
தாலமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே (௬)

திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந்
திறத்தவர் புறத்திருந் தலச
மைக்கடா வனைய வென்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காத்தெனக் கருளே
புரியவும் வல்லரே யெல்லே
யக்கடா வாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. (௭)

மெய்யரே மெய்யர்க் கிடுதிரு வான
விளக்கரே யெழுதுகோல் வளையாண்
மையரே வையம் பலிதிரிந் துறையு
மயானரே யுளங்கலந் திருந்தும்

பொய்யரே பொய்யர்க் கடுத்தவான் பனிங்கின்
  பொருள்வழி யிருள்கிழித் தெழுந்த
வையரே யாகி லவரிடங் களந்தை
  யணிதிக ழாதித்தேச் சரமே. (அ)

குமுதமே திருவாய் குவளையே களமுங்
  குழையதே யிருசெவி யொருபால்
விமலமே கலையு முடையரே சடைமேன்
  மிளிருமே பொறிவரி நாகங்
கமலமே வதனங் கமலமே நயனங்
  கனகமே திருவடி நிலைநீ
ரமலமே யாகி லவரிடங் களந்தை
  யணிதிக ழாதித்தேச் சரமே. (கூ)

நீரணங் கசும்பு கழனிசூழ் களந்தை
  நிறைபுக ழாதித்தேச் சரத்து
நாரணன் பரவுந் திருவடி நிலைமே
  னலமலி கலைபயில் கருவூ
ராரண மொழிந்த பவளவாய் சுரந்த
  வமுதமூ றியதமிழ் மாலை
யோரணங் கிருநான் கிரண்டிவை வல்லோ
  ரிருள்கிழித் தெழுந்தசிந் தையரே. (கல)

திருச்சிற்றம்பலம்.

---

## கூ. திருக்கீழ்க்கோட்டூர்மணியம்பலம்.

பண் - ப ஞ் ச ம ம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம் பலம்பச்
  சடைவிரித் தலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத் தரும்பித்
  திருமுக மலர்ந்துசொட் டட்டக்

கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங்
கெழுவுகம் பலைசெய்கிழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனங்கலந் தானே. (௪)

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்புஞ்
சுழியமுஞ் சூலமு நீல
கண்டமுங் குழையும் பவளவா யிதழுங்
கண்ணுதற் றிலகமுங் காட்டிக்
கெண்டையுங் கயலு முகளுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கிழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனங்கலந் தானே. (௫)

திருநுதல் விழியும் பவளவா யிதழுந்
திலகமு முடையவன் சடைமேற்
புரிதரு மலரின் றாதுநின் றூதப்
போய்வருந் தும்பிகா ளிங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்
கெழுவுகம் பலைசெய்கிழ்க் கோட்டூர்
வருதிறன் மணியம் பலவனைக் கண்டென்
மனத்தையுங் கொண்டுபோ துமினே. (௬)

தெள்ளுநீ றவனீ றென்னுடல் விரும்புஞ்
செவியவ னறிவுநூல் கேட்கு
மெள்ளவே யவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்குங்
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கிழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துணின் றாடு
மைந்தனே யென்னுமென் மனனே. (௭)

தோழியாஞ் செய்த தொழிலெனெம் பெருமான்
றுணைமலர்ச் சேவடி காண்பா
னூழிதோ றூழி யுணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்குங்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலைசெய்கிழ்க் கோட்டூர்

வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவு மாலொழி யோமே. (௫)

என்செய்கோந் தோழி தோழிநீ துணையா
யிரவுபோம் பகல்வரு மாகி
லஞ்சலோ வென்றாழியுந் திரையு
மலமரு மாறுகண் டயர்வன்
கிஞ்சுக மணிவா யரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவவோ வென்று
மயங்குவன் மாலையம் பொழுதே. (௬)

தழைதவழ் மொழுப்புந் தவளநீற் றொளியுஞ்
சங்கமுஞ் சகடையின் முழக்குங்
குழைதவழ் செவியுங் குளிர்சடைத் தெண்டுங்
குண்டையுங் குழாங்கொடு தோன்றுங்
கழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனக்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துணின் றாடு
மைந்தர்தம் வாழ்வுபோன் றதுவே. (௭)

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகந் திருவடி திருநீ
றின்னகை மழலை கங்கைகோங் கிதழி
யிளம்பிறை குழைவள ரிளமான்
கின்னர முழவ மழலையாழ் வீணை
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனத்துள் வைத்தனனே. (௮)

யாதுநீ நினைவ தெவரையா முடைய
தெவர்களும் யாவையுந் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பனிமலர்க் கண்ணுணின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனம்புகுந் தானே. (௯)

அந்திபோ லுருவு மந்தியிற் பிறைசே
ரழகிய சடையும்வெண் ணீறுஞ்
சிந்தையா னினையிற் சிந்தையுங் காணேன்
செய்வதென் றெளிபுன லலங்கற்
கெந்தியா வுகளுங் கெண்டைபுண் டரீக
கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
மந்தநாண் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனே யறியுமென் மனமே. (௧0)

கித்திநின் றாடு மரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துணின் றாடு
மைந்தனை யாரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்
முத்தியா மென்றே யுலகரேத் துவரேன்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## ௩. திருமுகத்தலை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
வவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமைநீங் குதற்கே. (௧)

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்

வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே
முழங்குதீம் புனல்பாய்ந் திளவரா லுகளு
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்குதீங் கனியா யினியவா றெந்த
வெள்ளமா யுள்ளமா யினையே. (உ

கன்னெகா வுள்ளக் கள்வனே னின்கட்
கசிவிலேன் கண்ணினீர் சொரியேன்
முன்னகா வொழியே னாயினுஞ் செழுநீர்
முகத்தலை யகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா பவளவாய் மணியே
பாவியே னாவியுள் புகுந்த
தென்னகா ரணநீ யேழைநா யடியேற்
கெளிமையோ பெருமையா வதுவே. (௩

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடையவென் னெஞ்சிற்
பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடனா யெனினு முள்புகுந் தடியே
னெஞ்செலா நிறைந் துநின் றாயே. (௪

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோ டென்னொடும் விளைந்த
விக்கலா முழுது மொழியவந் துன்புக்
கென்னையா ளாண்டநா யகனே
முக்கணா யகனே முழுதுல கிறைஞ்ச
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
பக்கலா னந்த மிடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. (௫)

புனல்பட வுருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயி ரளிக்கும்
வினைபடு நிறைபோ னிறைந்தவே தகத்தென்
மனநெக மகிழ்ந்தபே ரொளியே

முனைபடு மதின்மூன் றெரித்தநா யகனே
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடு முடனீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. (௬)

விரியுநீ ராலக் கருமையுஞ் சாந்தின்
வெண்மையுஞ் செந்நிறத் தொளியுங்
கரியுநீ றுடங் கனலுமொத் தொளிருங்
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லா முரிந்தழ கியையாய்
முகத்தலை யகத்தமர்ந் தாயைப்
பிரியுமா றுளதே பேய்களோஞ் செய்த
பிழைபொறுத் தாண்டபே ரொளியே. (௭)

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந்
தன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான்று
மொழிவற நிறைந்தவொண் சுடரே
முன்னையென் பாச முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதுங்
கனியுமா யினியையா யினையே. (௮)

அம்பரா வனலா வனிலமே புவிநீ
யம்புவே யிந்துவே யிரவி
யும்பரா லொன்று மறியொணா வணுவா
யொழிவற நிறைந்தவொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறி வாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரா னாகி யாண்டநீ மீண்டே
யெந்தையுந் தாயுமா யினையே. (௯)

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமா யமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமே
லாலையம் பாகி னனையசொற் கருவூ
ரமுதுறழ் தீந்தமிழ் மாலை

சீலமாய் பாடு மடியவ ரெல்லாஞ்
சிவபதங் குறுகிநின் றாரே. (௧0

திருச்சிற்றம்பலம்.

---

## ரு. திரைலோக்கிய சுந்தரம்.

பண் - கா ந் தா ர ம்.

திருச்சிற்றம்பலம்.

நீரோங்கி வளர்கமல நீர்பொருந்தாத் தன்மையன்றே
யாரோங்கி முகமலர்ந்தாங் கருவினையேன் றிறமறந்தின்
றூரோயகும் பழிபாரா தன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௧)

நையாத மனத்தினனை நைவிப்பா னித்தெருவே
யையாநீ யுலாப்போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௨)

அம்பளிங்கு பகலோன்பா லடைப்பற்றா யிவண்மனத்தின்
முன்பளிந்த காதலுநின் முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியேயென் மருந்தேநல் வளர்முக்கட்
செம்பளிங்கே பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௩)

மைஞ்ஞின்ற குழலாடன் மனந்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற சோவணவ னிவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லா மெய்ஞ்ஞிற்கும் பண்பினறு
செய்ஞ்ஞன்றி யிலன்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௪)

நீவாரா தொழிந்தாலு நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்துங் குவளைமலர் சொரிந்தனவா
லாவாவென் றருள்புரியா யமரர்கணந் தொழுதேத்துந்
தேவாதென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௫)

முழுவதுநீ யாயினுமிம் மொய்குழலாண் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள் பயில்வதுநின் னொருநாம

மழுவதுநின் றிறநினைந்தே யதுவன்றே பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௬)

தன்சோதி யெழுமேனித் தபனியப்பூஞ் சாய்க்காட்டா
யுன்சோதி யெழில்காண்பா னேலிடவு முருக்காட்டாய்
துஞ்சாகண் ணிவளுடைய துயர்திரு மாறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௭)

அரும்பேதைக் கருள்புரியா தொழிந்தாய்நின் னவிர்சடைமே
னிரம்பாத பிறைதூவு நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலு முயிரீர்ந்தாய் நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே (௮)

அறுத பேரன்பி னவருள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ வீற்றிருத்தி யதுகொண்டு
வீறுடி யிவளுன்னைப் பொதுநீப்பான் விரைந்தின்னந்
தேறுடன் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௯)

சரிந்ததுகி றளர்ந்தவிடை யவிழ்ந்தகுழ லவிழ்ந்தெரிவை
யிருந்தபரி சொருநாள்கண் டிரங்காயெம் பெருமானே
முரிந்தநடை மடந்தையர்த முழங்கொலியும் வழங்கொலியுந்
திருந்துவிழ வணிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௧0)

ஆரணத்தேன் பருகியருந் தமிழ்மாலை கமழவரும்
காரணத்தி னிலைபெற்ற கருவூரன் றமிழ்மாலை
பூரணத்தா லீரைந்தும் போற்றிசைப்பார் காந்தாருஞ்
சீரணைந்த பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## ௬. கங்கைகொண்டசோளேச்சரம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
அங்ஙனே பெரியநீ சிறிய
வென்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்

முன்னமா லறியா வொருவனா மிருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௧)

உண்ணெகிழ்ந் துடல நெக்குமுக் கண்ணா
வோலமென் றோலமிட் டொருநாண்
மண்ணினின் றலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணினின் றுருகேன் பணிசெயே னெனினும்
பாவியே னாவியுள் புகுந்தென்
கண்ணினின் றகலா னென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௨)

அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டே
யன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையுங்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௩)

ஐயபொட் டிட்ட வழகுவா ணுதலு
மழகிய விழியும்வெண் ணீறுஞ்
சைவம்விட் டிட்ட சடைகளுஞ் சடைமேற்
றரங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பு
மொய்கொளெண் டிக்குங் கண்டநின் றொண்டர்
முகமலர்ந் திருகணீ ரரும்பக்
கைகண்மொட் டிக்கு மென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௪)

சுருதிவா னவனுந் திருநெடு மாலுஞ்
சுந்தர விசும்பினிந் திரனும்
பரிதிவா னவனும் படர்சடை முக்கட்
பகவனா மகவுயிர்க் கமுதா
மெருதுவா கனனா மெயில்கண்மூன் றெரித்த
வேறுசே வகனுமாம் பின்னும்

கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௫)

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோ
ரண்டமாஞ் சிறுமைகொண் டடியே
னுண்டவூ னுனக்காம் வகையென துள்ள
முள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லிற்
குறுகலர் புரங்கண்மூன் றெரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௬)

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த
முழுமணித் திரளமு தாங்கே
தாய்தலைப் பட்டங் குருகியொன் றாய
தன்மையி லென்னைமுன் னீன்ற
நீதலைப் பட்டா லியானுமவ் வகையே
நிசிசர ரிருவரோ டொருவர்
காதலிற் பட்ட கருணையாய் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௭)

தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலம டியேன்சென் னிமேல்வைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௮)

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போற்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நுன்னிடை. யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௯)

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
வடிச்சிலம் பலம்பவந் தொருநா
ளுங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
யுய்யக்கொண் டருளினை மருங்கிற்
கொங்கைகொண் டணுங்குங் கொடியிடை காணிற்
கொடியளென் றவிர்சடை முடிமேற்
கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௪௦)

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளரிளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
யங்கையோ டேந்திப் பலிதிரி கருவூ
ரறைந்தசொன் மாலையா லாழிச்
செங்கையோ டுலகி லரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே. (௪௧)

திருச்சிற்றம்பலம்.

---

## ௧. திருப்பூவணம்.

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

திருவருள் புரிந்தா ளாண்டுகொண் டிஙஙன்
சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தருநின்
பெருமையிற் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங் ககின்மரஞ் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்
பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௧)

பாம்பணைத் துயின்றோ னயன்முதற் றேவர்
பன்னெடுங் காலநிற் காண்பா

னம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
றேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை யாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௨)

கரைகட லொலியிற் றமருகத் தரையிற்
கையினிற் கட்டிய கயிற்று
விருதலை யொருநா வியங்கவந் தொருநா
ளிருந்திடா யெங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௩)

கண்ணியன் மணியின் குழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுங்கினேற் கங்ஙன்
னுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நுண்ணிமை யிறந்தமை யறிவன்
மண்ணியன் மரபிற் றங்கிருண் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளி ராவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௪)

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்து
னடியிணை யிரண்டு மடையுமா றடைந்தே
னருள்செய்வா யருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலவிளக் கலகில்சா லேகம்
புடைகிடந் திலங்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௫)

செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன்
சேவடி பார்த்திருந் தலச
வெம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானு
மென்னுடை யடிமைதா னியாதே

யம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
வரிவைய ரவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௬)

சொன்னவின் முறைநான் காரண முணராச்
சூழல்புக் கொளித்தநீ யின்று
கன்னவின் மனத்தென் கண்வலைப் படுமிக்
கருணையிற் பெரியதொன் றுளதே
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை யாவண வீதிப் * *
பூவணங் கோயில்கொண் டாயே. (எ, அ, ௯)

பூவணங் கோயில் கொண்டெனை யாண்ட
புனிதனை வனிதைபா கனைவெண்
கோவணங் கொண்டு வெண்டலை யேந்துங்
குழகனை யழகெலா நிறைந்த
தீவணன் றன்னைச் செழுமறை தெரியுந்
திகழ்கரு வூரனே னுரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமனா ருருவமா குவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## அ. திருச்சாட்டியக்குடி.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பெரியவா கருணை யிளநிலா வெறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப் பவிழ்ந்து
சரியுமா சுழியங் குழைமிளிர்ந் திருபாற்
றாழ்ந்தவா காதுகள் கண்டங்
கரியவா தாமுஞ் செய்யவாய் முறுவல்
காட்டுமா சாட்டியக் குடியா

---

* எட்டாம் ஒன்பதாந் திருப்பாசுரங்கள் இறந்துவிட்டன.

ரிருகைகூடம் பிணகண் டலர்ந்தவா முகமே
யிருக்கையி லிருந்தவீ சனுக்கே. (௧)

பாந்தள்பூ ணாரம் பரிகலங் கபாலம்
பட்டவர்த் தனமெரு தன்பர்
வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை
மலைமகண் மகிழ்பெருந் தேவி
சாந்தமுந் திருநீ றருமறை கீதஞ்
சடைமுடி சாட்டியக் குடியா
ரேந்தெழி லிதயங் கோயின் மாளிகையே
யிருக்கையு ளிருந்தவீ சனுக்கே. (௨)

தொழுதுபின் செல்வ தயன்முதற் கூட்டந்
தொடர்வன மறைகணான் கெனினுங்
கழுதுறு கரிகா டுறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தூண்
டழலுமி ழரவங் கோவணம் பளிங்கு
செபவடஞ் சாட்டியக் குடியா
ரிழுதுநெய் சொரிந்தோம் பழலொளி விளக்கே
யிருக்கையி லிருந்தவீ சனுக்கே. (௩)

பதிகநான் மறைதும் புருவுநா ரதரும்
பரிவொடு பாடகாந் தர்ப்பர்
கதிபெலா மரங்கம் பிணையன்மூ வுலகிற்
கடியிருட் டிருநடம் புரியுஞ்
சதியிலார் கதியி லொலிசெயுங் கையிற்
றமருகஞ் சாட்டியக் குடியா
ரிதயமாங் கமலங் கமலவர்த் தனையே
யிருக்கையி லிருந்தவீ சனுக்கே. (௪)

திருமகன் முருகன் றேவியே யுமையா
டிருமகண் மருமகன் றயா
மருமகன் மதனன் மாமனே யிமவான்
மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனுஞ் சிவபுரன் றேழன்
றனபதி சாட்டியக்குடியா
ரிருமுகங் கழன்மூன் றேழுகைத் தலமே
யிருக்கையி லிருந்தவீ சனுக்கே. (௫)

அனலமே புனலே யனிலமே புவனி
யம்பரா வம்பரத் தளிக்குங்
கனகமே வெள்ளிக் குன்றமே யென்றன்
களைகணே களைகண்மற் றில்லாத்
தனியனே னுள்ளங் கோயில்கொண் டருளுஞ்
சைவனே சாட்டியக் குடியார்க்
கினியதீங் கனியா யொழிவற நிறைந்தே
யிருக்கையி லிருந்தவா றியம்பே. (௧

செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மான்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகுமா ரமுதே
யத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே யெங்கு மொழிவற நிறைந்தே
யிருக்கையி லிருந்தவா றியம்பே. (௨

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
வங்கணா போற்றி யமரனே போற்றி
யமரர்க டலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளு
மெங்கணா யகனே போற்றியே யிருக்கை
யிறைவனே போற்றியே போற்றி. (௩

சித்தனே யருளாய் செங்கணா வருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
வத்தனே யருளா யமரனே யருளா
யமரர்க ளதிபனே யருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழற்
சாட்டியக் குடியுளே யிருக்கை
முத்தனே யருளாய் முதல்வனே யருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே (௪

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியா

ஈட்டிய பொருளா யிருக்குமே ழிருக்கை
யிருந்தவன் றிருவடி மலர்மேற்
காட்டிய பொருட்கலை பயில்கரு வூரன்
கழறுசொன் மாலையீ ரைந்து
மாட்டிய சிந்தை மைந்தருக் கன்றே
வளரொளி விளங்குவா னுலகே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

## தஞ்சையிராசராசேச்சரம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
யொன்றுநூ றாயிர கோடி
யலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
வங்ஙனே யழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்க
ளிலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே (௧)

நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா
நெஞ்சினி லஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன வில்லை
மற்றெனக் குறவேன் மறிதிரை வடபாற்
றிபுனன் மதகில்வாழ் முதலை
யெற்றுநீர்க் கிடங்கி லிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௨)

சடைகெழு மகுடந் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்

குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதுங்
குறிப்பெனோ கோங்கிண ரனைய
சுடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௩)

வாழியம் போதத் தருகுபாய் விடையும்
வரிசையின் விளக்கலி னடுத்த
சூழலம் பளிங்கின் பாசல ராதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழு மாளிகை மகளிர்
கங்குல்வா யங்குலி கெழும
யாழொலி சிலம்பு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௪)

எவருமா மறைகள் ளவையும்வா னவர்க
ளீட்டமுந் தாட்டிருக் கமலத்
தவருமா லவனு மறிவரும் பெருமை
யடலழ லுமிழ்தழற் பிழம்ப
ருவரிமா கடலி னொலிசெய்மா மறுகி
னுறுகளிற் றரசின நீட்ட
மியருமால் வரைசெ யிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௫)

அருளுமா றருளி யாளுமா றாள
வடிகட மழகிய விழியுங்
குருளும்வார் காதுங் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ தழகோ
தரளவான் குன்றிற் றண்ணிலா வொளியுந்
தருகுவால் பெருகுவான் றெருவி
லிருளெலாங் கிழியு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௬)

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
றளிரிறப் பிலையுதிர் வென்று
னினைப்பருந் தம்பாற் சேறலின் றேனு
நெஞ்சிடித் துருகுவ தென்னோ

சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கமுநீர்ச்
சூழன்மா ளிகைசுடர் வீச
மெனைப்பெரு மணஞ்செ யிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே (௭)

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித் திருக்க
வென்னெடுங் கோயி னெஞ்சுவீற் றிருந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
யின்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௮)

மங்குல்சூழ் போதி னொழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பா
ரங்கழற் சுடரா மவர்க்கிளை வேணை
லலர்கதி ரனையவா ழியரோ
பொங்கெழிற் றிருநீ றழிபொசி வனப்பிற்
புனறுளும் பவிர்சடை மொழுப்ப
ரெங்களுக் கினிய ரிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௯)

தனியரெத் தனையொ ராயிர வருமாந்
தன்மைய ரென்வயத் தினராய்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டிய ரட்டவா ரமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (௧௦)

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தி
னிருள்விரி மொழுப்பி னிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவரை
யருமருந் தருந்தி யல்லறீர் கருவூ
ரறைந்தசொன் மாலையீ ரைந்தின்

பொருண்மருந் துடையோர் சிவபத மென்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## ௰. திருவிடைமருதூர்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிரு ணநெல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதி
லையசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பி
னழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (க)

இந்திர லோக முழுவதும் பணிகேட்
டிணையடி தொழுதெழத் தாம்போ
யைந்தலை நாக மேகலை யரையா
வகந்தொறும் பலிதிரி யடிக
டந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதந் தீங்குழ லெங்கும்
மருவிடந் திருவிடை மருதே. (உ)

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருணநெல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. (ங)

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்
  கடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளு மரிவையா கத்தன்
  படர்சடை விடமிடற் றடிக
டணியுமி ழாடை யரையிலோ ராடை
  சுடருமிழ் தரவத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
  மருவிடந் திருவிடை மருதே. (௪)

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
  படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
  தெரியினுந் தெரிவுறு வண்ண
மெந்தையுந் தாயும் யானுமென் றிங்ங
  னெண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகிடுள் கலந்தோன்
  மருவிடந் திருவிடை மருதே. (௫)

எரிதருகரிகாட் டிடெபிண நிணமுண்
  டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழ னெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
  தூங்கிரு ணடுநல்யா மத்தே
யருள்புரி முறுவன் முகிழ்நிலா வெறிப்ப
  வந்திபோன் றொளிர்திரு மேனி
வரியர வாட வாடுமெம் பெருமான்
  மருவிடந் திருவிடை மருதே. (௬)

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
  னின்றுஎரி படநனைந் துருகி
யழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
  காதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்ச மிடர்படா வண்ணந்
  தூங்கிரு ணடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
  மருவிடந் திருவிடை மருதே. (௭)

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
  மாதவர் காதல்வைத் தென்னை

வெய்யவாஞ் செந்தீப் பட்டவிட் டகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாய் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (அ

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே யென்றுநின் றுருகிப்
புலம்புவா ரவம்புகா ரருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. (கூ)

ஒருங்கிருங் கண்ணி னெண்ணில்புன் மாக்க
ளுறங்கிரு ணநெல்யா மத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழின் மருதயா முதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (கO)

திருச்சிற்றம்பலம்.

---

## பூந்துருத்திநம்பிகாடநம்பி திருவிசைப்பா.

### க. திருவாரூர்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கணு யகராய்ப் பவனிபோந் திங்கள்
முரிவதோர் முரிவுமை யளவுந்

தக்கசீர்க் கங்கை யளவுமன் றென்றோ
　தம்மொருப் பாடுல கதன்மேன்
மிக்கசீ ராரூ ராதியாய் வீதி
　விடங்கராய் நடங்குலா வினரே. (௧)

பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
　பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
　திருவுரு விருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமா யுலகெலாம் படைத்த
　தனிமுழு முதலுமா யதற்கோர்
வித்துமா யாரூ ராதியாய் வீதி
　விடங்கராய் நடங்குலா வினரே. (௨)

திருச்சிற்றம்பலம்.

---

## ௨. கோயில்.

பண் - சாளரபாணி.

திருச்சிற்றம்பலம்.

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேற்
றொத்து மிளிர்வனபோற் றூண்டு விளக்கேய்ப்ப
வெத்திசையும் வானவர்க ளேத்து மெழிற்றில்லை
யத்தனுக்கு மம்பலமே யாடரங்க மாயிற்றே. (௧)

கடியார் கணம்புல்லர் கண்ணப்ப ரென்று
னடியா ரமருலக மாளநீ யாளாதே
முடியாமுத் தீவேள்வி மூவா யிரவரொடுங்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே. (௨)

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே தென்றில்லைக்
கொல்லை விடையேறிக் கூத்தா டரங்காகச்
செல்வ நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. (௩)

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளுஞ்
சம்பந்தன் காழியர்கோன் றன்னையுமாட் கொண்டருளி

யம்புந்து கண்ணுளுந் தானு மணிதில்லைச்
செம்பொன்செயம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே. (௪)

களையா வுடலோடு சேரமா னாரூரன்
விளையா மதமாரு வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடு
மளையா விளையாடு மம்பலநின் னாடரங்கே. (௫)

அகலோக மெல்லா மடியவர்க டற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிடநீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்க ணண்ணியசீர்ச்
சிவலோக மாவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே. (௬)

களக மணிமாடஞ் சூளிகைசூழ் மாளிகைமே
லளக மதிநுதலா ராயிழையார் போற்றிசைப்ப
வொளிகொண்ட மாமணிக ளோங்கிருளை யாங்ககற்றுந்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே. (௭)

பாடகமு நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக் கைநல்லார் தொழுதேத்தத் தொல்லுலகி
னாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறு
மாடகத்தான் மேய்ந்தமைந்த வம்பலநின் னாடரங்கே. (௮)

உருவத் தெரியுருவா யூழிதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனு மாலும் பணிந்தேத்த
விரவிக்கு நேராகி யேய்ந்திலங்கு மாளிகைசூழ்ந்
தரவிக்கு மம்பலமே யாடரங்க மாயிற்றே. (௯)

சேட ருறைதில்லைச் சிற்றம் பலத்தான்ற
னாட லதிசயத்தை யாங்கறிந்து பூந்துருத்திக்
காடன் றமிழ்மாலை பத்துங் கருத்தறிந்து
பாடு மிவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# கண்டராதித்தர் திருவிசைப்பா.

## கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னா ருருவ மேல்விளங்க வெண்கொடி மாளிகைசூழப்
பொன்னார் குன்ற மொன்று வந்து நின்றது போலுமென்னாத்
தென்னா வென்று வண்டு பாடுந் தென்றில்லை யம்பலத்து
ளென்னா ரமுதை யெங்கள் கோவை யென்றுகொ லெய்துவதே. (க)

ஓவா முத்தீ யஞ்சு வேள்வி யாறங்க நான்மறையோ
ராவே படுப்பா ரந்த ணாள ராகுதி வேட்டுயர்வார்
மூவா யிரவர் தங்க ளோடு முன்ன ரங்கே றிநின்ற
கோவே யுன்றன் கூத்துக் காணக் கூடுவ தென்றுகொலோ. (உ)

முத்தீ யாளர் நான்ம றையர் மூவா யிரவர்நின்னோ
டொத்தே வாழுந் தன்மை யாள ரோதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடுந் தென்றில்லை யம்பலத்து
ளத்தா வுன்ற னாடல் காண வணைவது மென்றுகொலோ. (ந)

மானைப் புரையு மடமென் னோக்கி மாமலை யாளோடு
மானஞ் சாடுஞ் சென்னி மேலோ ரம்புலி சூடுமரன்
றேனைப் பாலைத் தில்லை மல்கு செம்பொனி னம்பலத்துக்
கோனை ஞானக் கொழுந்து தன்னைக் கூடுவ தென்றுகொலோ. (ச)

களிவா னுலகிற் கங்கை நங்கை காதல னேயருளென்
றொளிமான் முன்னே வரங்கி டக்க வுன்னடி யார்க்கருளுந்
தெளிவா ரமுதே தில்லை மல்கு செம்பொனி னம்பலத்து
ளொளிவான் சுடரே யுன்னை நாயே னுறுவது மென்றுகொலோ.

பாரோர் முழுதும் வந்தி றைஞ்சப் பதஞ்சலிக் காட்டுகந்தான்
வாரார் முலையாண் மங்கை பங்கன் மாமறை யோர்வணங்கச்
சீரான் மல்கு தில்லைச் செம்பொ னம்பலத் தாடுகின்ற
காரார் மிடற்றெங் கண்ட னாரைக் காண்பது மென்றுகொலோ. (சு)

இலையார் கதிர்வே லிலங்கை வேந்த னிருபது தோளுமிற
மலைதா னெடுத்த மற்ற வற்கு வாளொடு நாள்கொடுத்தான்

சிலையாற் புரமூன் றெய்த வில்லி செம்பொனி னம்பலத்துக்
கலையார் மறிபொற் கையி னானைக் காண்பது மென்றுகொலோ.(எ)

வெங்கோல் வேந்தன் றென்ன னாடு மீழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த
வங்கோல் வளையார் பாடி யாடு மணிதில்லை யம்பலத்து
ளெங்கோ னீச னெம்மி றையை யென்றுகொ லெய்துவதே. (அ)

நெடியா னோடு நான்மு கனும் வானவரு நெருங்கி
முடியான் முடிகண் மோதி யுக்க முழுமணி யின்றிரளை
யடியா ரலகி னாற்றி ரட்டு மணிதில்லை யம்பலத்துக்
கடியார் கொன்றை மாலை யானைக் காண்பது மென்றுகொலோ. (கூ)

சீரான் மல்கு தில்லைச் செம்பொ னம்பலத் தாடிதன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன் றஞ்சையர் கோன்கலந்த
வாரா வின்சொற் கண்டரா தித்த னருந்தமிழ் மாலைவல்லார்
பேரா வுலகிற் பெருமை யோடும் பேரின்ப மெய்துவரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

# வேணாட்டடிகள் திருவிசைப்பா.

## கோயில்.

பண் - பு ற நீ ர் மை.

திருச்சிற்றம்பலம்.

துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே யாளுகப்பார்
கைச்சாலுஞ் சிறுகதலி யிலைவேம்புங் கறிகொள்வா
ரெச்சார்வு மில்லாமை நீயறிந்து மெனதுபணி
நச்சாய்காண் டிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (க)

தம்பானை சாய்ப்பற்று ரென்னு முதுசொல்லு
மெம்போல்வார்க் கில்லாமை யென்னளவே யறிந்தொழிந்தேன்
வம்பானார் பணியுகத்தி வழியடியேன் றொழிலிறையு
நம்பாய்காண் டிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (உ)

பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமா னேயெனினு

மிசையானு லென்றிறத்து மெனையுடையா னுரையாடா
னசையானேன் றிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௩)

ஆயாத சமயங்க ளவரவர்கண் முன்பென்னை
நோயோடு பிணிநலிய விருக்கின்ற வதனாலே
பேயாவித் தொழும்பனைத்தம் பிரானிகழு மென்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௪)

நின்றுநினைந் திருந்துகிடந் தெழுந்துதொழுந் தொழும்பனே
னொன்றியொரு காணினையா திருந்தாலு மிருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றுப்போற் கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௫)

படுமதமு மிடவயிறு முடையகளி றுடையபிரா
னடியறிய வுணர்த்துவது மகத்தியனுக் கோத்தன்றே
யிடுவதுபுல் லோரெருதுக் கொன்றினுக்கு வையிடுத
னடுவிதுவோ திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௬)

மண்ணோடு விண்ணளவு மனிதரொடு வானவர்க்குங்
கண்ணாவாய் கண்ணாகா தொழிதலுநான் மிகக்கலங்கி
யண்ணாவோ வென்றண்ணாந் தலமந்து விளித்தாலு
நண்ணாயாற் றிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௭)

வாடாவாய் நாப்பிதற்றி யுனைநினைந்து நெஞ்சுருகி
வீடாஞ்செய் குற்றேவ லெற்றேமற் றிதுபொய்யிற்
கூடாமே கைவந்து குறுகுமா றியானுன்னை
நாடாயாற் றிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௮)

வாளாமா லயன்வீழ்ந்து காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத் துணையாரத் தொழுதாலு
மாளோநீ யுடையதுவு மடியேனுன் றாள்சேரு
நாளேதோ திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௯)

பாவார்ந்த தமிழ்மாலை பத்தரடித் தொண்டனெடுத்
தோவாதே யழைக்கின்றா னென்றருளி நன்றுமிகத்
தேவேதென் றிருத்தில்லைக் கூத்தாடி நாயடியேன்
சாவாயு நினைக்காண்ட லினியுனக்குத் தடுப்பரிதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

# திருவாலியமுதனார் திருவிசைப்பா.

## ௧. கோயில் - பாதாதிகேசம்.

பண் - ப ஞ் ச ம ம்.

திருச்சிற்றம்பலம்.

மையன்மாதொரு கூறன்மால்விடை யேறிமான்மறி யேந்தியதடங்
கையன்கார்புரை யுங்கறைக் கண்டன் கனன்மழுவா
ளையனாரழ லாடுவானணி நீர்வயற்றில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென் சிந்தையுள்ளிடங் கொண்டனவே. (௧)

சலம்பொற்றாமரைதாழ்ந்தெழுந்த தடமுந்தடம்புனல் வாய்மலர்தழீ
யலம்பிவண் டறையுமணி யார்தில்லை யம்பலவன் [இ
புலம்பிவானவர் தானவர்புகழ்ந் தேத்தவாடுபொற் கூத்தனார்கழற்
சிலம்புகிங் கிணியென் சிந்தையுள்ளிடங் கொண்டனவே. (௨)

குருண்டவார்குழற் கோதைமார்குயில் போன்மிழற்றிய கோலமாளி
கைதிரண்ட தில்லைதன்னுட் டிருமல்கு சிற்றம்பலவன் [கை
மருண்டுமாமலை யான்மகடொழ வாடுங்கூத்தன் மணிபுரைதரு
திரண்ட வான்குறங்கென் சிந்தையுள்ளிடங் கொண்டனவே. (௩)

போழ்ந்தியானை தன்னைப்பொருப்பன் மகளுமையச்சங் கண்டவன்
றாழ்ந்த தண்புனல்சூழ் தடமல்கு சிற்றம்பலவன்
சூழ்ந்தபாய்புலித் தோன்மிசைத்தொடுத்துவீக்கும்பொன்னூ றன்னொ
டொடு, தாழ்ந்த கச்சதன்றே தமியேனைத் தளர்வித்ததே. (௪)

பந்தபாச மெலாமறப்பசு பாசநீக்கிய பன்முனிவரோ
டந்தணர் வணங்கு மணியார்தில்லை யம்பலவன்
செந்தழல்புரை மேனியுந்திக ழுந்திருவயி றும்வயிற்றினு
ளுந்திவான்சுழி யென்னுள்ளத் துள்ளிடங் கொண்டனவே. (௫)

குதிரைமாவொடு தேர்பலகுவிந் தீண்டுதில்லையுட் கொம்பனாரொடு
மதுரவாய் மொழியார் மகிழ்ந்தேத்து சிற்றம்பலவ
னதிரவார்கழல் வீசிநின்றழ காநடம்பயில் கூத்தன்மேற்
றிகழுதர பந்தனமென் னுள்ளத்துள்ளிடங் கொண்டனவே. (௬)

படங்கொள்பாம்பணை யானொடுபிர மன்பரம்பர மாவருளென்று
தடங்கையாற் றொழவுந் தழலாடுசிற் றம்பலவன்

நடங்கைநான்குமத் தோள்களுந்தட மார்பினிற்பூண்கண்மேற்றிசை
விடங்கொள் கண்டமன்றே வினையேனை மெலிவித்ததே. (எ)

செய்யகோடுடன்கமலமலர்சூழ்தரு தில்லைமாமறையோர்கடாந்தொ
ழைய முய்யநின்று மகிழ்ந்தாடு சிற்றம்பலவன் [மு
செய்யவாயின் முறுவலுந்திகழுந் திருக்காதுங்காதினின் மாத்திரைக
களோ, டைய தோடுமன்றே யடியேனையாட் கொண்டனவே. (அ)

செற்றுவன்புரந் தீயெழச்சிலை கோலியாரழ லூட்டினானவ
னொற்றி மாமணிக ளெறிநீர்த்தில்லை யம்பலவன்
மற்றைநாட்டமி ரண்டொடுமல ருந்திருமுக முமுகத்தினு
ணெற்றி நாட்டமன்றே நெஞ்சுளே நிலைக் கின்றனவே. (கூ)

தொறுக்கள் வான்கமல மலருழக்கக் கரும்புநற் சாறுபாய்தர
மறுக்கமாய்க் கயல்கண் மடைபாய் தில்லை யம்பலவன்
முறுக்குவார்சிகை தன்னொடுமுகிழ்த்தவவ்வகத்தி மொட்டொடுமத்த
மும், பிறைக்கொள் சென்னியன்றே பிரியாதென்னு ணின்றனவே.

தூவிநீரொடு பூவவைதொழு தேத்துகையினராகிமிக்கதோ
ராவியுண் ணிறுத்தி யமர்ந்தூறிய வன்பினராய்த்
தேவர்தாந்தொழ வாடியதில்லைக் கூத்தனைத்திரு வாலிசொல்லிவை
மேவ வல்லவர்கள் விடையானடி மேவுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## உ கோயில் - பவளமால்வரை.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர் படரொளி தருதிரு
நீறுங், குவளைமாமலர்க்கண்ணியுங்கொன்றையுந்துன்றுபொற்குழற்
றிருச்சடையுந், திவளமாளிகைசூழ்தரு தில்லையுட்டிருநடம்புரிகின்ற
தவளவண்ணனைநினைதொறுமென்மனந்தழன்மெழுகொக்கின்றதே.

ஒக்க வோட்டந்த வந்தியு மதியமு மலைகட லொலியோடு
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப் பாய்தலு நிறையழிந் திருப்பேனைச்

செக்கர் மாளிகை சூழ்தரு தில்லையுட் டிருநடம் வகையாலே
பக்க மோட்டந்த மன்மதன் மலர்க்கணை படுந்தொறு மலந்தேனே.

அலந்து போயினே னம்பலக் கூத்தனே யணிதில்லை நகராளீ
சிலந்தி யையர சாள்கவென் றருள்செய்த தேவ தேவீசனே
யுலந்த மார்க்கண்டிக் காகியக் காலனை யுயிர்செக வுதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேலொற்ற வந்தருள் செய்யாயே.

அருள்செய் தாடுநல் லம்பலக் கூத்தனே யணிதில்லை நகராளீ
மருள்செய் தென்றனை வனமுலை பொன்பயப் பிப்பது வழக்காமோ
திரளு நீண்மணிக் கங்கையைத் திருச்சடைச்சேர்த்தியச்செய்யாளுக்
குருவம் பாகமு மீந்துநல் லந்திவை யொண்ணுதல் வைத்தோனே.

வைத்த பாதங்கண் மாலவன் காண்கிலன் மலரவன் முடிதேடி
யெய்த்து வந்திழிந் தின்னமுந் துதிக்கின்றெழின்மறையவற்றாலே
செய்த்த லைக்கம லம்மலர்ந் தோங்கிய தில்லையம் பலத்தானைப்
பத்தி யாற்சென்று கண்டிட வென்மனம் பதைபதைப் பொழியாதே

தேய்ந்து மெய்வெளுத் தகம்வளைந் தரவினையஞ்சித்தானிருந்தேயுங்
காய்ந்து வந்துவந் தென்றனை வலிசெய்து கதிர்நிலா வெரிதூவு
மாய்ந்த நான்மறை யந்தணர் தில்லையு ளம்பலத் தரனாடல்
வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர்மனத்தினையுடையேற்கே.

உடையும் பாய்புலித் தோலுநல் லரவமு முண்பதும் பலிதேர்ந்து
விடைய தூர்வது மேவிடங் கொடுவரை யாகினு மென்னெஞ்ச
மடைகொள் வாளைகள் குதிகொளும் வயற்றில்லை யம்பலத்தனலாடு
முடைய கோவினை யன்றிமற் றாரையு முள்ளுவ தறியேனே. (௭)

அறிவு மிக்கநன் னாணமு நிறைமையு மாசையு மிங்குள்ள
வுறவும் பெற்றநற் றாயொடு தந்தையு முடன்பிறந் தவரோடும்
பிறிய விட்டினை யடைந்தவ னென்றுகொள் பெரும்பற்றப்புலியூரின்
மறைக ணான்குங்கொண் டந்தண ரேத்தநன் மாநட மகிழ்வானே.

வான நாடுடை மைந்தனே யோவென்பன் வந்தரு ளாயென்பன்
பானெ யைந்துட னாடிய படர்சடைப் பால்வண்ண னேயென்பன்
றேன மர்பொழில் சூழ்தரு தில்லையுட் டிருநடம் புரிகின்ற
வேன மாமணிப் பூணணி மார்பனே யெனக்கருள் புரியாயே. (௯)

புரியும் பொன்மதில் சூழ்தரு தில்லையுட் பூசுரர் பலர்போற்ற
வெரிய தாடுமெம் மீசனைக் காதலித் தினையவண் மொழியாக

வரைசெய் மாமதின் மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி
பரவல் பத்திவை வல்லவர் பரமன தடியிணை பணிவாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

## ௩. கோயில்.

---

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அல்லாய்ப் பகலா யருவா யுருவா யாரா வமுதமாய்க்
கல்லா னிழலாய் கயிலை மலையாய் காண வருளென்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள் பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதிற் றில்லைக் கருளித் தேவ னுடுமே. (௧)

அன்ன நடையா ரமுத மொழியா ரவர்கள் பயிறில்லைத்
தென்னன் றமிழு மிசையுங் கலந்த சிற்றம் பலந்தன்னுட்
பொன்னு மணியு நிரந்த தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னி னிடையா ளுமையாள் காண விகிர்த னுடுமே, (௨)

இளமென் முலையா ரெழின்மைந் தரொடு மேரா ரமளிமேற்
றிளையு மாடத் திருவார் தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
வளர்பொன் மலையுள் வயிர மலைபோல் வலக்கை கவித்து நின்
றளவில் பெருமை யமரர் போற்ற வழக னுடுமே. (௩)

சந்து மகிலுந் தழைப்பீ லிகளுஞ் சாதி பலவுங்கொண்
டுந்தி யிழியு நிவவின் கரைமே லுயர்ந்த மதிற்றில்லைச்
சிந்திப் பரிய தெய்வப் பதியுட் சிற்றம் பலந்தன்னு
ணந்தி முழவங் கொட்ட நட்ட நாத னுடுமே. (௪)

ஓமப் புகையு மகிலின் புகையு முயர்ந்து முகிலோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர் மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வாமத் தொழிலா ரெடுத்த பாத மழலைச் சிலம்பார்க்கத்
தீமெய்ச் சடைமேற் றிங்கள் சூடித் தேவனுடுமே. (௫)

குரவங் கோங்கங் குளிர்புன்னை கைதை குவிந்த கரைகண்மேற்
றிரைவந் துலவுந் தில்லை மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வரைபோன் மலிந்த மணிமண் டபத்து மறையோர் மகிழ்ந்தேத்த
வரவ மாட வனல்கை யேந்தி யழக னுடுமே. (௬)

சித்தர் தேவ ரியக்கர் முனிவர் தேனார் பொழிற்றில்லை
யத்தா வருளா யணியம் பலவா வென்றென் றவரேத்த
முத்து மணியு நிரந்த தலத்துண் முளைவெண் மதிசூடிக்
கொத்தார் சடைக டாழ நட்டங் குழக னாடுமே. (எ)

அதித்த வரக்க னெரிய விரலா லடர்த்தா யருளென்று
துதித்து மறையோர் வணங்குந் தில்லைச் சிற்றம் பலந்தன்னு
ளுதித்த போழ்தி லிரவிக் கதிர்போ லொளிர்மா மணியெங்கும்
பதித்த தலத்துப் பவள மேனிப் பரம னாடுமே. (அ)

மாலோ டயனு மமரர் பதியும் வந்து வணங்கிநின்
றால கண்டா வரனே யருளா யென்றென் றவரேத்தச்
சேலா டும்வயற் றில்லை மல்கு சிற்றம் பலந்தன்னுட்
பாலா டுமுடிச் சடைக டாழப் பரம னாடுமே. (கூ)

நெடிய சமணு மறைசாக் கியரு நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோ ரடையாத் தில்லைச் சிற்றம் பலந்தன்னு
ளடிக ளவரை யாரூர் நம்பி யவர்க ளிசைபாடக்
கொடியும் விடையு முடைய கோலக் குழக னாடுமே. (க0)

வானோர் பணிய மண்ணோ ரேத்த மன்னி நடமாடுந்
தேனார் பொழில்சூழ் தில்லை மல்கு சிற்றம் பலத்தானைத்
தூநான் மறையா னமுத வாலி சொன்ன தமிழ்மாலைப்
பானேர் பாடல் பத்தும் பாடப் பாவ நாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## ச. கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கோல மலர்நெடுங்கட் கொவ்வைவாய்க்கொடி யேரிடையீர்
பாலினை யின்னமுதைப் பரமாய பரஞ்சுடரைச்
சேலுக ளும்வயல்சூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தேல்வுடை யெம்மிறையை யென்றுகொல் காண்பதுவே. (க)

காண்பதி யானென்றுகொல் கதிர்மாமணி யைக்கனலை
யாண்பெண் ணருவுருவென் றறிதற்கரி தாயவனைச்

சேண்பணை மாளிகைசூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பல
மாண்புடை மாநடஞ்செய் மறையோன்மலர்ப் பாதங்களே. (உ)

கள்ளவிழ் தாமரைமேற் கண்டயனொடு மால்பணிய
வொள்ளெரி யின்னடுவே யுருவாய்ப்பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில்சூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற வொருவனை யுணர்வரிதே. (ங.)

அரிவையோர் கூறுகந்தா னழகன்னெழில் மால்கரியின்
னுரிவைநல் லுத்தரிய முகந்தானும்ப ரார்தம்பிரான்
புரிபவர்க் கின்னருள்செய் புலியூர்த்திருச் சிற்றம்பலத்
தெரிமகிழ்ந் தாடுகின்ற வெம்பிரானென் னிறையவனே. (ச)

இறைவனை யென்கதியை யென்னுளேயுயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும் விண்ணு மலிவான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந் தில்லைமாநகர்ச் சிற்றம்பல
நிறையணி யாமிறையை நினைத்தேனினிப் போக்குவனே. (ரு)

நினைத்தேனினிப் போக்குவனோ நிமலத்திர ளைநினைப்பார்
மனத்தினு ளேயிருந்த மணியைமணி மாணிக்கத்தைக்
கனைத்திழி யுங்கழனிக் கனகங்கதி ரொண்பவளஞ்
சினத்தொடு வந்தெறியுந் தில்லைமாநகர்க் கூத்தனையே. (சூ)

கூத்தனை வானவர்தங் கொழுந்தைக்கொழுந் தாயெழுந்த
மூத்தனை மூவுருவின் முதலைமுத லாகிநின்ற
வாத்தனைத் தான்படைக்கு மந்தணர்தில்லை யம்பலத்து
ளேத்தநின் றாடுகின்ற வெம்பிரானடி சேர்வன்கொலோ. (எ)

சேர்வன்கொ லோவன்னைமீர் திகழும்மலர்ப் பாதங்களை
யார்வங்கொ ளத்தழுவி யணிநீறென் முலைக்கணியச்
சீர்வங்கம் வந்தணவுந் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தேர்வங்கை மான்மறிய னெம்பிரானென்பொ னேசனையே. (அ)

நேசமு டையவர்க ணெஞ்சுளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர் கண்ணுதலைக் காமருசீர்த்
தேசமி குபுகழோர் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தீசனை யெவ்வுயிர்க்கு மெம்மிறைவனென் றேத்துவனே. (கூ)

இறைவனை யேத்துகின்ற விளையாண்மொழி யின்றமிழான்
மறைவல நாவலர்கண் மகிழ்ந்தேத்துசிற் றம்பலத்தை

யறைசெர்நெல் வான்கரும்பி னணியாலைகள் சூழ்மயிலை
மறைவல வாலிசொல்லை மகிழ்ந்தேத்துக வானெளிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

# புருடோத்தமநம்பி திருவிசைப்பா.

*

## ௧. கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வாரணிநறுமலர்வண்டுகெண்டு பஞ்சமஞ்செண்பகமாலைமாலை.வார
ணிவனமுலைமெலியும்வண்ணம்வந்துவந்திவைநம்மைமயக்குமாலோ
சீரணிமணிதிகழ்மாடமோங்குதில்லையம்பலத்தெங்கள் செல்வன்வா
ரா,னென்னையருள்புரிந்தஞ்சலென்பாராவியின்பரமென்றனாதரவே.

ஆவியின் பரமென்றனாதரவு மருவினையேனைவிட் டம்மவம்ம
பாவியன்மனமிதுபையவேபோய்ப்பனிமதிச்சடையான்பாலதாலோ
நீவியு நெகிழ்ச்சியு நிறையழிவு நெஞ்சமுந் தஞ்சமி லாமையாலே
யாவியின் வருத்தமி தாரறிவா ரம்பலத் தருநட மாடுவானே. (௨)

அம்பலத் தருநட மாடவேயுமியாதுகொல்விளைவதென்றஞ்சிநெஞ்ச
மும்பர்கள்வன்பழி யாளர்முன்னேயூட்டினர்நஞ்சையென் றேயுமுய்
யேன், வன்பலபடையுடைப்பூதஞ்சூழவானவர்கணங்களை மாற்றியா
ங்கே, யென்பெரும் பயலைமை தீரும்வண்ண மெழுந்தரு ளாயெங்க
ள் வீதியூடே. (௩)

எழுந்தருளாயெங்கள்வீதியூடேயேதமின்முனிவரொடெழுந்த ஞான
க், கொழுந்தது வாகிய கூத்தனேநின் குழையணி காதினின்மாத்தி
ரையுஞ், செழுந்தட மலர்புரை கண்கண்மூன்றுஞ் செங்கனி வாயு
மென் சிந்தைவௌவ, வழுந்துமென் னாருயிர்க் கென்செய்கேனோ
வரும்புன லலமருஞ் சடையினானே. (௪)

அரும்புன லலமருஞ் சடையினானை யமரர்க ளடிபணிந் தரற்றவந்நா
ட், பெரும்புர மெரிசெய்த சிலையின்வார்த்தை பேசவு நையுமென்
பேதைநெஞ்சங், கருந்தட மலர்புரை கண்டவண்டார் காரிகை யார்
முன்பென்பெண்மைதோற்றேன், றிருந்திய மலரடி நசையினாலே
தில்லையம்பலத்தெங்க டேவதேவே. (௫)

தில்லையம் பலத்தெங்க டேவதேவைத் தேறிய வந்தணர் சிந்தைசெ
ய்யு, மெல்லைய தாகிய வெழில்கொள்சோதியென் னுயிர் காவல்கொ
ண் டிருந்தவெந்தாய், பல்லையார் பசுந்தலை யோடிடறிப் பாதமென்
மலரடி நோவநீபோ, யல்லினி லருநட மாடிலெங்க ளாருயிர்காவலி
ங கரிதுதானே. (சு)

ஆருயிர் காவலிங் கருமையாலே யந்தணர் மதலைநின் னடிபணியக்
கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக் குரைகழல் பணிகொள மலைந்த
தென்று, லாரினியமரர்கள்குறைவிலாதா ரவரவர்படுதுயர்களையநின்
ற, சீருயி ரேயெங்க டில்லைவாணா சேயிழை யார்க்கினி வாழ்வரிதே.

சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனே
நீ, தாயினுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கரா
வுன், பாயிரும்புலியதளின்னுடையும்பையமேலெடுத்தபொற்பாதமு
ங்கண், டேயிவளிழந்ததுசங்கமாவாவெங்களையாளுடையீசனேயோ.

எங்களை யாளுடை யீசனேயோவிளமுலைமுகநெகமுயங்கிநின்பொற்
பங்கயம் புரைமுக நோக்கிநோக்கிப் பனிமதிநிலவதென்மேற்படரச்
செங்கயல்புரைகண்ணிமார்கண்முன்னே திருச்சிற்றம்பலமுடனேபு
குந்து, வங்குனபணிபலசெய்துநாளுமருள்பெறினகலிடத்திருக்கலா
மே. (கூ)

அருள்பெறினகலிடத்திருக்கலாமென்றமரர்கடலைவனுமயனுமாலு
மிருவருமறிவுடையாரின்மிக்காரேத்துகின்றாரின்னமெங்கள்கூத்தை
மருள்படுமழலைமென்மொழியுமையாள்கணவனைவல்வினையாட்டியே
ன்,னருள்பெறவலமருநெஞ்சமாவாவாசையையளவறுத்தாரிங்காரே.

ஆசையையளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாடுவானை, வாசநன்
மலரணிகுழன்மடவார்வைகலுங்கலந்தெழுமாலைப்பூசன், மாசிலா ம
றைபலவோதுநாவன்வண்புருடோத்தமன்கண்டுரைத்த, வாசகமலர்
கள்கொண் டேத்தவல்லார் மலைமகள் கணவனை யணைவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

---

## உ. கோயில்.

---

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை யுண்டார்தா
மூனமிலா வெண்கை யொளிவளைகள் கொள்வாரோ

## ௫௮ புருடோத்தமநம்பி திருவிசைப்பா.

தேனல்வரி வண்டறையுந் தில்லைச்சிற் றம்பலவர்
நானமரோ வென்னாதே நாடகமே யாடுவரே. (௧)

ஆடிவருங் காரரவு மைம்மதியும் பைங்கொன்றை
சூடிவரு மாகண்டேன் றோள்வளைக டோற்றாலுந்
தேடியிமை யோர்பரவுந் தில்லைச்சிற் றம்பலவ
ராடிவரும் போதருகே நிற்கவுமோ வொட்டாரே. (௨)

ஒட்டா வகையவுணர் முப்புரங்க ளோரம்பாற்
பட்டாங் கழல்விழுங்க வெய்துகந்த பண்பினார்
சிட்டார் மறையோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
கொட்டா நடமாடக் கோல்வளைகள் கொள்வாரே. (௩)

ஆரே யிவைபடுவா ரையங் கொளவந்து
போரேடி யென்று புருவ மிடுகின்றார்
தேரார் விழவோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
தீராநோய் செய்வாரை யொக்கின்றார் காணீரே. (௪)

காணீரே யென்னுடைய கைவளைகள் கொண்டார்தாஞ்
சேணார் மணிமாடத் தில்லைச்சிற் றம்பலவர்
பூணார் வனமுலைமேற் பூவம்பாற் காமவே
ளாணாடு கின்றவா கண்டு மருளாரே. (௫)

எயிவரே வானவர்க்கும் வானவரே யென்பாராற்
றாயிவரே யெல்லார்க்குந் தந்தையுமா மென்பாராற்
றேய்மதியஞ் சூடிய தில்லைச்சிற் றம்பலவர்
வாயின கேட்டறிவார் வையகத்தா ராவாரே. (௬)

ஆவா விவர்தந் திருவடிகொண் டந்தகன்றன்
மூவா வுடலவியக் கொன்றுகந்த முக்கண்ணர்
தேவா மறைபயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கோவா வினவளைகள் கொள்வாரோ வென்னையே. (௭)

என்னை வலிவாரா ரென்ற விலங்கையர்கோன்
மன்னு முடிக ணெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித் தில்லைச்சிற் றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவா ரொவ்வாரிம் முத்தரே, (௮)

முத்தர் முதுபகலே வந்தென்ற னில்புகுந்து
பத்தர் பலியிடுக வென்றெங்கும் பார்க்கின்றார்

சித்தர் கணம்பயிலுந் தில்லைசிற் றம்பலவர்
கைத்தலங்கள் வீசிநின் றாடுங்கா ணேக்காரே. (௯)

நோக்காத தன்மையா னோக்கிலோ மியாமென்று
மாற்காழி யீந்து மலரோனை நிந்தித்துச்
சேக்காத லித்தேறுந் தில்லைச்சிற் றம்பலவ
ரூர்க்கேவந் தென்வளைகள் கொள்வாரோ வொண்ணுதலீர் (௧௦)

ஒண்ணுதலி காரணமா வும்பர் தொழுதேத்துங்
கண்ணுதலான் றன்னைப் புருடோத்த மன்சொன்ன
பண்ணுதலைப் பத்தும் பயின்றாடிப் பாடினு
ரெண்ணுதலைப் பட்டங் கினிதா விருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## சேதிராயர் திருவிசைப்பா.

### கோயில்

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சேலு லாம்வயற் றில்லையு ளீருமைச்
சால நாளயன் சார்வதி னலிவள்
வேலை யார்விட முண்டெகந் தீரென்று
மால தாகுமென் வாணு தலே. (௧)

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாண மற்றன ளனநீ யேனினிச்
சேணு தற்பொலி தில்லையு ளீருமைக்
காணி லெய்ப்பிலள் காரி கையே. (௨)

காரி கைக்கரு ளீர்கரு மால்கரி
யீரு ரித்தெழு போர்வையி னீர்மிகு
சீரி யற்றில்லை யாய்சிவ னேயென்று
வேரி நற்குழ லாளிவள் விம்முமே. (௩)

விம்மி விம்மியே வெய்துயிர்த் தாளெனு
ழும்மை யேநினைந் தேத்துமொன் றாகிலள்

செம்ம லோர்பயி றில்லையு ளீரெங்க
ளம்ம லோதி யயர்வு றுமே. (௪

அயர்வுற் றஞ்சலி கூப்பியந் தோவெனை
யுயவுன் கொன்றையந் தாரரு ளாயெனுஞ்
செயலுற் றார்மதிற் றில்லையு ளீரிவண்
மயலுற் றொன்றன் மாதி வளே. (௫

மாதொர் கூறன்வண் டார்கொன்றை மார்பனென்
றோதி லுய்வனென் பைங்கிளி யேயெனுஞ்
சேதித் தீர்சிர நான்முக னைத்தில்லை
வாதித் தீரென் மடக்கொடி யையே. (௬

கொடியைக் கோமளச் சாதியைக் கொம்பிளம்
பிடியை யென்செய்திட் டீர்பகைத் தார்புர
மிடியச் செஞ்சிலை கால்வளைத் தீரென்று
முடியு நீர்செய்த மூச்ச றவே. (௭

அறவ னேயன்று பன்றிப்பி னேகிய
மறவ னேயெனை வாதைசெய் யேலெனுஞ்
சிறைவண் டார்பொழிற் றில்லையு ளீரெனும்
பிறைகு லாநுதற் பெய்வ ளையே. (௮

அன்ற ருக்கனைப் பல்லிறுத் தானையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீரெனுந்
தென்ற லார்பொழிற் றில்லையு ளீரிவ
ளொன்று மாகில ளும்பொ ருட்டே. (௯

எயு மாறெழிற் சேதியர் கோன்றில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
யாய வின்ப மெய்தியி ருப்பரே. (௧௦

திருச்சிற்றம்பலம்.

---

ஆக திருப்பதிகம் - ௨௮.

திருவிசைப்பா முற்றுப்பெற்றது.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனாருளிச்செய்த

# திருப்பல்லாண்டு.

## கோயில்.

பண் - ப ஞ் ச ம ம்.

தி ரு ச் சி ற் ற ம் ப ல ம்.

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க
வன்ன நடைமட வாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின் றுமென்று முள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே.

நிட்டையி லாவுட னீத்தென்னை யாண்ட நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந் திறங்களு மேசிந்தித்
தட்ட மூர்த்திக்கென் னகநெக வூறு மமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீ
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே [ர்
வில்லாண் டகன கத்திரண் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட் டின்னம் புகலரிதா
யிரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக்கென் செயவல்லமெ
கரந்துங் கரவாத கற்பக னாகிக் கரையில் கருணைக்கடல் [ன்றுங்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.(ரு)

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா லெங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா மாய்நின்று கூத்தாடு
மாவிக் கமுதையென் னார்வத் தனத்தினை யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.(சு)

## ௯௨. சேந்தனாரருளிச்செய்த திருப்பல்லாண்டு.

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீ
ழாரும் பெறாத வறிவுபெற் றேன்பெற்ற தார்பெறு வாருலகி
லூரு முலகுங் கழற வுழறி யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. (எ)

சேலுங் கயலுந் திளைக்குங்கண் ணாரிளங்கொங்கையிற்செங்குங்கும
போலும் பொடியணி மார்பிலங்குமென்றுபுண்ணியர்போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (அ)

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (௯)

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனக முமருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.(௧௦)

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி லணியுடை யாதிரைநா
ணாரா யணனொடு நான்முக னங்கி யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க டிசையனைத் துநிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே. (௧௨)

எந்தையெந் தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பி ரானென்றென்று
சிந்தைசெய் யுஞ்சிவன் சீரடி யாரடி நாய்செப்புரை [மேற்
யந்தமி லானந்தச் சேந்தனெ னைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று பல்லாண்டு கூறுதுமே. (௧௩)

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பல்லாண்டு முற்றுப்பெற்றது.

---

## திருவிசைப்பாத்

# திருப்பாசுரமுதற்குறிப்புஅகராதி


| திருப்பாசுரம். | பக்கம். |
|---|---|
| அகலோகமெல் | ௪௯ |
| அக்கணு-டென் | ௨௮ |
| அக்கணு-வணை | ௧௨ |
| அங்கைகொண்ட | ௩௪ |
| அணியுமிழ்சோ | ௪௩ |
| அண்டமோரணு | ௩௩ |
| அதித்தவரக்க | ௫௪ |
| அதுமதியிதுவென் | ௫ |
| அந்திபோலுருவு | ௨௭ |
| அம்பராவனலா | ௨௯ |
| அம்பலத்தருந | ௫௯ |
| அம்பளிங்குபக | ௩௰ |
| அயர்வுற்றஞ்சலி | ௯௰ |
| அரிவையோகூ | ௫௫ |
| அருட்டிரட்செம் | ௰ |
| அரும்புனலலம | ௫௯ |
| அரும்பேதைக் | ௩௧ |
| அருளுமாறருளி | ௪௰ |
| அருள்செய்தாடு | ௫௨ |
| அருள்பெறினக | ௫௭ |
| அலந்துபோயி | ௫௨ |
| அல்லாய்ப்பக | ௫௩ |
| அல்லியம்பூம்பழ | ௪௫ |
| அறவனே | ௯௰ |
| அறிவுமிக்கநன் | ௫௨ |
| அற்புதத்தெய்வ | ௩௨ |
| அலலமேபுன | ௩௮ |
| அன்றருக்கனை | ௯௰ |
| அன்னநடையா | ௫௩ |
| அன்னமாய் | ௩௧ |
| ஆசையையளவ | ௫௭ |
| ஆடரவாடவாடு | ௰ |
| ஆடிவருங்கா | ௫௮ |
| ஆயாதசமயங்க | ௪௯ |
| ஆயிரங்கமல | ௧௩ |
| ஆரணத்தேன் | ௩௧ |
| ஆருயிர்காவ | ௫௭ |
| ஆரேயிவைபடு | ௫௮ |
| ஆவாவிவர் | ௫௮ |
| ஆவியின்பரமெ | ௫௯ |
| ஆருதபேரன்பி | ௩௧ |
| இடர்கெடுத் | ௧ |
| இணங்கிலாவீச | ௰ |
| இத்தெய்வநெறி | ௧௨ |
| இந்திரலோகமு | ௪௨ |
| இருந்திரைத்தர | ௨௧ |
| இலையார்கதிர்வே | ௪௭ |
| இவளைவாரிளமெ | ௧௯ |
| இவ்வரும்பிறவிப் | ௧௯ |
| இளமென்முலை | ௫௩ |
| இறைவனையென் | ௫௫ |
| இறைவனையேத் | ௫௫ |
| உடையும்பாய் | ௫௨ |
| உண்ணெகிழ் | ௩௨ |
| உம்பர்நாடிம்பர் | ௨௧ |
| உயர்கொடியாடை | ௪ |
| உருக்கியென்னுள் | ௰ |
| உருவத்தெரி | ௪௯ |
| உலகெலாந்தொ | ௩௯ |
| உளங்கொளமது | ௧௬ |
| உறவாகியயோகமு | ௯ |
| உற்றாயென்னு | ௯ |
| எங்களையா | ௫௭ |
| எச்சனைத்தலை | ௧௧ |
| எட்டுருவிரவி | ௰ |
| எண்ணில்பல் | ௧௩ |
| எம்பந்தவல்லி | ௪௫ |
| எரிதருகரிகாட் | ௪௩ |
| ஏவருமாமறைக | ௪௰ |
| எழிலையாழ் | ௪௨ |
| எழுந்தருளா | ௫௯ |
| என்செய்கோந் | ௨௯ |
| என்னையுன்பாத | ௨௯ |
| என்னைவலி | ௫௮ |
| ஏகநாயகனை | ௧௧ |
| எயிவரேவான | ௫௮ |
| எயுமாறெழிற் | ௯௰ |
| ஏர்கொள்கற்பக | ௯ |
| ஐயபொட்டிட்ட | ௩௨ |
| ஒக்கவொட்டந்த | ௫௧ |
| ஒட்டாவகை | ௫௮ |
| ஒண்ணுதலிகா | ௫௪ |
| ஒருங்கிருங் | ௬௬ |
| ஒழிவொன்றிலா | ௧௫ |
| ஒளிவளர் | ௧ |
| ஓமப்புகையு | ௫௩ |
| ஓவாமுத்தீயஞ்சு | ௪௭ |
| கங்கைநீரரிசிற் | ௧௩ |
| கடியார்கணம் | ௬௫ |
| கடுப்பாய்ப்பறை | ௮ |
| கடுவினைப்பாசக் | ௩௫ |
| கணம்விரிகுடுமி | ௧௯ |
| கணியெரிவிசிறு | ௫ |
| கண்ணியன் | ௩௫ |
| கண்பனியரும்பு | ௨௰ |
| கரியரேயிடங் | ௨௨ |
| கருவளர்மேகத் | ௬ |
| கரைகடலொலி | ௩௫ |
| கலங்கலம்பொ | ௬௬ |
| கலைகடம்பொரு | ௨௨ |
| களகமணி | ௬௯ |
| கள்வாணுலகிற் | ௪௭ |

# திருப்பாசுர முதற்குறிப்பு அகராதி.


| திருப்பாசுரம். | பக்கம். |
|---|---|
| களையாவுடலோ | ௪௬ |
| கள்ளவிழ்தாம | ௫௫ |
| கற்றவர்விழுங்கு | ௧௨ |
| கன்னெகாவுள் | ௨௮ |
| காடாடுபல்கணஞ் | ௫ |
| காணீரேயெ | ௫௮ |
| காண்பதியா | ௫௪ |
| காமனைக்கால | ௬ |
| காரிகைக்க | ௫௯ |
| கானேவரு | ௭ |
| கித்திநின்றுகி | ௨௭ |
| கிளையிளஞ்சேய | ௧௭ |
| கிற்போமெனத் | ௧௫ |
| குணமணிக்குரு | ௧௭ |
| குதிரைமாவொடு | ௫௰ |
| குமுதமே | ௨௪ |
| குரவயகோங் | ௫௩ |
| குருண்டவார்கு | ௫௰ |
| குன்றேந்தி | ௧௫ |
| கூத்தனை | ௫௫ |
| கேடிலாமெய்ந் | ௨௮ |
| கைக்குவான் | ௬௪ |
| கொடியைக் | ௯௰ |
| கொழுந்திரள் | ௧௮ |
| கோலமலர்நெ | ௫௪ |
| கோலமே | ௨ |
| கோவினைப் | ௧௬ |
| சடைகெழுமகுட | ௩௯ |
| சந்தனகளபந் | ௨௨ |
| சந்துமகிலுந் | ௫௩ |
| சரளமந்தார | ௪௧ |
| சரிந்ததுகிறளர்ந் | ௩௧ |
| சலம்பொற்று | ௫௰ |
| சித்தர்தேவரிய | ௫௪ |
| சித்தனேயருளா | ௩௮ |
| சிறப்புடையடியா | ௧௧ |
| சீரான்மல்கு | ௬௮ |
| சீர்த்திண்புவ | ௨௰ |
| சுருதிவானவனுந் | ௩௨ |
| செக்கரொத்திரவி | ௧௧ |
| செங்கணு | ௩௮ |
| செம்பொனே | ௩௮ |
| செம்மனக்கிழ | ௩௫ |
| செய்யகோடு | ௫௧ |
| செழுந்தென்ற | ௭ |
| செற்றுவன்புர | ௫௧ |
| சேடருறைதில் | ௪௬ |
| சேயிழையார்க் | ௫௭ |
| சேர்வன்கொ | ௫௫ |
| சேலுலாம்வய | ௫௯ |
| சேவேந்துவெல் | ௮ |
| சொன்னவின் | ௩௬ |
| தக்கனற்றலையு | ௩ |
| தக்கன்வெங்க | ௧௩ |
| தத்தையங்கனை | ௩௩ |
| தம்பானைசாய்ப் | ௬௮ |
| தரவார்புனஞ் | ௮ |
| தருணேந்துசே | ௧௫ |
| தழைதவழ்மொ | ௨௬ |
| தளிரொளிமணி | ௨௪ |
| தற்பரமபொரு | ௧ |
| தனதனற்றோ | ௨ |
| தனிப்பெருந்தா | ௪௰ |
| தனியரெத்தனை | ௪௧ |
| தன்சோதியெழு | ௩௧ |
| தன்னகமழலை | ௨௬ |
| தன்னடிநிழற்கி | ௧௨ |
| தாட்டரும்பழன | ௩௮ |
| தாயினேரிரங்கு | ௧௯ |
| தானமர்பொருது | ௧௭ |
| திக்கடாநினைந்து | ௨௩ |
| திசைக்குமிக்குல | ௰ |
| திருநீறிடாவுரு | ௯ |
| திருநுதல்விழியு | ௨௫ |
| திருநெடுமாலி | ௬ |
| திருமகன்முருக | ௩௭ |
| திருவருள்புரிந் | ௩௪ |
| திலகநுதலுமை | ௧௫ |
| தில்லையம்பலத் | ௫௭ |
| திறம்பியபிறவி | ௩ |
| தீத்திரளுரு | ௨௰ |
| துச்சானசெய்தி | ௬௮ |
| துணுக்கென | ௰ |
| துண்டவெண்பி | ௨௫ |
| துந்துபிகுழல்யா | ௨௰ |
| தூவிநீரொடு | ௩௧ |
| தெள்ளுநீறவ | ௨௫ |
| தேய்ந்துமெய் | ௫௨ |
| தேர்மலிவிழவிற் | ௪ |
| தொடங்கினண் | ௰௮ |
| தொழுதுபின்செ | ௩௭ |
| தொறுக்கள்வா | ௫௧ |
| தோழியாஞ்செ | ௨௫ |
| நிறைதழைவாழை | ௫ |
| நினைக்குநிரந்தர | ௧௫ |
| நினைத்தேனினி | ௫௫ |
| நின்றுநினைந்தி | ௬௯ |
| நீரணங்கசும் | ௨௪ |
| நீரோங்கிவளர் | ௩௰ |
| நீலமேகண்டம் | ௨௩ |
| நீவாராதெ | ௩௰ |
| நீறணிபவளக் | ௨ |
| நெஞ்சிடரகல | ௨௰ |
| நெடியசமணு | ௫௪ |
| நெடியானோடு | ௬௮ |
| நெற்றியிற்கண் | ௩௯ |
| நேசமுடையவர் | ௫௫ |
| நையாதமனத் | ௩௰ |
| நோக்காததன் | ௫௯ |
| படங்கொள் | ௬௰ |
| படுமதமுமிட்டவ | ௬௯ |
| பண்ணியத | ௩௩ |
| பதிகநான்ம | ௩௭ |
| பத்தியாயுணர் | ௪௫ |
| பந்தபாச | ௫௰ |
| பந்தமும்பிரிவு | ௬௩ |
| பரிந்துசெஞ்சு | ௧௭ |
| பவளமால்வ | ௫௯ |
| பவளமேமகு | ௨௩ |
| பழையராந் | ௨௨ |
| பனிபமெதிய | ௪௨ |
| பன்னெடுங்கால | ௬௧ |
| பாடகமுநூபு | ௬௯ |

| திருப்பாசுரம். | பக்கம். | திருப்பாசுரம். | பக்கம். | திருப்பாசுரம். | பக்கம் |
|---|---|---|---|---|---|
| பாடலங்கார | ௧௪ | மண்டலத்தொ | ௧௨ | வண்டார்குழலு | ௮ |
| பாந்தள்பூணா | ௩௭ | மண்ணேடு | ௬௯ | வரம்பிரிவாளை | ௬ |
| பாம்பணைத்து | ௩௪ | மருண்டுறை | ௧௮ | வாடாவாய் | ௬௯ |
| பாரோர்முழு | ௪௭ | மறைகளுமமரர் | ௩ | வாணுதற்கொடி | ௫௯ |
| பாலுமமுதமு | ௧௬ | மாதிமணங்கம் | ௧௪ | வாரணிநறும | ௫௬ |
| பாவார்ந்த | ௪௯ | மாதோர்கூ | ௯௰ | வாழியம்போதத் | ௪௰ |
| பின்னுஞ்செ | ௨௧ | மாலுலாமனந்த | ௧௬ | வாளாமாலய | ௬௯ |
| புரியும்பொன் | ௫௨ | மாலோடயனு | ௫௪ | வானநாடுடை | ௫௨ |
| புவனநாயகனே | ௨௭ | மானேர்கலைவ | ௧௫ | வானவர்கள் | ௫௭ |
| புழுக்குதீவினை | ௨௭ | மானைப்புரையு | ௪௭ | வானோர்பணிய | ௫௪ |
| புனல்படவுருகி | ௨௮ | மின்னுருருவ | ௪௭ | விண்ணவர்மகுட | ௧௧ |
| பூத்திரளுருவஞ் | ௨௰ | முத்தர்முதுபக | ௫௮ | விம்மிவிம்மி | ௫௯ |
| பூவணங்கோயில் | ௩௬ | முத்தீயாளர் | ௪௭ | விரிபுநீராலக் | ௨௯ |
| பெரியவாகரு | ௩௬ | முத்துவயிரம் | ௪௫ | வெங்கோல்வே | ௪௮ |
| பெருமையிற் | ௨ | முழுவதுநீயாயி | ௩௰ | வெய்யசெஞ் | ௬௨ |
| பொசியதோ | ௪௮ | மூலமாய்வடிவா | ௨௯ | வெறியேறு | ௭ |
| பொய்யாதவேதி | ௧௪ | மெய்யரேமெய்ய | ௨௩ | வேந்தன்வளைத் | ௧௫ |
| பொருவரைப் | ௫ | மைஞ்ஞின்ற | ௩௰ | வேறுகவுள்ளத்து | ௯ |
| போழ்ந்தியானை | ௫௰ | மையன்மா | ௫௰ | வைத்தபாதங் | ௫௨ |
| மங்குல்சூழ் | ௬௧ | மோதலைப்பட்ட | ௩௩ | வையவாம்பெ | ௪௩ |
| மங்கைமீயாடி | ௩௪ | யாதுநீசினைவ | ௨௬ | | |
| மடங்கலாய்க் | ௩ | வகைமிகுமசுரர் | ௧௮ | | |


திருச்சிற்றம்பலம்.

---

திருப்பல்லாண்டுத்

# திருப்பாசுர முதற்குறிப்பு அகராதி.


| திருப்பாசுரம். | பக்கம். | திருப்பாசுரம். | பக்கம். | திருப்பாசுரம். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ஆரார்வந்தார | ௯௨ | சேவிக்கவந் | ௯௧ | புரந்தரன்மா | ௯௧ |
| எந்தையெந்தா | ௯௨ | சொல்லாண்ட | ௯௧ | மன்னுகதில்லை | ௯௧ |
| குழலொலி | ௯௨ | தாதையைத்தா | ௯௨ | மிண்டுமனத்தவ | ௯௧ |
| சீருந்திருவும் | ௯௨ | நிட்டையிலா | ௯௧ | | |
| சேலுங்கயலு | ௯௨ | பாலுக்குப்பால | ௯௨ | | |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமூலநாயனார் சரித்திரம்.

## திருத்தொண்டர் திருவந்தாதி.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
யடிமன்ன வைத்தபிரான் மூலனு கின்ற வங்கணனே.

## திருத்தொண்டர் புராணசாரம்.

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர்க் கருதுமூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்துபோத
வயலாகப் பண்டையுட லருளான் மேவி
யாவடுதண் டுறையாண்டுக் கொருபாவாகக்
குயிலாரு மரசடியி லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகினாரே.

## திருமந்திரம் பத்தாந்திருமுறை யெனல்.

ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்.

**திருமூலர் திருநட்சத்திரம் - ஐப்பசி ௴ அசுவனி.**

திருமூலநாயனார் இம்மூவாயிரஞ் செய்யுளன்றி வைத்தியத்தில் ௪௨0 - ௩000 என்னுங் கோர்வைகளுஞ் செய்திருக்கின்றனர்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாந்திருமுறை யென்னுந்

# திருமூலநாயனார் திருமந்திரத்திரட்டு.

## விநாயகர் காப்பு.

ஐந்து கரத்தனை யானைமுகத் தனை
யிந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குட்டென் றிசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. (௧

சிவனோ டொக்குந்தெய்வந் தேடினு மில்லை
யவனோ டொப்பாரிங் கியாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே. (௨)

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணிய
னாயினு மீச னருளறி வாரில்லை
சேயினு நல்ல னணியனல் லன்பர்க்குத்
தாயினு நல்லனற் றாழ்சடை யோனே. (௩)

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாள
னிறப்பிலி யாவர்க்கு மின்பம தருளுந்
துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதான்
மறப்பிலி மாயா விருத்தமு மாமே. (௪)

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாச நிலாவே. (௫)

தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே. (௬)

பண்டம்பெய்க் கூரை பழகி விழுதலா
லுண்டவப் பெண்டிரு மக்களும் பின்செலார்
கொண்ட விரதமு ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே. (௭)

அருளு மரசரு மானையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளு முயிரொடுஞ் செல்வனை சேரின்
மருளும் பினையவன் மாதவ மன்றே. (௮)

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு வென்று நிறுத்துவர் தாமே. (௯)

ஆவையும் பாரையு மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடந் தாரையும்
காவலன் காப்பன் காவா தொழிவனேன்
மேலு மறுமைக்கு மீளா நரகமே. (௰)

யாவர்க்குமா மிறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற் கொரு வாயுறை
யாவர்க்குமா முண்ணும்போ தொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே. (௧௧)

இருமலுஞ் சோகையு மீளையும் வெப்புந்
தருமஞ் செய்யாதவர் தம்பால தாகு
முருமிடி நாக முரோணி கழலைத்
தருமஞ்செய் வார்பக்கற் றீ ழுகி லாவே. (௧௨)

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. (௧௩)

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டு
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்பொன் மணியினை யெய்த வொண்ணாதே. (கச)

புணர்ச்சியு ளாயிழை மேலன்பு போல
வுணர்ச்சி யுளாங்கே யொடுங்கவல் லார்க்குக்
குணர்ச்சி யில்லாது குலாவி யுலாவி
யணைத்தலு மின்ப மதுவிது வாமே. (க௫)

அறங்கேட்டு மந்தண ராய்மொழி கேட்டு
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்புரை மேனியெம் மீசன்
றிறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. (க௬)

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறி வாரே. (க௭)

பிரமனு மாலும் பிரானேநா னென்னப்
பிரமன்மா றங்கடம் பேதைமை யாலே
பரம னனலாய்ப் பரந்துமுன் னிற்க
வரனடி தேடி யரற்றுகின் றாரே. (க௮)

உள்ளத் தொருவனை யுள்ளுறு சோதியை
யுள்ளம்விட் டோரடி நீங்கா வொருவனை
யுள்ளமுந் தானு முடனே யிருக்கினு
முள்ள மவனை யுருவறி யாதே. (க௯)

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. (உ0)

ஆற்றரு நோய்மிகு மவனி மழைகுன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே. (உக)

முன்னவ னார்கோயில் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
யென்னரு நந்தி யெடுத்துரைத் தானே. (உஉ)

ஈசனடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமு
நாசம தாகுமே நம்நந்தி யாணையே. (உங)

அரகர வென்ன வரியதொன் றில்லை
யரகர வென்ன வறிகிலர் மாந்த
ரரகர வென்ன வமரரு மாவ
ரரகர வென்ன வறும்பிறப் பன்றே. (உச)

நகார மகாரஞ் சிகார நடுவாய்
வகார மிரண்டும் வளியுடன் கூடி
யொகார முதற்கொண் டொருக்கா லுரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. (உரு)

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
வோவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. (உசு)

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமரன் ஞானத்தாற் றன்செய லற்றாற்
றிரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. (உஎ)

சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம்
பவகதி பாசப் பிறவியொன் றுண்டு
தவகதி தன்னொடு நேரொன்று தோன்றி
லவகதி மூவரு மவ்வகை யாமே. (உஅ)

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. (உகூ)

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. (௩0)

மானுட ராக்கை வடிவு சிவலிங்க
மானுட ராக்கை வடிவு சிதம்பர
மானுட ராக்கை வடிவு சதாசிவ
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. (௩க)

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே. (௩உ)

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
வண்ண லதுகண் டருள்புரி யாநிற்கு
மெண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றாரே. (௩௩)

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயி
னடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. (௩ச)

மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை
யாத்தனுக் கிந்த வரும்பொரு ளானவை
மூர்த்திகண் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந்
தீர்த்தம தாமது தேர்ந்துகொள் ளீரே. (௩ரு)

ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடியே ருண்பதி
னீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே. (௩சா)

வித்தக மாகிய வேடத்த ருண்டவூ
ணத்த னயன்மா லருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் வேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. (௩எ)

ஏறுடை யாயிறை வாவெம் பிரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்க
ளாறணி செஞ்சடை யண்ண றிருவடி
வேறணி வார்க்கு வினையில்லை தானே. (௩அ)

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது மாயிர மாயினு
லாவியின் கூறுநூ றாயிரத் தொன்றே. (௩௯)

பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையு
நேசத்து நாடி மலமற நீக்குவோ
ராசற்ற சற்குரு வாவோ ரறிவற்றுப்
பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே. (௪0)

ஆனைக ளைந்து மடக்கி யறிவென்னு
ஞானத் திரியைக் கொளுவி யதனுள்புக்
கூனை யிருளற நோக்கு மொருவற்கு
வானக மேற வழியெளி தாமே. (௪௧)

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்
றன்னை யறியு மறிவை யறிந்தபின்
றன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே (௪௨)

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. (௪௩)

அறிவறி வென்ற வறிவு மநாதி
யறிவுக் கறிவாம் பதியு மநாதி
யறிவினைக் கட்டிய பாச மநாதி
யறிவு பதியிற் பிறப்பறுந் தானே. (௪௪)

வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடிலிரண் டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. (௪௫)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதினோராந்திருமுறை யென்னும்

# பிரபந்தமாலைத் திரட்டு.

## திருவாலவாயுடையார் சேரமான்பெருமாணாயனாருக்கு அருளிச்செய்த திருமுகப்பாசுரம்.

திருச்சிற்றம்பலம்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை
யன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாணபத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. (க)

திருச்சிற்றம்பலம்.

## காரைக்காலம்மையார் அருளிச்செய்தது.

## திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண்வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கணீண்டு பரடுயர்நீள்கணைக்காலோர்பெண்பேய்
தங்கி யலறி யுலறுகாட்டிற் றாழ்சடை யெட்டுத் திசையும்வீசி
யங்கங் குளிர்ந் தனலாடு மெங்களப்ப னிடந்திரு வாலங்காடே. (உ)

எட்டி யிலவ மீகை சூரை காரை யடர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கவ்வப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே. (ங)

நிணந்தா னுருகி நிலந்தா னனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
சுணங்கை யெறிந்து சூழு நோக்கிச் சுடர நவித்தெங்குங்
கணங்கள் கூடிப் பிணங்கண் மாந்திக் களித்த மனத்தவா
யணங்கு காட்டி லனல்கை யேந்தி யழக னாடுமே. (ச)

## திருவிரட்டைமணிமாலை.

சயகமனைத் தாழ்ந்த சடையானை யச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - யங்கொருநாள்
ஆவாவென் றாழாமைக் காப்பானை யெப்பொழுதும்
ஓவாது நெஞ்சே யுரை. (ரு)

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை யாதிரைநன் னாளானைச் - சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனு மாட்டாது
கில்லேன மாவென்றான் கீழ். (சா)

## அற்புதத்திருவந்தாதி.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே - னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர். (எ)

இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ் - சுடருருவி
லென்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. (அ)

அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
யறிவா யறிகின்றான் றானே - யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே யவன். (கூ)

ஒருபா லுலகளந்த மாலவனா மற்றை
யொருபா லுமையவளா மென்றா - லிருபாலும்

நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. (௰)

அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - னென்றுந்தான்
எவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது. (கக)

## ஐயடிகள்காடவர்கோனாயனார் அருளிச்செய்தது.

## க்ஷேத்திரத்திருவெண்பா.

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமு னன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். (கஉ)

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி-வந்துந்தி
யையாறு வாயாறு பாயாமு னெஞ்சமே
யையாறு வாயா லழை. (கங)

படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலா மாண்ட
முடியரசர் செல்வத்து மும்மை-கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி யுண்ப துறும். (கச)

இழவாடிச் சுற்றத்தா ரெல்லாருங் கூடி
விழவாடி யாவிவிடா முன்ன-மழபாடி
யாண்டானை யாரமுதை யன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை. (கரு)

உய்யு மருந்திதனை யுண்மினென வுற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்காற்-பைய
வெழுந்திருமி யான்வேண்டே னென்னாமு னெஞ்சே
செழுந்திரு மயானமே சேர். (கசு)

## சேரமான்பெருமானாயனார் அருளிச்செய்தது.

## பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்திலங்கு
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை-வெள்ளிக்குன்றந்

தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட
வென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய வீசனுக்கே. (கஎ)

இடமால் வலந்தா னிடப்பா லுழாய்வலப் பாலொண்கொன்றை
வடமா விடந்துகி ரேல்வல மாழியிடம்வலமா
னிடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழிலைஞ்சேர்
குடமா விடம்வலங் கொக்கரையா மெங்கள் கூத்தனுக்கே. (கஅ)

கொடிமே விடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகு
மடிமேற் கழலு மகலத்தி னீறுமை வாயரவு
முடிமேன் மதியு முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவு மென்கண்ணு ளெப்போதும் வருகின்றவே. (ககூ)

முனியேன் முருகலர் கொன்றையி னுமென்னை மூப்பொழித்த
கனியே கழலடி யல்லாற் களைகண்மற் றொன்றுமிலே
னினியே விருந்தவஞ் செய்யேன் றிருந்தவஞ் சேர்நினைந்து
தனியேன் படுகின்ற சங்கட மார்க்கினிச் சாற்றுவனே. (உ0)

பொய்யா நரகம் புகினுந் துறக்கினும் போந்துபுக்கிங்
குய்யா வுடம்பி னொடேர்வ நடப்ப பறப்பவென்று
மையா விளியினு நானில மாளினு நான்மறைசேர்
மையார் மிடற்ற னடிமற வாவரம் வேண்டுவனே. (உக)

மாயனன் மாமணி கண்டன் வளர்சடை யாற்கடிமை
யாயின தொண்டர் துறக்கம் பெறுவது சொல்லுடைத்தே
காய்சின வானை வளருங் கனக மலையருகே
போயின காக்கையு மன்றே படைத்தது பொன்வண்ணமே. (உஉ)

நக்கீரதேவநாயனார் அருளிச்செய்தது.

## பெருந்தேவபாணி

சூல பாணியை சுடர்தரு வடிவனை
நீல கண்டனை நெற்றியோர் கண்ணனை
பாலவெண் ணீற்றனை பரமயோகியை
காலனைக் காய்ந்த கறைமிடற் றண்ணலை
நூலணி மார்பனை நுண்ணிய கேள்வியை
கோல மேனியை கொக்கரைப் பாடலை
வேலுடைக் கையனை விண்டோய் முடியனை

ஞாலத் தீயினை நாதனை காய்ந்தனை
தேவ தேவனை திருமறு மார்பனை
கால மாகிய கடிகமழ் தாரனை
வேத கீதனை வெண்டலை யேந்தியை
பாவ நாசனை பரமேச்சு வரனை
கீதம் பாடியை கிளர்பொறி யரவனை
போதணி கொன்றையெம் புண்ணிய வொருவனை
யாதி மூர்த்தியை யமரர்க டலைவனை
சாதி வானவர் தம்பெரு மான்றனை
வேத விச்சையை விடையுடை யண்ணலை
யோத வண்ணனை யுலகத் தொருவனை
நாத ஞகிய நன்னெறிப் பொருளினை
மாலை தானெரி மயானத் தாடியை
வேலை நஞ்சினை மிகவமு தாக்கியை
வேத வேள்வியை விண்ணவர் தலைவனை
யாதி மூர்த்தியை யருந்தவ முதல்வனை
யாயிர நூறுக் கறிவரி யானை
பேயுரு வுகந்த பிறையணி சடையனை
மாசறு சோதியை மலைமகள் கொழுநனை
கூரிய மழுவனை கொலற்கருங் காலனை
சீரிய வடியாற் செற்றருள் சிவனை
பூதிப் பையனை புண்ணிய மூர்த்தியை
பீடுடை யாற்றைப் பிராணி தலைவனை
நீடிய நிமலனை நிறைமறைப் பொருளினை
யீசனை யிறையனை யீறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளனை
தாதணி மலரனை தருமனை பிரமனை
காதணி குழையனை களிற்றி னுரியனை
சூழ்சடைப் புனலனை சுந்தர விடங்கனை
தார்மலர்க் கொன்றை தயங்கு மார்பனை
வித்தக விதியனை
தீதமர் செய்கைத் திரிபுர மெரித்தனை
பிரமன் பெருந்தலை நிறைய தாகக்
கருமன் செந்நீர் கபால நிறைத்தனை
நிறைத்த கபாலச் செந்நீர் நின்று
முறைத்த வுருவா ரையனைத் தோற்றினை

தேவரு மசுரருந் திரம்படக் கடைந்த
வராவமு ணஞ்ச மமுத மாக்கினை
யீரமி னெஞ்சத் திராவணன் றன்னை
வீர மழித்து விறல்வாள் கொடுத்தனை
திக்கமர் தேவருந் திருந்தாச் செய்கைத்
தக்கன் வேள்வியைத் தளரச் சாடினை
வேதமு நீயே வேள்வியு நீயே
நீதியு நீயே நிமல னீயே
புண்ணிய னீயே புனித னீயே
பண்ணிய னீயே பழம்பொரு ணீயே
யூழியு நீயே யுலகமு நீயே
வாழியு நீயே வரதனு நீயே
தேவரு நீயே தீர்த்தமு நீயே
மூவரு நீயே முன்னெறி நீயே
மால்வரை நீயே மறிகட னீயே
யின்பமு நீயே துன்பமு நீயே
தாயு நீயே தந்தையு நீயே
விண்முதற் பூத மைந்தவை நீயே
பத்தியு நீயே முத்தியு நீயே
சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே யதனாற்
கூட லாலவாய்க் குழக னவை
தறியா தருந்தமிழ் பழித்தன னடியே
னீண்டிய சிறப்பி னிணையடிக் கீழ்நின்று
வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே. (உ௩)

## திருமுருகாற்றுப்படை.

ஒருமுரு காவென்றே னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெருவா நிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம்பா நிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே (உ௪)

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்-என்று
மிளையா யழகியா யேறூர்ந்தா னேறே
யுளையாயென் னுள்ளத் துறை. (உ௫)

குன்ற மெறிந்தமையுங் குன்றப்போர் செய்தமையு
மன்றங் கமரர்பதி காத்தமையு-மின்றெம்மைக்

கைவிடா நின்றமையுஞ் சற்போதும்பின் மீட்டமையும்
மெய்விடா வீரன்கை வேல். (௨௬)

கபிலதேவ நாயனாரருளிச் செய்தது.

## மூத்தநாயனார் இரட்டைமணிமாலை.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு-முருவாக்கு
மாதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை. (௨௭)

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்-விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து. (௨௮)

நல்லார் பழிப்பி லெழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுர மூன்றெரித்த
வில்லா னளித்த விநாயகனே யென்று மெய்ம்மகிழ
வல்லா ரகத்தன்றி மாட்டா ளிருக்க மலர்த்திருவே. (௨௯)

அதிராவடிகள் அருளிச்செய்தது.

மணிசிந்து கங்கைதன் மானக் குருளையை வாளரக்க
பணிசிந்த வென்றவெம் மையர்க் கிளங்கன்றை யங்கரும்பின்
றுணிசிந்த வாய்ப்பெய்த போதகத் தைத்தொடர்ந் தோர்பிறவிப்
பிணிசிந்து கான்முளை யைப்பிடித் தோர்க்கில்லை பேதுறவே. (௩0)

திருவெண்காட்டடிகள் அருளிச்செய்தது.

## திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

கதியா வதுபிறி தியாதொன்று மில்லை களேபரத்தின்
பொதியா வதுகமந் தால்விழப் போமிது போனபின்னர்
விதியா மெனச்சிலர் நோவதல் லாலிதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழலே சென்று வாழ்த்துவதே. (௩௧)

காணீர் கதியொன்றுங் கல்லீ ரெழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீ ரவன்புக ழாசைப்பட்டுப்
பூணீ ருருத்திர சாதன நீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெளிதோ மருதப் பிரான்கழல் மேவுதற்கே. (௩௨)

ஓராதே யஞ்செழுத்து முன்னாதே பச்சிலையு
நேராதே நீரு நிரப்பாதே-யாராயோ
வெண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாத
நண்ணுவா மென்னுமது நாம். (௯௩)

அன்றென்று மாமென்று மாறு சமயங்க
ளொன்றொன்றோ டொவ்வா துரைத்தாலு-மென்று
மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு
மருதனையே நோக்கி வரும். (௯௪)

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிகில் லாரிப் பிறப்பினில்வந்
துளையார் நரகினுக் கென்கட வார்பொன் னலர்ந்தகொன்றைத்
துளையா னிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. (௯௫)

## திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

மெய்த்தொண்டர் செல்லு நெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலு நற்றொண்டு வந்தில னுண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புறமே யுன்னைப் போற்றுகின்ற
வித்தொண்ட னென்பணி கொள்ளுதியோ கச்சி யேகம்பனே. (௯௬)

வணக்கந் தலைநின் திருவடிக்கே செய்யு மையல்கொண்டோ
ரிணக்கன் றியற்றோ ரிணக்கறியோ மல்லம் வல்லரவின்
குணக்குன் றவில்லி குளிர்கச்சி யேகம்பம் பாடினல்லாற்
கணக்கன் றுமற்றொரு தேவரைப் பாடிய கவிநலமே. (௯௭)

படையா லுயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச்செல்லு
நடையா லறிவின்றி நாண்சிறி தின்றி நகுங்குலத்திற்
கடையாப் பிறக்கினுங் கச்சியுளே கம்பத் தெங்களையா
ளுடையான் கழற்கன்ப ரேலவர் யாவர்க்கு முத்தமரே. (௯௮)

பாதம் பரவியோர் பித்துப் பிதற்றிலும் பல்பணியும்
மேதம் புகுதா வகையரு ளேகம்ப ரேத்தெனவே
போதம் பொருளாற் பொலியாத புன்சொற் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளா மெனக்கொள்வர் மெய்த்தொண்டரே.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்தது.

## கோயிற்றிருப்பண்ணியர் திருவிருத்தம்.

அவநெறிக் கேவிழப் புக்கவிந் நாயனமுந் தாமைவாங்கித்
தவநெறிக் கேயிட்ட தத்துவ னேயத் தவப்பயனுஞ்
சிவநெறிக் கேயென்னை யுய்ப்பவ னேசென னந்தொறுஞ்செய்
பவமறித் தாள்வதற் கோதில்லை நட்டம் பயில்கின்றதே. (௪௰)

பிறவியிற் பெற்ற பயனொன்று கண்டிலம் பேரொலிநீர்
நறவியல் பூம்பொழிற் றில்லையு ளாடக மாடுகின்ற
துறவியல் சோதியைச் சுந்தரக் கூத்தனைத் தொண்டர்தொண்டர்க்
குறவியல் வாற்கண்கள் கண்டுகொண் டின்பத்தை யுண்டிடவே. (௪௧)

பிழையா யினவே பெருக்கிநின் பெய்கழற் கன்புதன்னி
னுழையா தசிந்தையி னேனையு மந்தா கினித்துவலை
முழையார் தருதலை மாலைமு டித்த முழுமுதலே
புழையார் கரியுரித் தோய்தில்லை நாத பொறுத்தருளே. (௪௨)

வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லைமன்னைத்
திருவா தவூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளா தவுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே. (௪௩)

## ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி.

கவிக்குத் தகுவன கண்ணுக் கினியன கேட்கிலின்பஞ்
செவிக்குத் தகுவன சிந்திக் குரியன பைந்தரள
நவிச்சுட் சிறுமியர் முற்றின் முகந்துதஞ் சிற்றிலுறுங்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை நாதன் குழைகழலே. (௪௪)

உறவும் பொருளுமொண் போகமுங் கல்வியுங் கல்வியுற்ற
துறவுந் துறவிப் பயனு மெனக்குச் சுழிந்தபுனற்
புறவம் பொழிலாம் பொழில்சூழ் பொதும்புந் ததும்பு வண்டி
னறவம் பொழிலெழிற் காழியர் கோன்றிரு நாமங்களே. (௪௫)

கண்ணார் திருநுத லோன்கோலக் காவிற் கரநொடியாற்
பண்ணார் தரப்பாடு சண்பையர் கோன்பாணி நொந்திடுமென்

றெண்ணு ரெழுந்தருசு மிட்டபொற் றாளரக ளீயக்கண்டு
மண்ணோர் சிலர்சண்பை நாதனை யேத்தார் வருந்துவதே. (௬௬

முந்தண வெண்ணகை யார்மயன் மாற்றி முறைவழுவா
தெத்தனை காலநின் றேத்து மவரிலு மென்பணிந்த
பித்தனை யெங்கள் பிரானை யணைவ தெளிதுகண்டீ
ரத்தனை ஞானசம் பந்தனைப் பாத மடைந்தவர்க்கே. (௬௭)

## ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை.

என்று மடியவ ருள்ளத் திருப்பன விவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்க ளியாப்புக் குரியன வொண்கவிகைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே. (௬௮)

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர்-நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
றன்மாலை ஞானத் தமிழ். (௬௯)

## ஆளுடையவரசுகள் திருவேகாதசமாலை.

பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீச
னதிகைமா நகர்மேவி யருளினு லமண்மூட
ரவர்செய்வா தைகடரு மனகன்வார் கழல்சூடி
னிதியரா குவர்சீர்மை யுடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீச னடியரா குவர்மான
முடையரா குவர்பாரின் மனிதரா னவர்தாமே. (௭௦)

நன்று மாதர நாவினுக் கரசடி நளினமம்வைத் துயினல்லா
லொன்று மாவது கண்டில முபாயமற் றுள்ளன வேண்டோமா
லென்று மாதியு மந்தமு மில்லதோ ரிகபரத் திடைப்பட்டுப்
பொன்று வார்புகுஞ் சூழலிற் புகேம்புகிற் பொறியிலைம் புலன்றே.

திருச்சிற்றம்பலம்.

பிரபந்தமாலைத் திரட்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பன்னிரண்டாந் திருமுறை யென்னும்

# பெரியபுராணச் செய்யுட்டிரட்டு.

திருச்சிற்றம்பலம்.

### நடேசர் துதி.

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (௧)

ஊனடைந்த வுடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மாநடஞ்செய் வரதர்பொற் றடொழ. (௨

### திருக்கூட்டப்புகழ்ச்சி.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே. (௩)

### தடுத்தாட்கொண்ட புராணம்.

ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ள வளப்பருங்கரணங்களுநான்குஞ்
சிந்தையேயாகக்குணமொருமூன்றுந் திருந்துசாத்துவிதமேயாக,விந்
துவாழ்சடையானாடுமானந்தவெல்லையிறனிப்பெருங்கூத்தின், வந்த
பேரின்பவெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின்மலர்ந்தார். (௪)

பெருமையாற் றம்மை யொப்பார் பேணலா லெம்மைப் பெற்றார்
ஒருமையா லுலகை வெல்வா ரூனமே லொன்று மில்லார்
அருமையா நிலையி னின்றா ரன்பினா லின்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்றா ரிவரைநீ யடைவா யென்றார். (௫)

## தில்லைவாழந்தணர் புராணம்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி. (௬)

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
யற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின்மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி. (எ)

## கண்ணப்பநாயனார் புராணம்.

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார். (அ)

முன்புதிருக் காளத்தி முதல்வனா ரருளுணோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கை
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ (கூ)

## திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்.

மண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பு
முண்மையாவது பூசனை யெனவுரைத் தருள
வண்ணலார்தமை யர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. (௧௦)

## சண்டேசுர நாயனார் புராணம்.

அண்டர்பிரானுந் தொண்டர்தமக் கதிபனாக்கி யனைத்துநா
முண்டகலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோ மென்றங்கவர்பொற் றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச் சூட்டினார் (௧௧)

## திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

பொடியார்க்குந் திருமேனிப் புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிட மமுதானாற்

படியார்க்கு மறிவரிய பசுபதியார் தம்முடைய
வடியார்க்கு நஞ்சமுத மாவதுதா னற்புதமோ. (கஉ)

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமு
நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே. (கங)

திருஞான மாமுனிவ ரசிருந்த பூந்துருத்திக்
கருகாக வெழுந்தருளி யெங்குற்றா ரப்பரென
வுருகாநின் றும்மடியே னும்மடிக டாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேனென்றார். (கச)

பிள்ளையா ரதுகேளாப் பெருகுவிரை வுடனிழிந்தே
யுள்ளமிகு பதைப்பெய்தி யுடையவரசினை வணங்க
வள்ளலார் வாகீச ரவர்வணங்கா முன்வணங்கத்
துள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெலாந் தொழுதார்த்தார்.

மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவாநந்த ஞானவடி வேயாகி
யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர சமர்ந்திருந்தார். (கசு)

## காரைக்கா லம்மையார் புராணம்.

இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லும்மையென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும்போது னடியின்கீ ழிருக்கவென்றார். (கஎ)

## நமிநந்தியடிகணாயனார் புராணம்.

நாட்டா ரறிய முன்னாளி னன்று ளிறந்த வைம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரைநீர் மடுவின்கட் டனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழலே நினைவாரை மீளா வழியின் மீட்பனவே. (கஅ)

## திருஞானசம்பந்தசுவாமிகள் புராணம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத

சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (கக)

அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதோறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார். (உ0)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில். (உக)

தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார். (உஉ)

காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே யதனிடை யமுதே யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாத
னேழிசை மொழியா டன்றிரு வருள்பெற் றனையென்பார். (உங)

மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெரு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார். (உச)

புண்ணிய முதலே புனைமணி யரைநா ணொடுபோதுங்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
யெண்ணிய பொருளாய் நின்றவ ரருள்பெற் றனையென்பார். (உரு)

கையதனு லொற்றறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணைகூர்ந்து
செய்யசடை வானவர்த மஞ்செழுத்து மெழுதியசெம்பொற்றாளங்க
ளையரவர் திருவருளா லெடுத்தபா டலுக்கிசைந்த வளவாலொற்ற
வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்தவன்றே.

ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்

தனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங
னத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள் (உஎ)

ஆலமே யமுதமாக வுண்டவா னவர்க்களித்துக்
காலனை மார்க்கண்டற்காகக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமானேயென்றார். (உஅ)

## சாக்கியநாயனார் புராணம்.

செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுங் கொடுப்பானு
மெய்வகையா னன்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
யிவ்வியல்பு சைவநெறி யல்லவருக் கில்லையென
வுய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே யுணர்ந்தறிந்தார்.

எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலு
மன்னியசீர்ச் சங்கரன்றா ண்மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்
தன்னைமிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார். (௩0)

காணாத வருவினுக்கு முருவினுக்குங் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்க
நாணாது நேடியமா லன்முகனுங் காணநசே
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய். (௩௧)

## பத்தராய்ப்பணிவார் புராணம்.

நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தாலு
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலு மிமைத்தாலு
மன்றாடு மலர்ப்பாத மொருகாலு மறவாமைக்
குன்றாத வுணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார். (௩உ)

## மாகேசுவரபூசை தோத்திரம்.

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டுகாதலி னாதனத்திடை வைத்தருச்சனை செய்தபி
னுண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தினி லொப்பிலா
வண்டர்நாயகர் தொண்டரிச்சையி லமுதுசெய்ய வளித்துளார்.

மண்ணினிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடு
மண்ணலாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்

கண்ணினுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்த
லுண்மையாமெனி னுலகர்முன் வருகெனவுரைப்பார். (௫

அல்லார்கண்டத் தண்டர்பிரா னருளாற்பெற்ற படிக்காசு
பல்லாறியன்ற வளம்பெருகப் பரமனடியா ராணர்க
ளெல்லாமெய்தி யுண்கவென விரண்டுபொழுதும் பறைநிகழ்த்தி
சொல்லாற்சாற்றிச்சோறிட்டார் துயர்கூர்வறுமைதொலைத்திட்டா

தனிவெள் விடைமே னெடுவிசும்பிற் றலைவர்பூத கணநாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கண் முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
வினிய கறியுந் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப்
பனிவெண் டிங்கண் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்களித்தார்.

தேடிய மாட நீடு செல்வமுந் தில்லை மன்றுள்
ஆடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். (௫௭

## வெள்ளானைச் சருக்கம்.

என்று மின்பம் பெருகு மியல்பினு
லொன்று காதலி னுள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம். (௫௮)

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணச்செய்யுட்டிரட்டு முற்றுப்பெற்றது.

---

## சேக்கிழார் சுவாமிகள் துதி.

ஆக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னுற்சொல வல்லபி ரானெங்கள்
பாக்கி யப்பய னுப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்.

திருச்சிற்றமபலம்.

---